# ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்

## நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

டெரிக் பிரின்ஸ்

*Derek Prince Ministries - India*

Blessing or Curse Tamil text 2012 revised.p65 1 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

AASIRVAADHANGALALLADHU SAABANGAL: NEENGAL THERNDHEDUKKALAAM

Originally published in English under the title:
**Blessing or Curse: You Can Choose**

Copyright © 1990 - Derek Prince Ministries - International
All rights reserved.

Published by permission in the Tamil language
B56TA/2000/0412/LOP

ISBN 978-81-922407-3-2

For other orders & enquiries contact:

Derek Prince Ministries - India
1C, E.V.R. Road, Puthur, Trichy - 620 017.
Tamil Nadu, India.

Phone: +91 431 4030910
Mobile: +91 98430 55414 / 95855 38201
Email: admin@derekprince.in

More offers on our website:

http://www.derekprince.in

DPM

Derek Prince Ministries
www.derekprince.in

Blessing or Curse Tamil text 2012 revised.p65 2 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# பொருளடக்கம்


முகவுரை - ரூத் பிரின்ஸ் 5

**பிரிவு - 1 : ஆசீர்வாதங்களும் சாபங்களும்**

முன்னுரை 9

1. நிழல்களுடன் போராடுதல் 10
2. காணப்படாத தடைகள் 18
3. எவ்வாறு ஆசீர்வாதங்களும் சாபங்களும் செயல்படுகின்றன 29
4. ஆசீர்வாதங்கள், சாபங்கள் பற்றிய மோசேயின் பட்டியல் 38
5. சாபத்தின் ஏழு அறிகுறிகள் 46

**பிரிவு - 2 : காரணமில்லாமல் சாபமில்லை**

முன்னுரை 63

6. பொய்யான தெய்வங்கள் 64
7. பால்வகை ஒழுக்கத்திற்கும் நெறி முறைக்கும் அடுத்த பலவித பாவங்கள் 82
8. யூதப்பகைமை 89
9. சட்டத்திட்டங்கள், மாம்சீகம், விசுவாசத்தை விட்டு விலகுதல் 97
10. திருடுதல், பொய்யாணை இடுதல் தேவனை வஞ்சித்தல் 110
11. அதிகாரமுள்ள நபர்கள் 116



Blessing or Curse Tamil text 2012 revised.p65 3 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

| | | |
|---|---|---|
| 12. | தனக்குத்தானே இட்ட சாபங்கள் | 137 |
| 13. | சாத்தானின் ஊழியர்கள் | 154 |
| 14. | ஆத்துமத்திற்கடுத்த பேச்சு | 168 |
| 15. | ஆத்துமத்திற்கடுத்த விண்ணப்பங்கள் | 179 |
| 16. | இரண்டாம் பிரிவின் தொகுப்பு | 193 |

***பிரிவு - 3 : சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு***

| | | |
|---|---|---|
| | முன்னுரை | 197 |
| 17. | தெய்வீகப் பரிமாற்றம் | 198 |
| 18. | விடுதலை பெற ஏழுபடிகள் | 215 |
| 19. | நிழல்களிலிருந்து சூரிய ஒளிக்குள் | 233 |
| 20. | பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள் | 248 |
| 21. | அறிக்கைக்கு அப்பால் : பகிரங்கமான அறிவிப்பு, நன்றி செலுத்துதல், துதித்தல் | 260 |
| 22. | தொடர்ந்து வெற்றிபெற செய்ய வேண்டிய அறிக்கைகள் | 272 |

***கவனத்திற்குரிய வார்த்தைகள்***

| | | |
|---|---|---|
| | முன்னுரை | 289 |
| 23. | நீக்கப்படாத சாபங்கள் | 290 |
| 24. | ஆசீர்வதிப்பதா ? சபிப்பதா ? | 300 |
| | நூலாசிரியரின் பின்னணி | 314 |




Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# முகவுரை

1978 ஆம் ஆண்டு எங்கள் திருமணத்திற்குச் சற்று முன்பு டெரிக்கும் நானும் ஃபோர்ட் லாடர்டேல், ஃபுளோரிடாவில் உள்ள கடற்கரையில் இருந்தோம். நான் டெரிக்கைப் பார்த்து, "என் கால்களுக்காக ஜெபிப்பீர்களா? அவைகள் மிகவும் வேதனை தருகின்றன" என்றேன். உடனே அவர் முழங்காற்படியிட்டு என் கால்களின் தசைகளின் மேல் தம் கரங்களை வைத்து, அவைகளிடத்தில் பேச ஆரம்பித்தார்:

அவர் "கால்களே, உங்களுக்கு நன்றி. நான் உங்களைப் பாராட்டுகிறேன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ரூத் செல்ல வேண்டிய இடங்களுக்கு எல்லாம் நீங்கள் அவளைப் பத்திரமாய் அழைத்துச் சென்றீர்கள். இப்பொழுது நீங்கள் அவளை என்னிடம் அழைத்து வந்திருக்கிறீர்கள். கால்களே உங்களுக்கு நன்றி!" என்றார்.

ஒரு சிறந்த வேத போதகர் தாம் மணக்க இருந்த பெண்ணுக்காக இவ்வாறாக ஜெபித்தது அசாதாரண முறை என்று நான் எண்ணினேன்! ஆனால் வலி குறைந்தது.

பின்பு டெரிக் என் கால்களைக் குறித்து நான் கடந்த காலத்தில் தவறாகச் செய்த அறிக்கையை "நீக்குவதைப்" போல அவர் அதைச் செய்ததாக நினைத்தாராம். என்னுடைய பதினைந்து அல்லது பதினாறு வயதில், நான் மேல்நிலைப்பள்ளியில் பெண்களுக்கான அறையில் இருக்கும் போது நடைபெற்ற ஒரு சம்பவம் என் நினைவிற்கு வந்தது. இன்னொரு பெண் உள்ளே வந்து தலைவாரிக் கொண்டு நின்றாள். நான் அவளுடைய அழகான கால்களையும் என்னுடைய பருமனான கால் தசைகளையும், கணுக்களையும் கண்டு "என் கால்களை நான் வெறுக்கிறேன்!" என்று சொன்னேன். இதன் விளைவாக நான் என் கால்களின் மேல் ஒரு சாபத்தைக் கூறினேன்!



Blessing or Curse Tamil text 2012 revised.p65 5 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

டெரிக்கும், நானும் என் கால்களின் மேல் முப்பது வருடங்களுக்கு முன்பு நான் கூறிய சாபத்தை முறித்துப் போட்டோம். அத்துடன் அக்கதை முடிந்தது என்று நான் எண்ணினேன்.

ஒன்பது வருடங்களுக்குப் பின்பு என் இரு கால்களிலும் திராம்பாசிஸ் (இரத்தம் உறைதல்) ஏற்பட்டதின் காரணமாக எருசலேமிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றிற்கு ஆம்புலன்ஸில் விரைவாக எடுத்துச் செல்லப்பட்டேன். அந்த இரத்த உறைவு (Pulmonary Embolism) என்னுடைய நுரையீரலுக்குள் சென்றதால் அது என் உயிரையே எடுத்துப் போடும் அளவிற்கு மோசமானது. அதிலிருந்து இன்னும் என் கால்கள் மேலேயும் சொல்லப்போனால் என் மேலேயும் ஒரு சாபம் அல்லது சாபங்கள் இருப்பதாகத் தெரிந்தது.

அந்த நாளிலிருந்து மூன்று வருடங்கள் என் ஆரோக்கியத்திற்காகவும், என் ஜீவனுக்காகவும் நான் போராடி வந்தேன். என்னுடைய சரீரத்திலே, இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகள் வேதனையை உண்டாக்கி வருவது எங்கள் இருவருக்கும் நன்கு தெரிந்தது. இந்தப் புத்தகத்தை நாங்கள் இருவரும் ஒன்றாக எழுத ஆரம்பித்த பொழுது ஐந்தாம் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள சாபத்திற்கான அறிகுறிகள் அனைத்தும் எனக்கும் என் குடும்பத்திற்கும் பொருந்தும் என நாங்கள் கண்டோம். என் மேலேயே கூறிக்கொண்ட சாபத்திலிருந்து என்னை விடுவித்தது விடுதலையின் ஆரம்பமாக மாத்திரமே இருந்தது. முற்பிதாக்களினால் எங்கள் மேல் வந்த சாபத்தைப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினார். மாந்திரீகத்தில் ஈடுபட்டதினால் வந்த சாபத்தையும் குறிப்பிட்ட பாவங்களைச் செய்ததினால் வந்த சாபத்தையும், இன்னும் பலவற்றையும் ஆவியானவர் உணர்த்தினார்.

இவ்வாறு எல்லா சாபங்களையும் நீக்குவது ஒரு பெரும் வேலையாக இருந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் இந்தச் செயலை அற்புதமாய் பொறுமையுடனும் முழுமையாகவும் செய்தார். அநேக நேரங்களில், அவர் ஞானத்தைப் போதிக்கும் வசனத்தினாலும் அறிவை உணர்த்தும் வசனத்தினாலும் இயற்கைக்கப்பாற்பட்ட வழி நடத்துதலைத்தந்தார். உலகம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 6 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அனைத்திலுமுள்ள ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களின் ஜெப உதவி எங்களுக்கு ஆதரவாய் இருந்தது. வேதத்தின் வல்லமைப் பற்றியும்—எங்களைப் பற்றியும்—நாங்கள் கொண்டிருந்த எண்ணம் குறிப்பிடத்தக்க வகையில் மாறியது.

அநேக தடவைகளில் நான் தேவனிடத்தில் இந்த கேள்வியைக் கேட்டதுண்டு: "டெரிக் பிரின்சிற்கு, இவ்வளவு சரீரப் பிரச்சனைகளையும், தன்னுடைய வாழ்வில் அநேக சாபங்களையும் கொண்ட ஒரு மனைவியை நீர் ஏன் கொடுத்தீர்?" ("God Is a Matchmaker" என்ற புத்தகத்தைப் படித்தவர்கள் என்னை டெரிக்கின் மனைவியாக தேவன் திட்டவட்டமாய்த் தெரிந்தெடுத்தார் என்பதை அறிவார்கள்.) அந்தக் கேள்விக்கு நேரிடையான பதிலை நான் பெறவில்லை. ஆனால் தேவன் என்னை நான் இருந்த வண்ணமாகவே ஏற்றுக் கொண்டு, என்னை விடுதலையாக்கி, சுகப்படுத்தி, அதனால் வந்த மகிமையை ஏற்றுக் கொண்டார் என்று எண்ணி நன்றியுள்ளவளாக உள்ளேன்.

மேலும் டெரிக்கும், நானும் எங்கள் சொந்த வாழ்க்கையில் இந்தப் புத்தகத்திலுள்ள சத்தியங்களை உண்மை எனக் கண்டுள்ளோம் என்று உறுதிப்படுத்திக் கூறமுடியும்! இன்னும் என் ஆரோக்கியம் பூரணப்படவில்லையாயினும், ஆபிரகாமிற்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதம் எனக்கும் மெய்யாகவே சொந்தம் என்பதை நான் அறிவேன். ஆபிரகாமைப்போல அதுவும் கடந்து சென்று சுதந்தரிக்கப்பட வேண்டியதே.

எங்கள் ஜெபம் என்னவென்றால் "**ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்–நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்**" என்ற இந்த நூலானது உங்களையும்—நீங்கள் உதவி செய்ய விரும்பும் மற்றவர்களையும்—இயேசு கிறிஸ்துவில் உள்ள உங்கள் சுதந்திரமான முழு சுயாதீனத்திற்கு வழிநடத்தும் என்பதேயாகும்!

டெரிக்கும், நானும் இந்நூலை சேர்ந்தே எழுதுகின்றோம். எங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்கள் வராதபடித் தடையாய் இருந்த சக்திகள் நீக்கப்பட்டன. அந்த அனுபவத்தையே உங்களுக்கும் எழுதுகின்றோம். படித்துப் பயனடையுங்கள்.

**ரூத் பிரின்ஸ்**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 7 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

## பிரிவு 1

## ஆசீர்வாதங்களும் சாபங்களும்

# முன்னுரை

*நீயோ உன் குடும்பமோ, உன் அயலகத்தாரோ, அல்லது உன்னுடன் பணிபுரிபவரோ - அது யாராயிருந்தாலும் சரி, அவனுடைய அல்லது அவளுடைய வாழ்க்கை, தோல்விகளினாலும், ஏமாற்றங்களினாலும், சோக சம்பவங்களினாலும் கூட நிறைந்ததாக இருக்கலாம். இக்கதை ஒரு தொடர் கதையாக உள்ளது.*

*இதற்கு மாறாக, இதே போன்ற பின்னணியிலும், சமுதாய நிலையிலும் உள்ள பல குடும்பங்களை நாம் அறிவோம். எனினும் எந்தப் பிரச்சனையும் அவர்களைத் தொடுவதில்லை. அவர்கள் உண்மையில் "வியக்கத்தக்கபடி நலமாய்" உள்ளனர்.*

*இவ்விரு சாராரிலும் காணப்படாத சக்திகள் செயலாற்றுகின்றன. இவைகள் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ ஒவ்வொரு மனிதனுடைய முடிவையும் நிர்ணயிக்கிறது. வேதாகமம் இவைகளை* ***ஆசீர்வாதங்கள்*** *என்றும்,* ***சாபங்கள்*** *என்றும் முறையே அழைக்கிறது. மேலும், இதனுடைய இலாபகரமான பலனை எவ்வாறு அனுபவிப்பது என்றும், தீய விளைவுகளிலிருந்து நம்மைப் பாதுகாப்பது எவ்வாறு என்றும் இது நமக்கு எடுத்துக் காட்டுகிறது.*

*வேதத்தின்படி ஆசீர்வாதங்கள், சாபங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வது உன்னுடைய சொந்த வாழ்க்கையில் முற்றிலும் புதியதோர் கண்ணோட்டத்தை உனக்கு அளித்து, உன்னை இதுவரை திணறடித்துச் சோர்ந்து போகச் செய்துள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 9 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 1

## நிழல்களுடன் போராடுதல்

மேல் வாரியாகப் பார்ப்பவருக்கு, மனித வாழ்க்கை இருளும் ஒளியும் கலந்த, வடிவமைப்பற்ற, சட்டங்களுக்கு அப்பாற்பட்டதாகக் காணப்படுகிறது. இந்தப் பின்னணியையுடைய இருவர் ஒரே இடத்தில் ஆரம்பித்து நெருக்கமாக நடைபோட முற்படலாம். ஒரே மாதிரியான திறமையும், பின்னணியும் உள்ள அவர்கள் ஒரே திசையை நோக்கி முன்னேறிச் செல்கின்றனர். எனினும் ஒருவர் எப்பொழுதுமே வெற்றியின் ஒளியிலும் மனநிறைவுடனும் நடக்கிறார். அவருடன் நெருக்கமாக நடக்கும் மற்றவர் ஒளியையே காணாமற் போகிறார். அவர் தொடர்ந்து தோல்வியையும், ஏமாற்றத்தையும் சந்தித்து காலத்திற்கு முன்பாகவே அவர் வாழ்வு அணைந்து போகிறது.

இவர்கள் இருவரில் ஒருவரும் தன் வாழ்வில் செயல்படும் இச்சக்திகளைப் புரிந்து கொள்ளவில்லை. ஒளிக்கும், நிழலுக்குமான மூலாதாரம் இவர்கள் இருவருக்குமே மறைக்கப்பட்டதாய் இருக்கிறது. ஒளி, நிழல் ஆகிய இவ்விரண்டும் கடந்த தலைமுறைகளிலிருந்து வரக்கூடும் என்ற சாத்தியக்கூறை ஒருவேளை அவர்கள் கருதாமல் இருக்கலாம்.

வேதம் இந்த சக்திகளைப் பற்றி தெளிவாகப் பேசுகிறது. உண்மையில் இவைகளைப் பற்றி அதிகமாகவே பேசுகிறது. இவைகளை **ஆசீர்வாதங்கள்** என்றும் **சாபங்கள்** என்றும் முறையே அழைக்கிறது.

கொஞ்ச நேரத்திற்கு இருளுக்குக் கீழேயுள்ள மனிதனைச் சற்று உற்று நோக்குவோம். அவன் எல்லாக் காரியங்களையும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 10 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சரியாய் செய்கிறான் : வேலையையும், வசிக்கின்ற இடத்தையும் மாற்றுகிறான்; தனக்குள்ள வேலைத் திறமைகளை வளர்த்துக் கொள்ளுகிறான்; முற்போக்கான எண்ணத்தைக் குறித்த புதிய புத்தகங்கள் அனைத்தையும் வாசிக்கின்றான். தனக்குள் அடங்கியிருக்கும் மறைவான "ஆற்றலை" எவ்வாறு வெளிப்படச் செய்வது என்பதைக் குறித்த ஒரு பாடத்தொகுப்பைக் கூட ஒரு வேளை அவன் படிக்கிறவனாய் இருக்கலாம்.*

*எனினும் வெற்றி அவனை விட்டு நழுவிச் செல்கிறது. அவனுடைய குழந்தைகள் முரட்டாட்டமாய் உள்ளனர். அவனுடைய திருமணம் தாக்கப்படுகிறது. விபத்துக்களும், சுகவீனங்களும் தொடர்ந்து அவனுக்கு ஏற்படுகின்றன. தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனுடைய விரல்களிலிருந்து தண்ணீர் நழுவுவது போல, அவன் வாஞ்சித்த இலக்குகள் அவனுடைய விரல்களிலிருந்து நழுவிச் செல்கின்றன. தவிர்க்க முடியாத தோல்வி மனப்பான்மையினால் அவன் "தாக்கப்படுகிறான்". இத்தாக்குதலை ஒரு வேளை அவன் ஒத்திப் போடலாம். ஆனால் இதனை அவனால் முற்றிலும் மேற்கொள்ள முடிவதில்லை.*

*அவனுடைய வாழ்நாள் முழுவதும் தன்னால் இனம் கண்டு கொள்ள முடியாத ஒன்றுடன் போராடுவது போன்று உணருகிறான் —அது ஒழுங்கற்ற புரிய முடியாத செயலாய் உள்ளது. சில வேளைகளில் அவன் ஒரு நிழலுடன் போராடுவது போல் உணருகிறான். அவன் எவ்வளவு கடுமையாகப் போராடினாலும் தன்னுடைய பிரச்சனைக்குரிய காரணம் இதுதான் என்று குறிப்பாக இனம் கண்டுகொண்டு அதனைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே வாழாமல் இருப்பதே மேல் என்று அவனுக்குத் தோன்றுகிறது.*

*"என்ன பலன்?" என்று கத்துகின்றான். "எனக்கு எதுவுமே சரியாக சம்பவிப்பதில்லை! என் தகப்பனாருக்கும் இதே பிரச்சனைகள் தான். அவரும் தோல்வி கண்டவரே!" என்கின்றான்.*

*இவ்விதமாக நிழலுக்குள் இருப்பவர் ஒரு பெண்ணாகக் கூட இருக்கலாம். அவள் இளம் வயதில் திருமணம் செய்து*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 11 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஒரு வெற்றிகரமான திருமணத்திற்கும் சந்தோஷமான இல்லத்திற்கும் வேண்டிய எல்லா விதமான திட்டங்களோடும் வாழ்க்கையை ஆரம்பிக்கின்றாள். ஆனால் அவள் காணப்படாததோர் தடுமாற்றத்திற்குள் தான் இருப்பதாக உணருகின்றாள்– அவளுடைய உணர்வுகள் "மேலும்" "கீழும்" ஊசலாடுகிறது. சரீரப் பிரகாரமாக ஒரு பிரச்சனையிலிருந்து இன்னொரு பிரச்சனைக்குள் செல்கின்றாள். ஆரோக்கியத்தின் எல்லையை நெருங்கினாலும் அவள் அதற்குள் வருவதில்லை. அவள் மகன் போதை மருந்தைச் சாப்பிட ஆரம்பிக்கின்றான். அவள் கணவன் அவளைவிட்டுச் செல்கின்றான். ஒரு நாள் எழுந்திருக்கும் போது தான் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவளானதைக் கண்டு அதிர்ச்சியுறுகின்றாள்.

நிழலுக்குக் கீழே உள்ள அந்த மனிதனைப் போலவே இப்பெண்ணும் அனைத்தையும் சரியாகவே செய்தாள். சத்துணவு பற்றியும், குழந்தை மனோதத்துவம் பற்றியும் எழுதப்பட்ட புத்தகங்களைப் படித்தாள். வெற்றி அடைய வேண்டும் என்னும் வேட்கையினால் ஒரு முயற்சியிலிருந்து இன்னொரு முயற்சிக்குத் தாவினாள். ஒவ்வொன்றிற்கும் அவளுடைய முழுப் பெலனையும் பிரயோகிக்க வேண்டியதாயிற்று. எனினும் தகுதிகளில்லாத, உற்சாகமேயில்லாத மற்றப் பெண்கள் இவள் அடைய முடியாத இலக்குகளை மிகவும் எளிதாக அடைவதைக் காண்கிறாள்.

நிழலுக்குக் கீழான மனிதனை நீ உற்று பார்க்கும் போது உன்னை நினைவுபடுத்தும் ஒன்றை ஒரு வேளை நீ காணலாம். நீ வெளியே இருந்து கொண்டே உன் வாழ்க்கையையே காண்பது போல் உணரலாம். உன்னுடைய பிரச்சனைகளின் காரணம் கூட கடந்த தலைமுறைகளிலிருந்து தொடர்ந்து வரும் ஒரு சாபமாகவே இருக்கக்கூடுமோ என்று அதிர்ச்சியுடன் நீ ஆச்சரியப்பட ஆரம்பிக்கலாம்.

அல்லது மேலும் உன்னை நீ இதில் காணாமல் உனக்கு நெருக்கமான ஒருவரையோ—வாழ்க்கைத் துணையையோ அல்லது ஒரு குடும்பத்தின் அங்கத்தினரையோ அல்லது ஒரு நெருங்கிய நண்பரையோ—நீ இதில் காணலாம். இந்த நபரைக் குறித்து நீ அநேக நேரங்களில் அங்கலாய்த்து, நம்பிக்கை சிறிதளவாவது உண்டாகும் என எதிர்பார்த்தும் அது கிடைக்காததால் நீ ஏமாந்திருக்கலாம். இப்பொழுது இந்த



Blessing or Curse Tamil text 2012 revised.p65 12 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நிழல்களைப் பற்றிய ஒரு ஏற்ற விளக்கத்திற்கு வந்திருக்கிறாய் என்பது உனக்கு ஒரு புதிய கருத்தாய் இருக்கலாம். இப்பிரச்சனையின் மூல காரணம் ஒரு சாபமாய் இருக்கக் கூடுமா?

உன் வாழ்விலோ அல்லது உன் குடும்பத்திலோ நடைபெற்ற அர்த்தமற்ற சம்பவங்களும் சூழ்நிலைகளும் உன் நினைவிற்கு வரலாம். இவைகளை உன் எண்ணங்களிலிருந்து நீக்கிவிட அநேக நேரங்களில் நீ முயற்சி செய்தும், அதில் முழுமையாய் வெற்றியை உன்னால் காண முடியவில்லை. இதைக் குறித்து இன்னும் அதிகம் அறியவேண்டும் என்று நீ உணரலாம். **ஒருவேளை சாபத்தில் இருப்பது நான் என்றால் நான் என்ன செய்யக்கூடும்? இது எவ்வாறு ஆரம்பமானது?** என்று நீ உன்னையே பார்த்துக் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

ஒரு சாபத்தைக் கடந்த காலத்திலிருந்து நீட்டப்படும் ஒரு நீளமான தீய கரத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். இது உன்மேல் இருண்டதாக, உன்னைத்தாக்கும் சக்தியாக அமைந்து உன் ஆழ்தத்துவத்தின் முழு ஆற்றலும் வெளிப்படாதபடி தடை செய்கிறது. நீ உன்னிலிருந்து மாறுபட்டவனாகவே எப்பொழுதும் விளங்குகிறாய். முற்றிலும் வெளியே கொண்டுவரப்படாத திறமை உனக்குள் மறைந்து கிடக்கிறது என்று நீ உணரலாம். எப்பொழுதுமே உன்னால் சாதிக்கக்கூடியதை விட, உன்னிடமிருந்து நீ அதிகமாகவே எதிர்பார்க்கிறவனாய் இருக்கிறாய்.

அல்லது மேலும் அந்த நீண்ட தீயகரம் நீ நடக்கும் போது உன்னை இடறச் செய்யலாம். உன் வழி உனக்கு முன்பாகத் தெளிவாக தெரிந்தாலும், நீ அடிக்கடி இடறி விழுகிறாய். எனினும் உன்னை இடறி விழச் செய்தது என்ன என்று தெரியாமல் இருக்கிறது. வெகு நாட்களாக எதிர்பார்த்திருந்த இலக்கை அடைந்து விடக்கூடிய கடைசிக் கட்டத்திலே போலியான காரணத்தின் நிமித்தமாக, நீ இடறி விழுகிறாய். எனினும் உன்னுடைய இலக்கு உன்னைவிட்டு நழுவிச் செல்கிறது.

உண்மையில் போலி என்னும் சொல்லை, எச்சரிக்கும் சிகப்பு விளக்கிற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். உன்னால் இயற்கையான அல்லது நியாயமான காரணம் எதுவும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 13 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

காணமுடியாத சம்பவங்களும், சூழ்நிலைகளும் உனக்கு நிகழ்கிறது. சாதாரணமான இயற்கை விதிகளுக்கு முற்றிலும் உட்படாத ஒரு சக்தி உன்னில் செயலாற்றுவது போல் காணப்படுகிறது.

சாபத்தின் விளைவுகளைத் தொகுத்துக்கூறும் ஒரு சொல் **மனச்சோர்வு** ஆகும். உன் வாழ்க்கையில் சாதனையின் ஒரு குறிப்பிட்ட நிலையை அடைகிறாய். எல்லாமே ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உண்டாக்குகிறது போல் காணப்படுகிறது. உனக்குத் தெளிவான தகுதிகள் எல்லாம் இருந்தும் ஏதோ ஒன்று தவறாக நடக்கிறது! ஆகவே அனைத்தையும் நீ மறுபடியும் தொடங்குகிறாய். முன் போலவே அதே நிலையை அடைகிறாய். ஆனால் மீண்டும் காரியங்கள் தடம்புரள்கின்றன. இவ்வாறாக சில தடவைகள் உனக்கு ஏற்பட்டதும் வாழ்வின் போக்கே இவ்வாறுதான் இருக்கும் என உணருகிறாய். எனினும் இதற்கான தெளிவான காரணம் உனக்குப் புரிவதில்லை.

இதே மாதிரியான தங்கள் வாழ்க்கையின் கதையை என்னுடன் அநேகர் பகிர்ந்து கொண்டுள்ளனர். வாழ்க்கைக் குறிப்புகளில் மாற்றம் இருப்பினும் அதன் மாதிரியில் மாற்றம் இல்லை. அநேக நேரங்களில் இப்படிப்பட்ட மக்கள் இவ்வாறாக சொல்வதுண்டு : "என் தந்தைக்கும் இப்படித்தான் எப்பொழுதும் நடந்தது. அவர் அடைந்த சோர்வையே நான் இப்போது மீண்டும் அனுபவிப்பதாக உணருகிறேன்" அல்லது "என் தாத்தா மீண்டும் மீண்டும் 'எனக்கு எதுவும் சரியாய் நடப்பதில்லை' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்."

இந்தப் போக்கு —மக்கள் வாழ்வின் பல தளங்களில்— வியாபாரத்தில், வேலையில், ஆரோக்கியத்தில், பணத்தைப் பொறுத்தமட்டில் நேரிடலாம். பொதுவாக எப்பொழுதும் இது சொந்த உறவுகளில் —சிறப்பாகத் திருமண, குடும்ப உறவுகளில் ஒரு எதிர்மறையான விளைவை உண்டாக்குகிறது. அடிக்கடி இது ஒரு தனிப்பட்ட நபரை மட்டும் பாதிக்காமல் ஒரு பெரிய சமுதாயப் பிரிவையும் பாதிக்கிறது. அநேக நேரங்களில் இது ஒரு குடும்பத்தைப் பாதிப்பதாக உள்ளது. ஆனால் இது பெரிய அளவில் ஒரு சமுதாயத்திற்கோ அல்லது ஒரு நாட்டிற்கோ கடந்து செல்லக்கூடும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 14 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்றாலும், சாபமே எப்பொழுதும் ஒருவனைத் தோல்வியைக் காணச் செய்கிறது என்று சொன்னால் அது உண்மையாகாது. ஒரு மனிதன் உண்மையான வெற்றியை அடைந்தது போலக் காணப்படலாம். எனினும் அந்த வெற்றியின் பலன்களை ஒருபோதும் அனுபவிக்காமல் அவன் சோர்வடையக்கூடும்.

தென் கிழக்கு ஆசியாவில் ஒரு ஊழிய பயணத்தைச் செய்த பொழுது நான் ஞானமுள்ள, நன்கு படித்த, அரசகுடும்பத்தைச் சார்ந்த ஒரு பெண் நீதிபதியைச் சந்தித்தேன். அவள் இயேசுவைச் சொந்த இரட்சகராக அறிந்திருந்தாள். அவளுடைய வாழ்வில் அறிக்கை பண்ணப்படாத பாவம் எதுவும் இல்லை. எனினும் அவள் தனக்குத் திருப்தியே இல்லை என்று என்னிடத்தில் கூறினாள். அவளுடைய வெற்றியான வேலையும், சமுதாயத்தின் உயர்ந்த இடமும் அவளுக்குத் திருப்தி அளிக்கவில்லை.

நான் அவளுடன் பேசிய பொழுது அவளுடைய முன்னோர்கள் அநேகம் தலைமுறையாக விக்கிரக ஆராதனைக்காரராக இருந்திருப்பதைக் கண்டேன். யாத்திராகமம் 20:3–5 வரையுள்ள வசனங்களின்படி விக்கிரக ஆராதனைக்காரர்கள் மீது ஒரு சாபத்தை மூன்றாம், நான்காம் தலைமுறை வரை தேவன் கூறியுள்ளார் என்று நான் அவளுக்கு எடுத்து விளக்கினேன். பின்பு எவ்வாறு இந்தச் சாபத்திலிருந்து அவளுடைய இரட்சகராகிய இயேசுவின் மூலம் விடுதலை பெறுவது என்று நான் அவளுக்குக் காட்டினேன்.

சில வேளைகளில் சாபங்கள் கடந்த தலைமுறைகளைச் சாராமல் இருக்கலாம். உன்னுடைய சொந்த வாழ்வின் செயல்கள் அல்லது சம்பவங்களின் விளைவாக அது வரலாம். அல்லது கடந்த தலைமுறையிலிருந்து தொடரும் சாபத்தை உன் செயல்கள் தூண்டிவிடுவதாக இருக்கலாம். உன் பிரச்சனையின் ஆரம்பம் எதுவாயினும் நீ இனம் கண்டு கொள்ளமுடியாத, புரிந்து கொள்ள முடியாத ஒன்றுடன் நீ போராடுகிறாய் என்பது மட்டும் உண்மை.

அந்த நீதிபதியைப் போன்றே நீயும் வெற்றியை உணர்ந்திருக்கலாம். அதனால் வரும் இன்பத்தை நுகர்ந்திருக்கலாம். ஆனால் அது அதிக காலம் நிலைத்திருக்கவில்லை! உன்னால்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 15 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*விளக்கமுடியாத காரணத்தினால் திடீரென உனக்கு திருப்தி இல்லாமல் போகிறது. மனச்சோர்வு மேகத்தைப் போல் உன்மேல் தங்குகிறது. உன் சாதனைகள் எல்லாம் ஒன்றுமற்றதாய்க் காணப்படுகிறது.*

*இதே போன்ற சூழ்நிலைகளில் உள்ள மற்றவர்கள் திருப்தியுடன் இருப்பதைப் பார்த்து நீ உன்னையே* "எனக்கு என்ன வந்தது? நான் ஏன் உண்மையான திருப்தியை அனுபவிக்கவில்லை?" *எனக் கேட்கலாம்.*

*இதை வாசிக்கும் வேளையில் ஒருவேளை நீ இவ்வாறு உணரலாம்* : இங்கு தரப்படும் விளக்கங்கள் உண்மையில் எனக்குப் பொருந்துகிறது. அப்படியானால் எனக்கு நம்பிக்கையே இல்லை என்று அர்த்தமா? என்னுடைய வாழ்நாள் முழுவதும் இப்படியே தான் நான் செல்ல வேண்டுமா?

*இல்லை, உனக்கு நம்பிக்கை உண்டு! நீ சோர்ந்து போகாதே. நீ தொடர்ந்து வாசிக்கும் போது தேவன் இதற்கு ஒரு தீர்வை வைத்துள்ளார் என்று நீ கண்டு கொள்வாய். அதை உன் வாழ்க்கையில் எவ்வாறு செயற்படுத்துவது என்பதைப் பற்றிய எளிய, நடைமுறைக் குறிப்புகளையும் நீ அறிந்து கொள்வாய்.*

*இதற்கிடையில், "சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு" என்னும் தலைப்பில் என்னுடைய வானொலி வேதபாட நிகழ்ச்சியைக் கேட்ட இரு நபரிடமிருந்து எனக்கு வந்த கீழ்க்கண்ட கடிதங்களினால் நீ உற்சாகப்படக்கூடும். முதல் கடிதம் ஒரு ஆணிடமிருந்தும், இரண்டாம் கடிதம் ஒரு பெண்ணிடமிருந்தும் வந்துள்ளன.*

*"நான் சாபத்தைப் பற்றிய உங்கள் செய்திகளைக் கேட்டேன். இப்படிப்பட்ட சாபத்தின் கீழ் நான் அறியாதவாறே பல ஆண்டுகளைக் கடத்திவிட்டதைக் கண்டு கொண்டேன். நான் வாழ்க்கையில் வெற்றிகரமாக ஒருபோதும் இருக்க முடிந்ததில்லை. அடிக்கடி ஒரு பாலுணர்வுக்கடுத்த உணர்ச்சிகளினால் துன்பப்பட்டு வந்தேன். அந்த உணர்ச்சிகளை நான் ஒருபோதும் செயல்படுத்தவில்லை. நான் பத்து ஆண்டுகளாக ஒரு கிறிஸ்தவனாய் இருந்தும் இச்சாபத்தின் காரணமாக தேவனிடம் நான் விரும்பியபடி நெருங்கிச் சேர முடியாமற் போயிற்று. ஆகவே நான் மிகவும் சோர்ந்து போனேன்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 16 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இந்தச் சாபத்திலிருந்து விடுபட்டதால் இயேசுவின் விடுதலையைப்பெற்று அவரில் வாழ்கிறவனானேன் என்பதை நான் உணருகிறேன். இப்பொழுது நான் தேவனுடன் நெருக்கமாய் இருப்பதாக உணர்கிறேன்!" என்பது ஒரு கடிதத்தின் வாசகம்.

* * *

"சாபங்களைப் பற்றிய உங்களுடைய சமீப கால ஒலிபரப்பிற்காகவும், 'சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு' என்னும் சிறு நூலுக்காகவும் நன்றி செலுத்துகிறேன். அவைகளினால் என்னுடைய வாழ்க்கையானது பெரிதும் மாற்றப்பட்டது.

என்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி தொடர்ந்து மனச்சோர்வினால் தாக்கப்பட்டதால் ஐந்து ஆண்டுகளாக ஒரு மனோதத்துவ நிபுணரின் சிகிச்சையைப் பெற்று வந்தேன்.

இந்த இளவேனிற் காலத்தில் ஒரு பெண் வந்து எனக்காக ஜெபித்தாள். டீ இலைகளையும், டரோட் அட்டைகளையும் பயன்படுத்தும் மாயமந்திரத்துடன் எனக்கிருந்த எல்லா ஈடுபாடுகளையும் நான் கைவிட்டேன். மெய்யான விடுதலையின் ஆரம்பத்திற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

ஒரு நபர் தான் அறியாத வண்ணமாகச் சாபத்திற்குள்ளாக இருப்பது பற்றிய உங்களுடைய ஒலிபரப்பைக் கேட்டு, பின்பு சாபங்களிலிருந்து நாங்கள் விடுபடும்படி நீங்கள் செய்த ஜெபத்தை நான் உங்களுடன் சேர்ந்து ஜெபித்தேன். இப்பொழுது நான் விடுதலை அடைந்துள்ளேன்!

ஓர் அணையே உடைந்ததுபோல் உணர்கின்றேன். தேவன் என் ஆவியில் கடந்து வராதபடி இருந்த தடை நீங்கினது. சில வாரங்களில் ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிக முன்னேற்றம் அடைந்தேன். அவருடைய ஆசீர்வாதங்களுக்காக நான் அவரைத் துதிக்கிறேன். சில வேளைகளில் இதுவரைக்கும் செய்தவைகளையும், இப்பொழுது செய்து கொண்டு வருபவற்றையும் நினைக்கும்பொழுது அழுகின்றேன். விடுதலையுடன் இருப்பது எவ்வளவு நன்றாக இருக்கிறது.

மெய்யாகவே ஓர் அற்புதமான தேவனை நாம் ஆராதிக்கின்றோம்!" என்கிறது மற்றொரு கடிதம்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 17 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 2

## காணப்படாத தடைகள்

கடந்த ஆண்டுகளிலே போன அத்தியாயத்தில் விளக்கியுள்ள மனிதர்களைப் போன்றவர்களுக்கு நான் அநேக தடவை ஆலோசனை கூறி வந்துள்ளேன். ஆனால் பொதுவாக இது சோர்வை உண்டாக்கும் செயலாக இருந்தது. சில மக்கள் ஆவிக்குரிய வாழ்வில் ஒரு குறிப்பிட்ட இடம் வரை முன்னேறுவர். அதற்குப் பின்பு புலப்படாத தடை ஒன்றைச் சந்திப்பர். அவர்கள் உண்மையும், அர்ப்பணிப்பும் இல்லாதவர்கள் என்று சொல்லி விட முடியாது. உண்மையில் அவர்கள் சிறந்த முன்னேற்றத்தை அடைந்த மற்றவர்களை விட உண்மையுள்ளவர்களாகவும், ஒப்புக் கொடுத்தவர்களாகவும் காணப்பட்டனர். அவர்கள் நான் சொன்ன ஆலோசனையை ஏற்றுக் கொண்டு அதைப் பின்பற்ற முற்படுவார்கள். ஆனால் அதன் பலன்கள் குறைந்த பட்சமாக— சொல்லப்போனால்— அவர்களுக்கும், எனக்கும் ஏமாற்றம் தரக்கூடியதாய் இருந்தது.

இப்படிப்பட்ட ஒருவரை சந்தித்ததற்குப் பின்பு நான், "கர்த்தாவே, இந்த நபருக்கு என்னால் ஏன் உதவி செய்ய முடியவில்லை? என்னால் புரிந்து கொள்ள முடியாத வேறு ஏதாகிலும் இருக்கிறதா—நான் இன்னும் அதிகம் தெரிந்து கொள்ள வேண்டியது வேறு ஏதாகிலும் உண்டா?" என்று கேட்டு ஜெபித்ததுண்டு. கொஞ்ச காலத்திற்குப் பின்பு தேவன் என்னுடைய ஜெபத்திற்கு பதிலளிக்கிறார் என உணர்ந்தேன். அவர் ஒரு திரையை நீக்கி, இயற்கை விதிகளின்படி செயல்படாத வல்லமையான சக்திகள் நிறைந்த ஓர் உலகத்தை எனக்குக் காட்ட ஆரம்பித்தார். இந்த வெளிப்பாடு ஒரே



Blessing or Curse Tamil text 2012 revised.p65 18 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நேரத்தில் திடீரென வராமல், படிப்படியாக சம்பந்தமற்ற சம்பவங்களை இணைக்கும் ஒரு நூல் இழையைப் போல் வருவதை நான் உணர்ந்தேன்.

பிரெஸ்பிடேரியன் திருச்சபையில் நான் ஒரு சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்ட பொழுது நடந்த சம்பவம் இதற்குத் திறவுகோலாய் உள்ளது. நான் ஆயத்தம் செய்திருந்த பிரசங்கத்தின் முடிவிற்கு வந்தேன். அதற்குப் பின்பு எப்படி தொடர்வது என்று எனக்குத் தெரியவில்லை. பிரசங்க மேடைக்கு பின்னால் நான் நின்று கொண்டிருந்த போது ஒரு தகப்பன், தாய், வாலிபப் பெண் ஆகிய ஒரு குடும்பத்தை முன் வரிசையில் என் இடது புறம் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். "அந்தக் குடும்பத்தின் மீது ஒரு சாபம் உள்ளது" என்னும் எண்ணம் எனக்கு வந்தது. இது என்னுடைய செய்தியின் தலைப்புடனோ, அவ்வேளையில் நான் சிந்தித்துக் கொண்டிருந்த காரியத்துடனோ சம்பந்தமற்றதாகக் காணப்பட்டது. என்றாலும் அந்தக் குடும்பத்தின் மீது ஒரு சாபமிருக்கிறது என்னும் அந்த எண்ணம் என்னைவிட்டு நீங்கவில்லை.

இறுதியாக, சற்று தயக்கத்திற்குப் பின்பு பிரசங்க மேடையின் பின்னால் இருந்து வந்து அந்த தந்தையிடம் சென்றேன். அவரிடத்தில் நான் உணர்வதை விளக்கி, நான் அந்த சாபத்தை நீக்கி அவருடைய குடும்பத்தை இயேசுவின் நாமத்தினாலே விடுதலை செய்ய அவர் என்னை அனுமதிப்பாரா எனக்கேட்டேன். உடனே அவர் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்தது இதுவே முதல் தடவை. நான் சொன்னதை அவர் உடனடியாக ஏற்றுக் கொண்டதைக் கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன். பிறகு ஏன் அவர் அப்படிச் செய்தார் என்று எனக்குப் புரிந்தது.

பிரசங்க மேடைக்குப் பின் சென்று அக்குடும்பத்தின் மேலுள்ள சாபத்தை முறிக்க ஒரு சிறிய ஜெபத்தை நான் சத்தமாகச் சொன்னேன். நான் ஜெபித்த போது அந்தக் குடும்பத்தில் யார்மேலும் என் கரத்தை வைக்கவில்லை. ஆனால் இயேசுவின் நாமத்தில் என்று நான் சொல்லி முடித்ததும், தெளிவான காணக்கூடிய சரீர அசைவுகள் அந்தக் குடும்பம் முழுவதிலும் காணப்பட்டது. ஒவ்வொருவரிலும் ஒருவகையான நடுக்கம் கடந்து சென்றது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 19 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அந்த வேளையிலே பதினெட்டு வயதான அப்பெண்ணின் இடது காலில் தொடையிலிருந்து கீழ்வரைக்கும் ஒரு மாவுக்கட்டு இருந்ததைக் கண்டேன். நான் அந்தத் தந்தையிடம் மீண்டும் சென்று அவருடைய மகளின் கால் சுகமடைய நான் ஜெபிக்க விரும்புவாரா என்று கேட்டேன். அவர் மீண்டும் 'சரி' என்று சொல்லிவிட்டு, "ஆனால் ஒன்று உங்களுக்குச் சொல்லவேண்டும், கடந்த பதினெட்டு மாதங்களில் இவள் இதே காலை மூன்று தடவை முறித்திருக்கிறாள். 'இது சுகமடையாது' என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்" என்றார்.*

*இன்று இப்படி யாராவது சொன்னால்–அதாவது ஒரு நபர் பதினெட்டு மாதங்களில் அதே காலை மூன்று முறை முறித்திருக்கிறார் என்றால்—ஒரு சாபம் அங்கு செயல்படுகிறது என்னும் எச்சரிப்பின் மணியை என்னுள் அது ஒலிக்கச் செய்திருக்கும். ஆனால் அந்த நேரத்தில் ஒரு சாபத்திற்கும், இயற்கைக்கு அப்பாற்பட்ட தொடர்ச்சியான விபத்துகளுக்கும் எந்தத் தொடர்பையும் என்னால் கண்டு கொள்ள முடியாமல் இருந்தது. நான் மாவுக்கட்டுப் போட்ட அந்தக் காலை அப்படியே என் கையினால் பிடித்து சுகமடையும்படியான ஒரு எளிய ஜெபத்தைச் செய்தேன்.*

*சில வாரங்களுக்குப் பின்பு அத்தந்தையிடமிருந்து அவள் சுகமடைந்ததற்காக எனக்கு நன்றி செலுத்தி ஒரு கடிதம் வந்தது. அவர்களுடைய மகளை அவர்கள் திரும்பவும் சிகிச்சை நிலையத்திற்கு எடுத்துச் சென்ற பொழுது புதிதாக எடுத்த X–கதிர்கள் அவளுடைய கால் சுகமானது என்று காண்பித்ததாக அவர் எழுதியிருந்தார். அதற்குப் பின்பு கொஞ்ச நாட்களில் அந்த மாவுக்கட்டு எடுத்துப் போடப்பட்டது.*

*அவர் தன்னுடைய குடும்பத்தின் வாழ்க்கையை தொடர்ச்சியாகப் பாதித்த சில விநோதமான துக்கத்திற்குரிய சம்பவங்களையும் எழுதியிருந்தார். அந்தக் குடும்பம் முழுவதும் சாபத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற தேவையை அவர் உடனடியாய் ஒப்புக் கொண்டதை இது விளக்குகிறது.*

*இதைத் தொடர்ந்து பல மாதங்களுக்கு என் மனம் இச்சம்பவத்தையே நினைத்துக் கொண்டிருந்தது. பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்திய முறையில் ஏதோ சிறப்பு*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 20 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உள்ளது என நான் உணர்ந்தேன். முதலாவது, தேவன் அக்குடும்பத்தின் மீது இருந்த சாபத்தை வெளிப்படுத்தி அதை நீக்கும்படியாக என்னைத் தூண்டினார். அதற்குப் பின்பு தான் அவர் அம்மகளின் காலின் சுகத்திற்கு ஜெபிக்கும்படி எனக்கு அனுமதி தந்தார். அந்த சாபத்தை முதலாவது நீக்காமல் சுகத்திற்காக நான் ஜெபித்திருப்பேன் என்றால் அந்தக் கால் குணமடைந்திருக்குமா?

இதைக் குறித்து நான் அதிகம் சிந்தித்தபோது அந்தப் பெண்ணின் கால் சுகமடைவதற்கு சாபம் நீக்கப்படுதல் முதலில் அவசியம் என்ற முடிவிற்கு வந்தேன். இது ஒரு காணப்படாத தடையாக, தேவன் அவள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய சுகத்தைப் பெறாதபடி தடுத்திருந்தது.

இவை அனைத்தும் என் வாழ்வில் நடைபெற்ற ஒரு சம்பவத்துடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டதாகக் காணப்பட்டது. 1904 ஆம் ஆண்டு என் தாத்தா (தாயாரின் தந்தை) சீனாவில் நடந்த (Boxer Rebellion) பாக்ஸர் போராட்டத்தை நிறுத்தும்படியாக அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் இராணுவ படையெடுப்பு ஒன்றைத் தலைமை தாங்கினார். அவர் திரும்பி வரும்போது சீன நாட்டின் பலவிதமான கலைப்பொருட்களைக் கொண்டு வந்தார். பின்பு இவைகள் குடும்பச் சொத்தாக மாறியது. 1970ஆம் ஆண்டு என் தாயார் மரித்த பொழுது, இவற்றில் சில எனக்குச் சொந்தமாக வந்தது.

இவைகளில் கவனத்தை மிகுதியாகக் கவரக்கூடிய கலைப்பொருளில் ஒன்று மிக அழகாக தையல் வேலையினால் செய்யப்பட்ட நான்கு வலுசர்ப்பத்தின் உருவங்களாகும். இவைகள் எங்களுடைய வசிக்கும் அறையின் சுவரில் இடம் பெற்றன. இவைகள் கிழக்கத்திய நாட்டுக்கு ஏற்ப சிவப்பும், இரத்தாம்பரமுமான நிறக்கலவை உடையதாய் இருந்தன. இவைகளின் கால்களில் ஐந்து கூரிய வளைந்த நகங்கள் இருந்தன. இந்த நகங்கள் "அரச" வலுசர்ப்பங்களைக் குறிக்கின்றன என ஒரு வல்லுநர் கூறினார். என் தாத்தா எனக்கு நெருக்கமாய் இருந்ததினாலே அவருடைய வீட்டில் வாழ்ந்த ஆரம்ப கால நினைவுகளை எனக்கு இவைகள் கொண்டு வந்தன.

இவ்வேளையில் என்னுடைய ஊழியத்தின் வெற்றிக்கு



Blessing or Curse Tamil text 2012 revised.p65 21 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்னால் விவரிக்க அல்லது கண்டு கொள்ள முடியாத ஒரு வகையான எதிர்ப்பை உணர ஆரம்பித்தேன். இது பலவிதமான சோர்வுகளில் வெளிப்பட்டது. இவைகள் சம்பந்தமற்றதாய் இருந்தாலும் இவை அனைத்தும் ஒன்றாய் சேர்ந்து எனக்கெதிராக ஓர் அழுத்தத்தை உண்டு பண்ணின. எனக்கு நெருக்கமானவர்களுடன் முன்பு எனக்கிருந்திராத நிலையில் பிளவு ஏற்பட்டது. மற்றும் அநேகர் எனக்குக் கொடுத்த வாக்கினை கைவிட்டு விட்டார்கள். ஒரு வழக்கறிஞருடைய திறமைக் குறைவினால் எனக்கு உண்மையாக வர வேண்டிய என் தாயாரின் சொத்து வருவதிலே முடிவற்ற கால தாமதம் ஏற்பட்டது.

இறுதியாக, நான் ஊக்கமாக ஜெபிப்பதற்கும், உபவாசிப்பதற்கும் காலத்தை ஒதுக்கி வைத்தேன். வெகு சீக்கிரத்தில் அந்த வலுசர்ப்பங்களைக் குறித்த என் எண்ணம் மாற்றமடைந்தது. அவ்வப்போது அவைகளை நான் பார்க்கும் பொழுது என் மனதில் ஒரு கேள்வி எழும் : வேதத்தில் வலுசர்ப்பமாக குறிப்பிடப்பட்டது யார்? இதற்குத் தெளிவான பதில் "சாத்தான்" என்பதாகும். (வெளி. 12:1–12ஐ பார்க்கவும்)

இக்கேள்வியைத் தொடர்ந்து இன்னொரு கேள்வி எழும்: கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய நீ கிறிஸ்துவின் பிரதான எதிரியான சாத்தானைக் குறிக்கும் பொருட்களை உன் வீட்டில் வைத்திருப்பது உனக்கு பொருத்தமுடையதா? என்பதாகும். மீண்டும் பதில் "இல்லை" என்றே தெளிவாக வந்தது. என் உள்ளான போராட்டம் சிறிது காலம் தொடர்ந்தது. ஆனால் இறுதியாக அந்த வலுசர்ப்பங்களின் தையல் வேலைப்பாட்டைத் தூக்கி எறிந்து விட்டேன். எந்தவித உள் நோக்கமுமின்றி அதை ஒரு சிறிய கீழ்ப்படிதலின் செயலாகச் செய்தேன்.

அவ்வேளையில் நான் வேத போதகனாக அமெரிக்க ஐக்கியநாடு முழுவதும் சென்று பல சபைகளிலும் போதித்து வந்தேன். நான் காணிக்கையாகப் பெற்றுக் கொண்ட ஊதியம் என் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைச் சந்திப்பதற்குப் போதுமானதாக இருந்தது. அந்த வலுசர்ப்பங்களை நீக்கியதற்குப் பின்பு, ஒரு சில நாட்களிலேயே பொருளாதார நிலையில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. எந்த சிறப்புத் திட்டமும் தீட்டாமல், என் ஊழியத்தில் எந்த வித



Blessing or Curse Tamil text 2012 revised.p65 22 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*மாற்றமும் இல்லாமல் இருந்த பொழுதிலும் என் வருமானம் இரண்டு மடங்கிற்கு மேலானது. மேலும் எனக்கு நீண்ட காலமாய் வரவேண்டிய சொத்தும் எனக்கு வந்து சேர்ந்தது.*

*என்னுடைய பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்த எதிர்பாராத முன்னேற்றத்தை, அப்பெண்ணின் முறிந்த கால் குணப்பட்ட சம்பவத்துடன் இணைக்கின்ற ஏதோ ஒரு கண்டுபிடிக்கப்படாத தத்துவம் இருப்பதாக நான் வியப்புடன் உணரலானேன். அப்பெண்ணின் சம்பவத்தில் அவளுடைய குடும்பத்தின் மேல் இருந்த ஒரு சாபம் அவளுடைய சுகத்திற்குக் காணப்படாத ஒரு தடையாக இருந்தது. அந்தத் தடை நீக்கப்பட்ட பொழுது சுகம் கிடைத்தது. என் வாழ்விலும் கூட ஒரு காணப்படாத தடை இருந்திருக்கக்கூடும்—அது சரீர சுகத்தைப் பொறுத்ததல்ல. ஆனால் பொருளாதார செழிப்பைப் பொறுத்தது. என் வாழ்க்கை சம்பந்தமான தேவனின் திட்டத்தில் இந்த பொருளாதார முன்னேற்றம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது.*

*இதை நான் அதிகமாகச் சிந்தித்த பொழுது அத்தையல் வேலைப்பாடான வலுசர்ப்பங்கள் என் வீட்டில் ஒரு சாபத்தைக் கொண்டு வந்தன என்ற நிச்சயத்திற்குள் வந்தேன். அவைகளை எடுத்துப் போட்டதின் மூலமாக சாபத்திலிருந்து நான் என்னை விடுவித்துக் கொண்டு தேவன் எனக்காகத் திட்டமிட்டிருந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்படியான வழியைத் திறந்தது*

*இந்த மாற்றங்கள் ஒரு வீட்டை வாங்க எனக்கு உதவி செய்தது. அது என் ஊழியத்தின் பிற்கால முன்னேற்றத்தில் முக்கிய பங்காக இருந்தது. ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்பு அந்த வீட்டை நான் செலுத்திய தொகையை விட மூன்று மடங்கு மேலான விலைக்கு விற்றேன்! இந்தப் பணம் தேவன் என்னை புதிய பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டும்படி சவால் விடுத்த சரியான நேரத்தில் வந்தது.*

*வலுசர்ப்பங்களுடனான இந்த அனுபவம் உபாகமம் 7:25–26 வரையுள்ள பகுதியைக் குறித்த புதிய கண்ணோட்டத்தை எனக்கு அளித்தது. இங்கு மோசே இஸ்ரவேலரை விக்கிரகாராதனை செய்யும் கானானிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கிறார்:*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 23 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய்; நீ அவைகளால் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை எடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக; அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்.

அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது."

*என்னுடைய தையல் வேலைப்பாடான வலுசர்ப்பங்கள் செதுக்கப்பட்ட உருவங்கள் அன்று. ஆனாலும் பல நூற்றாண்டுகளாக சீனாவில் வணங்கப்பட்டு வரும் பொய்யான தெய்வத்தின் உருவங்களாக அவைகள் இருந்தன. அவைகளை என் வீட்டிற்குக் கொண்டு வந்ததின் மூலம் என்னையும்— என்னுடன் என் குடும்பத்தையும்—நான் சாபத்திற்குள்ளாக்கினேன். வரவிருந்த ஆபத்திற்கு என் கண்களைத் திறந்த பரிசுத்த ஆவியானவருக்கு நான் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன்!*

*இது என்னை ஆசீர்வாதங்களைப் பற்றியும், சாபங்களைப் பற்றியும் வேதம் போதிப்பவற்றை முறையாகப் படிக்கத் தூண்டினது. இவைகளைப் பற்றி வேதத்தில் எவ்வளவு அதிகம் கூறப்பட்டிருக்கிறது என்பதை நான் கண்டு வியப்படைந்தேன். வேதத்தில்* ***ஆசீர்வாதம்*** *அல்லது* ***ஆசீர்வதித்தல்*** *என்னும் சொல் கிட்டத்தட்ட 410 தடவைகள் வருகின்றன—இது தவிர இந்த சொல் மூல மொழியில் "சந்தோஷம்" அல்லது "பாக்கியமுள்ள" என்ற அர்த்தத்தில் பல இடங்களில் வருகின்றன (உதாரணமாக மலைப்பிரசங்கம்).* ***சாபம்*** *என்னும் பதமானது வேதத்தில் பலவிதத்தில் கிட்டத்தட்ட 230 தடவைகள் வருகின்றன. என் கிறிஸ்தவ வாழ்வில் பல ஆண்டுகளாக இதைப் பற்றி எவ்வளவு குறைவான போதனை கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் சிந்திக்கலானேன். உண்மையில் ஒழுங்காக இந்த முழுப்பொருளைப் பற்றி ஒரு செய்தி கூட கொடுக்கப்பட்டதை நான் கேட்கவில்லை.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 24 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இதைப் பற்றி நான் படித்ததின் நிமித்தமாக என் பொது ஊழியத்தில் சாபங்களைக் குறித்து போதிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு தடவை இதைக் குறித்து நான் போதித்த போதும், இந்த போதனையினால் ஏற்பட்ட எல்லையற்ற பலனையும் இதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய மக்கள் கூட்டம் பெரியது என்பதையும் கண்டு வியந்தேன். இக்கூட்டங்கள் பற்றிய சில ஒலிநாடாக்கள் மற்ற குழுக்களுக்கும் விநியோகிக்கப்பட்டன. அதிசயக்கத்தக்க பதில்கள் பயனடைந்தோரிடமிருந்து வந்தன. அநேகம் தடவைகளில் இச்செய்தி தனிப்பட்ட நபர்களின் வாழ்வை மாத்திரமல்ல திருச்சபைகள் முழுவதையும் கூட மாற்றி அமைத்துள்ளதைக் கண்டேன். இறுதியாக நான் "சாபங்கள் : காரணமும் அதினின்று விடுதலையும்" என்ற தலைப்பில் மூன்று ஒலிநாடாக்களை வெளியிட்டேன்.

இதைத் தொடர்ந்து நான் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்ற போது இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொண்ட ஒரு யூதப் பெண்ணைச் சந்தித்தேன். இந்தப் பெண்ணுக்கு மிரியம் என்று பெயரிடுவோம். அவள் என் மனைவி ரூத்திடமும் என்னிடமும் இந்த மூன்று ஒலிநாடாக்களைக் கேட்டதினால் அவள் பெற்றுக் கொண்ட அற்புதத்தை விளக்கமாகக் கூறினாள்.

மிரியம் தன் சொந்தக் கம்பெனிக்குத் தலைவராக இருந்த ஒருவரிடம் காரியதரிசியாக பணியாற்றினாள். அந்தக் கம்பெனியின் தலைவரும், பணியாட்களும் ஒரு பெண் "குருவை" தலைமையாகக் கொண்ட ஒரு போலி மதத்தைப் பின்பற்றி வந்ததை அவள் கண்டு கொண்டாள்.

ஒரு நாள் மிரியத்தின் தலைவர் அவளிடம் ஓர் ஒலிநாடாவைக் கொடுத்து "எங்கள் குரு எங்கள் மேலே கூறின சில ஆசீர்வாதங்கள் இதில் உள்ளன. இவற்றை தயவு செய்து டைப் செய்து கொடு" என்றார். அவள் அதை தட்டெழுத்துச் செய்யும் பொழுது அந்த "ஆசீர்வாதங்கள்" உண்மையில் வல்லமையான போலிப் பலன்களையுடைய குறி சொல்லுதலாக இருந்ததை மிரியம் உணர்ந்தாள். அவள் தன் தலைவரிடம் இவ்வாறு செய்வது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பேரில் தான் வைத்திருந்த விசுவாசத்திற்கும், வேதத்திற்கும் முரண்பாடாய் உள்ளது என விவரித்து அதைத் தட்டெழுத்துச் செய்யமுடியாமல் இருப்பதற்கு மன்னிக்கும்படி கேட்டாள்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 25 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவளுடைய தலைவர் இரக்கமாய் அவளுடைய மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தைச் செய்யும்படி தாம் கூறியதினால் மிகுந்த தாழ்மையுடன் அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பின்பு சில நாட்களில் மிரியத்தின் இரண்டு கரங்களிலும் வலி உண்டாக ஆரம்பித்தது. அவளுடைய விரல்கள் வளைந்து அப்படியே இயக்கத்தை இழந்தன. அவள் தொடர்ந்து காரியதரிசியாக தன் வேலையைச் சரிவர செய்ய முடியவில்லை. அவளுடைய வலி மிகவும் அதிகமாய் இருந்ததினால் அவளுடைய கணவருடன் ஒரே படுக்கையில் அவளால் படுக்க முடியவில்லை. ஏனெனில் அவர் ஒவ்வொரு முறை திரும்பிப்படுத்த பொழுதும், அந்தப் படுக்கையின் அசைவு தாங்கமுடியாத வலியினை அவளுடைய விரல்களில் உண்டாக்கினது. அவளுடைய பிரச்சினை 'ருமடாய்டு ஆர்த்ரைடிஸ்' என X—கதிர்களின் கணிப்பு கூறியது.

மிரியத்தினுடைய ஒரு கிறிஸ்தவ சிநேகிதி அவளுடைய துயரத்தைக் கேள்விப்பட்டு, "சாபங்களைப்" பற்றிய என் ஒலிநாடாக்களை அவள் கேட்பதற்காகக் கொண்டு வந்து கொடுத்தாள். மிரியம் சாபங்களைக் குறித்து நம்பாதவளாக, இது இருண்ட கால சரித்திரத்துடன் சம்பந்தப்பட்ட காரியங்கள் என்று எண்ணினாள். எனினும் அந்த "ஆசீர்வாதங்களை" அவள் டைப் செய்ய மறுத்ததிற்கும், அதைத் தொடர்ந்து அவளுடைய கைகளில் ஏற்பட்ட பிரச்சனைக்கும் ஏதாவது சம்பந்தம் உள்ளதா என சிந்திக்கலானாள். அந்த குரு அவள் மேல் ஒரு சாபத்தைக் கூறியிருக்கக் கூடுமா? ஆகையால் அவள் நீரில் மூழ்கும் ஒரு மனிதன் பிழைப்பதற்குத் தன் கையில் கிடைத்ததை இறுகப் பற்றிக் கொள்வது போல அந்த ஒலிநாடாக்களைக் கேட்க ஒப்புக் கொண்டாள்.

மூன்றாவது ஒலிநாடாவின் இறுதியில், மனிதர்களை அவர்கள் வாழ்வின் மீதுள்ள சாபத்திலிருந்து விடுதலை பெறும்படி நான் அவர்களை வழிநடத்துகின்ற ஜெபத்திற்கு அவர்கள் வந்ததும் அந்த ஒலிநாடா சிக்கிக் கொண்டது. அது முன்னும் செல்லவில்லை, பின்னும் செல்லவில்லை, வெளியேயும் வரவில்லை!



Blessing or Curse Tamil text 2012 revised.p65 26 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"ஆகவே அந்த ஜெபத்தை நான் செய்யமுடியவில்லை!" என்று மிரியம் கூறினாள்.

எனினும் மிரியத்தின் சிநேகிதி ஏற்கெனவே அந்த விடுதலையின் ஜெபத்தை டைப் செய்திருந்ததினால் அதன் பிரதி ஒன்றை அவள் வைத்திருந்தாள். மிரியம் அந்தப் பிரதியில் இருந்த ஜெபத்தை சத்தமாக வாசிக்கும்படி அப்பெண் வற்புறுத்தினாள். மீண்டும் சந்தேகம் மிரியத்தை மேற்கொண்டது. ஒரு டைப் செய்யப்பட்ட காகிதத்திலிருந்து படிக்கும் வார்த்தைகள் எப்படித் தன் கரங்களின் நிலைக்கு நற்பலனை தோற்றுவிக்கக்கூடும் என்று அவளால் காணமுடியவில்லை.

எனினும், இறுதியில் தன் சிநேகிதியின் வற்புறுத்தலுக்கு இணங்கி அந்த ஜெபத்தை சத்தமிட்டுப் படிக்கலானாள். அவள் அதைச் செய்த போது வளைந்த விரல்கள் சரியாகி அவள் சுகம் பெற்றாள். வலி நின்றது. அந்த ஜெபத்தை அவள் வாசித்து முடித்ததும் அவள் முற்றிலும் சுகமாக்கப்பட்டாள். இது சில நிமிடங்களுக்குள்ளே நடந்த அனுபவம்.

பின்பு மிரியம் முதல் X—கதிரை எடுத்த தன் மருத்துவரிடம் சென்றாள். இரண்டாவது X—கதிரைப் பார்த்த பொழுது 'ஆர்த்ரைடிஸின்' சுவடே அதில் தெரியவில்லை.

இந்த சம்பவத்தின் ஒரு பகுதி மிகவும் முக்கியமானது. மிரியம் வாசித்த அந்த விடுதலையின் ஜெபத்தில் சரீர சுகத்தைக் குறித்த எந்தக் குறிப்பும் இல்லை. ஒரு சாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகச் செய்த பிரார்த்தனையின் பலனாக மட்டுமே அவள் கரங்கள் சுகமடைந்தன.

இதிலிருந்து ஒரு சாபமானது, மக்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ளத் தடையாக அமையக்கூடும் என்பதற்கான மற்றொரு ஆதாரம் கிடைத்தது. இது அந்த உடைந்த காலை உடைய பெண்ணைப் பொறுத்தமட்டில் உண்மையாய் இருந்தது. என்னுடைய வாழ்க்கையிலும் எதிர்பாராத ஒரு சாபம் தேவன் எனக்குத் திட்டமிட்டிருந்த பொருளாதார ஆசீர்வாதத்தைச் சுதந்தரிப்பதற்குத் தடையாக இருந்தது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 27 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஒரு சாபமானது, சுகம், பொருளாதாரம் போன்ற "ஆசீர்வாதங்களைப்" பெற்றுக் கொள்வதற்குத் தடையாய் இருக்கக்கூடுமானால், மற்ற விதமான ஆசீர்வாதங்களும் இதே காரணத்தின் நிமித்தமாகத் தடைப்பட வாய்ப்பு இருக்காதா என சிந்திக்கலானேன். இதன் அடிப்படையிலே நான் கீழேயுள்ள மூன்று சம்பந்தப்பட்ட கேள்விகளுக்குப் பதிலைக் காண முற்பட்டேன் :

முதலாவதாக, ஒரு சாபம் நம் வாழ்வில் செயல்படுகிறது என்பதை நாம் எவ்வாறு கண்டு கொள்ளமுடியும்?

இரண்டாவதாக, ஒரு சாபத்தை நீக்கி, அதன் விளைவுகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

மூன்றாவதாக, தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குள் எவ்வாறு நாம் கடந்து செல்லக்கூடும்?

என்னுடைய இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை பின் வரும் பக்கங்களில் தந்திருக்கிறேன்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 28 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 3

# எவ்வாறு ஆசீர்வாதங்களும் சாபங்களும் செயல்படுகின்றன

*சரித்திரத்தை இருவித சக்திகள் நிருணயிக்கின்றன: காணப்படும் சக்தி, காணப்படாத சக்தி. இவ்விரண்டு தளங்களும் பிணைந்து செயல்பட்டு சரித்திரத்தின் போக்கை நிருணயிக்கின்றன. புலனுக்கடுத்த பார்வையால் பொருட்களை மட்டும் கொண்டு கணிக்கும் பொழுது பல காரியங்கள் விளக்கமுடியாதவையாகவே அடிக்கடி காணப்படும்.*

*காணப்படும் தளத்தைச் சார்ந்ததாக இப்பூவுலகின் எல்லாப் பொருட்களும், சம்பவங்களும் உள்ளன. நாம் எல்லாரும் இந்தத் தளத்தை நன்கு அறிந்திருக்கிறோம். நாம் விரும்பியபடி சம்பவங்கள் அநேக நேரங்களில் நடைபெறாவிட்டாலும், இந்தத் தளம் நமக்கு பழக்கப்பட்டதாய் உள்ளது. அநேக மக்கள் இத்தளத்திற்கு அப்பால் சிந்திக்கத் தவறி விடுகின்றனர். ஆனால் வேதம் காணப்படாத மற்றொரு தளத்தை, நமக்கு அறிமுகம் செய்கிறது. இது இவ்வுலகப் பொருட்களைச் சார்ந்ததல்ல. இது ஆவிக்குரியது. காணப்படும் தளத்தில் நடைபெறும் சம்பவங்கள் காணப்படாத தளத்தினால் கட்டுப்படுத்தப்பட்டு இயங்குகின்றன.*

2 *கொரிந்தியர்* 4:17–18*ல் பவுல் இந்த இரு தளங்களையும் விவரிக்கிறார்* :

"மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப் படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 29 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்."

*காணக்கூடிய தளத்திற்கு உரியவைகள் நிரந்தரமற்றவை, மாறக்கூடியவை. காணப்படாத தளத்தில் உள்ளவையே நிரந்தரமாய் நிலைத்து நிற்பவை. மேலும் காணப்படாத தளத்தில் உள்ள சக்திகள் தான், காணப்படும் தளத்தில் நமது எதிர்காலத்தின் முடிவிற்கு வடிவம் தருகிறது. நமது வாழ்க்கையின் வெற்றியானது, காணப்படாத ஆவிக்குரிய தளத்தை நாம் எந்த அளவிற்கு புரிந்து கொண்டு அதனுடன் நம்மை இணைத்துக் கொள்கிறோமோ அதைப் பொறுத்து உள்ளது என பவுல் தெளிவுபடுத்துகிறார்.*

*ஆசீர்வாதங்களும், சாபங்களும் காணப்படாத ஆவிக்குரிய தளத்திற்கு உரியவை. அவைகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய வல்லமையின் சாதனங்களாகும். ஆசீர்வாதங்கள் நல்ல பயனுள்ள விளைவுகளை உண்டாக்குகிறது; சாபங்கள் தீய, பாதிக்கக்கூடிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவைகள் இரண்டுமே வேதத்தின் முக்கியக் கருப்பொருளாய் உள்ளது. முன்பு குறிப்பிட்டது போல் இவ்விரு வார்த்தைகளும் வேதத்தில் 640 தடவைகளுக்கு மேலாக வருகின்றன.*

*இவைகள் இரண்டிற்கும் பொதுவான இரு முக்கியக் குறிப்புகள் உள்ளன. முதலாவதாக, அவைகளின் விளைவு ஒரு தனிப்பட்ட மனிதனை மட்டும் சார்ந்ததன்று—அது குடும்பங்களுக்கும், இனங்களுக்கும், சமுதாயங்களுக்கும் அல்லது முழு நாட்டிற்கும் கடந்து செல்கிறது. இரண்டாவதாக, அவைகள் கட்டவிழ்க்கப்படும் போது தலைமுறை தலைமுறையாக அதன் விளைவுகள் ஏதாவது ஒரு சம்பவத்தால் தடுத்து நிறுத்தப்படும் வரை தொடர்ந்து பாதிக்கின்றது. முற்பிதாக்களுக்கு வேதத்தில் குறிக்கப்பட்டுள்ள அநேக ஆசீர்வாதங்களும், சாபங்களும் சுமார் நான்காயிரம் ஆண்டுகளைக் கடந்து இன்று வரை தொடர்ந்து செயலாற்றி வருகிறது.*

*ஆசீர்வாதங்கள், சாபங்கள்—இவற்றின் இரண்டாவது குறிப்பு முக்கியமான நடைமுறை பாதிப்புகளை உடையது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 30 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நம்முடைய வாழ்க்கையில் செயல்படும் சக்திகள் கடந்த தலைமுறைகளில் ஆரம்பிக்கப்பட்டதாய் இருக்கக்கூடும். இதன் காரணமாக நமது வாழ்நாட்களில் நடைபெற்ற சம்பவங்களினால் அல்லது அனுபவங்களினால் மாத்திரம் விளக்கப்படமுடியாத சூழ்நிலைகள் அல்லது ஒழுங்கு முறைகளை நாம் மீண்டும் மீண்டும் சந்திக்க நேரலாம். இதனுடைய மூல காரணம் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே தொடர்வதாக இருக்கலாம்.*

*ஆசீர்வாதங்களும், சாபங்களும் பிரதானமாக வார்த்தைகளினால் கடத்தப்படுகின்றன. இவ்விதமான வார்த்தைகள் பேசப்பட்டதாய் இருக்கலாம், அல்லது எழுதப்பட்டதாயிருக்கலாம் அல்லது தனக்குள்ளே தானே சொல்லப்பட்டதாயும் இருக்கலாம். வார்த்தைகளின் வல்லமையைக் குறித்து வேதம் அதிகம் சொல்லுகிறது. முக்கியமாக நீதிமொழிகளின் புத்தகம், எவ்வாறு வார்த்தைகள் நன்மைக்கோ அன்றி தீமைக்கோ பயன்படுத்தப்படக்கூடும் என்பதற்கான அநேக எச்சரிப்புகளைத் தருகிறது. இங்கு சில உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:*

> "மாயக்காரன் தனக்கு அடுத்தவனை வாயினால் கெடுக்கிறான்; நீதிமானோ அறிவினால் தப்புகிறான்." நீதிமொழிகள் 11:9

> "பட்டயக்குத்துகள் போல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்." நீதிமொழிகள் 12:18

> "ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்." நீதிமொழிகள் 15:4

> "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்." நீதிமொழிகள் 18:21

*அப்போஸ்தலரான யாக்கோபும் கூட வார்த்தைகளைப் பயன்படுத்துவதைக் குறித்து அதிகம் கூறுகிறார். நாவு சரீரத்தில் ஒரு சிறிய அவயவமாயிருந்தும் அதைக் கட்டுப்படுத்துவது*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 31 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*மற்றெல்லாவற்றிலும் மிகவும் கடினம் என்று அவர் குறிப்பிடுகிறார்:*

> "அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!
>
> நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!
>
> அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.
>
> துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது."
>
> யாக்கோபு 3:5–6; 9–10

*வார்த்தைகள் மக்களையும், சூழ்நிலைகளையும் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ பாதிக்கக்கூடிய பெரும் வல்லமையுடையதாய் இருக்கின்றன என்பதை வலியுறுத்துவதற்கு யாக்கோபு தெளிவான உபமானத்தைப் பயன்படுத்துகிறார். ஆசீர்வாதங்களும் சாபங்களும் எல்லையற்ற ஆற்றல் நிறைந்த வார்த்தைகளே—என தனிமைப்படுத்தி அவர் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது.*

*எனினும் வார்த்தைகளினால் மட்டும் ஆசீர்வாதங்கள், சாபங்கள் இவற்றின் ஆவிக்குரிய வல்லமை கடத்தப்படுவதில்லை. சில வேளைகளில் அநேக விதங்களில் சரீரப்பிரகாரமான பொருட்கள் மூலமாகவும் இவ்விதமான ஆற்றல் கடத்தப்படுகிறது.*

*யாத்திராகமம்* 30:22–23 *ஆகிய வசனங்களில் மோசேக்குக் கர்த்தர் ஒரு சிறந்த அபிஷேக தைலத்தைத் தயாரிக்கும் விபரங்களைத் தருகிறார். இந்தத் தைலம் பிரத்தியேகமாக ஆசரிப்புக் கூடாரத்தையும் அதன் பணிமுட்டுகளையும் அபிஷேகிப்பதற்கும், அதில் ஊழியம் செய்யவிருக்கும் ஆசாரியர்களை அபிஷேகிப்பதற்கும்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 32 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பயன்படுத்தப்படவேண்டும். இலேவியராகமம்* 8:1–12 *வரையுள்ள வசனங்களில் இந்தத் தைலம் எவ்வாறு பூசப்பட்டது என்பதை நாம் படிக்கிறோம்.* 10–12 *வரையுள்ள வசனங்ளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது* :

> "பின்பு மோசே, அபிஷேகதைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி,
>
> அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணி,
>
> அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணினான்."

*இப்பகுதியில் வரும் பரிசுத்தமாக்குதல் என்னும் சொல்லானது "தேவனுக்கென்று பரிசுத்தமாய் பிரத்தியேகப்படுத்துவது" என பொருள்படும். இப்படியாக இந்த அபிஷேகதைலம் பரிசுத்தத்தின் ஆசீர்வாதத்தை ஆசரிப்புக் கூடாரத்திற்கும், அதன் பணிமுட்டுகளுக்கும், அங்கு பணிபுரிந்த ஆசாரியர்களுக்கும் கொண்டுவரும் சாதனமாக இருந்தது.*

*பின்பு இஸ்ரவேலர்களின் சரித்திரத்தில் ஒலிவ எண்ணெய்யானது தேவனுடைய சார்பில் மக்களை ஆட்சி செய்ய இருந்த அரசர்களுக்குத் தேவையான ஆசீர்வாதத்தைக் கொண்டு வர பயன்படுத்தப்பட்டது.* 1 *சாமுவேல்* 16:13 *எப்படி தீர்க்கதரிசி சாமுவேல், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அரசனாக தாவீதை பிரத்தியேகப் படுத்தினார் என்று கூறுகிறது.*

> "அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்; "

*சாமுவேலினால் தாவீதின் தலையிலே ஊற்றப்பட்ட*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 33 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*எண்ணெய்யானது அரசனாகப் பணிபுரிய அவனை ஆளாக்குவதற்கு அவனுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் சாதனமாக இருந்தது.*

*புதிய ஏற்பாட்டிலே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பயன்படுத்தப்பட்ட அடையாள பொருட்கள் இதேபோல் அதில் பங்கேற்பவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் சாதனங்களாக உள்ளன. 1 கொரிந்தியர் 10:16ல் பவுல் இவ்வாறு கூறுகிறார் :*

> "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா**?** நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?"

*வேதத்தில் விசுவாசம் உடையவர்களாக இதில் பங்கேற்பவர்களுக்கு இந்தப் பொருட்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கடத்துகின்றன. பவுல் சிறப்பாக இதை "ஆசீர்வாதத்தின் பாத்திரம்" என்கிறார்—அதாவது இந்த பாத்திரம் அதைப் பருகுகிறவர்களுக்கு புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தருகிறது.*

*என்றாலும் மேலே விளக்கப்பட்ட காரியங்கள் அனைத்திலும் "மாந்திரீகத்திற்கு" எந்த இடமுமில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது. ஆசீர்வாதங்கள் என்பது சரீரப்பிரகாரமான பொருட்களின் உள்ளே தானாக இருப்பது அன்று. வேதத்தில் கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப் பட்டுள்ளதை புரிந்து கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரமே அவைகள் கடந்து வரும். அவர்கள் சொந்த விசுவாசத்தின் மூலமும், கீழ்ப்படிதலின் மூலமும் இந்த சரீரப்பிரகாரமான பொருட்களின் மூலமாக அவர்களுக்கு உரிமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். விசுவாசமும், கீழ்ப்படிதலும் இல்லையாயின் எந்த ஆசீர்வாதமும் நமக்குக் கிட்டாது.*

*இதற்கு மாறாக, 1 கொரிந்தியர் 11:29ல் பவுல் கர்த்தருடைய இராப்போஜனத்தின் அடையாளங்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார் : "அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், .... தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 34 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பண்ணுகிறான்." இங்கு மாறான காரியங்களைக் குறித்துப் பேசுகிறார். விசுவாசமும், கீழ்ப்படிதலும் இந்த அடையாள பொருட்கள் மூலம் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளச் செய்கின்றன; அவிசுவாசமும், கீழ்ப்படியாமையும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பைக் கொண்டு வருகின்றன. இந்த இரு காரியங்களிலும் ஒரே மாதிரியாக, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பயன்படுத்தப்படும் சரீரப் பிரகாரமான பொருட்களின் வழியாக ஆசீர்வாதித்திற்கோ அல்லது ஆக்கினைத் தீர்ப்பிற்கோ ஆவிக்குரிய ஆற்றல் கடந்து வருகிறது.

எண்ணாகமம் 5:11–31 வரையுள்ள வசனங்கள் ஒரு மனிதனுடைய மனைவி அவனுக்கு உண்மையுள்ளவளாய் இருக்கிறாளா இல்லையா என்பதை தீர்மானிக்க பயன்படுத்தப்பட்ட நியமனத்தை விளக்குகிறது. அதற்கேற்ற ஜெபங்களும், பலிகளும் இருந்தபொழுதிலும், இந்த நியமனத்தின் முக்கியத்துவம் ஒரு கோப்பை நீரில் இருந்தது. அதில் ஆசாரியன் ஆசரிப்புக் கூடாரத்தின் தரையிலிருந்து கொஞ்சம் புழுதியையும், சாபத்தை எழுதிய பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட மையையும் கலப்பான். பின்பு அவளிடம் அந்தத்தண்ணீரைக் கொடுத்து குடிக்கச் செய்வான்.

அவள் குற்றம் உடையவளாய் இருந்தால், அவளுடைய சரீரத்தில் அந்த சாபம் வெளிப்பட ஆரம்பிக்கும் : "அவள் வயிறு வீங்கி, அவள் இடுப்பு சூம்பும்; இப்படியே அந்த ஸ்திரீ தன் ஜனங்களுக்குள்ளே சாபமாக இருப்பாள்." அதுவே அவளுடைய பாவத்திற்குரிய தண்டனை. இந்த சம்பவத்தில், கோப்பை நீரின் மூலமாக சாபமானது கடத்தப்படுகிறது.

இதற்கு மாறாக, அந்தப் பெண் குற்றமற்றவளாக இருந்தால், எந்தத் தீய விளைவுகளும் அவளுக்கு உண்டாயிருக்காது. இவ்விதமாக தேவன் அவளுடைய நீதியை நிலைநாட்டியிருப்பார். அவள் கணவனால் அவளுக்கு விரோதமாக இனிமேல் குற்றம் சாட்ட முடியாது. அவளுடைய குற்றமற்ற தன்மை அவளை சாபத்திலிருந்து பாதுகாத்திருக்கும்.

மேற்கூரிய சம்பவங்கள் ஒரு முக்கிய வேதசத்தியத்தை நிலைநாட்டுகின்றன : சில சூழ்நிலைகளில் ஆசீர்வாதங்களும், சாபங்களும் சரீரப்பிரகாரமான பொருட்கள் மூலம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 35 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கடத்தப்படக்கூடும். இதற்கடுத்தபடியாக, வேதத்தின் பழக்கங்களிலிருந்து நமது கவனத்தைத் திருப்பி பலவிதமான பொய்யான மதங்களையும் மந்திரக்காரியங்களையும் உற்றுநோக்கும்போது அவைகளில் எல்லையற்ற வழிகளில் சரீரப்பிரகாரமான பொருட்களின் வழியாக சாபங்கள் கடத்தப்படுகிறது என்பதைக் காணலாம்.*

*யாத்திராகமம்* 20:4–5 *வரையுள்ள வசனங்களில் பத்துக்கட்டளைகளின் இரண்டாம் கட்டளையில் தேவன் மதக்காரியங்களுக்கு எந்தவித விக்கிரகத்தையோ அல்லது சிலையையோ உண்டாக்குவதை தெளிவாகத் தடை செய்கிறார். இக் கட்டளையை மீறுகிறவர்கள் தங்கள் மேல் மாத்திரமல்ல தங்களுக்குப் பின்வரும் குறைந்தது மூன்று தலைமுறைகள் வரை கூட நியாயத்தீர்ப்பை வருவித்துக் கொள்வார்கள் என தேவன் எச்சரிக்கிறார்* :

> “மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்;
>
> நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.”

*இப்படியாக விலக்கப்பட்ட பொருட்களின் பட்டியல் மிகப் பெரியதாயிருக்கிறது. என்னுடைய சொந்த வாழ்வில் நான் முன்பு விளக்கியது போல தையல் வேலைப்பாடான அந்த சீன வலுசர்ப்பங்கள் காணப்படாத சாபத்தின் ஆற்றலுக்கு என்னை இலக்காக்கியது. அவைகளை வணங்கும் எண்ணம் எனக்கு உண்மையாகவே இல்லை. இருந்தபொழுதிலும் அநேக நூற்றாண்டுகளாக இவைகள் விக்கிரக ஆராதனைக்குரிய பொருட்களாக இருந்து வந்துள்ளன. இவைகள் பல்லாயிரம் ஆண்டுகளாக செய்யப்பட்டு வந்த அஞ்ஞான வழிபாட்டின் வல்லமைக்கு என் வீட்டைத் திறந்து கொடுத்தன.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 36 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அதைப் பின்பு சிந்தித்துப் பார்த்த பொழுது அந்த வலுசர்ப்பத்தின் கலைப்பொருட்கள் என் வாழ்வில் உண்டாக்கின ஒரு குறிப்பிட்ட விளைவை நான் கண்டேன். பொருளாதார ஆசீர்வாதத்திற்குள் நான் கடந்து செல்ல முடியாதபடி ஒரு தடையை மட்டும் அவைகள் உண்டாக்கவில்லை, ஆசீர்வாதம் உண்மையில் எனக்குண்டு என்பதைக் கூட நான் காணக்கூடாதபடி செய்தன. அதன் சக்தியிலிருந்து நான் விடுபட்ட பின்புதான் விசுவாசத்தினாலே தேவன் எனக்கு ஆயத்தப்படுத்தியுள்ளதை உணர முடிந்தது.*

*அந்நாளிலிருந்து சாபத்திற்குட்பட்ட அநேகருடைய வாழ்விலும் இதே விளைவினை நான் கண்டுள்ளேன். அவர்களுக்கு தேவன் அளிக்க இருக்கும் ஆசீர்வாதங்களை மட்டும் சாபம் தடுத்து நிறுத்தாமல், ஆசீர்வாதம் சுதந்தரித்துக் கொள்வதற்காகவே இருக்கிறது என்பதையும் உணரமுடியாமற் செய்கிறது. நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் வேதத்தின் ஒளியை பிரகாசிப்பிக்கும் போது மட்டுமே பிசாசு நம்மை எவ்வாறு ஏமாற்றி வந்திருக்கிறான் என்பதை நாம் புரிந்து கொள்ள முற்படுவோம்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 37 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 4

# ஆசீர்வாதங்கள், சாபங்கள் பற்றிய மோசேயின் பட்டியல்

*சிலர் ஆசீர்வாதங்கள் உள்ளன என்னும் உண்மையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால் சாபங்களைப் பற்றி சந்தேகம் உடையவர்களாய், இது இருண்ட காலத்திலிருந்து வந்த மூடபழக்கங்கள் என்று கருதுகின்றனர். இப்படிப்பட்ட எண்ணம் சரியானதல்ல. எதிர்மறையான காரியங்களில் ஒன்று நம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பதால் அதன்மீது நமது கவனத்தை பிரத்தியேகமாக செலுத்தி, மற்றொன்று நம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாததால் அதனை அப்படியே புறக்கணித்துவிட முடியாது. வெப்பத்திற்கு எதிரானது குளிர்ச்சி; ஆனால் வெப்பம், குளிர்ச்சி ஆகிய இரண்டுமே உண்மைதான். நன்மைக்கு எதிரானது தீமை; ஆனால் இரண்டுமே உண்மைதான். அதைப் போலவே ஆசீர்வாதங்கள் எவ்வளவு உண்மையோ அவ்வளவாக சாபங்களும் உண்மையாயுள்ளது.*

*என்னுடைய ஊழியம் பல நாடுகளில் உள்ள பல பின்னணியை உடைய கிறிஸ்தவர்களுடன் என்னைத் தொடர்பு கொள்ளச் செய்கிறது. அநேக தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் பகுத்தறிவது எவ்வாறு என்பது தெரியாதிருப்பதை நான் கண்டிருக்கிறேன். ஆசீர்வாதத்தை அனுபவிக்க வேண்டிய அநேகக் கிறிஸ்தவர்கள் உண்மையில் சாபங்களைச் சகித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உண்டு : முதலாவதாக,*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 38 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவர்கள் எது ஆசீர்வாதம் எது சாபம் என கண்டு கொள்வது எவ்வாறு அல்லது பகுத்தறிவது எவ்வாறு என்பதை அறியாது இருக்கிறார்கள்; இரண்டாவதாக அவர்கள் சாபத்திற்கு கீழே இருந்தால் எந்த அடிப்படையில் அதிலிருந்து தங்களை விடுவிப்பது என அறியாதிருக்கின்றனர்.

ஆசீர்வாதங்கள் நமக்கு அநேக வழிகளில் வந்தாலும், அவைகள் அனைத்திற்கும் தேவன் மட்டுமே பிரதானமான மூலகாரணராயிருக்கிறார். சாபங்களும் கூட பெரும்பாலும் தேவனிடமிருந்து புறப்படுகிறது. ஆனால் அதற்கு அவர் மட்டுமே மூலகாரணர் அல்லர். சாபங்களின் மற்ற மூலகாரணங்களை பின்பு பார்ப்போம்.

தேவனிடத்திலிருந்து புறப்படும் சாபம் அவரை எதிர்த்து நிற்பவர்கள் மேல்—அவிசுவாசிகள், தேவபக்தியில்லாதவர்கள் மேல்—நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரும் பிரதான வழிகளில் ஒன்றாக உள்ளது. இப்படிப்பட்ட மக்கள் மீது சொல்லப்பட்ட தேவ சாபங்கள் விளைவித்த நீண்ட துக்ககரமான குறிப்புகளை மனுக்குலத்தின் வரலாறு தருகிறது.

அநேக ஆண்டுகளாக பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்று சொல்வது வழக்கமாயுள்ளது. இந்த விளக்கத்தின்படி பழைய ஏற்பாடு தேவனை கோபத்தின் தேவனாகவும், நியாயத்தீர்ப்பின் தேவனாகவும் விவரிக்கிறது; புதிய ஏற்பாடு அவரை அன்பும், இரக்கமும் உள்ள தேவனாக விவரிக்கிறது. என்றாலும் உண்மையில் இரு ஏற்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரணற்றதாக உள்ளன. ஒவ்வொரு பிரிவும் ஒரே நேரத்தில் தேவனை இரக்கம் உள்ள தேவனாகவும், நியாயத்தீர்ப்பின் தேவனாகவும் விவரிக்கிறது.

எந்த புதிய ஏற்பாட்டின் பகுதியையும் விட யோசுவா 6ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள எரிகோவின் சம்பவம் மிகத் தெளிவாக தேவனின் இந்த இரு பண்புகளையும் விளக்குகிறது. எரிகோ பட்டணமானது தேவனுடைய ஒரு நியாயத்தீர்ப்பினால் அழிந்த அதே சமயத்தில் இராகாப் வேசியும் அவளுடைய குடும்பம் அனைத்தும் எந்தத் தீங்குமின்றித் தப்புகின்றனர். பின்வரும் குறிப்புகளிலிருந்து இராகாப் யூதாவின் பிரபுக்களில் ஒருவனான



Blessing or Curse Tamil text 2012 revised.p65 39 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சல்மோனின் மனைவியாகி இஸ்ரவேலின் மேசியாவாகிய இயேசு உலகில் தோன்றிய குடும்ப அட்டவணையில் இடம் பெறுகிறாள் எனக் காணலாம்! (மத்தேயு 1:5யைப் பார்க்கவும்.)*

*ரோமர் 1:17—18ல் பவுல் சுவிசேஷமானது தேவனுடைய இரக்கம், நியாயத்தீர்ப்பு ஆகிய அவரது இரு பண்புகளையும் பிரதானமாய் வெளிப்படுத்துகிறது என்று கூறுகிறார்:*

> ". . . விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.
>
> . . . மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது."

*ஒரு புறம் தேவனுடைய இரக்கம், தங்கள் சார்பில் இயேசு செய்த தியாக மரணத்தை விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்பவர்களுக்கு, அவருடைய நீதியை வழங்குகிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த பலியானது மனுக்குலத்தின் பாவத்தை தன்மேல் ஏற்றுக்கொண்டதினால் இயேசுவின் மீது ஊற்றப்பட்ட தேவ கோபாக்கினையின் முடிவான வெளிப்பாடாகவும் உள்ளது. பாவத்தின் மேலுள்ள தேவனுடைய நியாயத்தீர்ப்பின் உண்மை நிலையைக் கேள்வி கேட்கும் கிறிஸ்தவர்கள் சிலுவையின் முக்கியத்துவத்தைக் குறித்து மறுபடியும் சிந்திக்க வேண்டும். இயேசுவால் கூட பாவத்தை தேவன் ஒப்புக் கொள்ளும்படி செய்ய முடியவில்லை. ஆகவே தேவனுடைய கோபாக்கினை முழுவதுமாக அவர்மேல் ஊற்றப்பட்டதை அவர் சகித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது.*

*மேலும் ரோமர் 11:22ல், பவுல் மீண்டும் தேவனுடைய இந்த இரு செயற்பாட்டையும் அடுத்தடுத்து வைத்துக் காட்டுகிறார்: "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்." தேவனைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்வதற்கு அவருடைய இரு பண்புகளையும் நமக்கு முன்பு எப்பொழுதும் வைக்க வேண்டும். அவருடைய ஆசீர்வாதங்கள் அவருடைய தயவிலிருந்து புறப்படுகிறது. அவருடைய நியாயத்தீர்ப்புகள் அவருடைய கண்டிப்பிலிருந்து புறப்படுகிறது. இவைகள் இரண்டுமே மெய்யானவை தான்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 40 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நீதிமொழிகள் 26:2ல் சாலொமோன் ஒவ்வொரு சாபத்திற்கும் எப்பொழுதுமே ஒரு காரணம் உண்டு என்று தெளிவுபடுத்துகிறார்:*

"அடைக்கலான் குருவி அலைந்து போவதுபோலும், தகைவிலான் குருவி பறந்துபோவதுபோலும், காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது."

*இந்த தத்துவத்தை இரண்டு விதங்களில் அர்த்தங்கொள்ளலாம். முதலாவது, ஒரு சாபமானது எந்தக் காரணமுமில்லாமல், செயல்பட முடியாது. காரணம் இருக்குமாயின் சாபம் செயல்பட ஆரம்பிக்கும். அதே சமயத்தில் ஒரு சாபம் செயல்படும் இடத்திலெல்லாம் அதற்கு ஒரு காரணம் உண்டு. சாபத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ள மக்களுக்கு நான் உதவ முற்படும்போது அந்த சாபத்திற்கான காரணத்தை முதலில் அறிந்து கொள்வது அநேக நேரங்களில் உதவியாக உள்ளது என என் அனுபவத்தினால் கற்றிருக்கிறேன்.*

*உபாகமம் 28ம் அதிகாரத்தின் 68 வசனங்களும் பிரத்தியேகமாக ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் பற்றியே கூறுகின்றன. அவைகள் ஒவ்வொன்றிற்கான பிரதான காரணத்தையும் அது வெளிப்படுத்துகிறது. முதல் இரண்டு வசனங்களில் மோசே ஆசீர்வாதங்களின் காரணத்தை முதலில் விளக்குகிறார் : "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால் ... நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்" என்கிறார்.*

*இதனுடைய முதற்பகுதியை, "... உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு செவிசாய்க்கவே செவிசாய்த்தால் ..." என்று சொல்லுக்கு சொல் மொழி பெயர்க்கலாம். செவிசாய்ப்பது என்னும் வினைச்சொல் திரும்பவும் வருவது அதன் அவசியத்தைச் காட்டுகிறது. சுருக்கமாகச் சொன்னால், தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கான நிபந்தனைகள் : முதலாவது, தேவனுடைய சத்தத்திற்கு செவி*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 41 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கொடுப்பது; இரண்டாவது அவர் சொன்னபடி செய்வது ஆகும்.

எல்லாக்காலங்களிலும் தேவனுடன் உடன்படிக்கை உறவு கொள்வதற்கு இதுவே அத்தியாவசியமான தேவையாக இருந்துள்ளது. யாத்திராகமம் 19:5ல் சீனாய் மலையிலே தேவன் இஸ்ரவேலர்களுடன் அவருடைய முதல் உடன்படிக்கையைச் செய்து கொள்ள முற்பட்ட போது, "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்" என்று கூறினார். தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுத்து அவருடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவது அடிப்படைத் தேவையாக இருக்கிறது.

புதிய உடன்படிக்கையில் யோவான் 10:27ல் இயேசு "தம்முடைய ஆடுகளாக" அவர் ஏற்றுக்கொண்டவர்களை—அதாவது, தமது உண்மையான சீடர்களை—பற்றி இதேபோல் விவரிக்கிறார்: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது . . . அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது." அடிப்படைத் தேவை மாறவில்லை: கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு, கீழ்ப்படிதலுடன் அவரைப் பின்பற்ற வேண்டும்.

கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது என்பது அனுசரணைகளுக்கும், மதசடங்காச்சாரங்களுக்கும் அப்பாற்பட்டது. ஒரு மனிதனுடைய குரலை விட ஒப்பற்றது வேறொன்றுமில்லை. கர்த்தருடைய குரலைக் கேட்பது என்பது அவருடன் ஆழ்ந்த உறவுகொண்டு நம் ஒவ்வொருவருடன் அவர் தனிபட்ட முறையில் பேசுவதைக் கேட்பதாகும்.

நமது சரீர காதுகளுக்கோ அல்லது நமது இயற்கை மனங்களுக்கோ கர்த்தர் இவ்வாறு பேசுவதில்லை. அவர் தொடர்பு கொள்வது, ஆவி ஆவியுடன் கொள்ளும் தொடர்பு—அதாவது, அவருடைய ஆவி, நமது ஆவியுடன் கொள்ளும் தொடர்பு. இவ்விதமாகச் சொல்லும் பொழுது அவரது குரலானது நமது உள்ளான மனிதனின் அடித்தளம் வரை ஊடுருவிச் செல்லுகிறது. அங்கிருந்து அதனுடைய அதிர்வுகள் நமது ஆழ்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உணரக்கூடியதாக உள்ளது.

கர்த்தர் வேதத்தின் மூலம் நம்முடன் பேசமுற்படலாம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 42 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அல்லது அவர் நேரிடையான, வெளிப்பாட்டின் வார்த்தையை நமக்குக் கொடுக்கலாம். என்றாலும் வேதத்தை மட்டும் படிப்பது போதாது. அந்த வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவரால் பேசும் குரலாக மாற்றப்பட்டாலொழிய அது நமக்குப் பயனளிக்காது. தேவனுடன் நாம் கொள்ளும் இப்படிப்பட்ட உறவே, அவருடைய சத்தத்திற்குச் செவி கொடுத்து, அவருக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு அவர் வாக்களித்துள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள நம்மை உண்மையில் தகுதிப்படுத்துகிறது.*

*மேலும் உபாகமம் 28:15ல் மோசே சாபங்கள் அனைத்திற்கும் உள்ள பிரதான காரணத்தைச் சொல்லுகிறார் :*

> “இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்.”

*ஆசீர்வாதங்கள் வர எவை காரணமோ அவற்றிற்கு எதிர்மாறானவை சாபங்கள் வருவதற்குக் காரணமாக உள்ளது. ஆசீர்வாதங்கள் தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து அவர் சொல்லுவதை செய்வதின் மூலம் உண்டாகிறது. சாபங்கள் தேவனுடைய சத்தத்திற்குச் செவி கொடாமல் அவர் சொன்னதைச் செய்யாமல் இருப்பதின் மூலம் உண்டாகிறது. தேவனுடைய குரலுக்குச் செவிகொடுக்காமல் அதற்குக் கீழ்ப்படியாமலிருப்பதை ஒரே வார்த்தையில் எதிர்த்து நிற்பது எனத் தொகுத்து கூறலாம். இது மனிதனுக்கு அல்ல, தேவனுக்கே விரோதமான பகை.*

*உபாகமம் 28ம் அதிகாரத்தில் மோசே ஆசீர்வாதங்களும், சாபங்களும் வெளிப்படும் பலவிதமான வடிவங்களின் முழுப்பட்டியலையும் அளிக்கிறார். ஆசீர்வாதங்கள் 3ம் வசனத்திலிருந்து 14ம் வசனம் வரைக்கும் வருகிறது. சாபங்கள் 16 முதல் 68ம் வசனம் வரைக்கும் வருகிறது. இந்தக்காரியங்களை முழுவதுமாகப் புரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் இந்த அதிகாரம் முழுவதையும் கவனத்துடன் படிக்க வேண்டும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 43 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*என்னுடைய சொந்த ஆராய்ச்சியின்படி நான் ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் அவைகள் கூறப்பட்டுள்ள வரிசையின்படியே தொகுத்து இரு பட்டியல்களாகக் கூற முற்பட்டுள்ளேன். நான் தயாரித்துள்ள ஆசீர்வாதங்களின் பட்டியல் பின்வருமாறு :*

| | |
|---|---|
| மேன்மை | செழுமை |
| ஆரோக்கியம் | வெற்றி |
| கனிதருதல் | தேவதயவு |

*கனிதருதல் என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதியிலும் கனியும் பெருக்கமும் உண்டாயிருக்கும் நிலையைக் குறிக்கிறது. இது குடும்பம், கால்நடை, பயிர்கள், வியாபாரம், தாலந்துகளை பயன்படுத்துதல் போன்றவற்றில் காணப்படும். இவைகள் அனைத்தும் ஏற்ற வழிகளிலே தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.*

**16** *முதல்* **68** *வரையுள்ள வசனங்களில் வருகின்ற சாபங்களின் பட்டியலில் மோசே ஆசீர்வாதத்தை விட சாபங்களை அதிக விளக்கமாகக் கூறுகின்றார். என்றாலும் முக்கியமாக சாபங்கள் ஆசீர்வாதங்களுக்கு எதிர்மாறானவை. என்னுடைய தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது :*

**இழிவு படுத்தப்படுதல்**
**மலட்டுத்தன்மை, கனியற்ற நிலை**
**மனம், சரீரம் இவற்றில் வரும் சுகவீனங்கள்**
**குடும்பத்தில் பிளவு**
**வறுமை**
**தோல்வி**
**சோர்வு**
**இழந்து போதல்**
**தேவனுடைய தயவற்ற தன்மை**

*முன்பு* 14*ம் வசனத்தில் மோசே ஆசீர்வாதங்களின் பட்டியலை இரண்டு வசனங்களில் தெளிவாகக் கோலமிட்டு முடிக்கின்றார். நாம் ஒவ்வொருவரும் இந்தக் காரியங்கள் நமது சொந்த வாழ்வில் எவ்வாறு பொருந்தும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 44 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

முதலாவதாக மோசே, "... கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் ..." என்கிறார். நான் ஒருமுறை கர்த்தரிடம் இது எவ்வாறு என் வாழ்வில் நடக்கக்கூடும் என்று கேட்டேன். அவர் இந்தப் பதிலை அளித்ததாக உணர்ந்தேன் : தலை தீர்மானங்கள் எடுக்கின்றன; வால் அதன் பின்னே அப்படியே இழுத்துச் செல்லப்படுகிறது.

நான் செயல்படும் முறையைத் தீர்மானிப்பது என்னைப் பொறுத்தது. ஒரு தலையைப் போல் ஒவ்வொரு சூழ்நிலையையும் கட்டுப்படுத்தி, தகுந்த தீர்மானங்களை எடுத்து, காரியங்கள் வெற்றிகரமாக நடந்தேறும்படி செய்கிறேனா? அல்லது ஒரு வாலின் நிலையில் அமைந்து என்னால் புரிந்துகொள்ளமுடியாத, கட்டுப்படுத்தமுடியாத சக்திகளினாலும், சூழ்நிலைகளினாலும் நான் இழுத்துச் செல்லப்படுகிறேனா?

மோசே தனது கருத்தைத் தெளிவுபடுத்த இரண்டாவது காரியத்தைக் கூறுகிறார் : "நீ கீழாகாமல் மேலாவாய்." இதனை அறிமுகமான இரண்டு கிறிஸ்தவர்களுக்கு இடையேயான சந்திப்பின் மூலம் விளக்கலாம்.

"நீ எப்படி இருக்கிறாய்?" என்று முதலாமவர் கேட்கிறார்.

"சூழ்நிலைகளின் கீழே நான் மோசமாக இல்லை" என்று இரண்டாமவர் பதிலளிக்கிறார்.

"அதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன்" என்று முதலாமவர் உரைக்கிறார். "ஆனால் நீ உன் சூழ்நிலையை எவ்வாறு சந்திக்கிறாய்?"

மோசேயின் இந்த விளக்கங்கள் சுயபரிசோதனை செய்து கொள்ளும் வாய்ப்பை நமக்குத் தருகிறது. நான் என் வாழ்க்கையில் ஒரு தலையாகவா அல்லது ஒரு வாலாகவா உள்ளேன். நான் சூழ்நிலைகளினால் கட்டுப்படுத்தப்படுகிறேனா அல்லது நான் அவைகளைக் கட்டுப்படுத்துகிறேனா? என்பதே கேள்வி. நாம் அளிக்கும் பதில்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை உண்மையில் நாம் எவ்வளவாய் அனுபவிக்கிறோம் என்பதைக் கண்டு கொள்ளும்படி செய்கிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 45 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 5

# சாபத்தின் ஏழு அறிகுறிகள்

நான் கவனித்தமட்டிலும், சொந்த அனுபவத்தின் மூலமும் ஒரு சாபம் செயல்படுகிறது என்பதைக் குறிக்கும் கீழ்கண்ட ஏழு பிரச்சனைகளின் பட்டியலைத் தொகுத்துள்ளேன். எனது பட்டியலை உபாகமம் 28ல் மோசே கொடுக்கும் பட்டியலுடன் நான் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவைகளுக்குள்ள நெருக்கமான தொடர்பைக் கண்டு நான் வியப்படைகிறேன்.

1. மனது அல்லது உணர்ச்சியின் தளத்தில் உண்டாகும் நிலைகுலைவு
2. மீண்டும், மீண்டும் வரும் நீங்காத நோய்கள் (சிறப்பாக பரம்பரை நோய்கள்)
3. மலட்டுத்தன்மை, கருச்சிதைவு அல்லது பெண்களுக்குரிய பிரச்சனைகள்
4. திருமணத்தின் முறிவும் குடும்பத்தின் பிரிவும்
5. தொடர்ந்து நிலவும் பணப்பற்றாக்குறை
6. அடிக்கடி விபத்திற்குள்ளாகும் சூழ்நிலை
7. தற்கொலைகளும், இயற்கைக்கு மாறான அகால மரணங்களும்

ஒரு சாபம் செயல்படுகிறது என்று ஏற்கத்தக்க வகையில் நிரூபிப்பதற்கு இதில் ஒன்றிரண்டு பிரச்சனைகள் மட்டும் இருந்தால் போதாது. ஆனால் இவைகளில் பல பிரச்சனைகள் இருக்கும் பொழுது அல்லது இவற்றில் ஒரு பிரச்சனை மீண்டும் மீண்டும் நிகழும் போது ஒரு சாபம் இருப்பதற்கான சாத்தியக்கூறு விகிதப்படி அதிகமாகிறது. என்றாலும் கடைசியாக சாபம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 46 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உள்ளதா இல்லையா என்ற சரியான "கணிப்பை" பரிசுத்த ஆவியானவர் மட்டுமே தரக்கூடும்.

### 1. மனது அல்லது உணர்ச்சியின் தளத்தில் உண்டாகும் நிலைகுலைவு

உபாகமம் 28ல் இதைக் குறிக்கும் வார்த்தைகள் பின்வருமாறு:**புத்தி மயக்கம், மதிமயங்கிப் போதல்** (28,34); * **மனதில் திகைப்பு** (28); **தத்தளிக்கிற இருதயம், மனச்சஞ்சலம்** (65); **இளைப்பாறுதல் இல்லாதிருப்பது** (65).

பாதிக்கப்படும் பகுதிகள் இருதயமாகவும், ஆத்துமா அல்லது மனது ஆகவும் உள்ளன. வேறு வார்த்தைகளில் சொன்னால், மனித ஆழ்தத்துவத்தின் உள்ளமைந்த கோட்டைகள் இவ்வாறு தாக்கும் எதிர்ப்புச் சக்திகளினால் உடைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட மக்கள் தங்கள் எண்ணங்கள் மேலும், உணர்ச்சிகள் மேலும் முழுமையான கட்டுப்பாடற்றவர்களாக உள்ளனர். மறைவாகத் தாக்கும் ஓர் ஆவியால் அவர்கள் தொடர்ந்து "தாக்கப்பட்டு" பரியாசம் பண்ணப்படலாம்: "நீ கட்டுப்பாட்டை இழந்து விட்டாய் ... நம்பிக்கை இழந்து விட்டாய் ... உன் தாயார் பைத்தியக்கார நிலையத்திற்குப் போய்விட்டார்கள் ... அடுத்தது நீ தான்!" என இது கூறுகிறது.

இப்படிப்பட்ட உள்ளான போராட்டத்திற்குள்ளே அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு நான் வியப்பிற்குள்ளாகிறேன். அநேக நேரங்களில் அவர்கள் தங்கள் பிரச்சனைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ள விரும்பமாட்டார்கள்—அவர்கள் இதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இப்படிச் செய்தால் அது அவர்களின் விசுவாசத்தின் மறுதலிப்பாக இருக்குமோ என்ற பயம் அவர்களுக்குண்டு.

இதனைக் குறிக்கும் இரண்டு முக்கிய வார்த்தைகள் **குழப்பமும், மனச்சோர்வும்** ஆகும். இவைகள் ஒரே மாதிரியாக ஒரு விதமான மாந்திரீகத்துடன் உள்ள உடன்பாட்டின் காரணமாய் விளைவதாக உள்ளன. அநேகம் தடவைகளில் இது

* அடைப்புக் குறியில் உள்ள எண்கள் உபாகமம் 28ல் இதே போன்ற சூழ்நிலைகளைக் கூறும் வசனங்களைக் குறிக்கிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 47 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பிசாசின் கிரியையே. என்றாலும், அநேக சூழ்நிலைகளில் பிசாசுகள் துரத்தப்படுவதற்கு முன்பு மாந்திரீகத்துடன் உள்ள ஈடுபாட்டை அறிக்கை செய்து அதனால் விளையும் சாபத்தை நீக்குவது அவசியமானதாக உள்ளது.*

### *2. மீண்டும், மீண்டும் வரும் நீங்காத நோய்கள் (சிறப்பாக பரம்பரை நோய்கள்)*

*உபாகமம் 28ல் இதைக் குறிக்கும் வார்த்தைகள் பல வருகின்றன : **கொள்ளை நோயின் தாக்குதல்** (21); **ஈழை அல்லது சிறிது சிறிதாக உடலை வருத்தும் வியாதி** (22); **எரிபந்தக் காய்ச்சல்** (22); **உஷ்ணம்** (22); **குணமடையாத எரிபந்தப் பருக்கள்** (27,35); **மூல வியாதி** (27); **சொறி** (27); **குணமடையாத சிரங்கு** (27); **குருட்டாட்டம்** (28); **நீங்காத பெரிய வாதைகள்** (59); **நீங்காத கொடிய ரோகங்கள்** (59); **எல்லா பிணியும், வாதையும்** (61).*

*இந்தப் பட்டியல் எல்லாவிதமான நோய்களும் சாபத்தின் நேரிடை விளைவு என்பதைத் திட்டவட்டமாய்க் குறிக்கவில்லை. என்றாலும் சில முக்கிய வார்த்தைகள் இங்கு வருகின்றன: கொள்ளை, குணமடையாத, நீங்காத, பெரிய கொடிய— போன்றவை. இவைகள் எச்சரிப்பின் அடையாளங்கள். இவைகள் "சாபத்திற்கான சூழ்நிலையை" உண்டாக்குகின்றன. தீய, கெடுதலான சக்திகள் செயலாற்றுகின்றன என்பதை இவைகள் சுட்டிக்காட்டுகின்றன.*

*உபாகமம் 28ல் பயன்படுத்தப்படாத வேறொரு மருத்துவச் சொல் உள்ளது. அது வேண்டாத செல்களின் பெருக்கமாகும். **காலின்ஸ் ஆங்கில அகராதியில்** 'பிறருக்குத் தீங்கிழைக்கும் நோக்கம் கொண்ட' என்ற பிரதான அர்த்தம் இதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. தெளிவாக இது ஒரு சரீர நிலையை அல்ல ஒரு நபரையே குறிக்கிறது. முந்திய பத்தியில் உள்ள வார்த்தைகளுக்கு மேலாகவே இது ஒரு தீய கெடுதலான அறிவாளியின் செயல்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. இவ்விதமான வார்த்தையை நாம் பயன்படுத்துவது சரீரத்திற்கப்பாற்பட்ட இனம் கண்டு கொள்ள முடியாத சக்திகளின் செயல்பாடு இதில் இருப்பதைக் குறிக்கிறது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 48 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சில வகையான நோய்களைக் குறித்து பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு மிக முக்கியமான வார்த்தை பரம்பரை நோய் என்பதாகும். இது தலைமுறை தலைமுறையாக கடந்து வரும் நிலையைக் குறிக்கிறது. இது ஒரு சாபம் செயல்படுகிறது என்பதைக் காட்டும் பொதுவான அடையாளங்களுள் ஒன்றாகும். இதன் காரணமாக, பரம்பரை வியாதியுள்ள ஒருவருக்காக நான் ஜெபிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படும் பொழுதெல்லாம் ஒரு குறிப்பிட்ட சாபத்தின் விளைவுகளை என் எதிரே காண்கிறேன் என்ற உணர்விற்கு வருகிறேன்.*

*போதகராய் இருக்கின்ற என்னுடைய நண்பர் ஒருவருக்கு அவருடைய 60வது வயதில் "ஹீமோகுரோமடாசிஸ்"* (Hemochromatosis) *என்ற நோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நோய் ஒரு நோயாளியின் இரத்தத்தில் மிகவும் அதிக இருப்புச்சத்தை உற்பத்தி செய்ய வைத்து, அதனை விசேஷமாக கல்லீரல், இருதயம் போன்ற முக்கிய உறுப்புகளில் சேர்த்து வைக்கச் செய்கிறது. இவருடைய தகப்பனார், இதே நோயினால் 67ம் வயதில் மரணமடைந்தார். மருத்துவர் இது சுகப்படுத்த முடியாத, உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பரம்பரை நோய் என்றார். ஒவ்வொரு வாரமும் அவர் இரத்தத்தை பழங்கால* (Phlebotomy) *முறைப்படி வெளியேற்ற வேண்டியதாயிருந்தது.*

*சிறப்பாக ஒரு ஜெபக்குழு அவருக்காக அதிகம் ஜெபித்தது. ஜெபத்திற்குப் பின்பு என் நண்பர் ஒரு ஞாயிறு காலை ஆராதனையில் சபையாருக்கு முன்பாக நின்று, உணர்ச்சிவசப்படாமல் ஒரு எளிய அறிக்கையைச் செய்தார்: "இயேசுவின் நாமத்தினால் நான் என் தகப்பனாரிடமிருந்து சுதந்தரித்த எல்லா தீய சக்திகளிலிருந்தும் என்னை விடுவித்துக் கொள்கிறேன்" என்றார்.*

*அவர் உடனடியாக முற்றிலும் குணமடைந்தார். அது நடந்து இப்பொழுது ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. அதன் பிறகு அவர் வேறு எந்த சிகிச்சையும் பெற்றுக் கொள்ளவில்லையாயினும் அந்தப் பிரச்சனை மீண்டும் அவருக்கு ஏற்படவில்லை.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 49 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

முன்பு கூறிய குறிப்புகளில் எந்த ஒரு குறிப்பிட்ட நோயும் எப்பொழுதும் கட்டாயமாய் ஒரு சாபத்தைச் சார்ந்தது என்று சுட்டிக்காட்ட நான் முற்படவில்லை. மேலே குறிப்பிட்டுள்ள அநேக நோய்களில் ஒரு சாபம் செயல்படுகிறது என்பதின் சாத்தியக்கூறு அதிகமாக உள்ளது. ஆனால் தகுந்த ஆதாரங்கள் இன்றி இவை சாபத்தின் விளைவே என்று வலியுறுத்துவது சரியல்ல. இதில் சரியான தெளிவைத் தரக்கூடிய "வல்லுநர்" பரிசுத்த ஆவியானவர் மட்டுமே.

### 3. மலட்டுத்தன்மை, கருச்சிதைவு அல்லது பெண்களுக்குரிய பிரச்சனைகள்

உபாகமம் 28ல் இதன் திறவுகோல் வாக்கியம் "உன் கர்ப்பத்தின் கனி சபிக்கப்பட்டிருக்கும்" (18) என்றுள்ளது. இந்த சாபமானது பிறப்பிக்கிற உடல் உறுப்புகளையோ அல்லது செயல்பாட்டையோ பாதிப்பதாக உள்ளது. ரூத்தும் நானும் "பெண்கள் சம்பந்தப்பட்ட நோய்களால்" அவதிப்பட்டு வரும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு ஊழியத்தால் உதவியுள்ளோம். இவைகள் எவை என்றால் கருத்தரிக்க முடியாத தன்மை; கருச்சிதைவு; மாதவிடாய் வராமல் இருத்தல்; ஒழுங்கற்ற மாதவிடாய் ஏற்படுதல்; மாதவிடாய் காலத்தில் அதிக பெலவீனம்; உற்சாகமற்ற நிலை; இனவிருத்தி போக்குடன் சம்பந்தப்பட்ட பல்வேறு உறுப்புகளை பாதிக்கும் திரவம் நிரம்பிய பைகள், கட்டிகள், வேண்டாத வளர்ச்சிகள் அல்லது சரீர வளர்ச்சிக் குறைவுகள். அடிக்கடி இவ்விதமான சாபங்கள் குடும்பம் முழுவதையும் பாதிக்கின்றன. குடும்பத்தின் பெண்கள் அனைவரும் இவ்வித பிரச்சனைகளால் பாதிக்கப்படக்கூடும்.

ரூத்தும் நானும் இப்படிப்பட்ட மக்களுக்கு முதலாவது சாபங்களின் தன்மைகளையும், காரணங்களையும் விளக்கி எடுத்துக் கூறாமல் அவர்களுக்கு ஊழியம் செய்ய முற்படுவதில்லை. கூறிய பின்பே விடுதலைக்காக அவர்களுடன் ஜெபிக்கிறோம். இந்த முறையைக் கையாளுவதினால் அநேகருக்கு அது பாதிக்கப்பட்ட பகுதிகளிலோ அல்லது செயல்பாடுகளிலோ பரிபூரண சுகத்தை உண்டாக்கியுள்ளது. சில வேளைகளில் சுகத்திற்காக எந்த குறிப்பான ஜெபமும் செய்யாமல் சாபத்தை மட்டும் நீக்குவது போதுமானதாய்க் காணப்படுகிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 50 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கீழே உள்ள கடிதம் மலட்டுத்தன்மையின் சாபம் நீக்கப்படும் போது உண்டாகக்கூடிய நற்பலன்களை விளக்கிக் கூறுகிறது: எனக்கும் என் கணவருக்கும் திருமணமாகி 12 ஆண்டுகள் ஆகியும் குழந்தைகளே இல்லை. மருத்துவ பரிசோதனைகள் சரீரப்பிரகாரமாக எங்களுக்கு எந்தவிதக் குறைவும் இல்லை என வெளிப்படுத்தியது.

"1985 ஆம் ஆண்டு ஜீலை 7ம் தேதி ஆம்ஸ்டர்டாமில் நீங்கள் பேசிய ஒரு கூட்டத்தில் நாங்கள் கலந்து கொண்டோம். நீங்கள் தெய்வீக சுகத்தைப் பற்றி போதித்து, ஏன் மக்கள் சில வேளைகளில் குணமடைவதில்லை என்ற காரணங்களையும் கூறினீர்கள். குடும்பங்களில் உள்ள சாபங்களைப் பற்றி நீங்கள் பேச ஆரம்பித்த பொழுது இது தான் என் குடும்பப் பிரச்சனை எனக் கர்த்தர் என் இருதயத்தில் பேசினார். நீங்கள் மக்களின் வாழ்விலுள்ள எந்த சாபத்திலிருந்தும் விடுதலையடைய அனைவரையும் பிரார்த்தனையில் வழிநடத்திய பொழுது என் கட்டுகள் நீங்கி எனக்குள் திட்டமான விடுதலை கிடைத்ததை நான் உணர்ந்தேன்.

நான் மேடைக்கு வந்த பொழுது நீங்கள் என் கணவரையும் மேடைக்கு அழைத்து வரச் சொன்னீர்கள். நீங்கள் எங்களுக்காக ஜெபித்த பொழுது எங்கள் வாழ்விலிருந்த சாபம் முறிக்கப்பட்டது என்றீர்கள். ரூத் என் வயிற்றில் கை வைத்து 'நீ கனியற்ற மலடியாய் இருக்கமாட்டாய்' எனக் கூறினார்கள். சபையார் அனைவரும் எழுந்து எங்களுக்காக சேர்ந்து ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அந்தக் கூட்டத்திற்குப் பின்பு நானும், என் கணவரும் கர்த்தர் எங்கள் விண்ணப்பங்களைக் கேட்டார் என்று உறுதியாக உணர்ந்தோம்" என்று எழுதியிருந்தனர்.

இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் நான் இங்கிலாந்தில் பொது கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்த போது இந்த தம்பதியர் அவர்களுடைய வாழ்வில் மலட்டுத்தன்மை என்னும் சாபம் நீங்கி ஆசீர்வாதம் உண்டானதின் பலனாக பிறந்த அழகான ஆண் குழந்தை ஒன்றை எங்களிடத்தில் காண்பிக்கும்படியாகக் கொண்டு வந்திருந்தனர்.

மாதவிடாய் பிரச்சனைக்கும் சாபத்திற்கும் உள்ள தொடர்பை மற்றொரு கடிதம் விளக்குகிறது. இக்கடிதம் தென்கிழக்கு ஆசியாவில் கர்த்தரை சேவித்து வரும் 30 வயதான



Blessing or Curse Tamil text 2012 revised.p65 51 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஒரு கிறிஸ்தவப் பெண்ணினால் டிசம்பர் 22, 1987ல் எனக்கு எழுதப்பட்டது:

"1985 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட சில ஒலிநாடாக்களை நான் பிறரிடமிருந்து பெற்றேன். அவற்றில் டெரிக் பிரின்சினுடைய "ஆசீர்வாதங்கள் சாபங்கள்" என்னும் செய்தி ஒலி நாடாவும் இருந்தது. ஒரு நாள் இரவு என் அறையில் இந்த செய்தியைக் கேட்டதற்குப் பின்பு, நான் எதையும் குறிப்பாக உணராவிட்டாலும் அந்த ஒலிநாடாவின் இறுதியில் உள்ள பிரார்த்தனையைச் செய்வதற்காக இருளில் நின்று கொண்டு இருந்தேன். என் வாழ்வில் சாபம் ஏதாவது இருக்குமானால் அதிலிருந்து விடுபட வாஞ்சிக்கிறேன் என்றேன்.

நான் உடனடியாக எந்த மாற்றத்தையும் உணராவிட்டாலும், ஏதோ ஒன்று சம்பவித்தது. அதன் முக்கியத்துவம் எனக்கு பின்பே புரிந்தது. இதற்குச் சற்று பின்பு, கர்த்தர் என் கையேட்டில் கடந்த தடவை எப்பொழுது மாதவிடாய் வந்தது என்று குறித்துவைக்கத் தூண்டினார். 13 வயதில் மாதவிடாய் முதன்முறை ஆரம்பித்தது. அது எனக்கு ஒழுங்காக சம்பவிக்காததால், நான் இதற்கு முன்பு ஒருபோதும் இவ்வாறு குறித்து வைக்கவில்லை. ஆகையால் நான் குறித்து வைப்பதை முக்கியமெனக் கருதவில்லை. என் மாதவிடாய் உண்மையில் மிகவும் ஒழுங்கின்மையாய் இருந்தபடியால் சேர்ந்தாற்போல் 6 அல்லது 8 அல்லது 10 மாதங்களில் ஒரு தடவை கூட இது எனக்குச் சம்பவிக்காமல் இருந்தது.

நான் 20 வயதாய் இருக்கும் பொழுது உதவியை நாடி மருத்துவர்களிடம் சென்றேன். (பலன் கிடைக்கவில்லை), ஆனால் புத்தியீனமான, பக்திக்கு விரோதமான ஆலோசனைகளே கொடுக்கப்பட்டன.

என் நிலையைக் குறித்து நான் விண்ணப்பித்தேன். நான் தனியாக இருந்த படியினால் அதைக்குறித்து கருத்தாய்ப் பிரார்த்திக்கவில்லை. ஆனால் என்னுடைய உடற்சுரப்பிகள் சீராக இல்லாத காரணத்தினால் அந்த நிலை சரி செய்யப்படும்வரை என்னுடைய உடற்கூறில் அசௌகரியத்தையும், ஒழுங்கின்மையையும் நான் அனுபவிக்க நேரிடும் என்று எனக்குச் சொல்லப்பட்டது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 52 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சில மாதங்களுக்குப் பின்பு மீண்டும் நான் அந்த ஒலிநாடாவைக் கேட்டபோது, டெரிக் பிரின்சின் வாசகமான "பொதுவாக, எல்லா மாதவிடாய் பிரச்சனைகளும் சாபத்தின் விளைவே" என்று கூறக் கேட்டு வியப்படைந்தேன். என் கையேட்டை எடுத்து தேதிகளைக் கவனித்துப் பார்த்த பொழுது 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நான் விண்ணப்பம் செய்ததற்குப்பின் 28 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஒழுங்காக ஏற்பட்டிருந்தது என நான் கண்டேன். நான் சுகமானேன் என்பதை அறிந்து வியப்படைந்தேன். என்னுடைய மாதவிடாய் தேதிகளைக் குறித்து வைக்கத் தூண்டினது கர்த்தரே என அப்பொழுது உணர்ந்தேன்.

எந்த சாபமும் ஒரு காரணமின்றி வராது என்பதால், "இந்த சாபம்" எங்கிருந்து வந்திருக்கக்கூடும் என்ற கேள்வியை எழுப்பினேன். என் வாழ்க்கையைப் பற்றி நான் சிந்தித்த பொழுது, எவ்வாறு என்னுடைய மேல்நிலைப்பள்ளி நாட்கள் (13-17 வயது) முழுவதிலும் நானும் என் உடன் தோழிகளும் மாதவிடாய் "ஒரு சாபம்" என்றே கூறிவந்தோம் என்பது என் நினைவிற்கு வந்தது. நீதிமொழிகள் 18:21ல் "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்" என்ற வசனத்தின்படி அது அப்படியே ஆயிற்று.

ஆகஸ்ட், 1985 ல் இருந்து ஒழுங்காக எழுதியிருந்த குறிப்பை எடுத்துப் பார்த்ததில், அது சீராக 27 முதல் 29 நாட்களுக்குள் உண்டாகியுள்ளது எனக்கண்டேன். முன்பு மாறுபாடாய் இருந்த என்னுடைய சரீரத்தின் எடையும் சீரானது" என அவள் எழுதியிருந்தாள்.

இரண்டாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பெண்ணான மிரியத்தைப் போல இந்தப் பெண் சரீர சுகத்திற்காக விண்ணப்பித்துக் கொள்ளவில்லை என்பதை நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டும். அவள் தன்னை சாபத்தினின்று மட்டுமே விடுவித்துக் கொண்டாள். இதன் விளைவாக சுகம் கிடைத்தது.

கருத்தரிக்கின்ற காரியத்தில் சாபம் உள்ளதைக்காட்டும் மற்றொரு பொதுவான அறிகுறி உள்ளது: பிறக்கும் குழந்தையின் கழுத்தைச் சுற்றி கொடி இருப்பது—சில வேளைகளில் ஒரு தடவைக்கு மேலாக சுற்றி இருக்கும். அநேக நேரங்களில் இதனால் ஓர் உயிர் உலகில் பிறப்பதற்குப் பதிலாக மரணம் உண்டாகி,



Blessing or Curse Tamil text 2012 revised.p65 53 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*குழந்தை இறந்தே பிறக்கின்றது.*

### *4. திருமணத்தின் முறிவும், குடும்பத்தின் பிரிவும்*

*இந்த வகையான சாபத்தின் ஒரு விளைவு, உபாகமம் 28:41ல் கூறப்பட்டுள்ளது: "நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோடே கூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப் போவார்கள்" என்றுள்ளது. இந்தத் தலைமுறையில், உள்ள எண்ணிறந்த பெற்றோர்கள் இந்த சாபத்தை அனுபவித்து உள்ளனர். அவர்களுடைய குமாரரும், குமாரத்திகளும் போதை மருந்து, பாலுணர்வு, சாத்தானின் இசை, எல்லாவிதமான மந்திரவாதங்கள் போன்றவற்றில் ஈடுபட்ட முரட்டாட்டமுள்ள குழுவினருக்கு அடிமையாகி அவதிப்படுவதைக் கண்டுள்ளனர்.*

*மல்கியா 4:5–6ல் அதன் தீர்க்கதரிசி கடைசிக் காலத்தில் உலகத்தின் நிலையைப் படம் தீட்டிக் காட்டுகிறார் :*

> "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.
>
> நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்."

*இங்கு மல்கியா, "ஒரு தீய சக்தி பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் மத்தியில் செயல்பட்டு குடும்ப உறவுகளை முறித்துப் போடும்" என்று கூறியுள்ளார். தேவன் இடைப்பட்டால் ஒழிய குடும்ப வாழ்க்கையை அழிக்கும் இந்த சாபமானது தொடர்ச்சியாக அழிவை உண்டாக்கி, உலகம் முழுவதற்குமே பரவும் என்று எச்சரிக்கிறார்.*

*மல்கியா நமது கலாச்சாரத்தில் மிகவும் கவனத்திற்குரிய சமுதாயப் பிரச்சனையை அழகாகச் சித்தரித்துள்ளார். இதனை ஒரு சாபத்தின் செயல்பாடாக நாம் கண்டு கொள்ள வேண்டுவது அவசியம். இதுதான் சச்சரவினால் பிரிந்த வீடுகளிலும், முறிவுபட்ட திருமணங்களிலும், உடைந்து போன குடும்பங்களிலும் உள்ள வேதனைகளுக்குக் காரணமாக உள்ளது. இந்த*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 54 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*விளைவுகளுக்குக் காரணமான சக்தி பிரிவினையின் சக்தியாகும். இது கணவர்களுக்கும், மனைவிகளுக்கு மத்தியிலும், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கு மத்தியிலும், சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கு மத்தியிலும் குடும்ப பந்தங்களினால் இணைக்கப்பட்ட மற்றவர்களிடையேயும் பிரிவை உண்டாக்குகிறது. குடும்பத்தை அழிப்பதே இதன் குறிக்கோளாகும்.*

*எனினும் தேவ ஆலோசனையை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இது ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையல்ல. இதற்குத் தீர்வு உண்டு. முதலாவது, ஒரு சாபம் செயல்படுகிறது என்ற உண்மையை நாம் கண்டு கொள்ள வேண்டும். பின்பு வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிகளைப் பின்பற்றி சாபத்தை நீக்கி அதில் அகப்பட்டுள்ளவர்களை விடுவிக்க வேண்டும். பல குடும்பங்கள் இதனால் மாற்றப்பட்டு இணைக்கப்பட்டுள்ளதை கண்டிருக்கிறேன்.*

### *5. தொடர்ந்து நிலவும் பணப்பற்றாக்குறை*

*உபாகமம் 28ல் இது சம்பந்தப்பட்ட இரண்டு வார்த்தைகள் "உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும்" (17); "உன் வழிகளில் ஒன்றும் உனக்கு வாய்க்காதேபோம்" (29) என்றுள்ளது.*

*என்றாலும் இந்த சாபத்தின் முழு செயல்பாடும் 47–48 வசனங்களில் மிகவும் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது:*

> "சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம்,
>
> சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்."

*மோசே இங்கு இரண்டு எதிர்மறையான காரியங்களைத் தருகிறார். 47ம் வசனம் தேவனுக்குக் கீழ்ப்படிகின்ற மக்களுக்கு அவருடைய சித்தத்தைக் கூறுகிறது: "சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவிப்பாயாக." ஓர் ஆங்கில மொழி*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 55 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பெயர்ப்பில் இது "செழுமையான காலங்களில், நீ சந்தோஷத்துடனும், மகிழ்ச்சியுடனும் உன் தேவனாகிய கர்த்தரை சேவிப்பாயாக" என்று கூறப்பட்டுள்ளது.

48ம் வசனம் தேவ மக்கள் கீழ்ப்படியாதபோது அவர்கள் மேல் வரும் சாபத்தைக் கூறுகிறது: "சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்." இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளைக் கவனி: பட்டினி, தாகம், நிர்வாணம், சகலமும் குறைவுபடுதல். இந்த நான்கு நிலைகளையும் ஒன்றுபடுத்தி, அவைகளின் விளைவை "கொடும் வறுமை" என ஒரு வார்த்தையில் சொல்லலாம்.

47, 48ம் வசனங்களைச் சேர்த்துப் பார்த்தால் செழுமை என்பது ஓர் ஆசீர்வாதம் என்றும், வறுமை என்பது ஒரு சாபம் என்றும் காணலாம்.

என்றாலும், நூற்றாண்டுகளாக கிறிஸ்தவத் திருச்சபையில் வறுமை என்பது ஓர் ஆசீர்வாதம் எனக் கூறப்பட்டு வருகிறது. நிச்சயமாகவே ஏழைகளின் மேல் தேவன் அதிகம் அன்பு கொள்கிறார்; கிறிஸ்தவர்களும் இதே எண்ணம் கொண்டவர்களாயும் அவர்கள் நிமித்தம் பெரும் தியாகங்களைச் செய்ய மனதுடையவர்களாயும் இருக்க வேண்டும். ஆனால் வேதம் தேவன் தம்மை விசுவாசிக்கும் மக்களுக்கு வறுமையை ஓர் ஆசீர்வாதமாகக் கொடுக்கிறார் என்று ஒருபோதும் சுட்டிக்காட்டவில்லை.

இந்தக் காரியத்தில் புதிய ஏற்பாட்டின் வெளிப்பாடு பழைய ஏற்பாட்டுடன் இசைவாய் உள்ளது. 2 கொரிந்தியர் 9:8ல் பவுல் கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளிக்கும் பரிபூரணத்தைத் தொகுத்து இவ்வாறு கூறுகிறார் :

> "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணம் உடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும் இருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்."



Blessing or Curse Tamil text 2012 revised.p65 56 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இந்த ஒரு சுருக்கமான வாக்கியத்தில் பவுல் வார்த்தைகளை இரண்டிரண்டாக அடுக்கி, தமது மக்களுக்கு தேவன் கொடுக்கும் ஆசீர்வாதத்தின் தயாளகுணத்தை முக்கியப்படுத்திக் கூறுகிறார். பெருகுதல் என்னும் வார்த்தை இரண்டு தடவை வருகிறது. எல்லாம் அல்லது அதே அர்த்தமுடைய வார்த்தைகள் ஐந்து இடங்களில் வருகின்றன: எல்லாவற்றிலும், எப்பொழுதும், சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும், சகலவித கிருபையையும்—தேவன் வழங்கும் ஆசீர்வாதத்தின் அளவு இவ்வாறாக உள்ளது. அது நமது போதுமான நிலையை மிஞ்சி, பரிபூரண நிலைக்கு நம்மை உயர்த்துகிறது. நம்முடைய சொந்தத் தேவைகளுக்கு மேலாக நாம் பெற்றுக்கொள்வதினால் பிறருடைய தேவைகளை நம்மால் சந்திக்கக்கூடும்.

என்றாலும், நமது காலத்து மேற்கத்திய கலாச்சாரத்தின் பொருளாதார தரத்தை மனதிற்கொண்டு ஏழ்மையையும், பரிபூரணத்தையும் விளக்குவது வேதத்திற்கு முரண்பாடானதாகும். யோவான் 6:38ல் இயேசு இவ்வுலகத்தில் அவருடைய வாழ்க்கையின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்: "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்." போதகரைப் போலவே சீடனுடைய நோக்கமும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதாகவே இருக்க வேண்டும்.

இக் கண்ணோட்டத்தில் தான் 'ஏழ்மையும்' 'பரிபூரணமும்' வரையறுக்கப்பட வேண்டும். ஏழ்மை என்பது உன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு உனக்குத் தேவையானவை அனைத்தும் இல்லாதிருப்பதாகும். உன் தேவைக்கும் உன்னிடத்தில் தேவையைச் சந்திக்க இருக்கும் ஆற்றலுக்கும் உள்ள வித்தியாசம் ஏழ்மையின் அளவைக் காட்டுகிறது. மறுபுறம், சம்பூரணம் என்பது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற உனக்குத் தேவையான அனைத்தையும், நீ உடையவனாகவும்—மற்றவர்களுக்கும் கொடுக்கக்கூடிய அளவிற்கு இருப்பதாகும். தேவனுடைய பரிபூரணம் மாம்சீக காரியங்களில் ஈடுபட்டு விரயம் செய்வதற்காக கொடுக்கப்படாமல், ஒவ்வொரு நன்மையான காரியத்தைச் செய்வதற்காகவும் கொடுக்கப்படுகிறது. நம்முடைய சொந்த வாழ்க்கையை வளப்படுத்திய கிருபையின் ஆசீர்வாதங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக இது கொடுக்கப்படுகிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 57 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஏழ்மையும், பரிபூரணமும் இவ்விதமாய் விளக்கப்படும்பொழுது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் ஏற்ற தனித்த ஒரு வரம்பை நாம் அமைத்துக்கூறமுடியாது. ஒவ்வொரு விசுவாசியின் நிலையும் அவனுடைய அல்லது அவளுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஏழ்மையும், பரிபூரணமும் பற்றிய இந்த முடிவான கருத்துக்கள் மேலும் இரண்டு வழிகளில் வரையறுக்கப்பட வேண்டும். முதலாவது, தேவனுடைய பரிபூரணத்தைப் பெற்றுக் கொள்ளும் பொழுது நமது விசுவாசம் நிச்சயமாய் சோதிக்கப்படும் என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும். போதுமான அளவிற்குச் சற்று குறைவாக தேவைகள் சந்திக்கப்படும் வேளைகளில் நாம் அதில் திருப்தியாக இருக்க வேண்டும். என்றாலும் இப்படிப்பட்ட காலங்கள் நிரந்தரமானவைகள் அல்ல. நம்முடைய நோக்கங்கள் தூய்மையாக்கப்பட்டு நம்முடைய விசுவாசமும் சோதனையில் நிலைத்து நிற்குமேயானால் தேவன் நம்மை நம்பக்கூடிய அளவிற்குத் தமது பரிபூரணத்தைத் தந்து, அதை அவருடைய மகிமைக்கென உபயோகிக்கும்படி செய்கிறார்.

இரண்டாவதாக பொருளாதாரத்திற்கு மேலான உயர்ந்த செல்வம் ஒன்று உண்டு என்பதை அறிய வேண்டும். மோசே எகிப்தின் செல்வத்திற்கும் சொகுசான வாழ்விற்கும் புறமுதுகுகாட்டி, வனாந்தரத்தின் ஓர் ஓரத்திலே குடியேறினான். இதைக்குறித்து எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் "எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" என்கிறார் (எபிரெயர் 11:26). மோசே ஏழ்மையை தெரிந்து கொள்ளவில்லை. பொருளாதார செழிப்பை மேன்மையான ஆசீர்வாதங்களுக்காக விட்டுக் கொடுத்தான்.

அதைப் போலவே இன்றும், தேவனைச் சேவிப்பதில் பொருளாதார செல்வம் தடையாய் இருக்குமானால், அந்தச் செல்வத்தை ஒதுக்கித் தள்ளுகிற கிறிஸ்தவர்கள் உண்டு. அநேக நேரங்களில் இது இவ்வுலகில் துன்பப்படுகிறவர்களுடனும் ஏழைகளுடனும் நம்மை இனம் கண்டுகொள்ள உதவுகிறது. நீதிமொழிகள் 13:7ல் சாலொமோன் இப்படிப்பட்ட மனிதர்களையும் பொருளாதார செல்வத்தின் மேல் மட்டும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 58 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நம்பிக்கை வைப்பவர்களையும் வித்தியாசப்படுத்திக் கூறுகிறார்:*

> "ஒன்றுமில்லாதிருக்கத் தன்னைச் செல்வனாகப் பாராட்டுகிறவனும் உண்டு; மிகுந்த செல்வமிருக்கத் தன்னைத் தரித்திரனாகப் பாராட்டுகிறவனும் உண்டு."

*நமது காலத்திலும் அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் நிமித்தமாக துன்பத்தையும், உபத்திரவத்தையும் சகித்துக் கொள்கின்றனர். பொருளாதார ஆசீர்வாதம் என்று சொல்லக்கூடிய எதுவுமே அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். என்றாலும் அதற்குப்பதிலாக, அவர்கள் உயர்ந்த ஆசீர்வாதத்திற்குச் சுதந்தரவாளிகளாய் இருக்கிறார்கள்.*

*எனினும் இது நீடிக்கின்ற பொருளாதாரப் பற்றாக்குறையை மாற்றுவதில்லை. கிறிஸ்துவின் நிமித்தமாக இந்த பணப்பற்றாக்குறை வரவில்லையென்றால், இது பொதுவாக ஒரு சாபத்தின் அறிகுறியாக இருக்கலாம். இது தனிப்பட்ட நபரையோ அல்லது ஒரு குடும்பத்தையோ அல்லது ஒரு பெரிய சமுதாயப்பிரிவையோ பாதிக்கலாம்.*

### *6. அடிக்கடி விபத்திற்குள்ளாகும் சூழ்நிலை*

*இது இயற்கைக்கு மாறான விபத்துகளுக்குள்ளாகும் சூழ்நிலைகளைக் குறிக்கிறது. உபாகமம் 28ல் இது பற்றி குறிப்பாக சொல்லப்படாவிட்டாலும், "குருடன் அந்தகாரத்திலே தடவித்திரிகிறதுபோல, நீ பட்டப்பகலிலே தடவிக்கொண்டு திரிவாய்" (29) என்னும் வாக்கியம் இதனைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.*

*இந்த சாபத்தின் ஓர் இயல்பான விளைவு "அசாதாரண" விபத்துக்களில் வெளிப்படலாம். இரண்டாம் அத்தியாயத்தில் 18 மாதங்களில் தனது ஒரே காலை மூன்று முறை முறித்துக் கொண்ட ஒரு பெண்ணின் சம்பவம் இதற்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாகும்.*

*மற்றொரு உதாரணத்தை எடுத்துக் கொண்டால், சிலர் சிறந்த ஓட்டுநர்களாக இருக்கலாம். என்றாலும் அவர்களுக்கு இயற்கைக்கு மாறான வாகன விபத்துக்கள் அடிக்கடி*





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஏற்படக்கூடும். அநேகம் தடவைகளில் தவறு "மற்ற ஓட்டுநர்" பேரில் இருக்கலாம். என்றாலும் விபத்துக்கள் நேரிடுகின்றன. இப்படிப்பட்ட மனிதன் "எனக்கு மட்டும் ஏன் எப்பொழுதும் இந்த விபத்து நேரிடுகிறது?" என்று சொல்லக்கூடும்.

சாபம் செயல்படுகின்றது என்பதைக் குறிக்கும் உதாரணங்களை பலகோணத்திலிருந்து தெரிந்தெடுத்துக் கொடுத்துள்ளேன்: ஒரு பாறையில் ஏறுகையில் தவறியதால் ஏற்படும் கணுக்கால் முறிவு; ஒரு மிருதுவான பழத்தைக் கடிக்கும் போது பல் உடைந்து போதல்; காரின் கதவை ஒரு விரல் மாட்ட அடைப்பது (இங்கு மீண்டும், இது "மற்ற நபராய்" இருக்கலாம்); ஒரு மாடிப்படி ஏறும்போது வழுக்கி மேலிருந்து கீழ் வரைக்கும் விழுந்து பல காயங்கள் அடைவது; தொண்டை அடைக்க மீன் முள்ளை விழுங்கி விடுவது; ஒரு பூச்சி கண்ணில் விழுவதால் அசாதாரண தொற்றுநோய் ஏற்படுதல்; வேகமாய்க் கடந்து செல்லும் வாகனத்தால் தூக்கியெறியப்பட்ட கல் முகத்தைத் தாக்குதல்; அறுவை சிகிச்சை செய்பவர் செய்த சிறு தவற்றினால் ஏற்படும் அங்கவீனம்.... இப்படியாக இப்பட்டியல் முடிவின்றித் தொடர்கின்றது.

இப்படிப்பட்ட மக்களுக்கு விரோதமாக ஒரு புலப்படாத தீய சக்தி செயல்படுகிறது போல் காணப்படுகிறது. இக்கட்டான வேளைகளில் அவர்கள் கால்கள் இடறி அவர்களைத் தடுமாறச் செய்கிறது அல்லது முன் யோசனையின்றி அவர்களைச் செயல்படத் தூண்டுகிறது. இப்படிப்பட்ட மனிதன் "நான் இதைச் செய்யும்படி எவ்வாறு தூண்டப்பட்டேன் என்று தெரியவில்லை!" என்று ஆச்சரியப்படுவதுண்டு. இப்படிப்பட்ட கூற்றுகள் ஒரு சாபம் செயல்படுவதைத் தெரிவிக்கிறது. அது இம்மனிதன் தான் செய்யும் காரியங்கள் அனைத்தும் தன் சொந்தக் கட்டுப்பாட்டிற்குள் இல்லை என்பதை அவனை உணரும்படி செய்கிறது. ஆனால் கண்டுகொள்ளமுடியாத ஒரு சக்தி அவனைப் பற்றி, ஈர்த்து செயற்படுத்துகிறது. அந்த சக்தியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவன் வகையற்றவனாய் இருக்கிறான்.

இப்படிப்பட்ட பிரச்சனை தற்செயலாக நேர்வது அன்று. இதனைப்புள்ளி விபரத்தின் அடிப்படையிலும் நிருணயிக்கலாம். சில ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் இப்படிப்பட்ட ஆராய்ச்சியை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 60 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆயுள்காப்பீட்டுப் பத்திரங்கள் வழங்குவதற்குமுன் அந்நபர்கள் வழக்கத்திற்குமாறுபட்ட அபாயத்திற்கு இலக்கான மனிதர்களா எனக் கண்டு கொள்வதற்கு பயன்படுத்துகின்றனர். அதற்கு ஏற்ப அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை நிருணயிக்கின்றனர்.

### 7. தற்கொலைகளும் இயற்கைக்கு மாறான அகால மரணங்களும்

இயற்கைக்கு மாறான அகால மரணங்கள் உபாகமம் 28ல் பல தடவைகள் சொல்லப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட சாபம் ஒரு தனிப்பட்ட நபரை மட்டும் பாதிக்காமல் குடும்பத்தையோ, ஓரினத்தையோ, அன்றி பெரிய சமுதாயப் பிரிவையோ பாதிக்கிறது. சாதாரணமாக, இது ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குத் தொடர்கிறது. ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்களையோ அல்லது ஒரு இனத்தையோ இரக்கமில்லாமல் அழிக்கும் வரை அவர்களைத் தொடர்கின்ற ஒரு சக்தி மனித வரலாற்றில் செயல்பட்டு வருவதைப் பல்வேறு கலாச்சாரங்கள் கண்டிருக்கின்றன. பழங்கால கிரேக்கர்கள் இதற்கு “தேவதைக்கு” ஒத்த இடம் கொடுத்து அந்த தேவதையை நெமிசிஸ் என அழைத்தனர். மற்ற கலாச்சாரங்கள், வெவ்வேறு பெயரிட்டு இதை அழைத்திருக்கின்றன. இந்த அஞ்ஞானிகளின் நம்பிக்கைகளுக்குக் கீழ் ஓர் உண்மைக் கருத்து அடங்கியிருக்கிறது.

பெரும்பாலாக இப்படிப்பட்ட சாபத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஓர் ஆற்றலுள்ள எதிர்ப்பை உணர்கின்றனர். அவர்கள் செல்லும் பாதையில் அவர்களுக்கு முன்பாக ஏதோ தீய இருள் இருப்பதாக உணர்கிறார்கள். ஆனால் அதைத் தவிர்ப்பது எப்படி என்பது அவர்களறியார்கள். இப்படிப்பட்டவர்கள் “இது என் தகப்பனாருக்கு நேர்ந்தது. அந்த பட்டியலில் அடுத்தது நான் தான்” என்று சொல்வதுண்டு.

இவ்வகையான சாபத்தின் பொதுவான ஓர் அடையாளம் என்னவென்றால் இவர்கள் தங்கள் சாவுக்கான தேதியை தாங்களே குறித்துக் கொள்கின்றனர். “நான் 45யை தாண்டமாட்டேன் என்று தெரியும்” என்றோ அல்லது “எங்கள் குடும்பத்தில் உள்ள எல்லா ஆண்களும் இளம் வயதில் இறந்துவிட்டனர்” என்றோ அவர்கள் சொல்லலாம். அவர்கள் உணர்ந்து கூறாவிட்டாலும், அவர்களின் முடிவும் அவர்களின்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 61 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கூற்றினால் நிருணயிக்கப்படுகிறது.

மேலே கொடுக்கப்பட்ட சாபத்தின் ஏழு அறிகுறிகளின் பட்டியலும் சாபத்தை முற்றிலும் விளக்கிக் கூறிவிடவில்லை. வேறு சிலவற்றையும் இப்பட்டியலில் சேர்க்கக்கூடும். என்றாலும் இப்பொழுது வாசித்ததிலிருந்து இதைப்பற்றி நீ நன்கு புரிந்து கொண்டிருக்கக்கூடும். உன் சூழ்நிலையை சற்று சீர் தூக்கிப்பார்.

இதற்குப் பல விதத்தில் நீ பதில் கூறக்கூடும். உதாரணமாக, உன் பிரச்சனையைப் பற்றி, உனக்கு சந்தேகமின்றி விளக்கம் கிடைத்திருக்கலாம். உன் வாழ்விலும், உன் குடும்பத்திலும் இருக்கின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சாபத்தின் அறிகுறிகளை நீ தெளிவாக இன்று கண்டிருக்கலாம்.

ஒரு சாபம் உன்வாழ்வில் செயல்படுவதை நீ உணரலாம். ஆனால் அது எங்கு உன்னை எடுத்துச் செல்லும் என்பதை நீ அறியாய். முதலாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட நபரைப் போலவே நீ இருப்பதாக உணரலாம். கடந்த காலத்தில் இருந்து தொடரும் இருண்டநிழலை நீ உணரலாம். ஆனால் அதன் ஆரம்பத்தை உன்னால் கணிக்க முடியவில்லை. அல்லது அந்த நீண்ட தீய கரம் உன் வாழ்க்கையில் பல நிலைகளிலும் காணப்படாதவாறு செயல்படுவதை நீ உணரலாம். ஆனால் அந்தத் திரையை உன்னால் கிழித்துப் போட முடியவில்லை.

எவ்வாறாக இருந்தாலும் நீ உன்னையே பார்த்து, “இக்காரியம் எப்படி எனக்கு நடக்கக்கூடும்? என் பிரச்சனைக்குக் காரணம் என்ன?” என கேட்டுக் கொண்டிருக்கலாம்.

அப்படியானால் நீ இப்பொழுது இரண்டாம் பகுதிக்குக் கடந்து செல்ல வேண்டும்: “காரணமில்லாமல் சாபமில்லை.” இந்தப் பகுதி சாபத்தின் பொதுவான காரணங்களை விளக்குகிறது. உன்னுடைய குறிப்பிட்ட பிரச்சனையின் காரணத்தை நீ கண்டு கொள்ளக் கூடுமானால், அதனை வெற்றிகரமாய் நீ மேற்கொள்ள முடியும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 62 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

## பிரிவு 2

# காரணமில்லாமல் சாபமில்லை

## முன்னுரை

*நம்முடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஆசீர்வாதங்களும், சாபங்களும் தற்செயலாகவோ அல்லது முன்னறிவிக்க முடியாதபடியோ நடந்து விடுவதில்லை. இதற்கு எதிர்மாறாக, இவைகள் இரண்டும் நித்திய, மாற்ற முடியாத சட்டங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த சட்ட திட்டங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு நாம் மீண்டும் வேதத்திற்குச் செல்லவேண்டும்.*

*நீதிமொழிகள் 26:2ல் சாலொமோன் சாபங்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: "காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது" என்கிறார். நம்மேல் வரும் ஒவ்வொரு சாபத்திற்குப் பின்னும் ஒரு காரணம் உண்டு. நாம் ஒரு சாபத்திற்குக் கீழாக இருப்பதாய் காணப்பட்டால், அதன் காரணத்தை நாம் கண்டுகொள்ள முற்பட வேண்டும். அப்பொழுது அதை மேற்கொள்ள ஏற்ற நடவடிக்கை எடுக்க முடியும். "ஏன் இப்படிப்பட்ட காரியங்கள் எப்பொழுதும் எனக்குச் சம்பவிக்கின்றன?" என்று உன் உள்ளத்தில் அடிக்கடி எழும் கேள்விக்குப் பதில் கிடைக்கும்.*

*இப்பகுதி நம்முடைய வாழ்க்கையைப் பொதுவாக பாதிக்கக்கூடிய முக்கிய சாபங்களின் காரணங்களை வெளிப்படுத்துகின்றது. இதற்கு அடுத்த பகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய பதிலை வாசித்தபின் நீ அதை நன்கு புரிந்தவனாய் செயலாற்றக்கூடும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 63 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 6

## பொய்யான தெய்வங்கள்

*கடந்த அத்தியாயங்களில் தேவனிடமிருந்து புறப்படும் சாபங்களைக் குறித்த இரண்டு முக்கியக் காரணங்களைக் கண்டோம். முதலாவது, அவைகள் தேவனை எதிர்த்து நிற்பவர்கள் மேலும், தேவபக்தியில்லாதவர்கள் மேலும் அவர் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரும் பிரதான வழிகளில் ஒன்றாக உள்ளது. இரண்டாவது, இப்படிப்பட்ட சாபங்களின் அடிப்படைக் காரணம் தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடாமல் இருப்பதும் அதன்படி செய்யாமல் இருப்பதும் ஆகும். இதை ஒரே வார்த்தையில் சொன்னால் கீழ்ப்படியாமை என்று சொல்லலாம்.*

*கீழ்ப்படியாமை பல வடிவில் வெளிப்படுகிறது. ஆகையால், "தேவனுடைய சாபத்தைக் குறிப்பாக வருவிக்கக்கூடிய கீழ்ப்படியாமையின் பிரதான முறைகள் எவை?" என்ற கேள்வி எழுகிறது.*

*இதற்கான பதிலை வேதம் சந்தேகமின்றிச் சொல்கின்றது. தேவனுடைய சாபத்தை மிக நிச்சயமாய் தோற்றுவிக்கும் கீழ்ப்படியாமை யாத்திராகமம் 20:1–5 வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்டுள்ள பத்துக்கற்பனைகளின் முதல் இரு கற்பனைகளை மீறுவதாகும்:*

"தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளுமாவன:

உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 64 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்;

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய **கர்த்தராயிருக்கிற** நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்."

*தேவன் இங்கு குறிப்பிடும் இரு பாவங்கள் எவை? முதலாவது, கர்த்தரைத் தவிர்த்து பிற தெய்வங்களை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது கர்த்தருடன் மற்றவர்களையும் ஏற்றுக் கொள்ளுதலாகும். கர்த்தரை எல்லா தெய்வங்களுக்கும் மேலானவர், முதன்மையானவர் என்று மட்டும் ஏற்றுக் கொண்டால் போதாது. அவர் மட்டுமே மெய்யான தேவன் என்று நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரையன்றி வேறே தேவர்கள் இல்லை.*

*ஏசாயா* 45:21*ல் கர்த்தர் இதை வலியுறுத்திக் கூறுகிறார்:*

"நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத்தவிர வேறொருவரும் இல்லை."

*இரண்டாவது பாவம் அடுத்த கட்டளையில் குறிக்கப்பட்டுள்ளது. அது தேவனைக் குறிக்கும் செயற்கை உருவத்தை உண்டாக்கி அதை ஆராதிப்பதாகும். ரோமர்* 1:20–23 *வரையுள்ள வசனங்களில் பவுல் இந்த இரண்டு கற்பனைகளை மீறுவதினால் உண்டாகும் விளைவுகளைப் பற்றி விவரிக்கிறார்:*

"எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள்,



Blessing or Curse Tamil text 2012 revised.p65 65 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை.

அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி,

அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்."

*பொய்யான தெய்வங்களை ஏற்றுக்கொண்டு விக்கிரக ஆராதனை செய்பவர்கள் படைப்பில் அவர்களால் கண்டுகொள்ளக்கூடிய தெளிவான தேவ வெளிப்பாட்டை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றனர். அதற்குப் பதிலாக, வெறுக்கத்தகும் சிலை வழிபாட்டை அவர்கள் தெரிந்து கொண்டனர். இவைகள் முதலில் மனித உருவங்களாய் அமைந்து பின்பு பறவைகளாகவும், மிருகங்களாகவும் இறுதியில் ஊர்பவைகளாகவும் அமைந்தன. இது பழங்கால எகிப்திய பழக்கத்தை அப்படியே விவரிக்கிறது. அவர்களின் மூன்று பிரதான தெய்வங்கள்: கழுகு, குள்ளநரி, நாகப்பாம்பு ஆகும்.*

*நம்முடைய மனித மனம், விக்கிரக ஆராதனையின் தீயவிளைவுகளை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. முதலாவது படைப்பிலும், பின்பு அதிகமாகவும் முழுமையாகவும் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மெய்யான தேவன் பரிசுத்தமானவரும், பிரமிக்கத்தக்கவரும், மகிமையுடையவரும், சர்வ வல்லவரும் ஆவார். அவரை படைக்கப்பட்ட எதற்கும்—ஒரு மனிதனுக்கோ அல்லது மிருகத்திற்கோ—ஒப்பிட்டுச் சொல்லுவது அவரைத் திட்டமிட்டு இழிவு படுத்துவதாகும். இது அவருடைய கோபத்தைத் தூண்டுவதாய் உள்ளது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 66 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இதை ஒரு சாதாரண உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன். ஒரு கரப்பான் பூச்சி தரையில் ஊர்ந்து செல்வதை ஒருவர் கவனிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் அதைப் புகைப்படம் எடுத்து அந்தப் புகைப்படத்தை டெரிக் பிரின்ஸ் என்ற பெயருக்கு மேல் மாட்டினால் இது திட்டமாகவே என்னைக் கேவலப்படுத்துவதாகும் என்று கூறுவேன். தேவனுடைய நாமத்தை அவருடைய உன்னதமான படைப்புகளுக்கு மாத்திரமல்ல மிகவும் கீழ்ப்பட்ட படைப்புகளுக்கும் வழங்குவது எவ்வளவு அதிக அளவில் அவரை இழிவுபடுத்துகிறது!

இவ்வாறு முதல் இரண்டு கற்பனைகளை மீறுவதினால் வரும் தேவ நியாயத்தீர்ப்பு சாபத்தின் விளைவுகளை உண்டாக்குகிறது: அது தலைமுறை தலைமுறையாக தொடரக்கூடியது. அது குறைந்தது நான்கு தலைமுறைகளுக்கு தொடர்கிறது. சில நாடுகளிலும், சில கலாச்சாரங்களிலும் பொய்யான தெய்வங்களை வணங்கும் பழக்கம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக—ஏன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கூட அனுசரிக்கப்பட்டு வருவதால் அதன் விளைவு பன்மடங்காக அதிகரித்துள்ளது.

இப்படிப்பட்ட பின்னணியில் இருந்து வரும் ஒருவன் ஒரு சாபத்திற்கு இலக்காகிறான். இச் சாபமானது அவனுடைய வாழ்க்கையில் நடப்பட்ட ஒரு களையைப் போல அவனுக்கு புறம்பேயிருக்கின்ற சாத்தானின் ஆற்றலுக்கு அவனை உட்படுத்துகிறது. இந்த களைக்கு இரண்டு விதமான வேர்கள் உண்டு: நீளமான ஆணிவேர் நேராக ஆழமாக அடியில் செல்லுகிறது; மற்ற வலிமைகுறைந்த சல்லிவேர்கள் பல திசைகளிலும் செல்லுகின்றன. ஆணிவேர் பொய் தெய்வங்களை வணங்கிய முன்னோர்களால் விளையும் விளைவுகளைக் குறிக்கிறது. சல்லிவேர்கள் அவனுடைய வாழ்நாட்களில் அவன் செய்த பல பாவங்களினாலும், அவன் தன்னை பொய்யான தெய்வங்களுடன் இணைத்துக் கொண்டதினாலும் அல்லது வேறு வழிகளினாலும் உண்டாகும் விளைவுகளைக் குறிக்கிறது.

கிறிஸ்துவிலுள்ள புதிய படைப்பின் உண்மையான விடுதலையை அவன் முற்றும் அனுபவிப்பதற்கு முன்பு இந்தக் களையானது அடியோடு வேருடன் பிடுங்கப்பட வேண்டும். மிக முக்கியமான வேர், பிடுங்க முடியாத வேர் பொய்யான



Blessing or Curse Tamil text 2012 revised.p65 67 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தெய்வங்களை வணங்கிய கடந்த பல தலைமுறைகளுடன் அவனை இணைக்கும் ஆணிவேராகும். இயற்கைக்கப்பாற்பட்ட தேவ கிருபையும், வல்லமையும் மாத்திரமே இந்த வேர்களையெல்லாம் திறம்பட நீக்கக்கூடும். தேவனுக்கு நன்றி, ஏனெனில் "என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" என மத்தேயு 15:13ல் வரும் இயேசுவின் வாக்குத்தத்தத்தில் நமக்கு நம்பிக்கை உள்ளது.

இத்தலைமுறைக்குச் சாபத்தைக் கொண்டுவரும் பாவங்கள் வெளிப்படையான சிலைவழிபாட்டுடன் மட்டும் நின்றுபோவதில்லை. அவை சிலை வழிபாடாகவோ அல்லது மதக்காரியங்களாகவோ கூட இல்லையாயினும் அவைகள் வெளிப்படையாக கையாளும் பல பழக்கங்களில் உள்ளன. அவைகளின் உண்மை நிலை ஏமாற்றக்கூடிய கலைச் சொற்களில் மறைந்து இருப்பதால், அவைகள் மாந்திரீகம் என அழைக்கப்படுகின்றன. (இப்பதம் "மறைக்கப்பட்ட" அல்லது "மூடப்பட்ட" என்ற அர்த்தமுடைய இலத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது.) வீழ்ந்து போன மனிதனுக்கு அதிலும் இத்தலைமுறையில் உள்ளவர்களுக்கு இந்த மாந்திரீக பழக்கங்கள் அதிகக் கவர்ச்சி * நிறைந்ததாக இருப்பது போல் ஒருபோதும் இருந்ததில்லை.

மனித உள்ளத்தின் இரண்டு தீராத ஆவல்கள்— அறிவைப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆசையும், வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆசையுமாகும். ஒரு குறிப்பிட்ட அளவு வரை அந்தத் தீவிர ஆவல்களை மனிதன் இயற்கையின் காரியங்களிலிருந்தும் இயற்கை முறைகளின் வழியாகவும் சந்திக்கின்றான். இப்படிப்பட்ட முறையில் அவனுக்கு பூரண திருப்தி உண்டாகவில்லையாயின், அவன் நிச்சயமாய் இயற்கைக்கப்பாற்பட்ட காரியங்களை நோக்கித் திரும்புகிறான். இவ்வேளையில் தான் அவன் மாந்திரீகத்திற்குள் எளிதாக சிக்கிக் கொள்கிறான்.

இதற்கான காரணம் யாதெனில் உண்மையில் இப்பிரபஞ்சத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவிற்கும்,

* கவர்ச்சி என்னும் இந்த சொல்லானது "மந்திரத்தால் கட்டுப்படுத்துகிற" என்னும் அர்த்தமுடைய இலத்தீன் மொழியின் வினைச்சொல்லில் இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 68 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வல்லமைக்கும் இரண்டு மூலகாரணங்கள் மட்டுமே உள்ளன: ஒன்று தேவன், மற்றொன்று சாத்தான். ஆகையால் தேவனிடத்திலிருந்து புறப்படாதது எதுவும் திட்டமாய் சாத்தானிடமிருந்தே புறப்படுகின்றன. தேவனிடத்திலிருந்து அவற்றைப் பெறுவது நியாயமானது; சாத்தானிடத்திலிருந்து அவைகளைப் பெறுவது முறைகேடானது.

தேவனுடைய அரசு ஒளியின் அரசாய் இருப்பதினால் அவரை சேவிப்பவர்கள்—யாரை அவர்கள் சேவிக்கிறார்கள் என்றும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் அறிந்திருக்கிறார்கள். இதற்கு மாறாக, சாத்தானின் அரசு இருளின் அரசாய் இருப்பதினால், அவனுடைய அரசில் உள்ள அநேகர், அவர்கள் சேவிக்கிறவனின் உண்மை சுபாவத்தையும் அவர்கள் செயலின் தன்மையையும் உணராதிருக்கின்றனர்.

முறையற்ற அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் இந்த ஆவலே, ஏதேன் தோட்டத்தில் மனிதனை முதற்பாவத்தைச் செய்யத் தூண்டினது. நன்மை தீமை அறியத்தக்க மரத்திற்கும் தமக்குமிடையே தேவன் ஒரு காணப்படாத வேலியை அமைத்திருந்தார். இந்த எல்லையை மனிதன் கடந்த பொழுது, அவன் பிசாசின் ஆதிக்கத்திற்குள் வந்தவனாய், பிசாசிற்கு அடிமையானதைக் கண்டான். அன்றுமுதல் இத்தகைய தகாத வல்லமையையும், அறிவையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் இதே வகையான ஆவல் மனிதனைத் தொடர்ந்து ஏமாற்றி, சாத்தான் தனது சித்தத்தின்படி அவனை அடிமைப்படுத்தக்கூடிய பகுதிக்கு அவனைக் கொண்டு செல்லலாயிற்று (2 தீமோத்தேயு 2:26யைப் பார்க்க). முன்பு சொன்னது போல் இந்தப் பகுதிக்குப் பெயர் மாந்திரீகமாகும்.

தேவன் மனிதனை தம்மைத்தவிர வேறு ஓர் இடத்திற்கு இயற்கைக்கப்பாற்பட்ட அறிவையும், வல்லமையையும் நாடிச்செல்ல அனுமதிக்கவில்லை. மாந்திரீகத்திற்கு அத்துமீறிப் போகிறவர்கள் சாத்தானிடமிருந்து இவைகளை நாடிச் செல்கின்றனர். அவ்வாறு செய்யும்போது உண்மையில் அவர்கள் மெய்யான தேவனை விட்டுவிட்டு, மெய்யான தேவனோடுகூட சாத்தானையும் தேவனாக ஏற்றுக் கொள்கின்றனர். இதனால் அவர்கள் பத்து கற்பனைகளில் முதற் கற்பனையை மீறுகின்றனர். இவ்விதமாக, அவர்கள் இந்தக் கற்பனையை மீறுபவர்கள் மேல்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 69 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*தேவன் கூறின சாபத்திற்குத் தங்களை உட்படுத்துகின்றனர். இந்த சாபம் நான்காம் தலைமுறை வரைக்கும் தொடர்கிறது.*

*இம்முடிவு மிக முக்கியமானதாய் இருப்பதினால், இது மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டும் : மாந்திரீகத்தில் ஈடுபடுகிறவர்கள் அனைவரும் முதலாம் கற்பனையை மீறுகிறவர்களுக்கென கூறப்பட்ட சாபத்திற்குத் தங்களை ஆளாக்குகின்றனர்.*

*வேதம் பல இடங்களில் பொய்யான தெய்வங்களிடம் திரும்புவதை "ஆவிக்குரிய விபச்சாரம்" என்று கூறுகிறது. இதனை வேதம் சரீரப் பிரகாரமான, விபச்சாரத்தை விட மிகப்பெரிய பாவம் என கண்டனம் செய்கிறது. இவ்விதமாகக் காணும்போது, நீதிமொழிகள் புத்தகத்தில் "ஒரு ஒழுக்கமற்ற பெண்ணுடன்" அல்லது "ஒரு விபச்சாரியுடன்" கொள்ளும் தொடர்பிற்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்புகள் மாந்திரீகத்துடன் கொள்ளும் ஈடுபாட்டிற்குப் பொருந்தும். நீதிமொழிகள் 5:3–6 வரையுள்ள வசனங்களில் இந்த முறைகேடான பெண் முதலில் அவளுடைய அணுகுமுறைகளில் சாதுரியமாய் இருப்பினும் பின்பு தான் கவர்ந்தவர்கள் மேல் முற்றிலும் அழிவைக் கொண்டு வருகிறாள் என்று சொல்லப்பட்டுள்ளது:*

> "பரஸ்திரீயின் உதடுகள் தேன்கூடுபோல் ஒழுகும்; அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும்.
>
> அவள் செய்கையின் முடிவோ எட்டியைப்போலக் கசப்பும், இருபுறமுங்கருக்குள்ள பட்டயம்போல் கூர்மையுமாயிருக்கும்.
>
> அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும்; அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்போகும்.
>
> நீ ஜீவ மார்க்கத்தைச் சிந்தித்துக் கொள்ளாதபடிக்கு, அவளுடைய நடைகள் மாறிமாறி விகாரப்படும்; அவைகளை அறியமுடியாது."

*இதன் இறுதி வாசகம் நமக்குத் தெளிவைத் தருகிறது: "அவளுடைய நடைகள் மாறிமாறி விகாரப்படும்; அவைகளை அறியமுடியாது." மாந்திரீகத்தில் கையாளப்படும் ஏமாற்று*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 70 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

முறைகளுக்கு எல்லையே கிடையாது. ஒன்று அம்பலப்படுத்தப்பட்டவுடன் இன்னொன்று அந்த இடத்தில் எழும்புகிறது. ஆகவே இந்த மாந்திரீகப் பழக்கங்களின் பல்வேறு வகைகளைப் பற்றிய முழுமையான அல்லது தீர்வான பட்டியலைக் கொடுக்க முடியாது. என்றாலும் இவைகளை மூன்று பிரதான பிரிவுகளில் அடக்கிக் கூறலாம்: 1. பில்லி சூனியம், 2. குறி சொல்லுதல், 3. சூனியம் ஆகியவையே அவை.

பில்லிசூனியம் என்பது மாந்திரீகத்தின் வல்லமைப் பிரிவு ஆகும். இதன் மூலகாரணம் 1 சாமுவேல் 15:23ல் உள்ள ஒரு சிறிய வாக்கியத்தில் கூறப்பட்டுள்ளது: "இரண்டகம்பண்ணுதல் பில்லி சூனிய பாவத்திற்கும் . . . சரியாய் இருக்கிறது." பில்லிசூனியம் என்பது தேவனுக்கு விரோதமாக மனிதன் செய்யும் முரட்டாட்டமான காரியம் ஆகும். அது தேவ சட்டங்களுக்கு தன்னை ஒப்புக் கொடுக்காமல், தன் முடிவைத் தானே நிருணயிக்க முற்படுவதாகும். மக்களையும் சூழ்நிலையையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்னும் வேட்கையே அவனை இப்படிச் செய்யத்தூண்டுகிறது. இந்த முடிவை அடைவதற்கு மனிதன் மனோதத்துவ உத்திகளைப் பயன்படுத்துகிறான்.

பில்லிசூனிய செயல்பாட்டைக் குறிக்கின்ற மூன்று முக்கிய வார்த்தைகள்: 1. செல்வாக்கைப் பயன்படுத்திக் காரியத்தை சாதுரியமாய் சாதித்தல், 2. பயமுறுத்திச் சம்மதிக்கச் செய்தல், 3. ஆதிக்கம் செலுத்துதல். ஆதிக்கம் செலுத்துவதே இதன் முடிவான நோக்கம். இந்த ஆதிக்கத்தைக் கைப்பற்ற மனிதன் பிறரை பயமுறுத்தியோ, செல்வாக்கைப் பயன்படுத்தியோ காரியத்தைச் சாதிக்க முயலுகின்றான். மக்கள் தங்களைச் சூழ உள்ளவர்கள் மேல் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்களைப் பயமுறுத்தவும், ஆதிக்கம் செலுத்தவும் தங்கள் பேச்சாற்றலைப் பயன்படுத்தும் போது அது பில்லி சூனியமாய் செயற்படுகின்றது.

பில்லி சூனியம் என்பதை எளிதாகக் கூற முற்பட்டால், அது வீழ்ந்து போன மானிடத்தின் எதிர்ப்பு தெரிவிக்கும் கறைபட்ட பண்பின் வெளிப்படுதலாகும். கலாத்தியர் 5:20ல் இது "மாம்சத்தின் கிரியைகளில்" விக்கிரக ஆராதனையுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. இது மாம்சத்தின் கிரியையாக இருப்பதினால், இதில் எக்காலமும் ஈடுபடாதோர் வெகுசிலர்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 71 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மாத்திரமே இருக்கக்கூடும்.

தண்ணீரின் அடியில் இருக்கும் பனிக்கட்டியின் அளவு அதிகமாயும் மிதக்கும் பகுதி குறைவாயும் இருப்பது போல இதுவும் உள்ளது. சாத்தான் இந்த "மாம்சத்தின் கிரியையைத்" தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, இருளின் அரசிலிருந்து வெளிப்படும் இயற்கைக்கப்பாற்பட்ட, பிசாசின் வல்லமைக்கு வழி வகுக்கிறான். இதன் வழியாக, அவன் உள்ளே புகுந்து ஆண்களையும், பெண்களையும் கட்டுப்படுத்தி, அவர்களைத் தனக்கு அடிமைகளாக்கி அவனுடைய தீய நோக்கங்களுக்கு அவர்களைக் கருவிகளாகப் பயன்படுத்துகிறான். இதன் விளைவாக, பில்லிசூனியம் ஒரு மாந்திரீகக்கலையாக பிரதானமாக சாபங்கள், வசியசக்தி என்பவற்றின் மூலம் இயங்குகிறது.

மாந்திரீகத்தின் மற்ற இரு பிரிவுகளான குறிசொல்லுதலும், சூனியமும் இதே அடிப்படை விருப்பத்தினால் இயக்கப்படுகின்றன. அது மக்களையும், சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்தும் விருப்பமாகும்.

**குறிசொல்லுதல்** மாந்திரீகத்தின் **அறிவின்** பிரிவு ஆகும். இயற்கை முறைகளின் வாயிலாகப் பெற்றுக் கொள்ள முடியாத பலவிதமான அறிவை இதனால் ஒருவன் பெற்றுக் கொள்ளக்கூடும். இது பொதுவாக சோதிடமாகச் செயல்படுகிறது. சோதிடம் என்பது வருங்காலத்தைக் குறித்த இயற்கைக்கப்பாற்பட்ட அறிவு. இயற்கைக்கப்பாற்பட்ட முறையில் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படும் மதத்திற்கடுத்த எல்லா விதமான பொய்யான வெளிப்பாடுகளும் இதில் அடங்கும்.

**சூனியம்** பொருட்களின் மூலமாகவோ அல்லது சரீர புலன்களைப் பாதிக்கும் போதைப்பொருட்கள், இசை போன்றவற்றின் மூலமாகவோ கிரியை செய்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 9:21ல் வரும் **சூனியங்கள்** என்னும் சொல் நேரிடையாக போதைப் பொருட்களைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லிலிருந்து உண்டானது. 2 தீமோத்தேயு 3:13ல் பவுல் கடைசிக்காலத்தைக் குறித்த எச்சரிப்பைக் கொடுக்கிறார்: "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" என்கிறார். **எத்தர்கள்**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 72 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என இங்கு சொல்லப்பட்டது "சூனியக்காரர்களைக்" குறிக்கிறது. மந்திரங்களைச் சொல்லி வசியப்படுத்துவது சூனியத்தினுடைய பாணியாக இருந்து வருகிறது. நமது காலத்து போதைப்பொருள் கலாச்சாரமும், "ஹெவி மெட்டல்" ராக் இசையும் பில்லி சூனியத்தின் மறுபிறவிகள்.

சூனியத்தில் பயன்படுத்தப்படக்கூடிய பலவிதமான "கருவிகளின்" வகைகளைப் பற்றிய சுருக்கமான பட்டியலைக் கீழே தருகின்றேன்:

- அஞ்ஞானத்திற்கடுத்த அல்லது கிறிஸ்தவம் என்னும் பெயரில் பயன்படுத்தப்படும் விக்கிர ஆராதனையுடன் தொடர்பு கொண்ட பொருட்கள்;
- பொய்யான மதத்தையோ, கள்ளக்கொள்கையையோ, சாத்தானின் பழக்கத்தையோ குறிக்கின்ற பொருட்கள்;
- மாந்திரீகத்தில் ஈடுபடுபவர்கள் இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையை இறக்கிய பொருட்கள்; (இந்த வல்லமை வெளிப்படைத் தோற்றமாக "நல்ல" காரியங்களுக்கு - சுகத்திற்கு பயன்படுத்தப்படுவதாக இருந்தாலும், அது சாபத்தின் வழியாய் உள்ளது.)
- குதிரை லாடம், "அதிர்ஷ்ட" நாணயங்கள், "புனிதர்களின்" உருவங்கள் போன்ற மூட நம்பிக்கைக்குரிய பொருட்கள் முதலியன.

நமது கலாச்சாரத்தில் சாதாரணமாகக் காணப்படும் மாந்திரீகத்தின் சில குறிப்பான வடிவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### 1. மாந்திரீகத்தின் வல்லமைப் பிரிவு

ஆக்குபிரஷர் (acupressure - இரத்தப் பெருக்கை ஒரு ஊசியைக் குத்தி நிற்க வைத்தல்), ஆக்குபஞ்சர் (acupuncture - ஊசிகளைத் தோலில் குத்தி மயக்கத்தை உண்டாக்குதல்), அஸ்ட்ரல் புரொஜக்ஷன் (astral projection), ஹிப்னோசிஸ் (hypnosis – மறக்கப்பட்ட எண்ணங்களை மயக்கத்தின் மூலம் மீண்டும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 73 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நினைவிற்குக் கொண்டு வருதல்)*, *லீவிடேஷன்* (levitation - *கனமான பொருட்களை மேலே மிதக்கச் செய்தல்)*, martial arts - *இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமை தரும் கிழக்கத்திய நாடுகளிலிருந்து வந்த தற்காப்பு விளையாட்டுகள் (கராத்தே)*, *மனக்கட்டுப்பாடு*-mind control, *மன டைனமிக்ஸ்*-mind dynamics, *பாராகைனீசிஸ்* (Parakinesis), *டேபிள் டிப்பிங்* tabletipping - *மேசையை அசைவாட்டுதல்)*, *டெலிகைனீசிஸ்* telekinesis - *புலன்களுக்கு அப்பால் உள்ள பொருட்களை அசைவாடச் செய்தல்)*, "*தொட்டு*" *குணப்படுத்துதல்* ("touch" healing), *பில்லி சூனியம்* (witchcraft) *ஆகியவையாகும்*.

## *2. மாந்திரீகத்தின் அறிவுப் பிரிவு*

*சோதிடம்* (astrology), *தானாக எழுதுதல்* (automatic writing), "*சேனலிங்*" (channeling), *க்ளேயர் ஆடியன்ஸ்* (clairaudience - *புலன்களுக்கு அப்பாற்பட்டு "குரல்களை" கேட்குதல்)*, *க்ளேய்ர் வாயன்ஸ்* (clairvoyance - *புலன்களுக்கு அப்பாற்பட்டு காணுதல்)*, *படிகப்பந்துகள்* (crystal balls), *வர்ணங்களைக் கொண்டும், ஊசல்குண்டைக் கொண்டும் காரியங்களை நிருணயித்தல்* (diagnosing by color therapy or a pendulum), *குறிசொல்லுதல்* (divining), *இ.எஸ்.பி* (ESP - *தொலை தூரத்தில் உள்ளதை மனதார அறிதல்)*, *கையெழுத்தைக் கண்டு விளக்கம் அளித்தல்* (handwriting analysis), *ஜாதகம்* (horoscopes), *இரிடாலஜி* (iridology), *கபாலா* (kabbala - *மறைக்கப்பட்ட அர்த்தங்களை வாசித்தல்)*, *ஆவிகளுடன் பேச்சுத்தொடர்பு கொள்ளுதல்* (mediums), *எண்ணங்களை வாசித்தல்* (mindreading), *எண்ணியல்* (numerology), *சகுனம் பார்த்தல்* (omens), *பிரெனாலஜி* (palmreading - *அறிவு வளர்ச்சி சம்பந்தமாக மூளையை ஆராய்தல்)*, *கைரேகை சோதிடம்* - phrenology, *சியான்ஸ்* (seances - *இறந்தவர்களின் ஆவிகளோடு தொடர்பு கொள்ள முயலுதல்)*, *டரோட் சீட்டுகளை வைத்து குறிசொல்லுதல்* (tarot cards), *தேயிலை இலையை வாசித்தல்* (tea leaf reading), *டெலிபதி* (telepathy – *எந்த அடையாளங்களுமின்றி மனதினால் கருத்தை அறிவித்தல்)*, "*மந்திர சக்தி*". ("witching") *இப்பட்டியலில் மாந்திரீகபழக்கங்களைக் கற்றுத் தரும் புத்தகங்களும் அடங்கும்*.

*இந்தத் தலைப்பின் கீழே வேதத்திற்குப் புறம்பாக இயற்கைக்கப்பாற்பட்ட வெளிப்பாடுகளைக் கொண்ட எல்லா*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 74 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பொய்யான மதங்களும், கள்ளக்கொள்கைகளும் அடங்கும். இயற்கைக்கப்பாற்பட்ட தளத்தில் மெய்யானதையும், பொய்யானதையும் இனம் கண்டுகொள்வது இயற்கையின் தளத்தில் நேரானதையும், கோணலானதையும் இனம் கண்டு கொள்வதுபோல் உள்ளது. நாம் நேரானது எது என்பதை வரையறுத்துவிட்டால், அந்த வரம்பை விட்டுக் கடந்து செல்வது எதுவுமே கோணலானது தான். ஒரு டிகிரி கோணலாக இருந்தாலும் அல்லது 90 டிகிரி கோணலாக இருந்தாலும் அது கோணலானதுதான்.

ஆவிக்குரிய தளத்தில், வேதாகமம் நேரானவற்றிற்கு அதாவது உண்மையானவற்றிற்கு - மாதிரியாகும். வேதத்திற்கு முரண்பட்டது எதுவுமே பொய்யானது தான். அது எந்த அளவிற்கு - குறைவாகவா அன்றி நிறைவாகவா - இருக்கிறது என்பது முக்கியமன்று. சில வஞ்சகமான காரியங்கள் வேதத்திலிருந்து மிகச்சிறிய அளவே விலகியுள்ளதாகக் காணப்படுகிறது.

கிறிஸ்துவையும், அவருடைய குணாதிசயங்களையும், அவருடைய மீட்பின் செயலையும் தவறுதலாகக் கூற முற்படும் மதங்கள் குறிப்பாக ஆபத்தானவைகள். உதாரணமாக, புதிய ஏற்பாடு இயேசுவை "மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்" என்று சொல்கிறது. ஆனால் யெகோவா சாட்சிக்காரர்கள் அவர் உருவாக்கப்பட்டவர் என்று போதிக்கின்றனர். மேலும் இஸ்லாமியர்கள் இயேசுவை தேவகுமாரனாய் ஏற்றுக் கொள்ளாததோடு அவர் சிலுவையில் மெய்யாகவே மரித்தார் என்பதையும் ஒப்புக் கொள்வதில்லை. என்றாலும், இயேசுவின் பரிகார மரணத்தின் அடிப்படையில் மட்டுமே ஒருவன் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்று செயல்பட்டு வரும் அநேக பொய்யான மதங்களில் சிலவற்றின் பட்டியலைத் தருகிறேன் : அந்திரோபோசாஃபி (Anthroposophy - மனித ஞானம்), பிளாக் மாஸ் Black Mass– பிசாசின் வழிபாட்டுக்காரர்கள்), தேவனுடைய குழந்தைகள் (Children of God), கிறிஸ்டாடெல்பியன்ஸ் (Christadelphians _ நிபந்தனைக்குட்பட்ட அழிவின்மையை நம்புகிறவர்கள்), கிறிஸ்தவ விஞ்ஞானம், (Christian Science), ஃபிரீமேசனரி (Freemasonry), உள்ளான சமாதான இயக்கம் (Inner Peace Movement),





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*யெகோவா சாட்சிக்காரர்கள்,* (Jehovah's Witnesses) - *டாண் வேத மாணவர்கள், மார்மன்ஸ்* (Mormons - *இயேசு கிறிஸ்துவின் பிற்கால பரிசுத்தவான்களின் சபை), நியூ ஏஜ் மூவ்மென்ட்* (New Age Movement), *மத விஞ்ஞானம், ரோசிகுரூஸியனிசம்* (Rosicrucianism - *இயற்கை இரகசியங்களின் அறிவை கொண்டதாக சொல்பவர்கள்), சயன்டாலஜி* (Scientology *விஞ்ஞான முறையில் மனதிற்கும், சரீரத்திற்கும் நன்னலம் அளிப்பவர்கள்), ஆவிக்குரிய எல்லை ஐக்கியம்* (Spiritual Frontiers Fellowship), *ஸ்பிரிச்சுவலிசம்* (Spiritualism). *(இறந்தவர்களின் ஆவிகளோடு தொடர்பு கொள்பவர்கள்), தியாசபி,* (Theosophy - *பிரம்ம ஞானம்), ஒன்றுபட்ட சபை* (Unification Church) - *(மூனிஸ், ஓர் உலக குருசேட்), யூனிடேரியன் சபை* (Unitarian Church), *அகில உலக தேவசபை* (Worldwide Church of God *ஹெர்பர்ட் வி. ஆம்ஸ்டிராங்கினால் உருவாக்கப்பட்டது).*

*மேலும், கிழக்கத்திய மதங்களான "பாகாய்" (பெருசிய மதம்), புத்த மதம், கன்பூசியனிசம், தெய்வீக ஒளி இயக்கம், குருக்கள், ஹரே கிருஷ்ணா, இந்து மதம், இஸ்லாம், ஷின்டோயிசம், டிரான்ஸென்டென்டல் தியானம், யோகா போன்றவையும் இதில் அடங்கும்.*

### *3. பொருட்களின் மூலம் செயல்படும் மாந்திரீகப் பிரிவு*

*தாயத்துகள், ஆங்ஸ் (ஆங் என்பது* T– *வடிவத்தில் உள்ள ஒரு சிலுவையின் மேல் ஒரு வளையம் இருப்பது), பிறப்பிற்குரிய கற்கள், மந்திரப்பொருட்கள் (உதாரணமாக, தோலின் மீது ஏற்படும் சிறு கட்டிகளை நீக்க), சுகத்திற்கு பயன்படுத்தப்படும் படிகங்கள், மருட்சியூட்டும் போதை மருந்துகள், "ஹெவி மெட்டல்" ராக் இசைத்தட்டுகளும் கேசட்டுகளும், ஹெக்ஸ் (எண்* 6) *அடையாளங்கள், "அதிர்ஷ்டம்" தரும் பொருட்கள் (உதாரணமாக, தலைகீழான குதிரை லாடம்), ஊஜா போர்டுகள், அஞ்ஞானிகளுக்கு ஆவிகளின் சேவைகளை தரும் பொருட்கள், மத படைப்புகள், ப்லான்ச்செட்ஸ்* (Planchettes – *ஆவிக்குரிய செய்திகளைத் தானாக எழுதப்பயன்படுத்தப்படும் எழுத்துப் பலகையும், பென்சிலும்), மந்திரக்கயிறுகள், இராசி குறிகள்.*

*மேற்கூறிய பழக்கங்களில் ஈடுபடுபவர்களைப் பற்றி தேவன் என்ன மதிப்பீடு கொண்டவராய் இருக்கிறார் என்பது உபாகமம்* 18:10–13 *வரையுள்ள வசனங்களில் தெளிவாய் சொல்லப்பட்டுள்ளது:*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 76 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும்,

மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாய வித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம்.

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார்.

உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய்."

*இந்த மாந்திரீக பழக்கங்களில் ஈடுபடுபவர்கள் அஞ்ஞான தெய்வங்களுக்கு முன்பாக தங்கள் குழந்தைகளை நெருப்பில் பலிசெலுத்துபவர்களுடன் இணையாகக் கூறப்பட்டுள்ளதைக் காண்க. மோசேயின் நீதிச்சட்டத்தின்படி இப்படிப்பட்ட பழக்கங்கள் எல்லாவற்றிற்கும் உரிய தண்டனை மரணம் ஆகும்.*

*புத்தகங்கள் மாந்திரீக வல்லமையைக் கடத்தும் வழிகளாக அமையக்கூடும் என்பதை அறியவேண்டும். எபேசுவில் கிறிஸ்தவர்கள் என சொல்லிக் கொண்டிருந்தவர்கள் பவுலின் ஊழியத்தினால் சாத்தானின் வல்லமையின் உண்மை நிலையை அறிந்த பொழுது அவர்கள் வெளிப்படையான காரியங்களைச் செய்தனர் :*

"விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.
மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் ** கண்டார்கள்." அப்போஸ்தலர் 19:18–19.

** ஒரு வெள்ளிக்காசு என்பது கிட்டத்தட்ட ஒரு நாள் கூலி. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இன்றைய கணக்கின்படி, அந்த கிரயத்தின் தொகை $ 200,000 ஆக இருக்கக்கூடும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 77 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இவ்விதமான மாந்திரீகப் பொருட்களை நெருப்பினாலோ அல்லது வேறு ஏற்ற வகையிலோ முற்றிலும் அழித்து விடுவது மட்டுமே தகுந்ததாகும். அழிக்கப்படும் பொருட்களின் விலை மிகவும் அதிகமாய் இருந்தாலும் அவ்வாறு செய்வதே சரியானது.

"ஒழுக்கமற்ற பெண்ணைப்" போல மாந்திரீகம் தனது வழிகளை அடிக்கடி மாற்றிக் கொள்கிறது என முன்பே எடுத்துக் கூறினோம். மாந்திரீகப் பழக்கங்களைத் தொகுத்து முழுப்பட்டியலையும் ஒருபோதும் கொடுத்துவிட முடியாது.

அநேக ஆண்டுகளாக இன்றைய பெரும்பாலான திருச்சபைகளினால் செய்யப்படும் ஊழியங்களினாலும், ஆலோசனைகளினாலும் பிரச்சனைகள் தீர்க்கப்படாத மக்களுக்கு நான் உதவியிருக்கிறேன். நான் கண்டவரைக்கும், இந்த மக்களுடைய பிரச்சனைகள் அவர்களுடைய உண்மைக்குறைவினாலோ ஆர்வக்குறைவினாலோ உண்டானது அன்று. உண்மையில் அநேக நேரங்களில் வெளிப்படையான பிரச்சனைகள் எதுவும் இல்லாத சபைக்குத் தொடர்ந்து செல்கின்ற அநேகரை விட அவர்கள் அதிக ஆர்வமும், உண்மையும் உடையவர்களாய் காணப்பட்டனர்.

நான் உதவி செய்து, பயன்பெற்றவர்களை ஆராய்ச்சி செய்ததில் அவர்கள் ஏதாவது ஒருவிதத்தில் தங்கள் வாழ்வில் மாந்திரீகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதைக் கண்டிருக்கிறேன். பெரும்பாலும் அவர்கள் இதனை அவர்களுடைய பிரச்சனைகளுக்கான மறைவான காரணம் என உணரவில்லை.

எனினும் இந்த மாந்திரீகத் தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்தவுடன் வெளிப்படையான பிரச்சனைகளைத் தீர்ப்பது கடினமானதன்று.

ஒரு சாதாரண, ஆனால் தெளிவான உதாரணம் என் நினைவிற்கு வருகிறது. ஒரு வீட்டு ஜெபக்கூட்டத்தில் இருபது வயதைக் கடந்த ஒரு வாலிபனுடைய பக்கத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். நாங்கள் இதற்கு முன்பு ஒருவரை ஒருவர் சந்தித்தது கிடையாது. என்றாலும் நான் அவரைப் பார்த்து, "பரிசுத்த ஆவியை நீர் பெற்றிருக்கிறீரா?" என்ற கேள்வியைக் கேட்டேன்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 78 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"ஆம்" என்று பதிலளித்த அவர் சற்று யோசித்தவராய், "ஆனால், நான் நவமான மொழியில் பேசுவது இல்லை" என்றார்.

நவமான மொழியைக் குறித்து மேலே எதுவும் விவாதிக்காமல், நான் அவரிடத்தில், "நீர் ஒரு குறி சொல்பவரை சந்திக்கச் சென்றதுண்டா?" எனக் கேட்டேன்.

அவர் சிறிது யோசனைக்குப் பின்பு, "ஆம், எனக்கு 15 வயதாய் இருந்தபொழுது நான் போயிருக்கிறேன். ஆனால் அதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அதை ஒரு விளையாட்டாக மட்டுமே நான் செய்தேன்" என்றார்.

"என்றாலும், உண்மையில் உமது வருங்காலம் உமக்கு சொல்லப்பட்டது தானே?" என நான் அவரை மேலும் கேட்டேன்.

"ஆம்," என்று தயக்கத்தோடு ஒப்புக்கொண்ட அவர், "ஆனால், அதில் ஒன்றும் நான் புரிந்து கொள்ளவில்லை" என தற்காப்பாகக் கூறினார்.

"அதை ஒரு பாவமாக தேவனிடம் அறிக்கை செய்யவும், அவரிடத்தில் மன்னிப்பைக் கேட்டு அதன் விளைவுகளிலிருந்து அவர் உங்களை விடுவிக்கவும் விரும்புவீரா?" என நான் கேட்டேன்.

அவர் அதற்கு ஒப்புக்கொண்ட பொழுது, நான் அவரை ஒரு எளிய ஜெபத்தில் வழிநடத்தினேன். அவர் அந்த குறிசொல்பவரிடம் தான் சென்றதை ஒரு பாவம் என்று அறிக்கையிட்டார். தேவன் தன்னை மன்னித்து அதன் விளைவுகளிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்குப் பின்பு எந்த விளக்கமும் கொடுக்காமல், நான் என் கையை அவர் தோளின் மேல் வைத்து அவருக்கு பரிசுத்த ஆவியானவரை அருளும்படி தேவனிடம் வேண்டிக் கொண்டேன். உடனே தானே எந்த தயக்கமும், திக்குதலுமின்றி அவர் தெளிவாகவும், சரளமாகவும் நவமான மொழியில் பேசத்தொடங்கினார். சில நிமிடங்களுள் தன்னைச் சுற்றி நடக்கும் அனைத்தையும் மறந்தவராக தேவபிரசன்னத்தில் மூழ்கிப் போனார். அவருடைய வாழ்வில் இருந்த காணப்படாத தடை நீக்கப்பட்டது!



Blessing or Curse Tamil text 2012 revised.p65 79 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அதற்குப் பின்பு அந்த வாலிபனை சில நிமிடங்கள் சந்தித்ததை நான் அநேக தடவைகள் நினைத்துப் பார்த்திருக்கிறேன். அவருடைய பிரச்சனை அவருடைய ஆர்வக்குறைவினாலோ உண்மைக்குறைவினாலோ உண்டானது அல்ல. அந்த குறி சொல்பவரை சந்தித்த அவருடைய செயலின் தீய விளைவுகளை அவர் அறியத்தவறியதே இச்சாபத்திற்குக் காரணமாய் இருந்தது. தேவனுடைய பார்வையில் அவர் ஆவிக்குரிய விபசாரக்குற்றத்திற்குள்ளானார் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

ஒரு வேளை நான் அவரைப் பார்த்து, "நீர் திருமணமான ஒரு பெண்ணுடன் எப்பொழுதாவது விபசாரம் செய்திருக்கிறீரா?" என்று கேட்டிருந்தால், அவர், "ஆம், அதை ஒரு விளையாட்டாக மட்டுமே நான் செய்தேன் . . . அதில் என்ன இருக்கிறது?" என்று சொல்லியிருக்க மாட்டார்.

எண்ணிறந்த மக்கள் இன்று இதே போன்ற நிலையில் உள்ளனர். இவர்களுள் அநேகர் சபைகளுக்குச் செல்பவர்கள். எனினும் அறியாமையின் நிமித்தம் அவர்கள் மாந்திரீகத்தின் பகுதிக்கு அத்துமீறிப்போய் சரீர விபசாரத்தை விட மோசமான பாவத்திற்குள்ளாகியிருக்கின்றனர். அவர்கள் செய்ததின் உண்மை நிலையை அவர்கள் உணரும் வரைக்கும் தம்மைவிட்டு பொய்யான தெய்வங்களை நோக்கித் திரும்புபவர்கள் அனைவர் மேலும் தேவன் கூறிய சாபத்தின் நிழலில் அவர்கள் தொடர்ந்து நீடித்திருக்க வேண்டும். மேலும் இந்த சாபத்தின் நிழல் அவர்களுடைய சந்ததியில் அடுத்த நான்கு தலைமுறையினர்களின் வாழ்விலும் தொடர்ந்து நீடிக்கக்கூடும்.

இப்படிப்பட்ட காரியங்களை கிறிஸ்தவர்களிடம் கூறும்போது, அவர்கள் சில வேளைகளில், "ஆனால், நான் எந்த தவறையும் செய்ததாக உணரவில்லை" என்று சொல்வார்கள். நான் 1 தீமோத்தேயு 1:13–15 வரையுள்ள வசனங்களில் பவுல் "அறியாமல் அவிசுவாசத்தினாலே" தான் செய்த பாவங்களினால் தன்னை "பிரதான பாவி" எனக் கூறுகிறார் என்று அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவேன். அறியாமை நம்முடைய பாவங்களின் குற்ற உணர்விலிருந்து நம்மை விடுதலை செய்யாது. ஆனால் நாம் மனம்திரும்பி தேவனிடத்தில் திரும்புவோமென்றால், தேவன் நமக்கு இரக்கத்தைக் காட்டும்படி அது வழிவகுக்கும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 80 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நாம் அனைவரும் எந்த விதிவிலக்குமின்றி இந்தத் தத்துவங்கள் நமது வாழ்வில் எவ்வாறு செயல்படக்கூடும் என்பதை கவனமாகச் சிந்திக்க வேண்டும். பத்துக்கற்பனைகளில் முதல் இரண்டு கற்பனைகளில் தேவன் இரு குறிப்பான பாவங்களின் மேல் தமது நியாயத்தீர்ப்பைக் கூறியுள்ளார்: மெய்யான தேவனை விட்டு எந்தப் பொய்யான தெய்வத்திடமும் திரும்புவதும், தேவனைக் குறிக்கும் செயற்கை உருவத்தைச் செய்து அதை வணங்குவதும் ஆகும். இந்த இரு பாவங்கள் மாந்திரீகத்தின் முழுமையையும் தனக்குள் அடக்குவதாய் உள்ளது. நாம் பார்த்தது போல, இதைச் செய்கிறவர்கள் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்குப் பின் நான்கு தலைமுறைகளுக்குத் தொடரக்கூடியது.*

*வேறு விதமாகச் சொன்னால், நமக்கு முந்திய நான்கு தலைமுறைகளில் யாராவது இந்தப் பாவங்களைச் செய்திருப்பார்களானால் நமது தலைமுறையில் நம்மேல் உள்ள சாபத்திற்கு அவர்கள் காரணமாக இருக்கக்கூடும். நம் ஒவ்வொருவருக்கும் இரண்டு பெற்றோர்களும், பெற்றோர்களின் பெற்றோர்கள் நால்வரும் அவர்களின் பெற்றோர்கள் எட்டு பேரும், அவர்கள் பெற்றோர்கள் பதினாறு பேரும் உள்ளனர். ஆக மொத்தம் 30 நபர்களில் யாராவது ஒருவர் நம்முடைய வாழ்வில் உள்ள சாபத்திற்குக் காரணமாக அமையலாம். நம்மில் எத்தனைபேர் நம்முடைய இந்த 30 முன்னோர்களில் ஒருவரும் ஒருபோதும் மாந்திரீகத்திலோ, விக்கிரக ஆராதனையிலோ ஈடுபடவில்லை என நிச்சயமாகக் கூறமுடியும்.*

*தேவனுக்கு நன்றி! இவர்களினால் வரும் எந்த சாபத்திலிருந்தும் தேவன் நமக்கு விடுதலையின் வழியை வகுத்துள்ளார். அவர் நமக்கு வகுத்துள்ள வழியை நாம் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் என்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்! கணக்குக் கொடுக்கும் இறுதி நாளிலே, தேவன் நமது முன்னோர்களினால் நம்மேல் வந்த சாபத்திற்காக நம்மை குற்றப்படுத்தப்போவதில்லை. ஆனால் அப்படிப்பட்ட சாபத்திலிருந்து விடுபட அவர் நமக்கு வகுத்துள்ள வழியை நாம் பயன்படுத்தவில்லையென்றால் அதற்கே நம்மிடம் அவர் கணக்குக்கேட்பார்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 81 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 7

# பால்வகை ஒழுக்கத்திற்கும் நெறி முறைக்கும் அடுத்த பலவித பாவங்கள்

தேவனுடைய சாபத்தை ஒருவர்மேல் வருவிப்பது கீழ்ப்படியாமை. இது யாத்திராகமம் 20:3–5 வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ளது. இது போலி தெய்வங்களை ஏற்றுக் கொண்டு வணங்க முற்படுவதாகும். மேலும் பழைய ஏற்பாடு கீழ்ப்படியாமையின் பல வகைகளைப் பற்றி கூறுகிறது. இவற்றின் மேலும் தேவன் சாபத்தைக் கூறியுள்ளார். இந்த பிரிவில் உபாகமம் 27:15–26 வரையுள்ள வசனங்களில், மோசே பால்வகை ஒழுக்கத்திற்கும் நெறிமுறை தவறுதலுக்கும் உரிய பன்னிரண்டு பாவங்களின் பட்டியலை அளித்துள்ளார். இவைகள் அனைத்தும் தேவனுடைய சாபத்தை ஒருவர்மேல் வருவிக்கக்கூடியவை.

இந்த 27ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் மோசே இஸ்ரவேலர்கள் கானான் நாட்டிற்குள் பிரவேசித்ததற்குப் பின்பு அவர்கள் அனுசரிக்க வேண்டிய பக்திக்குரிய மரபுமுறைகளைப் பற்றி அவர்களுக்கு விளக்குகிறார். ஒன்றிற்கு ஒன்று எதிரேயுள்ள ஏபால், கெரிசீம் என்னும் இரண்டு மலைகளின் மேல் அவர்கள் பலிகளைச் செலுத்தி, பெரிய கல்லுகளை நாட்டி அவற்றின் மேல் நியாயப்பிரமாண வார்த்தைகள் அனைத்தையும் எழுதவேண்டும் எனக் கூறினார். இந்த வார்த்தைகளை அனைவரும் காணும்படியாகச் செய்து, பாதிக்கோத்திரத்தார் கீழ்ப்படிதலுள்ள இஸ்ரவேலர்கள் அனைவர் மேலும் முதலாவது ஆசீர்வாதத்தைக்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 82 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கூறவேண்டும். பின்பு மற்ற ஆறு கோத்திரத்தாரும் கீழ்ப்படியாதவர்கள் அனைவர் மேலும் சாபத்தைக் கூறவேண்டும். இந்த ஆசீர்வாதத்திற்கும் சாபத்திற்கும் மக்கள் அனைவரும் "ஆமென்!" என்று பதில் அளிக்க வேண்டும்.*

இவ்விதமாக, இஸ்ரவேலர்கள் கானான் நாட்டைச் சுதந்தரிக்கும் பொழுது, தேவன் அவர்களுக்கு முன்பாக இரண்டு நேர் எதிரான காரியங்களை நியமித்திருந்தார்: கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாமைக்கு சாபத்தையும் நியமித்திருந்தார். இவைகள் இரண்டிற்கும் இடையில் மத்திய நிலை என்று ஒன்றுமில்லை. அவர்களுக்கு முன்பு இவ்விரு காரியங்களே வைக்கப்பட்டிருந்தன. அன்றிலிருந்து கானானில் பிரவேசிக்கும் ஒவ்வொரு இஸ்ரவேலனும் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிப்பான், அல்லது சாபத்தை அனுபவிப்பான்.

இவ்விரு காரியங்களும் இஸ்ரவேலின் சரித்திரத்தில் முற்றிலும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அவர்களின் ஏடுகள் இவைகள் செயல்பட்ட விதத்தை உறுதிப்படுத்துகின்றன. எனினும் இந்தக் காரியங்கள் இஸ்ரவேலர்களுக்கு மட்டும் உரியதன்று. தேவனுடைய உடன்படிக்கையின் உறவிற்குள் வரும் அனைவருக்கும் இவைகள் பொருந்துவதாக உள்ளன. பழைய உடன்படிக்கையைப் போலவே புதிய உடன்படிக்கையிலும் தேவன் இந்த இரு காரியங்களையும் கூறுகிறார்: கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதமும் கீழ்ப்படியாமைக்கு சாபமும் வரும். கிறிஸ்தவர்கள் மத்தியில் பிசாசானவன் தந்திரமாக ஒரு பெரிய பொய்யைப் புகுத்தியுள்ளான். அது என்னவென்றால் கீழ்ப்படிதலினால் உண்டாகும் ஆசீர்வாதங்களையும் கீழ்ப்படியாமையினால் உண்டாகும் சாபங்ளையும் தவிர மூன்றாவது ஒரு காரியம் உண்டு என்பதே. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இப்படிப்பட்ட காரியத்தைக் குறித்து கூறவில்லை.

ஏபால் மலையிலிருந்து இஸ்ரவேலர்கள் மேல் கூறப்பட்ட பன்னிரண்டு சாபங்கள் விளக்கமாயும் திட்டமாயும் கொடுக்கப்பட்டுள்ளன. கீழே வரும் பட்டியல் இந்த சாபங்களில் வரும் முக்கிய நடத்தை முறைகளைத் தொகுத்துக் கூறுவதாக

* யோசுவா 8:32–35 வரையுள்ள வசனங்களில் இஸ்ரவேலர்கள் கானான் நாட்டிற்குள் பிரவேசித்ததற்குப் பின்பு இந்த பக்திக்குரிய மரபு முறை உண்மையில் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்று விளக்கப்பட்டுள்ளது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 83 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*உள்ளது:*

> பொய்யான தெய்வங்களை ஏற்றுக் கொண்டு வழிபடுதல்;
>
> பெற்றோரைக் கனவீனப்படுத்துதல்;
>
> பெலவீனமான மற்றும் உதவியற்றவர்களுக்கும் எதிராக செய்யப்படும் எல்லாவிதமான கொடுமைகளும் அநீதியும்;
>
> இயற்கைக்கு மாறான, சட்டத்திற்கு விரோதமான எல்லாவிதமான பால்நிலை ஒழுக்கக்கேடுகளும் ஆகும்.

*கடைசியில் கூறப்பட்ட சாபத்தில் நியாயப்பிரமாணத்தை மீறும் எல்லாவித கீழ்ப்படியாமைகளும் அடங்கும்.*

*எப்பொழுதும் போல் தேவனுடைய சாபத்திற்கு பிரதானமான காரணம் பொய்யான தெய்வங்களோடு கொள்ளும் ஈடுபாடு ஆகும். இதைத் தொடர்ந்து பெற்றோரை கனவீனப்படுத்துதல் வருகிறது. நம்முடைய பெற்றோரைக் கனம் பண்ண வேண்டும் என்பது புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எபேசியர் 6:1–3 வரையுள்ள வசனங்களில் பவுல் பத்துக்கற்பனைகளின் ஐந்தாவது கற்பனையை மீண்டும் உறுதிப்படுத்துகிறார் :*

> "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.
> உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்,
> உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது."

*அநேக கிறிஸ்தவர்கள் உட்பட - இன்று எண்ணிறந்த மக்கள் பெற்றோர்களை கனவீனப்படுத்துதல் தேவனுடைய சாபத்தைக் கொண்டு வருகிறது என்பதை அறியாது உள்ளனர். இதைக் குறித்து எத்தனையோ பேருக்கு நான் ஆலோசனை கூறியிருக்கிறேன். அதன் எண்ணிக்கைக்கு கணக்கில்லை. இந்தப்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 84 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பாவத்தை ஒப்புக்கொண்டு, மனந்திரும்பி, தங்கள் பெற்றோர் மீது கொண்டுள்ள எண்ணத்தை மாற்றினவர்களின் வாழ்க்கையில் நன்மைக்கேதுவான அற்புத மாற்றத்தை நான் கண்டுள்ளதால் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்!*

*இதைப்பற்றி பேசும் பொழுது, திருமணத்தைப் பற்றிய என் நூலான* **"God is a Matchmaker"** *என்பதிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் கூறுவது பொருத்தமுடையது என எண்ணுகிறேன்.*

முதல் நான்கு கற்பனைகளைக் கைக்கொள்பவர்களுக்கு ஆசீர்வாதத்தின் எந்த வாக்குத்தத்தமும் கொடுக்கப்படவில்லை. ஆனால் பெற்றோரைக் குறித்த இந்த ஐந்தாவது கற்பனையில், தேவன் ஒரு சிறப்பு வாக்குத்தத்தத்தை இணைத்துக் கூறுகிறார்: “உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கு ...” என்று கூறுகிறார். அதே நேரத்தில் இந்த வாக்குத்தத்தம் ஒரு நிபந்தனையைக் குறிப்பாக உணர்த்துகிறது: உனக்கு நன்மை உண்டாயிருக்க வேண்டுமென்றால், நீ உன் பெற்றோரைக் கனப்படுத்துவதற்கு கவனமுள்ளவனாய் இருக்க வேண்டும். எதிர்மறையாக நீ உன் பெற்றோரைக் கனப்படுத்தவில்லையென்றால், உனக்கு நன்மை உண்டாகுமென்று நீ எதிர்பார்க்க முடியாது.

உன் பெற்றோர் சொல்லும் அனைத்தையும் ஒப்புக் கொள்ளமுடியாவிட்டாலும் அவர்கள் செய்கைகள் அனைத்திற்கும் சம்மதம் தெரிவிக்கமுடியாவிட்டாலும் நீ அவர்களை கனப்படுத்தக் கூடும் என்பதை மனதிற்கொள்ள வேண்டும். சில காரியங்களில் நீ அவர்களோடு கடுமையாக கருத்து வேறுபாடு கொண்டிருக்கலாம். எனினும் அவர்களைக் கனப்படுத்தி நீ நடந்து கொள்ளமுடியும். இவ்வாறாக பெற்றோர்களைக் கனப்படுத்துவது இந்தக் கட்டளையை அளித்த தேவனையும் கனப்படுத்துவதாக உள்ளது.

எந்த மனிதனுடைய வாழ்க்கையிலும் தேவனுடைய ஆசீர்வாதம் கடந்து வருவதற்கு பெற்றோரைக் குறித்து சரியான எண்ணம் கொண்டிருக்க வேண்டுமென்பது ஒரு முக்கியமான காரியம் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். நான் அநேக ஆண்டுகளாக கிறிஸ்தவர்களுக்குப் போதகப்பணியைச் செய்திருக்கிறேன். ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன். ஆனால் இவர்களில் தன்னுடைய பெற்றோருடன் தவறான நோக்கங்கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவித்த ஒருவரை நான்





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கண்டதேயில்லை. இப்படிப்பட்ட நபர் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்வின் பல பகுதிகளிலும் வைராக்கியம் நிறைந்தவராய் இருக்கலாம். சபையிலும், ஊழியத்திலும் சுறுசுறுப்பாயும், உற்சாகம் நிறைந்தவராயும் இருக்கலாம். பரலோகத்தில் அவருக்கென்று ஓர் இடம் ஆயத்தமாய் இருக்கலாம். எனினும் அவருடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்று எப்பொழுதும் குறைவுபட்டதாகக் காணப்படுகிறது: அது தேவனுடைய ஆதரவும், ஆசீர்வாதமும் ஆகும்.

இதற்கு மாறாக, அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் பெற்றோர்கள் பேரில் தப்பெண்ணம் கொண்டதை ஒப்புக் கொண்டு, மனந்திரும்பி, வேண்டிய மாற்றங்களை செய்த பொழுது அவர்களுடைய வாழ்க்கை முற்றிலும் மாற்றப்பட்டதை நான் கண்டிருக்கிறேன். ஒரு மனிதன் இப்பொழுது என் நினைவிற்கு வருகிறான். அம்மனிதன் தன் தந்தையின் பேரில் வாழ்நாள் முழுவதும் கசப்பும், விரோதமும் கொண்டிருந்தான் என்பது அவனுக்கு உணர்த்தப்பட்டது. அந்த வேளையில் அவனுடைய தகப்பனார் உயிருடன் இல்லாது மரித்துப் போயிருந்த பொழுதிலும், அவன் நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்து தன் தந்தை அடக்கம் பண்ணப்பட்டிருந்த கல்லறைக்குச் சென்றான். கல்லறைக்குப் பக்கத்தில் அவன் முழங்காற்படியிட்டு ஆழ்ந்த மனந்திரும்புதலுடன் தன் இருதயத்தை தேவனுக்கு முன்பாக ஊற்றினான். தன் பாவம் மன்னிக்கப்பட்டது என்றும், அதன் தீய விளைவுகளிலிருந்து தனக்கு விடுதலை உண்டாயிற்று என்றும் அவன் உணரும் வரைக்கும் அவன் முழங்காற்படியிட்ட நிலையிலிருந்து எழுந்திருக்கவில்லை. அன்றிலிருந்து தோல்வி, ஏமாற்றம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு அவனுடைய முழு வாழ்க்கையும் வெற்றிக்கும், மனநிறைவிற்கும் நேராக மாற்றப்பட்டது.

*உபாகமம் 27ம் அதிகாரத்தின் பட்டியலில் வரக்கூடிய அடுத்த நடைமுறை குறித்த காரியம் குறிப்பாக மெலிந்தவர்களுக்கும், உதவியற்றவர்களுக்கும் எதிராக செய்யப்படும் கொடுமையும், அநீதியும் ஆகும். நமது காலத்து கலாச்சாரத்தில் இப்படிப்பட்ட நடத்தைக்கு நிச்சயமாய் அநேக உதாரணங்கள் உள்ளன. ஆனால் இவற்றில் ஒன்று மட்டும் மற்றவைகளை விட அதிகமாய் தேவனுடைய சாபத்தைத் தூண்டிவிடுவதாக உள்ளது. அது வயிற்றில் வளரும் சிசுவை வேண்டுமென்றே கருச்சிதைவு செய்வதாகும். சொந்த பெற்றோர்களே தாயின் வயிற்றில்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 86 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வளரும் குழந்தையை பாதுகாக்காவிடின், அந்த குழந்தையை விட உதவியற்றவரும், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவரும் யார் இருக்கமுடியும்?

இனவெறிக்கும், அநீதிக்கும் எதிராக ஊக்கமாய் போராடுகின்ற மக்கள் உண்மையில் இந்த கருச்சிதைவை மன்னிப்பதும், ஆதரிப்பதும் வினோதமாய் உள்ளது! மேலும் ஒரு சிறு குழந்தையைக் கொடுமைப்படுத்த ஒப்புக் கொள்ளாதவர்கள் தாயின் வயிற்றில் வளரும் ஒரு சிசுவின் மீது எந்தக் கருணையையும் காட்டாமல் இருப்பது விந்தையாய் உள்ளது. ஒரு சின்னக் குழந்தை என்று சொல்வதற்குப் பதிலாக கருப்பையிலுள்ள சிசு என்று சொல்வது எப்படியோ மனிதர்களுடைய மனச்சாட்சியை மழுக்குவதாக உள்ளது. என்றாலும், இவ்வாறாக வார்த்தைகளை மாற்றிச் சொல்லுவது இப்படிப்பட்ட செயலின் உண்மை நிலையை மாற்றியமைப்பதாக இல்லை.

ஒருவர் "தாய்மார்களே தங்கள் சொந்தக்குழந்தைகளைக் கொல்ல முற்படும் பொழுது அச்சமுதாயத்திற்கு நம்பிக்கை ஏது?" என்று கேட்டார். கருச்சிதைவைக் குறித்த தேவனுடைய எண்ணம் வார்த்தைகளை மாற்றுவதினால் மாறிவிடுவதில்லை. அதை அவர் தெளிவாக "கொலையாகக்" கருதி அதற்கேற்ற தீர்ப்பை வழங்குகிறார். நாடுகள்தோறும் உலகமனைத்திலும் இன்று இலட்சக்கணக்கானோரின் வாழ்க்கை இச்செயலினால் விளையும் சாபத்திற்கு இலக்காகியுள்ளது.

உபாகமம் 27ம் அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்ட பட்டியலில் கடைசியாக வரும் சாபத்தைத் தூண்டிவிடக்கூடிய நடத்தைமுறை பற்றிய காரியம் பாலுறவுக்கடுத்த பாவங்களாகும். சில கிறிஸ்தவர்கள் துரதிஷ்டவசமாக பாலுறவுக்கடுத்த காரியம் தூய்மையற்றது என்றும் தவிர்க்கப்பட முடியாதது என்றும் அதற்கு மனம் வருந்தி மன்னிப்பை நாட வேண்டும் என்றும் கருதுகின்றனர். ஆனால் வேதம் இதற்கு மாறான கருத்தைச் சொல்லுகிறது. தூய்மையானதாகவும் அழகானதாகவும் கருதப்படும் இப்பாலுறவு, உலகத்தைப் படைத்த தேவனால் மனிதனுக்குரிய ஆரம்பதிட்டத்தில் இடம் பெற்றது. இதன் காரணமாகவே தேவன் இந்தப் பாலுறவுக்கடுத்த காரியங்களுக்கு கண்டிப்பான எல்லைகளை வகுத்துள்ளார். உபாகமம் 27:20–23





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள சாபங்களில் இந்த எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இரத்தத்தினாலும் அல்லது திருமணத்தினாலும் உறவினரானவர்களுடன் பாலுறவு கொள்வதும், மிருகங்களுடன் பாலுறவு கொள்வதும் இந்தப் பட்டியலில் தடைசெய்யப்பட்ட காரியங்கள் ஆகும். வேதத்தில் இதுதவிர ஒரே பாலருடன் பாலுறவு கொள்ளும் காரியங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. இலேவியராகமம் 18:22ல் தேவன் "பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ண வேண்டாம்; அது அருவருப்பானது." என்கிறார். உபாகமம் 18:12ல் பலவித மாந்திரீகப் பழக்கங்களைப் பற்றிக் கூறும்போது, "அருவருப்பானது" என்னும் இதே வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது.

இன்று பாலுறவின் தூய்மையைப் பாதுகாக்க வகுக்கப்பட்டுள்ள எல்லைகள் சில வேளைகளில் கிறிஸ்தவம் என்ற பெயரிலும் கூட வேண்டுமென்றே மீறப்படுகிறது. "சூழ்நிலைக்கேற்ற நெறிமுறை" அல்லது "புதிய ஒழுக்கமுறை" (இவைகள் எந்த வகையிலும் புதியவை அல்ல) போன்றவற்றைப் பற்றிய வாக்குவாதங்கள் மனித நடத்தைக்குரிய தேவசட்டங்களை மாற்றியமைக்க முடியாது. பாலுறவிற்கடுத்த முறை தவறுகளில் ஈடுபடுபவர்கள் அனைவரும் தேவனுடைய சாபத்தைத் தங்கள் மேல் வருவித்துக் கொள்கின்றனர்.

உபாகமம் 27ம் அதிகாரத்தில் தேவனுடைய சாபத்தைத் தூண்டிவிடக்கூடிய காரியங்களின் இந்தப் பட்டியலைத் தொடர்ந்து, உபாகமம் 28ம் அதிகாரத்தில் கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதங்கள், கீழ்ப்படியாமைக்கான சாபங்கள் என்பவற்றின் முழுப் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது என்பது கவனிக்கப்படத்தக்கதாகும். அதாவது இது "கீழ்ப்படிவதா அல்லது கீழ்ப்படியாமலிருப்பதா என்று நீ தீர்மானிப்பதற்கு முன்பு அவற்றால் வரக்கூடிய விளைவுகளை கவனத்துடன் யோசனை செய்வது நல்லது. ஆகவே அவைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன!" என்று தேவன் சொல்வது போல் உள்ளது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 88 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 8

# யூதப்பகைமை

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தேவன் தெரிந்தெடுத்தது அதற்குப் பின்னான சரித்திரத்தையே பாதித்துள்ளது. தேவன் தமது நிபந்தனைகளை உகந்தவாறு செய்கின்ற ஒரு மனிதனை தேடிக்கொண்டிருந்தார். தேவன் தம்முடைய ஆசீர்வாதம் அநேக இனத்தவருக்குக் கடந்து வரும் ஒரு கால்வாயாக அவன் இருக்கக்கூடும் என்று எண்ணினார். அவர் தெரிந்தெடுத்த மனிதர் ஆபிராம் என அழைக்கப்பட்டார் (பின்பு ஆபிரகாம் என அவர் பெயர் மாற்றப்பட்டார்).

ஆபிரகாமை தேவன் தெரிந்தெடுத்ததின் நோக்கம் ஆதியாகமம் 12:2–3 வரையுள்ள வசனங்களில் வருகிறது. பிரத்தியேகமாக இங்கு ஆசீர்வாதமும் சாபமும் தொடர்புடையதாய் வருகிறது. ஆபிரகாமிற்கு தேவன் நான்கு ஆசீர்வாதங்களை வாக்களிக்கின்றார்:

> "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.
> நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.
> உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்.
> பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள்
> ஆசீர்வதிக்கப்படும்."

என்றாலும், இந்த ஆசீர்வாதங்களுக்கு மத்தியிலே ஒரு சாபமும் கூறப்பட்டுள்ளது:

> "உன்னைச் சபிக்கிறவனைச் * சபிப்பேன்."

* இங்கு "சபிப்பது" என்னும் வினைச்சொல் "நிந்திப்பது," "தீமையாய் பேசுவது" என்றும் பொருள்படும்.



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இந்த சாபம் இணைக்கப்பட்டதில் ஒரு முக்கிய நோக்கம் உள்ளது. எந்த மனிதன் மேல் தேவன் தமது ஆசீர்வாதத்தைக் கூறுகிறாரோ அவன் இயற்கையாகவே தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் மிகப்பெரிய விரோதியான சாத்தானின் வெறுப்பிற்கும், தாக்குதலுக்கும் இலக்காகிறான். இது முரண்பாடாகக் காணப்பட்டாலும், தேவனுடைய ஆசீர்வாதம் சாத்தானுடைய சாபத்தைத் தூண்டிவிடுகிறது. இந்தச் சாபம் சாத்தான் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளவர்களின் உதடுகளின் மூலம் கடத்தப்படுகிறது. இதன் காரணமாக தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தபொழுது, ஆபிரகாமைச் சபிக்கின்ற எல்லோர்மேலும் அவருடைய சாபத்தையும் சேர்த்துக் கூறுகின்றார். இதனால் தேவனுடைய சாபத்தைத் தன்மேல் வருவித்துக் கொள்ளாமல் ஒருவரும் ஆபிரகாமை சபிக்கமுடியாததாயிற்று.*

*ஆதியாகமம் 27:29ல் ஈசாக்கு தன் மகன் யாக்கோபை ஆசீர்வதித்த பொழுது, முன்பு தேவன் ஆபிரகாமுக்கு வகுத்த அதே பாதுகாப்பை யாக்கோபிற்கும் உரியதாகும்படி செய்ய முற்படுகிறான்:"உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப் பட்டவர்களாய் இருப்பார்கள்" என்கிறான். பின்பு தெய்வீக உந்துதலின்படி பிலேயாம் இஸ்ரவேலின் வருங்காலத்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசன வெளிப்பாட்டை உரைக்கின்றான். இது இஸ்ரவேலைச் சபிக்க வேண்டும் என்ற அவனுடைய முந்திய நோக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். எண்ணாகமம் 24:9ல் சொல்லப்பட்டுள்ள இந்த வெளிப்பாட்டின் ஒரு பகுதி ஆபிரகாமையும், யாக்கோபையும் பற்றி ஏற்கெனவே பேசப்பட்ட வார்த்தைகளை எதிரொலிக்கிறது :*

> "உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்,
> உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்றான்."

*மேற்கூறிய வசனங்களைச் சேர்த்துப் பார்க்கும்போது, ஆபிரகாமின் மீது முன்பு கூறப்பட்ட ஆசீர்வாதமும், சாபமும் அவனுடைய சந்ததியரான ஈசாக்கிற்கும் யாக்கோபிற்கும், பின்பு அவர்களுடைய தலைமுறையினருக்கும் கடந்து வந்ததை நாம் தெளிவாய்க் காணலாம். இந்தத் தலைமுறையினர் மொத்தமாக இன்று யூத மக்கள் என அழைக்கப்படுகின்றனர்.*

*தேவன் தம்முடைய எதிரிகள், ஆபிரகாமையும்,*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 90 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*ஈசாக்கையும், யாக்கோபையும், இவர்களின் சந்ததியார்களையும் சபிக்க முடியாதபடி செய்யாமல், சபிக்கிறவர்கள் தண்டனைக்கு இலக்காகும்படிச் செய்தார். அந்த நாளிலிருந்து சர்வ வல்லமையுள்ள தேவனின் மிகவும் பயங்கரமான சாபத்தைத் தங்கள் மேல் வருவித்துக் கொள்ளாமல் ஒருவரும் யூத மக்களைச் சபித்ததில்லை. நமது வழக்காற்றில் தேவனுடைய இந்தச் சாபத்தை தங்கள்மேல் வருவிக்கக்கூடிய இச்செயல் யூத பகைமை என்னும் சொல்லால் அறியப்படுகிறது.*

*முற்பிதாக்களின் நாட்களிலிருந்து நமது நாட்கள் வரை தனிப்பட்டவர்களின் சரித்திரத்திலும் நாடுகளின் சரித்திரத்திலும் இவ்வாறு செயலாற்றிய சாபத்தை ஒரு பெரிய புத்தகமாகவே எழுதலாம். கிட்டத்தட்ட 4000 ஆண்டுகளில் எந்தத் தனிப்பட்ட நபரோ, நாடோ யூத மக்களைச் சபித்துவிட்டு, அதற்குக் கைமாறாக தேவனுடைய கேடு விளைவிக்கும் சாபத்தைத் தங்கள் மேல் வருவித்துக் கொள்ளாமல் இருந்ததில்லை.*

*நபில் ஹதாத் என்பவரின் கதை ஆபிரகாமிற்கு தேவன் அளித்த வாக்குத்தத்தத்தின் இரு பகுதிகளையும் பற்றி தெளிவான விளக்கத்தைத் தருவதாக உள்ளது: ஒரு பக்கம் யூத மக்களை நிந்திப்பவர்களின் மேல் சாபமும், மறுபக்கம் அவர்களை ஆசீர்வதிப்பவர்களின் மேல் ஆசீர்வாதமும் உண்டாகிறது. நபில் ஒரு பாலஸ்தீன அராபியன். ஓர் பிரபலமான அராபிய குடும்பத்தில் கெய்ஃபாவில் பிறந்தவன். பின்பு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்க்கு குடியேறி, அங்கு இலாபகரமான வியாபாரத்தில் ஈடுபட்டான். அங்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுடன் அவனுக்கு ஒரு வல்லமையான சந்திப்பு ஏற்பட்டது. அவனுடைய சொந்த வார்த்தைகளில் எழுதப்பட்ட அவனுடைய கதை இதோ:*

**என் பெயர் நபில் ஹதாத். நான் 1938ஆம் ஆண்டு கிறிஸ்தவ அராபிய பெற்றோருக்கு கெய்ஃபாவில் பிறந்த பாலஸ்தீன அராபியன்.**

**என் குழந்தைப் பருவத்தில் இருந்தே நான் எப்பொழுதும் மிகுந்த சோகத்துடனேயே படுக்கைக்குச் செல்லுவேன். நான் மகிழ்ச்சியாய் இருப்பதற்கான வழியைக் காணவேண்டும் எனத் தீர்மானித்தேன். என் பெற்றோர்கள் என்னை நேசித்தார்கள் என்பதை அறிவேன். ஆனால் அது என் சோகத்தை**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 91 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மாற்றவில்லை. நான் பணக்காரனாகவும், வெற்றியுள்ளவனாகவும் மாறக்கூடுமானால், அப்பொழுது நான் மகிழ்ச்சியாய் இருக்கமுடியும் என நம்பினேன். அது என் குறிக்கோளாயிற்று.

1948ம் ஆண்டு அராபியர்களுக்கும், யூதர்களுக்கும் இடையே சண்டை ஆரம்பமானது. எங்கள் குடும்பம் முழுவதும் லீபனோனுக்குச் சென்றது. 1950க்குப் பின்பு கல்லூரியில் படிக்க அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வந்தேன்.

ஆகையால் அமெரிக்காவில் படிப்பின் மூலமும், வியாபாரத்தின் மூலமும் நான் பணக்காரனாகவும், வெற்றியுள்ளவனாகவும் ஆக வேண்டுமென்ற என் குறிக்கோளை அடைய முற்பட்டேன். அடுத்த சில ஆண்டுகளில் நான் திருமணம் செய்து, அமெரிக்க பிறப்புரிமை பெற்று என் குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்தேன். நான் மெக்டோனால்டு உணவகங்கள் சிலவற்றின் சொந்தக்காரனாக மாறினேன். என்னுடைய முப்பதாவது வயதில் நான் கோடீஸ்வரனானேன். எனினும் அந்த சோகம் என்னை விட்டு நீங்கவில்லை. நான் மகிழ்ச்சியாய் இருக்கும்படி உலகப்பிரகாரமான பொருட்களை நாட ஆரம்பித்தேன். கார்கள், உல்லாச பயணங்கள், பொழுது போக்குகள் போன்ற பணத்தால் வாங்கக்கூடியவற்றை நாடிச் சென்றேன். எதுவும் பலன் தரவில்லை.

இறுதியாக, என் உள்ளத்தில் கேள்விகள் எழும்பின: இயேசு என்கின்ற இந்த மனிதர் யார்? அவருடைய மரணத்திற்கு 2000 ஆண்டுகளுக்குப் பின்பும் மக்கள் விமரிசிக்கும் இவர் யார்? பல மக்கள் வழிபடும் இவர் யார்?

நான் வேதத்தைத் திறந்து இந்த இயேசு தன்னைப் பற்றி என்ன கூறியிருக்கிறார் எனக் காண விரும்பினேன். தெய்வீக பிரசன்னம் அறையை நிரப்பிற்று. இயேசு தேவனுடைய குமாரன் என்பதை நான் அறிந்து கொண்டேன். மறு ஆண்டு முழுவதையும் வேதத்தை வாசிப்பதிலும், என் நண்பர்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்வதிலும் செலவிட்டேன். எனினும் நான் சோர்வாகவே காணப்பட்டேன். அவ்வேளையில் என்னுடைய ஒன்பது மெக்டோனால்டு உணவகங்களையும் சில மில்லியன் டாலர்களுக்கு விற்று ஒரு புதிய வியாபாரத்தைத் தொடங்கினேன். காரியங்கள் மோசமானது. நான் மிகவும் சோர்ந்து போனேன். நான்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 92 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மீண்டும் தேவனை கேள்வி கேட்க ஆரம்பித்தேன்.

''ஏன் கர்த்தாவே? இயேசு உமது குமாரன் என்று நான் அறிவதற்கு முன்பாக எனக்கு எல்லாம் நன்றாக இருந்தது. ஆனால் இப்பொழுது எல்லாம் தலைகீழாகப் போகிறதே!''

தேவன் அதற்கு ''**இயேசு என்னுடைய குமாரன் என்ற அந்த வெளிப்பாட்டை அறிந்தபின் நீ என்ன செய்தாய்? உன் வாழ்வில் எதுவுமே மாறவில்லை. இயேசு தேவனுடைய குமாரன் என்று சாத்தானுக்கும் தெரியுமே''** என்று பதிலளித்தார்.

''கர்த்தாவே! நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்?''

**''மனந்திரும்பி அவரை உன் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்.''**

எனக்கு ஜெபிப்பது எவ்வாறு என சொல்லித்தரக்கூடிய ஒருவரைக் கண்டேன். நான் மனந்திரும்பி இயேசுவை என் உள்ளத்தில் அழைத்தேன். சில மாதங்களுக்குப் பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றேன். இப்பொழுது எனக்கு பதில் கிடைத்தது. **அதற்குப் பின்பு நான் சோகத்துடன் படுக்கைக்குச் செல்லவில்லை.** ஆனால் என்னுடைய வாழ்க்கை இன்னும் சரியாகவில்லை. என்னுடைய வியாபாரம் தொடர்ந்து கீழ் நோக்கிச் சென்றது. மீண்டும் நான் கர்த்தரிடத்தில் முறையிட்டேன்.

''கர்த்தாவே! நீர் என்னை ஏமாற்றிவிட்டீர். நான் உமது குமாரன் இயேசுவைப் பற்றி எதையும் அறிந்து கொள்வதற்கு முன்பு, எனக்கு எல்லாம் சரியாக இருந்தது. பின்பு அவரை உமது குமாரன் என நீர் எனக்குக் காட்டினீர். அதிலிருந்து காரியங்கள் தவறாகச் செல்ல ஆரம்பித்தன. பின்பு நான் அவரை என் வாழ்விலே ஏற்றுக் கொண்டேன். இப்பொழுது நான் எல்லாவற்றையும் இழந்து கொண்டிருக்கிறேன்!'' என்றேன்.

அதற்கு அவர் ''**நான் வைராக்கியமுள்ள தேவன். ஆனால் உனக்கு உன் வியாபாரமே தேவன்; உன்னுடைய ரோல்ஸ்**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 93 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**ராய்ஸ் உன் தேவன்; உன் பதவி உன் தேவன். இந்த பொய்யான தெய்வங்களை எல்லாம் உன்னிலிருந்து எடுத்துவிட்டு மெய்யான ஜீவனுள்ள தேவன் யார் என்பதை உனக்குக் காட்ட விரும்புகிறேன். ஆனால் - நான் உன்னைத் திருப்பிக் கொண்டு வருவேன்**'' என பதிலளித்தார்.

பத்துமாதத்தில் நான் திவாலானேன்.

கொஞ்சகாலத்திற்குப் பின் டெரிக் பிரின்ஸ் ஃபோர்ட் லாடர்டேலில் நடத்திய ''சாபங்கள்: காரணமும் குணப்படுதலும்'' என்ற ஒரு கருத்தரங்கிற்குச் சென்று அவர் கொடுத்த போதனைகளைக் கேட்டேன். என்னுடைய வாழ்க்கையில் பொருளாதாரம், சரீரம், என் குழந்தைகளிடம் மகிழ்ச்சியோடு இருக்கமுடியாத நிலை போன்றவை சாபத்தால் தாக்கப்பட்டுள்ளதை நான் அறிந்து கொண்டேன். இதே விதமான பிரச்சனைகள் என் தகப்பனாருடைய வாழ்விலும் மற்ற குடும்ப அங்கத்தினர்களின் வாழ்விலும் இருந்தது என்பதை உணர்ந்தேன்.

மூன்றாம் நாளிலே, டெரிக் நூற்றுக்கணக்கான மக்களை சாபங்களிலிருந்து விடுவிக்க ஜெபத்தில் வழி நடத்தின பொழுது நான் எழுந்து நின்றேன். எனக்கு முன்னும், பின்னும், அருகிலும் இருந்த மக்களில் ஏற்பட்ட விடுதலை, சரீரத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் மூலம் வெளிப்படையாகக் காணப்பட்டன. ஆனால் அக்கூட்டத்தில் நான் விடுதலை பெறவில்லை. அடுத்த நாளிலிருந்து எட்டு மணி நேரம் சரீர வலி ஏற்பட்டது; அடிவயிற்றிலிருந்து வாந்தி எடுத்தேன். நான் பில்லி சூனியத்திலிருந்தும் மற்ற காரியங்களிலிருந்தும் பெற்ற விடுதலையை தேவன் எனக்கு உணர்த்தினார்.

அநேக மாதங்களுக்கு கர்த்தர் இன்னும் சில பகுதிகளில் இருந்த சாபங்களையும் எனக்குத் தொடர்ந்து காட்டினார். ஒவ்வொரு முறையும் நான் மனந்திரும்பி, எனக்காக இயேசு சாபமானதின் அடிப்படையில் என்னுடைய விடுதலையைப் பெற்றுக் கொண்டேன்.

ஒரு நாள் ஆராதித்த பொழுது, ''நீர் எவ்வளவு பெரியவர்! நீர் இப்பிரபஞ்சத்தையும், **அதிலுள்ள எல்லாவற்றையும்**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 94 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

படைத்தீர்!'' என்றேன். கர்த்தர் என்னைப் பார்த்து, ''நீ உண்மையில் இதை விசுவாசிக்கிறாயா?'' என்று கேட்டார். நான் அதற்கு ''ஆம், கர்த்தாவே'' என்று பதிலளித்தேன்.

அதற்கு அவர் ''**யூத மக்களைப் பற்றிய காரியம் என்ன? நீ இன்னும் உன் இருதயத்தில் அவர்களுக்கு விரோதமாய் கோபம் கொண்டிருக்கிறாயே**'' என்றார்.

எவ்வாறு என் குடும்பம் முழுவதும் யூதர்களை எப்பொழுதும் சபித்து வந்தது என்பதை நான் நினைவுகூர்ந்தேன். என்னுடைய இளம் வயதிலிருந்து அவர்களை **வெறுக்கும்படியாக** நான் கற்பிக்கப்பட்டிருந்தேன். இப்பொழுது கர்த்தருடைய பிரசன்னத்தில் ''யூத மக்களுக்கு விரோதமாக என் இருதயத்தில் உள்ள எல்லா கோபத்தையும் விட்டு விடுகிறேன். அவர்களை மன்னிக்கிறேன்!'' என்றேன். உடனே தானே என் உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

இதற்கு சற்று பின்பு தேவன் தமது வார்த்தையில் யூதர்களின் தந்தையான ஆபிரகாமிடத்தில் ''உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்'' (ஆதியாகமம் 12:3) என்று கூறியுள்ளதை நான் கண்டேன். அப்பொழுது என்னுடைய பொருளாதாரம் ஆசீர்வாதத்தில் இல்லாமல் பற்றாக்குறை என்னும் சாபத்தில் இருந்ததை உணர்ந்தேன். என் தேவைகளுக்குப் போதுமான பணத்தை என்னால் ஒருபோதும் சம்பாதிக்க முடியவில்லை. நான் 250,000 டாலர்கள் சம்பாதித்தாலும், என் தேவை 300,000 டாலராய் இருந்தது. பின்பு நான் 500,000 டாலர் சம்பாதித்தபோது என் செலவுகள் 700,000 டாலர் ஆனது.

1982ம் ஆண்டு யூதப் பகைமையின் சாபத்திலிருந்தும், அதனுடன் இணைந்த பணப்பற்றாக்குறை என்னும் சாபத்திலிருந்தும் நான் விடுவிக்கப்பட்டது முதல் என்னுடைய வருமானம் என் தேவைகளையும், செலவுகளையும் விட எப்பொழுதும் அதிகமாகவே இருந்தது. தேவனுடைய அரசின் ஊழியத்திற்கு என்னால் **தாராளமாய்க்** கொடுக்க முடிகிறது.

தேவன் என் சரீரத்தையும், உணர்ச்சிகளையும் குணப்படுத்தினார். நான் சோர்விலிருந்து முற்றிலும் விடுதலை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 95 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அடைந்தேன். நான் வெற்றியில் நடை போடுகிறேன் என்று உண்மையாகவே சொல்லக்கூடும். என்னுடைய சாட்சி சாபத்திலிருந்து விடுதலை பெற்று, தேவனுடைய ஆசீர்வாதத்தில் வாழ அநேகருக்கு உதவியது.

*நபிலின் வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் தெளிவானது: யாரும் யூத மக்களை விரோதிக்கவோ, சபிக்கவோ முற்படக்கூடாது. இப்பாடம் மற்றெல்லாக் காலத்தையும் விட இக்காலத்தில் அதிகப் பொருத்தமானதாக உள்ளது. சமுதாயப் பிரகாரமாகவும், அரசியல் பிரகாரமாகவும் யூதப் பகைமை தற்கால உலகத்தில் செயல்படும் மிக வல்லமையான சக்திகளில் ஒன்றாக உள்ளது. ஆனால் இந்த சக்தி தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அனுமதிப்பவர்கள் அனைவரும் இறுதியில் முழுமையாக அழிவைக் காண்பர்.*

*துரதிர்ஷ்டவசமாக அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ திருச்சபை அநேக வேளைகளில் யூதப் பகைமையைப் பகிரங்கமாகப் பரப்பி வருகிறது. என்றாலும் திருச்சபைக்குக் கிடைத்துள்ள ஒவ்வொரு ஆசீர்வாதமும், அவர்கள் விரோதியாகக் கருதும் யூத மக்களிடம் இருந்தே வந்துள்ளது. யூதர்கள் இல்லையாயின் திருச்சபைக்கு அப்போஸ்தலர்கள் இல்லை;. வேதமும் இல்லை; இரட்சகரும் இல்லை.*

*முக்கியமாக ஐரோப்பாவிலும், மத்தியகிழக்கு நாடுகளிலும் தற்காலத்து கிறிஸ்தவத்தின் அனலற்றதும் வல்லமையற்றதுமான நிலைக்கு இந்த யூதப் பகைமையே முக்கிய காரணமாய் உள்ளது. நபில் ஹதாத்தின் கதை இதற்குத் தீர்வு கூறுகிறது : யூதப் பகைமை ஒரு பாவம் என வெளிப்படையாக அறிக்கை செய்து மனம் திரும்பி அதை விட்டு விடுதல் ஆகும். இது யூத மக்கள் பேரில் நமது இருதயத்தில் ஓர் ஆழமான, உள்ளான மாற்றத்தையும், அவர்களிடமிருந்து கிறிஸ்தவ திருச்சபை பெற்றுக் கொண்ட எல்லையில்லாத ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அறிந்து கொள்ளவும் செய்யும்.*

*இதன் அடிப்படையில் இன்று திருச்சபையின் முக்கிய பிரிவுகளின் மேல் தங்கியுள்ள சாபத்தின் இருண்ட நிழலை தேவன் நீக்கி தமது ஆசீர்வாதத்தால் நிரப்பும்படி நாம் அவரை கேட்கமுடியும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 96 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

9

# சட்டத்திட்டங்கள், மாம்சீகம், விசுவாசத்தை விட்டு விலகுதல்

எரேமியா 17:5ல் தேவன் மற்றொரு வகையான பாவத்தின் மேல் தமது சாபத்தைக் கூறுகிறார். அது யூதப் பகைமையைப் போல சபையில் பல பகுதிகளில் செயலாற்றுகிறது:

> "மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

இந்த இடத்தில் மற்ற வேத பகுதிகளைப் போலவே மாம்சம் என்னும் சொல்லானது சரீரத்தைக் குறிக்கவில்லை. மாறாக அது நாம் ஒவ்வொருவரும் நமது பொதுவான முன்னோடியான ஆதாமிலிருந்து சுவீகரித்துக் கொண்ட சுபாவத்தைக் குறிக்கிறது. தேவனுடைய கட்டளையை ஆதாம் மீறுவதற்கு முன்பாக அவன் எந்தக் குழந்தையையும் பெற்றெடுக்கவில்லை. அவனுடைய மீறுதலின் அடிப்படையான நோக்கம் தீமை செய்ய வேண்டும் என்ற விருப்பமன்று; தேவனைச் சாராத நிலையில் தனித்து இருக்கவேண்டும் என்னும் விருப்பமே.

இந்த விருப்பம் ஆதாமின் சந்ததியார் ஒவ்வொருவரிலும் செயல்படுகிறது. இது "மாம்சத்திற்குரிய" குறிப்பிட்ட அடையாளமாகும். மதத்திற்கடுத்த காரியங்களில் இது



Blessing or Curse Tamil text 2012 revised.p65 97 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இயற்கைக்கப்பாற்பட்ட தேவ கிருபையைச் சாராமல் நீதியின் கிரியைகளைச் செய்ய முற்படுகிறது. அதனுடைய நோக்கங்கள் எவ்வளவு சிறந்ததாக இருப்பினும் இறுதியாய் நமக்குக் கிடைப்பது "ஈசாக்கு" அல்ல "இஸ்மவேலே".*

*பொதுவாக வேதம் மாம்சத்தைக் குறித்து பேசும் போது, கறைப்பட்ட என்னும் வார்த்தையையே பயன்படுத்துகிறது. அது மனதையும், புலன்களையும் பரவசப்படுத்தக் கூடிய காரியங்களை உண்டாக்கக்கூடுமாயினும், அது கறைப்பட்டதாகவே உள்ளது. இதன் முயற்சிகள் அனைத்தின் விளைவும் "செத்த கிரியைகள்" என எபிரெயர் 6:1ல் கூறப்பட்டுள்ளது. அவைகளிலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் கூறுகிறார்.*

*எரேமியா 17:5ல் விவரிக்கப்பட்ட நபர் தேவனுடைய கிருபைக்கு அந்நியர் அல்ல. இதை "கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன்" என்ற வார்த்தைகளிலிருந்து அறியலாம். அவன் கர்த்தரை அறியவில்லை என்றால் அவன் அவரைவிட்டு "விலகுவதாக" சொல்ல முடியாது. இப்படிப்பட்ட மனிதன் தேவனுடைய இயற்கைக்கப்பாற்பட்ட கிருபையையும், வல்லமையையும் அனுபவித்தவன். ஆனால் அவன் தன்னுடைய சொந்த இயற்கையின் ஆற்றலைச் சார்ந்திருக்க தன் மனதைத் திருப்புகிறான். அவனுடைய நடத்தையைப் பார்த்தால் தேவன் தனக்கு என்ன செய்யக்கூடும் என்பதைவிட தனக்குத்தான் அவன் என்ன செய்துகொள்ளக்கூடும் என்பதில் அதிக நம்பிக்கையுள்ளவனாய் இருக்கிறான் என்பது புலப்படுகிறது. அவன் உண்மையில் தேவனை "மட்டுப்படுத்துகிறான்." அவனுடைய இந்த எண்ணமே தேவனுடைய சாபத்தை வருவிக்கிறது.*

*அடுத்த வசனத்தில் இப்படிப்பட்ட மனிதன் தன்மேல் வருவித்துக் கொள்ளும் சாபத்தின் செயல்பாடு விளக்கப்பட்டுள்ளது:*

> "அவன் அந்தரவெளியில் கறளையாய்ப் போன செடியைப் போலிருந்து, நன்மை வருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்."

*தேவனுடைய சாபத்திற்குள்ளான மனிதனைப் பற்றி*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 98 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

எவ்வளவு அழகாக விளக்கப்பட்டுள்ளது! அவன் "வறட்சியான இடங்களிலும்" "உவர்நிலத்திலும்" வாழ்பவன் என்று கூறப்பட்டுள்ளது. அவனைச் சுற்றி இருப்பதெல்லாம் இருளும், மலட்டுத்தன்மையுமே ஆகும். அவனைச் சூழ உள்ளவர்களுக்கு இன்பம் வரலாம். ஆனால் அவனையோ அது ஏதோ ஒரு வினோதமான வகையில் கடந்து சென்று விடுகிறது. அவன் மலட்டுத்தன்மையிலும் மனச்சோர்விலும் தள்ளப்படுகிறான்.

எரேமியா 17:5–6ல் கூறப்பட்ட சாபம் அநேகருடைய வாழ்வில் கிரியை செய்கிறது. ஆனால் இது மிகப்பரந்த பிரிவினருக்கும் பொருந்தும். நமது காலத்து கிறிஸ்தவ திருச்சபைகளில் அநேக பகுதிகளில் உள்ள மலட்டுத் தன்மைக்கும் பலனற்ற நிலைக்கும் இதுவே உண்மையான காரணமாக உள்ளது. இது கண்ணிற்குப் புலப்படாவிட்டாலும் கேட்டை விளைவிப்பதாகவே உள்ளது. பொதுவாக கிறிஸ்தவத்தில் நிகழும் எந்த முக்கியமான சாதனையும், வல்லமையான, இயற்கைக்கப்பாற்பட்ட தேவ கிருபையினாலும் தேவ ஆவியினாலும் செயல்படுத்தப்படுவதாகவே உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, இது சரித்திரத்தின் மாற்றங்களில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

என்றாலும், இன்று இப்படிப்பட்ட அநேக காரியங்கள் தேவனுடைய கிருபைக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கும் அதிக முக்கியத்துவம் செலுத்தாமல் இருக்கின்றன. தங்கள் சொந்த முயற்சிகளினால் எவற்றை சாதிக்கக்கூடுமோ அதையே சார்ந்திருக்க முற்படுகின்றனர். அவர்கள் "மனிதன் மேல் நம்பிக்கையை" வைக்கிறார்கள். அதாவது சுயத்தின் மேல் நம்பிக்கை வைத்து "மாம்சத்தைத் தங்களுடைய பெலனாகக்" கருதுகின்றனர். நிச்சயமாய் "அவர்களுடைய இருதயம் கர்த்தரை விட்டு விலகிப்போயிற்று." அவர்கள் மதத்திற்கடுத்த நிலையிலும் ஞானத்திற்கடுத்த நிலையிலும் "மதிப்பைப்" பெற்றாலும் அவர்களின் செயலின் நிமித்தமாக தேவனுடைய ஆதரவை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். தேவனுடைய சகாயம் கிடைக்க வேண்டிய இடத்தில் எரேமியா 17:5ல் கூறப்பட்டுள்ள சாபத்தின் இருண்ட நிழலை தங்கள் மேல் வருவித்துக் கொள்கின்றனர்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 99 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*தெய்வீக கிருபைக்குப் பதிலாக மனித திறமையைப் பயன்படுத்துவது ஆவிக்கடுத்த காரியங்களுக்கு மேலாக மாம்சீகத்தை உயர்த்துவதாகும். இப்படிப்பட்ட காரியங்களின் விளைவுகள் பரவலாக வெளிப்படுகிறது. அவற்றுள் சில உதாரணங்களைக் காண்போம்:*

*வெளிப்பாட்டிற்கு மேலாக இறையியல் உயர்த்தப்படுதல்;*
*நற்பண்பிற்கு மேலாக கல்வியறிவு உயர்த்தப்படுதல்;*
*பகுத்தறிவுக்கு மேலாக மனோதத்துவத்தை வைத்தல்;*
*பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு மேலாக திட்டங்களைச் சார்ந்திருத்தல்;*
*இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமைக்கு மேலாக மனித பேச்சு வன்மையை உயர்த்துதல்;*
*விசுவாச நடைக்கு மேலாக தர்க்கத்தை உயர்த்துதல்;*
*அன்பிற்கு மேலாக நீதிச் சட்டங்களை உயர்த்துதல்.*

*இந்தப் பிழைகள் எல்லாம் ஒரு பெரிய அடிப்படைத் தவற்றின் பல வெளிப்பாடுகளே : அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு மட்டுமே தேவன் கொடுத்துள்ள இடத்தை மனிதனுக்குக் கொடுப்பதாகும்.*

*இப்படிப்பட்ட சூழ்நிலையைத்தான் கலாத்திய திருச்சபைகளில் பவுல் தீர்க்க முற்பட்டார். கலாத்தியர்* 3:1–10 *வரையுள்ள வசனங்களில் அவர் இந்தப் பிரச்சனையை அதன் ஆரம்பத்திலிருந்து அதன் உச்சநிலை வரைக்கும் விளக்குகிறார். அதை கீழே சுருக்கமாகக் காண்போம்.*

*முதலாம் வசனத்தில் இதன் மூலகாரணம் வஞ்சிக்கிற சாத்தானின் சக்தி என பவுல் கூறுகிறார். இதனை அவர் பில்லி சூனியம் என அழைக்கிறார்:*

"புத்தியில்லாத கலாத்தியரே ... உங்களை **மயக்கினவன்** யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் ... வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே."

*ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பில் "உங்களை* ***வசியம்*** *செய்து மயக்கினவன் யார்?" என பவுல் கேட்பதாக வருகிறது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 100 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் போதுமான தேவ கிருபையின் ஒரே ஊற்றாயிருக்கிறார். சாத்தானுடைய சக்தி இதனை மறைத்துப் போட்டது. இவ்விதமாக தேவனுடைய கிருபையிலிருந்து துண்டிக்கப்பட்ட அவருடைய மக்கள் தவிர்க்க முடியாமல் மதத்திற்கடுத்த சட்டங்களைப் பின்பற்ற ஆரம்பிக்கின்றனர். இது இரண்டாம் வசனத்தில் பவுலினுடைய அடுத்த கேள்விக்கு நம்மை நடத்துகிறது: "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?" இதை சாதாரணமாக சட்டத்திட்டங்கள் என்ற வார்த்தையின் மூலம் அழைக்கின்றோம். அநேகம் தடவைகள் இந்த வார்த்தை அர்த்தம் புரியாதபடி பயன்படுத்தப்படுவதால் இதைச் சரியாக புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

சட்டத்திட்டங்கள் என்பதை ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட இருவழிகளில் விளக்கலாம். முதலாவதாக இது, குறிப்பிட்ட சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதின் மூலம் தேவனுடனான நீதியை அடைய முயற்சிப்பதாகும்.

ரோமர் 3:20ல் பவுல் இதை முற்றிலும் தகாதது எனக் கடிந்துரைக்கிறார்: "இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்கிறார். இங்கு பிரதானமாய் கூறப்பட்டது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்ததே என்றாலும் இது மதத்திற்கடுத்த மற்ற எந்தச் சட்டங்களையும் கூட குறிப்பதாக உள்ளது. நியாயப்பிரமாணமானது நாம் பாவிகள் என்பதை நமக்குக் காட்டக்கூடுமே தவிர, நம்மை மாற்றுவதற்கான வல்லமை அதற்குக் கிடையாது.

இன்னொரு விதமாகச் சொன்னால், சட்டத்திட்டங்கள் என்பது நாம் நீதியை அடைவதற்காக தேவன் தாமே வகுத்துள்ள நிபந்தனைகளுக்கு மேலாக மற்ற எந்த நிபந்தனையையும் விதிக்க முற்படுவதாகும். தேவன் நம்மில் எதிர்பார்ப்பது ரோமர் 4:24–25ல் கூறப்பட்டுள்ளது:



Blessing or Curse Tamil text 2012 revised.p65 101 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே (நீதியாக) எண்ணப்படும்.

அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக (நாம் தேவனால் நீதிமான்கள் என எண்ணப்படுவதற்காக) எழுப்பப்பட்டும் இருக்கிறார்."

இதுவே நீதியை அடைவதற்கு தேவன் நம்மில் எதிர்பார்க்கும் எளிய ஆனால் எல்லாவற்றிற்கும் போதுமான வழியாகும்: அவர் நமக்காக இரு காரியங்களைச் செய்துள்ளார் என்பதை விசுவாசித்து அவரில் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும். முதலாவதாக நமது பாவங்களுக்காக பிதாவானவர் இயேசுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். இரண்டாவதாக, நாம் நீதிமான்களாய் எண்ணப்படும்படி இயேசுவை பிதா மரித்தோரிலிருந்து உயிரோடே எழுப்பினார். இதற்கு மேலாக தேவன் நம்மிடத்தில் எதையும் எதிர்பார்க்கவில்லை. தேவன் எதிர்பார்க்கும் இந்த காரியங்களுடன் எதையும் சேர்ப்பதற்கு ஒருவருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

இவ்விதமாக விசுவாசத்தினால் நாம் நீதியைப் பெற்றுக் கொண்டதற்குப் பின்பு, அதற்குத் தகுந்த நீதியின் கிரியைகள் நம் விசுவாசத்திலிருந்து வெளிப்படும். ஆனால் நீதியை அடைவதற்கு நாம் இதைத்தவிர வேறு எந்தத் நிபந்தனையையாவது சேர்க்க முற்படுவோமென்றால் தேவன் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார். நீதியின் கிரியைகளும் அதைத் தொடராது. நம்முடைய மாம்சீக முயற்சிகளினால் நாம் அடையக்கூடிய நிலைக்கு அப்பால் நாம் ஒருபோதும் கடந்து செல்லமுடியாது.

இது கலாத்தியர் 3:3ல் உள்ள பவுலின் அடுத்த கேள்வியை விளக்குகிறது: "ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ?" என்கிறார். இதைப் பொதுவாக **மாம்சீக சுபாவம் அல்லது மாம்சீகம்** என அழைக்கிறோம் - அதாவது இது தங்கள் சொந்த மாம்ச இயல்பைச் சார்ந்திருப்பதாகும். மேலும் கலாத்தியர் 5:19–21 வரையுள்ள வசனங்களில் பவுல் "மாம்சத்தின் கிரியைகளாக"



Blessing or Curse Tamil text 2012 revised.p65 102 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

குறைந்தது பதினைந்து காரியங்களைப் பட்டியலாகத் தருகிறார். மாம்சமானது தேவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய எதையும் செய்ய முடியாததினாலே அதில் நலமானது எதுவும் இல்லை. தேவனும் அதை ஒப்புக் கொள்ளமாட்டார். ரோமர் 8:8ல் பவுல் இதைத் தொகுத்து "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்" என்கிறார்.

இறுதியாக கலாத்தியர் 3:10ல் பவுல் இந்த செயலின் உச்சக்கட்ட வீழ்ச்சியை ஒரு சாபம் என்று அழைக்கிறார். "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்" என்கிறார்.

இவ்வாறாக பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு கலாத்திய திருச்சபைகளில் நிலவிவந்த பிரச்சனையை பவுல் அலசி ஆராய்கிறார். நமது காலத்து அநேக திருச்சபைகளிலும் இதே பிரச்சனை உள்ளது. வஞ்சிக்கிற சாத்தானின் சக்தி சபைக்குள்ளே புகுவதால் இந்தப் பிரச்சனை உண்டாகிறது. அது இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்கின்ற தேவனுடைய கிருபையின் ஒரே மூலகாரணத்திலிருந்து அவருடைய மக்களின் கவனத்தைத் திசை திருப்புகிறது. பவுல் இந்த சக்தியை பில்லி சூனியம் அல்லது வசியம் என்று அழைக்கிறார்.

இவ்விதமாக கிருபையின் மூலகாரணத்திலிருந்து துண்டிக்கப்படும்போது, கிறிஸ்தவர்கள் தவிர்க்கமுடியாமல் மாம்சீகத்திற்கும், சட்டத்திட்டங்களுக்கும் தங்களை ஒப்புக் கொடுக்கின்றனர். இந்த வீழ்ச்சியினால் வரும் விளைவு ஒரு சாபமாகும். முன்பே 6 ஆம் அத்தியாயத்தில் வசியமும், சாபங்களும் பில்லி சூனியத்தின் முக்கிய கருவிகளென எடுத்துக்காட்டினோம்.

இவ்வாறாக எரேமியா 17:5–6ல் கூறப்பட்டுள்ள சத்தியம் புதிய ஏற்பாட்டில் கலாத்தியர் 3:1–10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது. "சட்டங்களைக் கடைப்பிடிப்பதின் மேல் நம்பிக்கை வைப்பதும் (சட்டத்திட்டங்களும்)" "மாம்சத்தை நமது புயபலமாகக் கொள்வதும் (மாம்சீகமும்)" ஒரு சாபத்தில் முடிவடைகிறது. இதனால் தேவனுடைய மக்கள் "வறட்சியான இடங்களிலும்," "உவர் நிலத்திலும்" வாழ்கின்றனர்.

மாம்சீகம் பல வடிவங்களை எடுக்கக்கூடும். அநேக



Blessing or Curse Tamil text 2012 revised.p65 103 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வேளைகளில் இவைகள் மதத்திற்கடுத்த நோக்கம் உடையவர்களுக்குத் தெளிவாக இருப்பினும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதில்லை. இதற்கு சில உதாரணங்களைத் தருகிறேன்: பாலுணர்ச்சிக்கடுத்த அசுத்தம் அல்லது கற்பு நெறிதவறுதல்; இழிவான பேச்சு; பெருந்தீனி; குடி; முன்னேற்றமடைய வெறி; கட்டுப்படுத்த முடியாத கோபம் அல்லது மற்ற தீய ஆசைகள். சட்டத்திட்டங்கள் மேற்கூறிய மாம்சீக பாவங்களில் எளிதில் சிக்கிக்கொள்ளாத நேர்மையும் திறமையும் உள்ள ஆண்களையும், பெண்களையும் ஈர்த்து அவர்கள் கவனத்தைக் கவரக்கூடியதாய் இருப்பதால், அபாயகரமாய் உள்ளது. எனினும் இறுதி விளைவுகளில், சட்டத்திட்டங்கள் மேலே பட்டியலில் தரப்பட்டுள்ள பாவங்களைப் போலவே கொடியதே. சாத்தான் தன்னுடைய அரசிற்கு அதிக அபாயமாய் இருக்கக்கூடிய கிறிஸ்தவர்களைத் திசை திருப்ப இதனைச் சாதகமானதொரு கருவியாகப் பயன்படுத்துகிறான்.

என்னைப் பொறுத்தமட்டில் கலாத்தியர்களின் பிரச்சனையை அலசி ஆராய்வது என்பது ஏதோ எளிதில் அறிந்து கொள்ள முடியாத இறையியல் ஆராய்ச்சி மட்டும் அன்று. அதற்கு மாறாக, அது மிகவும் உண்மையும், மனவேதனையைத் தரும் பிரச்சனையுமாகும். 1970 ஆம் ஆண்டு ஃபோர்ட் லாடர்டேலில், பல தரப்பட்ட பின்னணியில் இருந்து வந்த ஊழியர்களின் ஒரு சிறிய குழுவுடன் நான் இயற்கைக்கப்பாற்பட்ட விதத்தில், தேவனால் "சம்பந்தப் படுத்தப்பட்டேன்." இவ்வாறு நாங்கள் கூடி வந்ததை நாங்கள் ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. எங்களைக் குறித்து தேவன் என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்பதையும் ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை. எங்கள் உறவைத் தோற்றுவித்த பரிசுத்த ஆவியானவரை நாங்கள் தொடர்ந்து சார்ந்திருப்போமென்றால் சந்தேகமின்றி அவர் எங்களுக்குத் தமது நோக்கத்தைப் படிப்படியாக வெளிப்படுத்தி இருப்பார். ஆனால் நாங்கள் அந்த வழியைப் பின்பற்றவில்லை.

வெகு சீக்கிரத்தில் என்ன சம்பவித்தது என்பதை நாங்கள் நிதானிப்பதற்கு முன்பாக கலாத்தியர் 3 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட "நோயின்" பல குணங்கள் எங்கள் மத்தியில் காணப்படலாயிற்று. எங்கள் தீர்மானங்களும், செயல்களும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படாமல், நாங்களே ஏற்படுத்திக் கொண்ட சட்ட திட்டங்கள், கொள்கைகள்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 104 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆகியவற்றின் அடிப்படையில் செயற்பட ஆரம்பித்தோம். ஓர் உணவகத்தில் உணவு பரிமாறுபவனின் சேவையை அங்கு செல்பவர்கள் பாராட்டுவது போலவே நாங்களும் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரை அங்கீகரித்தோம். எங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டது என நாங்கள் உணர்ந்தால் அவரை நாங்கள் கொஞ்ச நேரத்திற்கு அழைப்போம். ஆனால் பெரும்பாலான நேரத்தில் நாங்கள் வகுத்துக் கொண்ட முறைகளையும், திட்டங்களையும் சார்ந்தவர்களாய் இருந்தோம்.

இதை நான் பின்னிட்டுப் பார்க்கும்போது பரிசுத்த ஆவியானவர் எங்கள் மத்தியில் ஆரம்பித்த திட்டம் சாத்தானுக்குச் சவாலாய் இருந்தது என இப்பொழுது உணர்கிறேன். ஆகையால் அவன் கலாத்தியாவிலும், அதற்கு பின்னான திருச்சபை சரித்திரம் முழுவதிலும் எண்ணற்ற சூழ்நிலைகளிலும் செயல்படுத்தி வெற்றி கண்ட அவனுடைய தந்திரங்களை எங்கள் மத்தியிலும் செயல்படுத்தினான். அவன் பின்பற்றிய வழிகள் இரண்டு. முதலாவதாக சிலுவையை எங்கள் வாழ்விலிருந்தும், ஊழியங்களின் மத்தியில் இருந்தும் பிரித்து வைத்தான். இரண்டாவதாக "எல்லாவற்றிற்கும் மேலான தலையாகிய" இயேசுவை எங்கள் பழக்கங்களிலிருந்தும், உறவுகளிலிருந்தும் பிரித்து வைத்தான்.* தவிர்க்க முடியாமல் நாங்கள் இயல்பான யோசனையின் தளத்திலும், திறமையின் தளத்திலும் இயங்குகின்ற ஒரு சாதாரண மதத்திற்கடுத்த நிறுவனமாக மாறினோம்.

முரண்பாடாக காணப்பட்டாலும் எங்களுடைய பிரச்சனைகளின் பிரதான காரணம் இயற்கைக்கப்பாற்பட்ட நிலையிலே அனைத்தையும் நாங்கள் ஆரம்பித்ததாகும். கலாத்தியர்களைப் போல நாங்கள் "ஆவியினாலே ஆரம்பம் பண்ணினோம்." இந்த ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவம் முழுவதிலும் உள்ள எண்ணற்ற குழுக்களைப் போல இயற்கையின் தளத்தில் செயல்படும் மதத்திற்கடுத்த நிறுவனமாக நாங்கள் மாறுவதற்குச் சுலபமான அல்லது வேதனையற்ற வழி ஆரம்பதிலிருந்தே இல்லை. கலாத்தியர்களுக்கு பவுல் குறிப்பிட்டது போல், பரிசுத்த ஆவியானவராலே ஆரம்பிக்கப்பட்டதை மனிதனுக்கடுத்த மாம்சீகத்தால் ஒருபோதும் முடிக்க முடியாது.

* எபேசியர் 1:22–23 யைப் பார்க்க.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 105 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கொஞ்ச நாட்களில் இவ்வாறாக நாங்கள் எங்கள் மேல் வருவித்துக் கொண்ட சாபம் கிரியை செய்ய ஆரம்பித்ததைக் கண்டோம். அது திருச்சபை சரித்திரம் முழுவதிலும் இதே போன்ற சம்பவங்களில் காணப்பட்ட விதமாக வெளிப்பட ஆரம்பித்தது. சொந்த உறவுகள் முறிக்கப்பட்டன; சபைகள் பிரிந்து சிதறிப் போயின; நல்ல ஊழியங்கள் அறுப்புண்டு போயின அல்லது தேவ நோக்கத்தை விட்டு திசை திரும்பி செல்ல ஆரம்பித்தன; ஒரு காலத்தில் உற்சாகமாய் இருந்த கிறிஸ்தவர்கள் சோர்வடைந்து, மருட்சியினால் அவதிப்பட்டனர். அநேகர் தங்கள் விசுவாசத்தைக் கைவிட்டனர். இவை எல்லாவற்றிற்கும் ஒரு பெயரைக் கொடுக்க வேண்டுமானால் அதற்கு "இக்கபோத்" எனச் சொல்ல வேண்டும். இதற்கு "மகிமை அகன்றுபோயிற்று" என்று அர்த்தம்* (1 *சாமுவேல்* 4:21).

*பரிசுத்த ஆவியானவரால் ஆரம்பிக்கப்பட்டு வழிநடத்தப்படாத எல்லா மதத்திற்கடுத்த காரியங்களும் விளைவிப்பது எபிரெயர்* 6:1*ல் சொல்லப்பட்டுள்ள* ***செத்த கிரியைகளாகவே*** *உள்ளது. இதற்கான மாற்று மருந்து அதே வசனத்தில்* ***மனந்திரும்புதல்*** *என்று கூறப்பட்டுள்ளது. இது எனக்குத் தனிப்பட்ட முறையில் உணர்த்தப்பட்டது. நான் மற்றவர்களைக் குற்றப்படுத்த முடியாது. நான் செய்த காரியங்களுக்கு நான் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நான் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தி அவரை இழிவுபடுத்தினேன் என்பதை உணர்ந்தேன்.*

*நான் என் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு மன்னிப்பிற்காகவும், பழைய நிலையை அடைவதற்காகவும் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும் எனக் கண்டேன். இது என் சொந்த தீர்மானம். இதை நான் மட்டுமே செய்யக்கூடும். மற்றவர்கள் சார்பில் நான் இத்தீர்மானம் செய்ய முடியாது. ஆனால் பழைய நிலைக்குக் கொண்டு செல்லும் வழியை நான் காணக்கூடுமென்றால், தங்கள் தேவைகளை உணர்ந்த மற்றவர்களும் அதே வழியைப் பின்பற்றக் கூடும்.* 1983 *ஆம் ஆண்டு நான் மனந்திரும்பி அவைகளிலிருந்து விடுபட்டேன்.*

*தேவன் தம்முடைய இரக்கத்தால் நான் தேடிய வழியை படிப்படியாய் எனக்கு காண்பித்தார். சாபத்திலிருந்து விடுபட்டு ஆசீர்வாதத்திற்குள் மீண்டும் செல்ல ஒரு வழி உண்டு என்பதை*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 106 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நான் கண்டு பிடித்தேன். இந்த கண்டுபிடிப்பை நான் செய்யாதிருந்தால் இந்நூல் எழுதப்பட்டிருக்காது. இதே போன்ற சூழ்நிலையில் தங்களைக் காண்பவர்களுக்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய படிகளை "சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு" என்னும் 3 ஆம் பகுதியில் முழு விளக்கமாய்க் கொடுத்திருக்கிறேன்.*

*கலாத்தியர் 1:6–9 வரையுள்ள வசனங்களில் தேவ மக்கள் மேல் இன்னொரு வகையில் வரக்கூடிய ஒரு சாபத்தைக்குறித்து பவுல் கூறுகிறார். அது "விசுவாசத்தை விட்டு விலகுதல்" ஆகும்.*

> "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்;
>
> வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.
>
> நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.
>
> முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்."

*இங்கே சொல்லப்பட்டுள்ள மனிதன் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று சொல்லிக் கொண்டாலும், சுவிசேஷத்தின் மையப் பொருளை புரட்டுகிறவனாய் இருக்கிறான். இப்படிப்பட்ட மனிதன் தன்மேல் சாபத்தை வருவித்துக் கொள்கிறான் என பவுல் கூறுகிறார். "சபிக்கப்பட்டவன்" என்ற சொல்லுக்கு இணையான கிரேக்க சொல் **அனதீமா** என்பதாகும். அது தேவனுடைய கோபத்தைத் தூண்டி அவருடைய மாற்றமுடியாத ஆக்கினைத்தீர்ப்பிற்கும், வெறுப்பிற்கும்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 107 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உள்ளாவதைக் குறிக்கிறது.

எல்லாத் தலைமுறைகளிலும் திருச்சபை மக்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு உயர்வாக எண்ணப்பட்ட வெளிப்பாட்டின் சத்தியத்தை மையமாய் சுவிசேஷம் கொண்டுள்ளது. அதைக் கீழ்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்:

இயேசு கிறிஸ்து தேவனுடைய தெய்வீக, நித்திய குமாரன். அவர் கன்னிப்பிறப்பின் மூலம் ஒரு மனிதனாக தோன்றினார். அவர் ஓர் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார். மனுக்குலத்தின் பாவங்களுக்கான தண்டணையை நமது சார்பில் ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரணம் அடைந்து அடக்கம் செய்யப்பட்டார். மூன்றாம் நாளிலே கல்லறையிலிருந்து சரீரப்பிரகாரமாக உயிருடன் எழுந்தார். அவர் பரலோகத்திற்கு விண்ணேற்றம் அடைந்து ஜீவனுள்ளோரையும், மரித்தோரையும் நியாயம் தீர்க்கும்படி மீண்டும் உலகிற்கு வரவிருக்கிறார்.

பாவத்திலிருந்து மனம்திரும்பி இயேசுவின் தியாகத்தில் நம்பிக்கை வைக்கும் ஒவ்வொருவரும் தங்கள் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்று நித்திய ஜீவன் என்னும் ஈவை அடைகின்றனர்.

சுவிசேஷமானது இயேசுவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் மையமாக கொண்டுள்ளது என்பதை முக்கியப்படுத்திக்கூறுதல் வேண்டும். 1 கொரிந்தியர் 15:3–4ல் பவுல் இதன் செய்தியை மூன்று சரித்திர உண்மைகளில் தொகுத்துக் கூறுகிறார்: “கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்” என்கிறார்.

இந்த உண்மைகளுக்கு ஆதாரமாக பவுல் “வேதவாக்கியங்களின்” அதிகாரத்தை முதலில் குறிப்பிடுகிறார்—அந்நாட்களில் வேதவாக்கியங்கள் என்று சொல்லும்பொழுது அது பழைய ஏற்பாட்டையே குறித்தது. உயிர்த்தெழுதலை மேலும் உறுதிப்படுத்துவதற்கு பவுல் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததற்குப் பின்பு அவரைக் கண்ட பல சாட்சிகளைப் பட்டியலாகத் தருகிறார். என்றாலும் அவர்களின் சாட்சிகள்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 108 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இரண்டாம் நிலையில் உள்ளவையே. பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களே முதன்மையானவை.*

*தொடர்ந்து வருகின்ற இரு வாக்கியங்களில் பவுல் இயேசுவின் சரீர உயிர்த்தெழுதலில் விசுவாசம் வைப்பது இரட்சிப்புக்கு முக்கியமானது என்று வலியுறுத்துகிறார்:*

> "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா ... கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்." 1 கொரிந்தியர் 15:14,17.

*2 தெசலோனிக்கேயர் 2:3ல் பவுல் இந்த யுகத்தின் கடைசிப் பகுதியில் கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து விலகுதல் பரவலாய்க் காணப்படும் என எச்சரிக்கிறார். இவ்வாறு முன்கூட்டியே சொல்லப்பட்ட விசுவாச துரோகத்தின் காலத்தில் நாம் இப்பொழுது இருக்கிறோம் என்று நம்புவதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன. சில பிரதான கிறிஸ்தவ திருச்சபைப் பிரிவுகளில் அநேக தலைமைப் பிரமுகர்கள் வெளியரங்கமாக வேத வாக்கியங்களின் மேல் உள்ள விசுவாசத்தை உதறித்தள்ளியிருக்கின்றனர் — குறிப்பாக கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை மறுத்துக் கூறியுள்ளனர். அவர்களின் அவிசுவாச கூற்றே அவர்கள் புறக்கணிக்கும் வேத வாக்கியங்களின் நிறைவேறுதல் என்பதை அவர்களே அறியாது உள்ளனர்!*

*சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்கள் தாங்கள் மனந்திரும்பாவிடின், தேவனுடைய கோபாக்கினையையும், சாபத்தையும் தங்கள் மேல் வருவித்துக் கொள்கின்றனர். மேற்கண்ட உண்மையை எவராலும் மாற்றமுடியாது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 109 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 10

# திருடுதல், பொய்யாணை இடுதல், தேவனை வஞ்சித்தல்

*பழைய ஏற்பாட்டின் மூன்று இறுதி தீர்க்கதரிசிகள் ஆகாய் சகரியா, மல்கியா, ஆவர். இவர்கள் அனைவரும் தேவனுடைய சாபம் இஸ்ரவேலர்களின் வாழ்வில் செயலாற்றியதை விவரித்துக் கூறுகின்றனர். இத்தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலர்கள் மோசேயின் நீதிச்சட்டத்திற்குக் கீழே வந்ததிலிருந்து அவர்களின் சரித்திரத்தைத் தொகுத்துக் கூறுகின்றனர். நியாயப்பிரமாணத்தில் குறிப்பிட்ட சாபங்கள் அவர்கள் மேல் ஏன் வந்தன என்ற காரணங்களை ஆராய்ந்து கூறுகின்றனர்.*

*சகரியா* 5:1–4 *வரையுள்ள வசனங்களில் தேவனுடைய மக்களின் வீட்டின் மேல் வந்த தேவ சாபத்தைப் பற்றி தீர்க்கதரிசி தான் கண்ட ஒரு தரிசனத்தை விளக்குகிறார்*:

> "நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், இதோ, பறக்கிற ஒரு புத்தகச்சுருளைக் கண்டேன்.
>
> தூதன்: நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; பறக்கிற ஒரு புத்தகச்சுருளைக் காண்கிறேன், அதின் நீளம் இருபது முழமும் அதின் அகலம் பத்து முழமுமாயிருக்கிறது என்றேன்.
>
> அப்பொழுது அவர்: இது பூமியின் மீதெங்கும் புறப்பட்டுப்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 110 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

போகிற சாபம்; எந்தத் திருடனும் அதின் ஒரு புறத்திலிருக்கிறதின்படியே அழிக்கப்பட்டுப்போவான்; ஆணையிடுகிற எவனும், அதின் மறுபுறத்தில் இருக்கிறதின்படியே அழிக்கப்பட்டுப் போவான்.

அது திருடன் வீட்டிலும், என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறவன் வீட்டிலும் வந்து, அவனவன் வீட்டின் நடுவிலே தங்கி, அதை அதின் மரங்களோடும் அதின் கல்லுகளோடுங்கூட நிர்மூலமாக்கும்படி அதைப் புறப்பட்டுப்போகப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."

*சகரியா குறிப்பிடும் சாபமானது இரண்டு குறிப்பிட்ட பாவங்களைச் செய்த எல்லாருடைய வீடுகளிலும் வருகிறது: அவைகள் திருடுதல், பொய்யாணையிடுதல் ஆகும். இந்த சாபம் ஒரு வீட்டிற்குள் நுழைந்து விட்டால் அது மரங்கள் முதல் கற்கள் முடிய எல்லாவற்றையும் அழிக்கும் வரை தங்குகிறது.*

*ஒரு சாபத்தை நாம் நமது வாழ்வில் அனுமதித்து விட்டால் எவ்வாறு அது கிரியை செய்கிறது என்பதை இது அழகாக எடுத்துக்காட்டுகிறது. அது பாதிக்கக்கூடிய பகுதிகளை நாம் நமது விருப்பத்தின்படி வரையறுக்க முடியாது. நாம் மனந்திரும்பி அதிலிருந்து விடுதலை அடைய தேவனுடைய இரக்கத்தை நாடவில்லையென்றால் அது வீடு முழுவதையும் அழித்துவிடும்.*

*தற்காலத்துக் கலாச்சாரத்தில் திருடுதல், பொய்யாணையிடுதல் ஆகிய இரண்டு பாவங்களும் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதை எளிய புள்ளி விபரங்களின் மூலம் அறியலாம். திருடுதல் இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் மிகவும் பரவலாக இருப்பதினால், சில்லறை விற்பனை கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் விலையில் 10 சதவிகிதம் திருடுபோவதற்கான காப்பீட்டு தொகையின் காரணமாக அதிகரித்து குறிக்கப்படுகிறது. இது பணவீக்கத்திற்கு ஒரு காரணமாய் உள்ளது! மறுபக்கம் பொய்யாணையிட்டு நேர்மையற்ற முறையில் வரி குறைவாகச் செலுத்தப்படுவதினால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்நாட்டு வருமான வரி இலாகாவிற்கு ஒவ்வொரு வருடமும் பில்லியன் டாலர்கள் இழப்பு உண்டாகிறது. இந்தப் பகுதியில் நேர்மை இருந்தால் ஒரு வேளை*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 111 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*வரவு செலவு பட்டியல் சரியாய் சந்திக்கப்படக்கூடும்!*

*சகரியாவின் தரிசனத்தின்படி திருடுதல், பொய்யாணையிடுதல் ஆகிய இந்த இரண்டு பாவங்களினால் வரும் சாபம் ஒரு தனிப்பட்ட நபரை மட்டுமன்று அவருடைய வீடு முழுவதையும் பாதிக்கிறது. வேதத்தில் **வீடு** என்னும் எபிரெயச் சொல் ஒரு கட்டிடத்தை மட்டும் குறிக்காமல் அதில் வாழும் மக்களையும் ஒரு குடும்பத்தையும் குறிக்கிறது. மேல் வாரியாகக் காண்பதை விட இவ்விரண்டு பாவங்களும், அதைத் தொடரும் சாபங்களும் தற்காலத்தில் பெருவாரியாகக் காணப்படும் குடும்பங்களின் பிளவிற்குப் பிரதான காரணமாயுள்ளது. இந்த குடும்ப முறிவு நம்முடைய காலத்தில் அதிகமாய் காணப்படுகிறது. இந்த சாபத்தின் இறுதி விளைவு சகரியா தன் தரிசனத்தில் கண்ட புத்தகச் சுருளைப் போன்று உள்ளது : நாடு முழுவதும், ஏன்! கலாச்சாரம் முழுவதும் கூட அழிக்கப்படலாம்.*

*இதற்கு முன்பு ஆகாய் தன் மக்களுடைய வாழ்வைப் பாதித்த அழிவைப் பற்றி இதே போன்றதொரு படத்தைத் தீட்டியிருக்கிறார்:*

> “இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப் பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?
>
> இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்.
>
> நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டுவருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்.” ஆகாய் 1:4–6

*ஆகாய் விளக்கும் சாபத்தைத் தொகுத்து ஒரே வார்த்தையில் பற்றாக்குறை எனக்கூறலாம். வெளித்தோற்றத்தில் பார்க்கும் பொழுது இஸ்ரவேலர்களுக்கு தங்கள் பொருளாதாரத் தேவைகளைத் திருப்தி செய்யப் போதுமான அனைத்தும் அவர்களுக்கு இருந்தது. என்றாலும் அவர்களால் புரிந்து கொள்ள*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 112 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*முடியாத ஏதோ ஒரு காரணத்தினால் எப்பொழுதும் பற்றாக்குறை அவர்களுக்கு இருந்து கொண்டே இருந்தது. தேவனுடைய வீட்டின் தேவைகளுக்கு முன்பாகத் தங்கள் சுய தேவைகளை முக்கியப்படுத்தியதால் அவர்கள் தங்கள் மேல் வருவித்துக் கொண்ட சாபம் தான், அவர்களை அழித்துக்கொண்டிருக்கும் காணப்பாடாத சக்தி. இதைக் காண்பிக்க தேவன் அவர்களிடத்திற்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார்.*

*இன்று உலகில் செழிப்பான அநேக நாடுகள் இந்தச் சூழலில் உள்ளன. தங்கள் பெற்றோர்கள் அல்லது அவர்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் சம்பாதித்ததை விட அநேகர் இன்று அதிகம் சம்பாதிக்கின்றனர். என்றாலும் முந்திய தலைமுறையினர் திருப்தியையும், பாதுகாப்பையும் அனுபவித்தனர். ஆனால் இந்தத் தலைமுறையினர் திருப்தியே இல்லாமல் நிறைவு செய்யப்படாத தேவையில் வாழ்கின்றனர். சில நாடுகளில் தனிப்பட்டோருடைய கடன் எல்லாக்காலத்தையும் விட அதிகமாக உள்ளது.*

*மூன்று தீர்க்க தரிசிகளில் கடைசி தீர்க்கதரிசியான மல்கியா தனக்கு முன்னான இவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேலர்களுக்கு விரோதமாகக் கூறிய குற்றச் சாட்டுகளைத் தொகுத்துக் கூறுகிறார். அவர் தன்னுடைய மக்கள் தேவன் பேரில் தவறான எண்ணம் கொண்டிருந்ததை மட்டும் சுட்டிக் காட்டாமல் மிக முறைகேடான திருட்டைப் பற்றியும் பேசுகிறார்: அது மனிதனை மட்டும் வஞ்சிப்பதாக இல்லாமல் தேவனையும் வஞ்சிப்பதாக உள்ளது.*

> "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே.
>
> நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்." மல்கியா 3:8–9

*இப்பகுதி தேவன் ஒவ்வொரு காலத்திலும் எப்படி செயல்படுகிறார் என்பதைத் தீர்மானிக்கும் ஓர் அடிப்படை உண்மையை வெளிப்படுத்துகிறது: தமது மக்கள் தமக்கு கொடுப்பதைக் குறித்த கணக்கை அவர் வைத்திருக்கிறார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தேவன் இஸ்ரவேலர்கள் அவர்களுடைய*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 113 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*முழு வருமானத்தில் காசாகவோ அல்லது பொருளாகவோ தசமபாகத்தைத் தமக்காகப் பிரித்து வைக்க வேண்டும் என்று நியமித்திருந்தார். இது தேவனுடன் அவர்கள் கொண்டிருந்த உடன்படிக்கை உறவின் ஒரு முக்கிய அம்சமாகும். இதில் கீழ்ப்படியாமை உடன்படிக்கையை முறிப்பதாக உள்ளது.*

*இப்பொழுது மல்கியாவின் மூலம் தேவன் தமது கருத்தைக் கூறுகிறார். அவருடைய மக்கள் அவருக்குக் கொடுக்காமல் சட்டவிரோதமாகத் தங்களுக்கென்று வைத்துக் கொண்ட அனைத்தின் காரணமாக அவர்கள் தம்மை "வஞ்சித்ததாகக்" குற்றம் சாட்டுகின்றார். இது நாடு முழுவதிலும், அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் கேடான ஒரு சாபத்தைக் கொண்டு வந்தது என்று அவர்களுக்குச்சுட்டி காட்டுகின்றார்.*

*ஆனால் இந்த எதிர்மறையான கருத்துடன் தேவன் நிறுத்திவிடவில்லை. அடுத்த வசனத்தில் அவர் இச்சாபத்தைக் கடந்து அவருடைய ஆசீர்வாதத்திற்குள் தமது மக்கள் எவ்வாறு வரக்கூடும் என புகட்டுகிறார்:*

> "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:10

*சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வருவதற்கு தேவன் தமது மக்களிடம் இரு காரியங்களை எதிர்பார்க்கிறார் : ஒன்று மனந்திரும்புதல், இன்னொன்று நன்நிலைக்குச் சேர்ப்பித்தல். மனிதனை வஞ்சிப்பதாக இருந்தாலும் தேவனை வஞ்சிப்பதாக இருந்தாலும், ஒவ்வொரு வஞ்சித்தலிலும் இந்த நிபந்தனைகள் மாறுவதில்லை.*

*புதிய ஏற்பாட்டில் தேவன் பழைய ஏற்பாட்டை போல் கிறிஸ்தவர்கள் தங்களுடைய முழு வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைத் தமக்கென்று பிரத்தியேகப்படுத்தி வைக்க வேண்டும் என்று ஒரு குறிப்பிட்ட சட்டத்தை ஏற்படுத்தவில்லை. கிருபையின்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 114 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உடன்படிக்கை கட்டாயப்படுத்துகின்ற சட்டங்களினால் செயல்படாமல், பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிகளின் இருதயங்களில் எழுதப்பட்ட சட்டங்களினால் செயல்படுகிறது. 2 கொரிந்தியர் 9:7ல் பவுல் கிறிஸ்தவர்களுக்கு "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்" என்று அறிவுறுத்துகிறார்.

என்றாலும் ஒன்று நிச்சயமானது: பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியைக் கருமியாய் இருக்க வைப்பதில்லை. 51 ஆம் சங்கீதம் 12ம் வசனத்திலே தாவீது கர்த்தரை நோக்கி "உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்" என்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய ஒரு பண்பு வளமாய் கொடுப்பதாகும். கொடுப்பவர்கள் எல்லாரிலும் அதிகமாய் கொடுப்பவர் தேவன் தாமே. அவருடைய ஆவியானவர் அவருடைய மக்களுடைய இருதயத்தில் செயற்படும் பொழுது அவர்களை அவர் தம்மைப் போல் வாரி வழங்குபவர்களாக மாற்றுகிறார்.

எபிரெயர் 8:6ல் எழுத்தாளர் பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டுகிறார். கிறிஸ்தவர்கள் "விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்குள்" பிரவேசித்துள்ளார்கள் எனக் கூறுகிறார். இந்த சிறந்த உடன்படிக்கையை அனுபவிப்பவர்கள் இதைவிட குறைந்த உடன்படிக்கையில் வாழ்ந்த மக்கள் தேவனுக்குக் கொடுத்ததை விட அதிக தாராளமாய்க் கொடுக்க வேண்டும் அல்லவா? நீதிச்சட்டத்தின் கீழாய் இருந்த தேவனுடைய மக்கள் தேவனுக்கு தசமபாகம் கொடுத்தார்கள் என்றால் கிருபையின் கீழேயுள்ள கிறிஸ்தவர்கள் எவ்வாறு குறைத்துக் கொடுக்க முடியும்? கிருபையின் வரம்பு நீதிச்சட்டத்தின் வரம்பை விட உயர்வானதே. குறைவானதல்ல.

எல்லாக் காலங்களிலும் ஒரு அடிப்படை சத்தியம் மாறாததாக உள்ளது: தேவன்பால் கஞ்சத்தனமாய் இருந்தால் சாபம் உண்டாகும். தாராள மனப்பான்மை அவருடைய ஆசீர்வாதத்தை நாம் சுதந்தரிக்கும்படி செய்கிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 115 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 11

# அதிகாரமுள்ள நபர்கள்

ஆசீர்வாதங்களும், சாபங்களும் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் அதிகம் பாதிக்கின்ற கண்ணிற்குப் புலப்படாத ஆவிக்குரிய தளத்தைச் சார்ந்தவை. இத்தளத்தின் விளைவைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய கூறு **அதிகாரம்** ஆகும். இந்த அதிகாரத்தின் அடிப்படை உண்மைகளைப் பற்றி புரிந்து கொண்டால்தான் ஆவிக்குரிய தளத்தைப் பற்றி புரிந்து கொள்ள முடியும். அதில் சிறப்பாகவும் செயல்பட முடியும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக மனுக்குலத்தால் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டு வந்த பல்வேறு அதிகாரங்களுக்கு விரோதமாக இந்த இருபதாம் நூற்றாண்டில் உலகமனைத்திலும் எதிர்ப்பு எழுந்துள்ளது. சமுதாய அமைப்பில் முக்கியமாய்ப் பாதிக்கப்பட்ட பகுதிகள் குடும்பமும், திருச்சபையும், பல்வேறு அரசியல் பிரிவுகளும் ஆகும்.

அடிக்கடி இந்த எதிர்ப்பு பல்வேறு அதிகாரங்களை மாற்றிவிட்டது அல்லது அழித்துவிட்டது என மக்கள் கருதுகின்றனர். ஆனால் **அது உண்மையன்று.** அதிகாரத்தைப் பிரயோகிப்பது என்பதைப் பற்றிய அடிப்படை உண்மைகள் புவிஈர்ப்பு விதியைப் போன்று மாறாததும் எங்கும் மெய்யானதுமாகும்.

எதிர்ப்பு மனப்பான்மை கொண்ட ஒரு மனிதன் புவிஈர்ப்பு விசையைப் புறக்கணித்துப் பத்தாவது மாடியிலிருந்து ஒரு சன்னல் வழியாகக் கீழே குதிக்கத் தீர்மானிக்கலாம். புவிஈர்ப்புச் சட்டத்தை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 116 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அவன் நிராகரிப்பதினாலே அது மாறுவதுமில்லை, அதன் செயல்பாடு நிற்பதுமில்லை. அவன் கீழே நடைபாதையில் விழுந்து மரணமடைவான். அதிகாரத்தைப் பயன்படுத்துவதைக் குறித்த சட்டங்களும் இவ்வாறாகவே உள்ளன. மக்கள் அவைகளைப் புறக்கணிக்கலாம், நிராகரிக்கலாம். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைப் போக்கு அவர்கள் புரிந்து கொண்டாலும், புரிந்து கொள்ளாவிட்டாலும் அவைகளினாலே தீர்மானிக்கப்படுகிறது.*

*படைப்பாளியாகிய தேவனே இப்பிரபஞ்சம் அனைத்திலும் தலைசிறந்த அதிகாரத்தை உடைய ஒரே தேவனாக இருக்கிறார். என்றாலும் தேவன் பொதுவாகத் தமது அதிகாரத்தை நேரிடையாகப் பயன்படுத்துவதில்லை. ஆனால் அதைத் தாம் தெரிந்து கொள்ளும் மற்றவர்களுக்கு அளிக்கிறார். மரணத்திலிருந்து இயேசு எழுந்ததற்குப் பின்பு, அவர் தம் சீஷர்களை நோக்கி, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார்* (மத்தேயு 28:18). *அந்த நாளிலிருந்து சகல அதிகாரத்தையும் தேவன் இயேசுவின் கரத்தில் கொடுத்துவிட்டார். ஆனால் இயேசு பிதாவினிடமிருந்து தாம் பெற்ற அந்த அதிகாரத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கிறார்.*

*இப்பிரபஞ்சம் முழுவதிலும் செயல்படும் அதிகாரத்தை மிகவும் வலிமை வாய்ந்த ஒரு வலுவான கம்பிக்கு ஒப்பிடலாம். அக்கம்பி பிதாவாகிய தேவனிடமிருந்து இயேசுவிடம் வருகிறது. இயேசுவின் கரத்திலிருந்து அக்கம்பி எண்ணற்ற சிறு சிறு கம்பிகளாகப் பிரிந்து இப்பிரபஞ்சம் முழுவதிலும் அவர் நியமித்துள்ள தேவதூதர்களுக்கும், மனிதர்களுக்கும் கடந்து செல்கிறது.*

*அதிகாரத்தைச் செலுத்துகின்ற ஒரு மனிதனை வேதம் தலை என்று குறிப்பிடுகின்றது. உதாரணமாக 1 கொரிந்தியர்* 11:3*ல் பவுல்*:

> "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன் " என்கிறார்.

*இந்தத் தலைமையைப் பற்றிய உதாரணத்தின் மூலம்,*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 117 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பிதாவாகிய தேவனிடத்திலிருந்து ஆரம்பித்துப் பின்பு கிறிஸ்துவிற்கு வந்து கிறிஸ்துவிலிருந்து குடும்பத்தில் கணவன், தகப்பன் என்னும் இடத்தை வகிக்கும் மனிதனுக்கு வருகிற படிப்படியான அதிகார வரிசையை பவுல் விளக்குகிறார். இந்த உறவின்படி மனிதன் அவனுடைய வீட்டில் அதிகாரம் செலுத்துகிறவனாய் இருக்கிறான்.*

*மனித சமுதாய உறவுகளிலே கணவன் / தந்தை என்பவர்கள் அதிகாரத்தைப் பயன்பயத்தும்படி ஏற்படுத்தப்பட்ட பிரதான உதாரணங்கள் ஆகும். என்றாலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்படும் மற்ற அதிகாரத்தைச் செலுத்துபவர்களும் உள்ளனர்: தன் மக்கள் மேல் அதிகாரம் செலுத்தும் ஓர் ஆட்சியாளன்; தன் போர்வீரர்களின் மேல் அதிகாரம் செலுத்தும் ஒரு இராணுவத்தலைவன்; தன் மாணவர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் ஓர் ஆசிரியர்; தன் திருச்சபை அங்கத்தினர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் ஒரு போதகர் போன்றோர்கள் உதாரணங்களாவார்கள்.*

*தேவன் மட்டுமே பூரண அதிகாரம் உடையவராய் இருக்கிறார். மற்ற எல்லா வகையான அதிகாரங்களும் பலவித கட்டுப்பாடுகளைக் கொண்டதாக உள்ளது. கொடுக்கப்பட்ட அதிகாரம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுமே செயல்படும். உதாரணமாக ஓர் ஆட்சியாளனின் அதிகாரம் பொதுவாக அவனுடைய நாட்டின் சட்டங்களினால் கட்டுப்படுத்தப்படுகிறது. அந்த அதிகாரம் அவனுக்குக் கீழேயுள்ள மக்களின் "சொந்த" வாழ்வைப் பாதிப்பதாக இராது. தன் குடும்பத்தின் மேல் ஒரு தந்தைக்கு இருக்கக்கூடிய அதிகாரம் அரசியல் சட்டங்களை மீற அவரை அனுமதிப்பதில்லை. ஒரு ஆசிரியர் தன் மாணவர்கள் மேல் செலுத்தும் அதிகாரம் பாடசாலை வாழ்வை மட்டுமே பொறுத்தது. ஒரு போதகர் தன் சபையின் மக்கள் மேல் செலுத்தும் அதிகாரம் அச்சபை வகுத்துள்ள சட்டத்தின் எல்லைக்குள் மட்டுமே அமையும்.*

*மேற்சொன்ன உதாரணங்கள் எல்லாம் பொதுவானவை. இவைகளை மிகவும் சரியாகச் சொல்ல வேண்டுமானால் அதற்கு மற்ற அநேக விளக்கங்களையும், கட்டுப்பாடுகளையும் கூற வேண்டியதிருக்கும். மேலும் சில இடங்களில் ஓர் அதிகாரத்தின் மேல் இன்னொரு அதிகாரம் செலுத்தப்படுவதால் பிரச்சனைகள் உண்டாகலாம். என்றாலும் மேலே கொடுக்கப்பட்ட உதாரணங்கள்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 118 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அதிகாரத்தைப் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைப் பற்றிய அடிப்படைக் கொள்கைகளை நிறுவப் போதுமானது.

அதிகாரம் துர்ப்பிரயோகமாகும் பொழுது அது தன் செயலை இழக்கிறதென்று எண்ணுகிறோம் ஆனால் ஒரு எல்லையைக் கடக்கும் பொழுதுதான் இவ்வாறு நடக்கும். ஆனால் அதிகாரம் துர்ப்பிரயோகப்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது. சமுதாய வாழ்வு நலமுடன் செல்ல, ஒரு வகை அதிகாரம் அத்தியாவசியமாகிறது. துர்ப்பிரயோகம் செய்யப்பட்ட அதிகாரம் பல குழப்பங்களை விளைவிக்கும். இருப்பினும் அதிகாரமற்ற சூழ்நிலையை விட ஏதாவது ஒருவகை அதிகாரமே சிறந்ததே.*

இன்று மக்கள் வசிக்கும் பகுதிகளிலே அவர்கள் சுவாசிக்கும் காற்றானது தூய்மைக்கேடு அடைந்ததினாலே அது சுகத்திற்குக் கேட்டை விளைவிக்கிறது. என்றாலும் இந்தக் காரணத்திற்காக தேவன் எல்லா காற்றையும் பூமியின் மேற்பரப்பிலிருந்து எடுத்து விடுவதில்லை. தூய்மைக்கேடு அடைந்த காற்று காற்றே இல்லாத நிலைமையை விடச் சிறந்ததே. அதேபோல் துர்ப்பிரயோகம் செய்யப்பட்ட அதிகாரம் அதிகாரமேயில்லாத அமைப்பை விடச்சிறந்ததே.

ஒரு மனிதன் தன் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களை ஆசீர்வதிப்பதின் மூலம் அதைச் சிறப்பாய் செயற்படுத்தலாம். ஆதியாகமம் 27 ஆம் அதிகாரத்தில் தங்கள் தந்தையாகிய ஈசாக்கின் ஆசீர்வாதத்திற்கு யாக்கோபும் ஏசாவும் செலுத்திய முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர்களுடைய சந்ததியாரின் சரித்திரம் ஈசாக்கு அந்த நேரத்தில் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் கூறிய வார்த்தைகளினால் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு ஈசாக்கும் விதிவிலக்கல்ல. வேதம் முழுவதிலும் ஒரு தந்தையின் ஆசீர்வாதம் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு அடுத்த நிலையிலேயே முக்கியம் வாய்ந்ததாக உள்ளது.

என்றாலும் ஆசீர்வதிக்க இருக்கும் அதிகாரத்தைப் போலவே சாபத்தை வழங்குவதற்கும் அதிகாரம் உள்ளது. எவ்வாறு பகலை இரவிலிருந்து பிரிக்க முடியாதோ; வெப்பத்தைத் குளிர்ச்சியிலிருந்து பிரிக்க முடியாதோ, அப்படியே ஆசீர்வாதமும்

*அதிகாரமற்ற நிலை என்பது: (1) அரசங்கமே இல்லா நிலை (2) அரசியல் ஒழுங்கின்மை மற்றும் வன்முறை; (3) எவ்வித சூழ்நிலையிலும் ஒழுங்கின்மை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 119 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சாபத்தினின்று பிரிக்க முடியாததொன்றாகும். அதாவது அதிகாரத்தைச் செயற்படுத்தும் மக்கள் அதை இரு வழிகளில் செய்யலாம்: ஒன்று ஆசீர்வதிப்பதற்கு, மற்றொன்று சபிப்பதற்கு. எந்த அதிகாரம் ஆசீர்வாதத்தைப் பலிக்கச் செய்கிறதோ அதுவே சாபத்தையும் பலிக்கச் செய்கிறது.

இதற்கான உதாரணத்தை யாக்கோபின் குடும்ப வாழ்க்கையில் இருந்து காணலாம். ஆதியாகமம் 31 ஆம் அதிகாரத்தில் யாக்கோபு தன்னுடைய இரு மனைவிகளுடனும் இரு மறுமனையாட்டிகளுடனும் 11 பிள்ளைகளுடனும் மெசபத்தோமியாவில் உள்ள தன்னுடைய மாமன் இலாபானிடமிருந்து இரகசியமாய் புறப்பட்டு, கானான் நாட்டிற்குத் திரும்புவதற்குக் கிளம்புகிறான் என்பதைக் காண்கிறோம். என்றாலும் இலாபான் தன் உறவினர்களை அழைத்துக் கொண்டு யாக்கோபைத் தேடும்படியாகக் கிளம்பி, கீலேயாத்தின் மலைப்பகுதியிலே அவனைச் சந்திக்கிறான். அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. அதில் இலாபான் யாக்கோபைத் தன்னுடைய முற்பிதாக்களின் சொரூபங்களைத் திருடி விட்டதாகக் குற்றம் சாட்டுகிறான். (இந்தச் சொரூபங்கள் வீட்டில் செய்து வைக்கப்பட்ட உருவங்கள் அல்லது "தெய்வங்கள்" ஆகும். இவைகள் குறிசொல்லுவதற்குப் பயன்படுத்தப்பட்டன; வீட்டை தீய சக்திகளிலிருந்து "பாதுகாப்பதாக" எண்ணப்பட்டன).

யாக்கோபு தான் மிகவும் அதிகமாய் நேசித்த மனைவியான இராகேல் அந்த உருவங்களை இரகசியமாய் எடுத்து வைத்திருந்தாள் என்பதை அறியவில்லை. ஆகவே இலாபானுடைய குற்றச்சாட்டுக்கு யாக்கோபு கோபத்துடன் பதில் கூறலானான். அவன் இலாபானைத் தன் குடும்பத்திற்குச் சொந்தமான பொருட்கள் அனைத்தையும் சோதித்துப் பார்க்கும்படிக் கூறினான். மேலும் தன்னுடைய களங்கமின்மையைத் தெரிவிப்பதற்காகச் சாபத்தை வருவிக்கக்கூடிய "யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ, அவனை உயிரோடே விட வேண்டாம்" (ஆதியாகமம் 31:32) என்னும் வார்த்தைகளைக் கூறினான்.

யாக்கோபின் வீட்டிற்குச் சொந்தமான பொருட்கள் அனைத்தையும் இலாபான் சோதனையிட்டான். ஆனால் இராகேல் அந்த முதாதையர் சொரூபங்களை ஒளித்து வைப்பதில்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 120 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வெற்றி கண்டாள். எனினும் யாக்கோபு கூறிய சாப வார்த்தைகள் ஒரு கணவனின் அதிகாரத்தைக் கொண்டதாய் இருந்தது. அவைகள் அந்த உருவங்களைத் திருடிய நபர் மேல் மரணத்தை விதிக்கும் சாப வார்த்தைகளாக இருந்தன. யாக்கோபு தன்னுடைய வார்த்தைகள் இராகேலுக்கு விரோதமாகப் பேசப்பட்டவை என்பதை அறியாமல் இருந்தான் என்பதால் அது அந்த சாபம் பலித்து விடுவதை தடுத்து நிறுத்தவில்லை. இதற்கு சற்றுப் பின்பு இராகேல் தனது இரண்டாம் குமாரனைப் பெற்றெடுக்கும் பேறுகால வேளையில் மரணம் அடைந்தாள். (ஆதியாகமம் 35:16–19—யைப் பார்க்க.) இவ்வாறாக ஒரு கணவனின் அதிகாரம் ஆசீர்வாதத்தை அன்றி சாபத்தை வருவிப்பதாகவோ உள்ளது!

மேலும் பொய்யான "தெய்வங்களின்" உருவங்களை இராகேல் தன்னுடையதாக்கிக் கொண்டதினாலே விக்கிரக ஆராதனைக்குள்ளும், மாந்திரீகத்திற்குள்ளும் அத்துமீறிச் சென்றாள். இவ்வாறாகத் தன் சொந்த செயலினாலே அவள் தேவனுடைய பாதுகாப்பை இழந்தவளாக, மாந்திரீகத்தில் ஈடுபடுவதால் உண்டாகும் தவிர்க்க முடியாத சாபத்திற்குத் தன்னை உட்படுத்தினாள். ஆசீர்வாதங்களையும் சபாங்களையும் கட்டுப்படுத்தும் சட்டங்கள்—அவைகளின் சொந்த நிலையிலே—புவிஈர்ப்பு சக்தியின் விதியைப் போல் உண்மையானது என்பதற்கு இது ஒரு தெளிவான உதாரணம். மக்கள் அவைகளை உணர்ந்து கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் அவைகள் செயல்படுகின்றன.

திருமணத்தைக் குறித்த தேவனுடைய திட்டத்தில் கணவனும், மனைவியும் "ஒரே மாம்சமாய்" இருக்கிறார்கள். இதன் அடிப்படையில் ஒரு கணவனும், மனைவியும் தங்கள் பிள்ளைகள் மேல் செலுத்தும் அதிகாரத்தில் சமபங்கு கொள்கின்றனர். இதைச் சரியாகச் செய்யத் தவறினால் கணவன் தன் போக்கிலே செல்லலாம் அல்லது கொடூரமாய் மாறலாம்.

ஆனால் இன்று கணவன்மார்கள் அடுத்த கோடிக்குச் சென்று தன் பொறுப்புகளை முழுவதும் தன் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டு, அவர்களை முற்றிலும் கைவிட்டு விடுவதும் உண்டு. இவ்விதமான சூழ்நிலைகளில் இருவரும் இணைந்து பகிர்ந்து கொள்ள வேண்டிய பாரத்தை மனைவி தானே சுமக்க வேண்டியதாய் இருக்கிறது. இதன் விளைவாக



Blessing or Curse Tamil text 2012 revised.p65 121 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அடிக்கடி முழு குடும்ப அமைப்பும் பிளவுபடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ள கிறிஸ்தவ மனைவிமார்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்கள் விசுவாசத்தினாலும், ஜெபத்தினாலும், தேவனுடைய கிருபையினாலும் அவர்கள் மேல் சுமத்தப்பட்ட அதிகமான பாரத்தை வெற்றியுடன் சுமக்கின்றனர்.

யாக்கோபைப் பொறுத்தமட்டில் அவன் கூறிய வார்த்தைகள் இராகேலுக்கு விரோதமாகப் பேசப்பட்டவை என்பதை அவன் உணராதிருந்தான். ஆனால் நமது கால கலாச்சாரத்தில் ஒரு கணவன் அநேக நேரங்களில் வேண்டுமென்றே கசப்பான, கூர்மையான வார்த்தைகளைத் தன் மனைவிக்கு விரோதமாகக் கூறுகின்றான். இதற்கான உதாரணம் ஒன்றைக் கீழே காண்போம்:

வீட்டில் தன் தாயாரிடம் வீட்டு வேலை செய்யக் கற்றுக் கொள்ளாத மேரி வியாபாரத்தில் தலைமைப் பதவியில் இருக்கும் கடுங்கோபம் கொள்ளும் ஜேக் என்பவரைத் திருமணம் செய்கிறாள். மேரி சுவையான அல்லது பார்ப்பதற்குக் கவர்ச்சியான உணவைப் பரிமாறுவதில் தோல்வி காண்கிறாள். கொஞ்ச நாட்களுக்கு ஜேக் சுயகட்டுப்பாடுடன் தன் பொறுமையைக் காத்துக் கொள்கிறார். இறுதியில் தன் கோபத்தை வெளிப்படுத்துகிறார்: “நீ பரிமாறும் சாப்பாட்டை சாப்பிட்டால் நான் சுகவீனமாவேன். நீ என்றுமே சமைக்கக் கற்றுக் கொள்ளப் போவதில்லை!” என்று கூறுகிறார். இதே வாக்கியத்தைத் சற்று மாற்றி பல தடவைகள் மீண்டும் மீண்டும் கூறுகிறார்.

அப்பொழுதிலிருந்து மேரி சாப்பாட்டு மேசைக்கு உணவைக் கொண்டு வரும்போதெல்லாம் அவளின் கரங்கள் நடுங்க ஆரம்பிக்கின்றன. உணவு பரிமாறுவது அவளுக்குக் கடும் சோதனையாக மாறுகிறது. அதிலிருந்து தப்பித்துக் கொள்ள அவள் ஆவல் கொள்வதுண்டு. சில ஆண்டுகளுக்குப் பின்பு அவர்கள் திருமணம் தோல்வியில் முடிகிறது. ஆனால் ஜேக்கினால் சொல்லப்பட்ட சாபம் மேரிக்கு அவள் வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது. மற்றப்பகுதிகளில் தாலந்து உள்ளவளாக வெற்றியைக் கண்ட போதிலும், அவளால் சமைக்கக் கற்றுக் கொள்ள முடியாமற் போகிறது. அவள் சமையல் அறையில் இருக்கும் வேளையில் எல்லாம் இருளானதொன்று வந்து அவளது இயற்கையின் திறமையைக் கட்டுப்படுத்துகிறது. அவளுக்கு ஒரே ஒரு தீர்வு தான் உண்டு: தன் கணவன் தன்மேல் ஒரு சாபத்தைப்





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

போட்டிருக்கிறார் என்பதை அறிந்து, அதற்கு தேவன் அருளும் விடுதலையைப் பெற்றுக்கொள்ள முற்படுவதே ஆகும்.

மேலும் ஜேக் தான் அறியாத வண்ணமாகத் தனக்குத்தானே ஒரு சாபத்தைக் கூறிக் கொண்டார் என்பதும் தெரிகிறது. "நீ பரிமாறும் சாப்பாட்டைச் சாப்பிட்டால் நான் சுகவீனமாவேன்" என்று அவர் சொன்ன வேளையிலிருந்து உணவு செரிப்பதில் பாதிப்பு ஏற்படுகிறது. மருத்துவர்களால் அதற்கு இயற்கையான காரணத்தையோ, அதைத் தீர்க்கும் வழியையோ கண்டு கொள்ள முடியவில்லை. மேரியின் சமைக்க இயலாத நிலைமையைப் போலவே ஜேக்கினுடைய உணவைச் செரிக்க முடியாத சுகக்கேடு அவருடைய வாழ்நாளெல்லாம் தொடர்கிறது. (12 ஆம் அத்தியாயத்தில் தன்மேலேயே கூறப்பட்ட சாபங்கள் பற்றிய முக்கிய விளக்கத்தைக் காணலாம்.)

ஜேக்கையும், மேரியையும் போன்றே சற்று வித்தியாசமான நிலையில் மாறுபட்ட பல சம்பவங்களை நாம் உலகத்தில் காணலாம். மேரியின் பிரச்சனை அளவிற்கு மிஞ்சிய சரீர எடையாக இருக்கலாம். அதற்கு ஜேக் இவ்வாறாகக் குறை சொல்லலாம்: "எடையை இழக்க உனக்கு மனோசக்தியே கிடையாது. உன் வாழ்நாள் முழுவதும் நீ இவ்வாறே பருமனாய் இருப்பாய்" என்று கூறலாம்.

அல்லது மேரி பணத்தை எவ்வாறு செலவிடுவது என்று தெரியாத ஒரு பெண்ணாய் இருக்கலாம். வாரம் முடிவதற்குள் அவள் கணக்குப் போட்டிருந்த பணத்திற்கு அதிகமாய் செலவழித்திருக்கலாம். அவள் தன் வரவு—செலவு புத்தகத்தில் வரவையும் செலவையும் ஈடுகட்டுவதில் வெற்றியடையாமல் இருக்கலாம். இதனால் சோர்ந்து போன ஜேக் இவ்வாறு கூறலாம்: "ஒரு நாலாம் வகுப்பு படித்தவள் உன்னைக் காட்டிலும் பணத்தை நன்கு செலவழிக்கக்கூடும். நீ என்றுமே உருப்படமாட்டாய். உன் வாழ்நாள் முழுவதிலும் கஷ்டப்பட்டுக் கொண்டேயிருப்பாய்" எனலாம்.

இன்னொரு தம்பதியரை கற்பனை செய்வோம் : இவர்கள் ஜிம்மும், ஜேனும். ஜிம்மின் வார்த்தைகள் ஜேக்கின் வார்த்தைகளைவிடக் கடுமையானவை. அவர் அடிக்கடி தன்னுடைய கசப்பான விவாதங்களின் முடிவில் "உன்னுடைய



Blessing or Curse Tamil text 2012 revised.p65 123 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மனோதிடத்தை வெறுக்கிறேன்!" என்று கூறுகிறார். தவிர்க்க முடியாத விவாகரத்திற்குப் பின் சில ஆண்டுகளில் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற வெவ்வேறு காரணங்களுக்காக மூன்று அறுவைச் சிகிச்சைகள் அவளுடைய வயிற்று பாகத்தில் செய்ய நேரிடுகிறது.

ஜேனினுடைய மூன்று பிரச்சனைகளுக்கும் சரியான காரணம் நீதிமொழிகள் 12:18ல் "பட்டயக்குத்துகள் போல் பேசுகிறவர்களும் உண்டு" என்பதில் உள்ளது. ஜிம் தன் கசப்பான வார்த்தைகளினால் ஏற்படுத்திய காணப்படாத காயங்களை நீக்க அறுவை சிகிச்சை செய்பவரின் கத்தி ஜேனுக்குத் தேவைப்பட்டது.

மேரிக்கு விரோதமாக ஜேக்—அல்லது ஜேனுக்கு விரோதமாக ஜிம்—போன்றவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் பொறுமையை இழந்த மனோ நிலையில் இருந்து கோபம், கடுங்கோபம் என்னும் மனோ நிலை வரையில் உள்ள உணர்ச்சிகளால் ஏற்படுகிறது. பொதுவாக இவைகளுக்குப் பின்பு பிசாசின் சக்திகள் செயல்படுகின்றன. இவைகள் நுனியில் நஞ்சு நிறைந்த கூர்மையான அம்புகள் போல் இருக்கின்றன. அவைகள் தசைகளில் பதிந்து விட்டால் அவைகளை வெளியே எடுப்பது கடினமாய் உள்ளது. ஆனாலும் அவைகளை உள்ளேயே விட்டுவிட்டால் அந்த நஞ்சு உள்ளெங்கும் பரவுகிறது.

தன் மனைவியின் மேல் ஒரு கணவன் செலுத்தும் அதிகாரத்தை விட ஒரு தந்தை தன் பிள்ளைகளின் மேல் செலுத்தும் அதிகாரம் மிகவும் அதிகமானது. எல்லா அதிகார உறவுகளிலும் இது அடிப்படையானது. உண்மையில் தெய்வத்துவத்திற்குக் கீழே பிதாவுக்கும், குமாரனுக்கும் உள்ள நித்திய உறவின் தொடர்ச்சியே இது.

ஒரு தந்தையின் ஆசீர்வாதம் எல்லையற்ற நன்மையை விளைவிப்பதுபோன்று அவர் இடும் சாபம் எல்லையற்ற தீமையைத் தோற்றுவிக்கக்கூடும். சில வேளைகளில் இப்படிப்பட்ட சாபம் வேண்டுமென்றே கூறப்படலாம். அநேக வேளைகளில்—கணவன், மனைவி உறவைப்போல—ஒரு தகப்பன் தன் பிள்ளையிடம் பேசும் வார்த்தைகள் சாபத்தை வருவிக்க வேண்டும் என்னும் எண்ணமின்றி சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் அவைகள் அதே பயனை உடையதாக இருக்கின்றன. நான் கீழே



Blessing or Curse Tamil text 2012 revised.p65 124 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கொடுக்க இருக்கும் உதாரணங்கள் ஒவ்வொன்றும் வாழ்வில் நான் கண்ட மெய்ச் சம்பவங்களின் தொகுப்பாகும்.

ஒரு தந்தைக்கு மூன்று குமாரர்கள் உள்ளனர். மூத்த மகன் மூத்தவனாக பிறந்ததின் நிமித்தம் உளமார்ந்த பாராட்டைப் பெறுகிறான். இளையவனுக்கு அசாதாரண தாலந்துகளும், நல்ல ஆள்தத்துவமும் உள்ளது. ஆனால் மத்தியில் உள்ள மகனுக்கோ தனக்குச் சாதகமாக இதில் எதுவும் இல்லை. அவன் இந்தக் கருத்து வேற்றுமைகளை ஆழமாகச் சிந்தித்துக் கொண்டு தன் உணர்ச்சிகளைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொள்கிறான். மேலும் தகப்பனார் இந்த இரண்டாம் மகனில் தனக்குப் பிடிக்காத தன்னுடைய குணமே இருப்பதாகக் காண்கிறார். ஆனாலும் தன் வாழ்விலே அதைச் சரி செய்து கொள்ள அவர் விரும்பவில்லை. தன்னைக் குறை கூறிக் கொள்வதைவிட தன் மகனைக் குறைகூறுவது குறைந்த வேதனையுடையதாக இருப்பதாக எண்ணுகிறார்.

இதன் விளைவாக இரண்டாவது மகன் தன் தந்தையின் ஒப்புதலை எதற்குமே பெற்றுக் கொள்வதில்லை. இறுதியில் அதை அடைய வேண்டும் என்னும் முயற்சியை அவன் கைவிட்டு விடுகிறான். தகப்பனார் இதைப் பிடிவாதம் என்று கூறுகிறார். அடிக்கடி அவர் தன் எதிர்ப்பை இப்படிப்பட்ட வார்த்தைகளினால் கூறுகிறார்: "நீ எதையுமே முயற்சி செய்வதில்லை! நீ சோம்பேறி! நீ எந்த நல்ல காரியத்தையும் செய்யப்போவதில்லை!" எனக் கூறுகிறார். தன் மகனை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பாதிக்கக்கூடிய ஒரு தீய விளைவிற்கு அவர் காரணமாயிருக்கிறார் என்பதை அவர் கொஞ்சமும் உணரவில்லை.

ஒரு தந்தையால் பேசப்பட்ட எதிர் மறையான, குறைகூறுகிற, அழிவின் வார்த்தைகளினால் வாழ்க்கை பாதிக்கப்பட்ட ஏராளமானோரை நான் தனிப்படக் கண்டுள்ளேன். இவைகளிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் உண்மையிலேயே ஒரு சாபம் என்பதை நான் கற்றுக் கொண்டேன். காலப்போக்கு இவைகளின் விளைவை குறைத்துப் போடுவதில்லை. நடுத்தர வயதைக் கடந்த மனிதர்கள் குழந்தைப் பருவத்தில் ஒரு தகப்பனார் அவர்களுக்கு விரோதமாகப் பேசிய வார்த்தைகளினால் அவர்கள் வாழ்வு இன்னும் தாக்கப்பட்டு வருவதை உணரலாம். இதை எதிர்த்து சந்திப்பதற்கான ஒரே வழி இதை ஒரு சாபமென்று



Blessing or Curse Tamil text 2012 revised.p65 125 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அறிந்து தேவன் ஆயத்தப்படுத்தியுள்ள உதவியைப் பெற்றுக் கொள்வதாகும்.

ஜேக், மேரி அல்லது ஜிம், ஜேன் போன்றவர்களின் வாழ்க்கையின் பிரதியினை பலரிடம் காணலாம். உதாரணமாக தன் கைகளைக் கொண்டு திறமையுடன் செயலாற்றும் ஒரு தந்தைக்கு மந்தமாகச் செயலாற்றும் ஒருமகன் இருக்கலாம். மகனுக்குக் கொடுக்கப்பட்ட பலதரப்பட்ட வேலைகளிலும் அவன் தவறு செய்தவுடன் தந்தை அவனை நோக்கி, "உன் விரல்கள் எல்லாமே பெருவிரல்தானா? அல்லது உன் இரு கைகளுமே இடது கைகள் தானா?" எனக் கூறியிருக்கலாம்.

தந்தை இந்த வார்த்தைகளைக் கோபப்படாமல் கேலியாகச் சொல்லி இருக்கலாம். என்றாலும் இவைகள் மகன் பேரில் நிரந்தரமான விளைவை ஏற்படுத்துகின்றன. முப்பது வருடங்களுக்குப் பின்னும் ஒரு சின்ன வேலையில் ஈடுபடும் போதெல்லாம் அவன் நம்பிக்கை அற்றவனாய் குழப்பத்திற்குள்ளாகிறான். வாழ்க்கையின் இந்தப்பகுதியில் அவன் வெற்றி அடைவதேயில்லை. எனினும் அவன் பிரச்சனையின் மூலகாரணம் திறமைக்குறைவு அன்று; தளர்ந்த நம்பிக்கையே. தன்னுடைய சிறுவயதில் அவன் தந்தை கவலீனமாய் அழித்து விட்ட நம்பிக்கையை அவன் திரும்ப எடுத்துக்கட்டவில்லை.

பெண்பிள்ளைகளும் கூட ஆண் மக்களைப் போலவே ஒரு தகப்பனாருடைய எதிர்மறையான வார்த்தைகளின் விளைவுகளினால் பாதிக்கப்படலாம். உதாரணமாக ஒரு வாலிப மகள் தன் முகத்தில் உண்டான பருக்களைப் பற்றி அதிகம் எண்ணிக்கொண்டிருக்கிறாள். அந்தப் பருக்களை மறைக்கக் கண்ணாடிக்கு முன்பாக ஒவ்வொரு நாள் காலையிலும் அநேக மணிநேரங்கள் நின்று பலவித சரும கிரீம்களைப் பூசுகிறாள். அவள் தந்தை அவளை பாடசாலைக்குக் காரில் அழைத்துச் செல்லக் காத்திருக்கும் போது குறித்த நேரத்தில் கிளம்பாததினால் மிகுந்த கோபம் அடைகிறார். ஒரு நாள் அந்த மகள் அதிக காலதாமதம் ஆனதினாலே, அவர் பொறுமையை இழந்து, "உன் நேரம் முழுவதையும் கண்ணாடி முன்பாக நின்று வீணடித்துக் கொண்டிருக்கிறாய். அந்தப் பருக்கள் உன்னை விட்டுப் போகப்போவதில்லை!" எனக் கோபத்தில் கூறுகிறார். இருபது ஆண்டுகளுக்குப் பின்பு அந்த மகள்—இப்பொழுது திருமணம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 126 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

செய்தவளாகத் தனக்குப் பிள்ளைகள் பிறந்ததற்குப் பின்பும்— தன் முகப் பருக்களை மேற்கொள்ளுவதில் வீணாய் போராடிக் கொண்டிருக்கிறாள்.

கோபமும், கசப்புமான வார்த்தைகளும்—ஒரு கணவன் தன் மனைவியிடம் பேசியதாக இருந்தாலும் சரி அல்லது ஒரு தந்தை தன் பிள்ளையிடத்தில் பேசியதாக இருந்தாலும் சரி—அவைகள் பொதுவாக நெடுநாட்களாய் வளர்ந்து வருகின்ற உள்ளார்ந்த அழுத்தத்தினாலே வெளிவருகின்றன. அது ஒரு விசிலுள்ள, தண்ணீர் கொதிக்க வைக்கும் பாத்திரத்தை அடுப்பில் வைத்தது போல் உள்ளது. ஆரம்பத்தில் எந்த வெளிப்படையான தோற்றத்தையும் காட்டாமல் அழுத்தம் உள்ளுக்குள்ளேயே அதிகரிக்கிறது. ஆனால் அந்தப் பாத்திரத்தின் உள்ளேயுள்ள தண்ணீர் கொதிநிலையை அடைந்ததும் நீராவி வெளியேற்றப்பட்டு விசில் சத்தம் உண்டாகிறது. அதற்குப் பின்பு அந்த விசில் சத்தத்தை அடக்குவதற்கு எந்த வழியுமில்லை. ஒரே வழி அந்தப் பாத்திரத்தை அடுப்பிலிருந்து எடுத்துத் தண்ணீரைக் குளிர வைப்பதேயாகும்.

கிறிஸ்தவனைப் பொறுத்தமட்டில், உடனடியாக உள்ளான ஜெபத்துடன் தேவனிடம் திரும்ப வேண்டியதின் அவசியத்தை இது உணர்த்துகிறது:"கர்த்தாவே, நான் கட்டுப்பாட்டை இழக்க ஆரம்பிக்கிறேன். என்னுடைய ஆவியை உமது கட்டுப்பாட்டிற்கு ஒப்புக் கொடுக்கிறேன். தயவுசெய்து அதைக்கட்டுப்படுத்தி அருளும்."

இல்லையெனில் எரிச்சலும் கோபமும் ஒரு மனிதனுக்குள் தொடர்ந்து வளரும்பொழுது அவைகள் இறுதியில் நீராவியைப் போல புண்படுத்தும் வார்த்தைகளில் வெளிப்படும். அவைகளைத் தொடரும் சாபம் அந்த விசிலைப் போன்றது. அது பேசப்பட்டு விட்டால் அதை நிறுத்தவே முடியாது. இதற்கான ஒரே தீர்வு ஒரு சாபம் கூறப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து அதை நீக்குவதற்கு தேவனுடைய உதவியைத் தேடுவதாகும்.

ஒரு தாயும் கூட தன் பிள்ளைகளின் மேல் அதிகாரம் செலுத்துகிறவளாய் இருக்கிறாள். அந்த அதிகாரம் அவள் தன் கணவனுடன் பகிர்ந்து கொள்வதாகவோ, அல்லது அவரால் கொடுக்கப்பட்டதாகவோ இருக்கலாம். என்றாலும் சில வேளைகளில் ஒரு தாய் தனக்குரிய நியாயமான அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் திருப்தி அடையாமல் இருக்கிறாள்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 127 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவ்வேளையில் அவள் தன்னுடைய பிள்ளைகளின் அன்பையும், உண்மையையும் பயன்படுத்தி அவர்கள் மேல் முறையற்ற கட்டுப்பாட்டை சம்பாதித்து அவர்களுடைய வாழ்க்கையின் போக்கை நிருணயிக்க முற்படுகிறாள். இது "பில்லி சூனியத்தின்" மற்றொரு உதாரணம்! இது குறிப்பாக தன்னுடைய பிள்ளைகள் அவர்களின் வருங்கால வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கின்ற வேளையில் வெளிப்படுகிறது. அந்தத் தாய் அவர்களின் தெரிந்தெடுப்பை ஒப்புக் கொண்டால் அவள் இனிமையானவளாகக் காணப்படுகிறாள். ஆனால் அவள் அதை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அவளது பண்பில் முற்றிலும் மாறுபாடான பகுதி வெளிப்படுகிறது.

வரவிருக்கும் பகுதியிலே ஒரு கணவனும், மனைவியும் அந்த மனைவியின் தாயாரால் அவர்களின் திருமண சமயத்திலே கூறப்பட்ட சாபம் எப்படி செயல்பட்டது என்பதை விளக்குகின்றனர். முதலாவது அவர்கள் அந்த சாபம் அவர்கள் ஒவ்வொருவரையும் எவ்வாறு தாக்கியது என்பதை விளக்குகின்றனர்; பின்பு அவர்கள் அந்த சாபத்தை எவ்வாறு உணர்ந்தார்கள் என்பதையும் அதிலிருந்து விடுபட எடுத்துக் கொண்ட வேதத்தின் படிகளைப் பற்றியும் விளக்குகின்றனர்.

**கணவன்**

ஒரு சாபத்தின் கீழ் வாழ்வது என்பது ஒரு புகையில் இருப்பது போன்றது : அதனுடைய விளைவுகளைக் காணமுடியும். ஆனாலும் அது ஒரு தெளிவான உருவமும், சாரமும் அற்றதாய் இருக்கிறது. நீ வெற்றியை அனுபவித்த போதிலும் நம்பிக்கை அற்றவனாகவும் மனச்சோர்வு உடையவனாகவுமே உணர்வாய்.

தேவனுடைய ஆசீர்வாதங்கள் ஏதோ தொலைதூரத்தில் பெற்றுக் கொள்ள முடியாததாய் எப்பொழுதுமே எனக்குக் காணப்பட்டது. நான் அநேக நேரங்களில் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து ஆவியின் வரங்களை செயல்படுத்தியிருக்கிறேன். என்றாலும் ஊழியத்திலும், வாழ்விலும் எப்பொழுதுமே திருப்தி காண முடியாதவனாக இருந்தேன். என் மனைவியும், பிள்ளைகளும் எப்பொழுதும் உடல்நிலை கோளாறுகளால் அவதிப்பட்டனர். (நாங்கள் தசமபாகம் ஒழுங்காக செலுத்தியும் சிக்கனமாக வாழ்ந்தும்) எங்களுக்கு



Blessing or Curse Tamil text 2012 revised.p65 128 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பணப்பற்றாக்குறையும் தொடர்ந்து இருந்தது.

தேவன் என்னை அழைத்த ஊழியத்தை நான் தெளிவாய் அறிந்து இருந்தும் என்னால் அதனுள் செல்ல முடியவில்லை. என்வேலைகள் அனைத்தும் ஓரளவிற்கே கனிதருவதாக இருந்தது. என்னால் ஒரு காரியத்தை ஆரம்பிக்க முடியும். ஆனால் அதை முடிக்க முடியாது. ஏதோ ஒரு காணப்படாத எதிர்ப்பு சக்தி என்னைத் தாக்குவதைப் போல் காணப்பட்டது.

இந்தப் போராட்டம் அநேக ஆண்டுகளாக தொடர்ந்து வந்தது. ஒரு நாள் நான் இந்த சூழ்நிலையை என்னுடன் இருந்த உடன் ஊழியர்களுக்கும், டெரிக் பிரின்சிற்கும் விளக்கலானேன். அவர்கள் என் மாமியாரிடமிருந்து ஒரு சாபம் என் குடும்பத்தில் வந்ததாக பகுத்துணர்ந்தனர். இதை என் மனைவி விளக்குகிறாள்:

**மனைவி**

என் திருமணத்தின் ஆரம்ப காலத்தில் இரண்டு நாட்களை நான் ஜெபத்திலும், உபவாசத்திலும் செலவிட்டேன். என் குடும்பத்தில் ஒரு சாபம் இருப்பதாக கர்த்தர் எனக்கு காட்டுவதை நான் உணர்ந்தேன். என் கணவரும் நானும் பரிசுத்த ஆவியானவருக்குள் புதிதாக அபிஷேகத்தைப் பெற்றிருந்தோம். நாங்கள் சாபம் என்று ஒன்று இருப்பதாக கேள்விப்பட்டது கூட கிடையாது. அதிலிருந்து விடுபட நாங்கள் முயற்சித்த முயற்சி ஒரு வெங்காயத்தின் தோல்களை உரிப்பதைப்போல் இருந்தது.

அந்த சாபம் ஒரு பில்லி சூனிய ஆவியாக என் குடும்பத்தில் சிறப்பாக என் தாயார் மூலமாகவும், மற்ற பெண்கள் மூலமாகவும் செயல்பட்டது. என் குடும்பம் நல்லொழுக்கம் உள்ளதாய் ஆலயத்திற்குச் சென்று வந்தது. ஆனால் செயல்பட்ட பில்லி சூனியம் தந்திரமாக எங்கள் குடும்பத்தில் உள்ள ஆண்களின் அதிகாரத்தை மட்டுப்படுத்துவதாகவும், குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களைக் கட்டுப்படுத்துவதாகவும் இருந்தது.

எனக்கு நிச்சயதார்த்தம் உண்டாகும் வரை என் தாயார் செலுத்திய கட்டுப்பாட்டை நான் உணரவில்லை. என் வருங்கால கணவன் பேரில் என் பாசம் திரும்பிய பொழுது அவர்களுடைய





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வளரும் மனக்கசப்பை என்னால் உணர முடிந்தது. அப்பொழுது தான் என் தாயார் என்னிடத்தில் "அவன் எந்தப் பணமும் சம்பாதிக்கப் போவதில்லை. நீ உன் வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டியிருக்கும்" என்றார்கள். நான் திருமணமான நாள் முதல் இந்த "சாபத்தை" எதிர்த்துப் போராடியுள்ளேன். வெளியே வேலையை எடுக்காமலே என்னால் சமாளிக்க முடியும் என்று காட்ட விரும்பினேன். ஆனால் எனக்கு வேலை கிடைக்காத நிலையே இருந்தது. மேலும் நானும் என் கணவரும் வளமுடன் வாழ்வோம் என்பதைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாதபடி பணப்பிரச்சனையில் இருந்தோம்.

மேலும் எனக்குத் திருமணமானதிற்குக் சற்று பின்பு என் தாயார் என்னை நோக்கி, "நீ சரீரப்பிரகாரமாக பெலன் உள்ளவள் அல்ல" என்றார்கள். யாரோ ஒருவர் என்னைத் தலையில் அடித்தது போன்று இருந்தது! அவர்கள் சொன்னது எனக்கு மிகவும் அதிர்ச்சியாய் இருந்தது. ஏனென்றால் நான் என்னை பெலவீனமுள்ளவளாகவோ, ஆரோக்கியம் குன்றியவளாகவோ ஒருபோதும் கண்டதில்லை. இதற்கு மாறாக நான் எப்பொழுதுமே ஆரோக்கியம் உள்ளவளாகவும் விளையாட்டு வீராங்கனையாகவும் இருந்து வந்துள்ளேன். ஆகவே ஒருவேளை பிழை என்னுடையது தான் என்றும் மெய்யாகவே நான் பெலவீனம் உள்ளவள்தான் என்றும் சிந்திக்கலானேன்.... இதைத் தொடர்ந்து நான் அநேக சரீரப்பிரகாரமான வியாதிகளால் அவதிப்பட்டேன். அவற்றில் சில வெகுகாலத்திற்கு நீடித்திருந்தன.

என் தாய்க்கு ஏற்பட்ட பிரச்சனையைப் போலவே நானும் என் கணவனுடன் நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இதிலே நான் திணறிப்போனேன். இது என் நம்பிக்கையை இழக்கச் செய்தது. இந்த சாபத்திலிருந்து நான் எவ்வாறு முற்றிலும் விடுதலை அடையக்கூடும்? பில்லி சூனியம் எங்கள் குடும்பத்தின் பல தலைமுறைகளைக் கட்டுப்படுத்தி செயலாற்றியிருக்கிறது. அந்த பில்லி சூனியத்துடன் தொடர்புடைய ஆவி என்னை ஆட்கொள்வதில் அதிகாரம் கொண்டுள்ளதாக நான் கண்டேன். உண்மையில் அது என்னை உரிமையாக்கிக் கொண்டது!

நான் விடுதலை அடையும்படி பிறர் எனக்கு ஊழியம் செய்த பொழுது எல்லாம் அந்த ஆவி என்னிடம், நான் முற்றிலும் விடுதலை அடையப் போவதில்லை என்று என் காதுகளில்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 130 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சொல்லும். நான் என் தாயாரையே இதற்குக் குறை கூறினேன்.... "அடுக்கடுக்கான" வெளிப்பாட்டின் மூலமும் விடுதலையின் மூலமும் என்னுடைய விரோதி என் தாயார் அல்ல எனக் காணலானேன். அவர்களை நான் மன்னித்து விட்டேன். பில்லி சூனிய சாபமே எங்கள் இருவரையும் கட்டுப்படுத்தி வந்தது என்பதை உணரலானேன்.

குறிப்பாக இந்த சாபங்களை முறிப்பதற்கான ஊழியம் எனக்குச் செய்யப்பட்டது முதல், என் பழைய எண்ணங்களையும், வழக்கங்களையும் ஒழித்துக்கட்டுவதிலே எனக்குப் போராட்டம் உண்டு என்பதைக் கற்றுக் கொண்டேன். இப்பொழுது நான் தினந்தோறும் இந்த அறிக்கையை உறுதியாகச் செய்கிறேன்: "சிலுவையின் மேல் கிறிஸ்து செய்த தியாக பலியின் மூலம் சாபத்திலிருந்து நான் கிரயத்திற்க்கு கொள்ளப்பட்டேன். தேவன் எல்லாவற்றிலும் ஆசீர்வதித்திருந்த ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசித்திருக்கிறேன்" (கலாத்தியர் 3:13–14). *கிறிஸ்து என்னை சாபத்திலிருந்து மீட்டுக் கொண்டார்!*

### கணவன்

இந்த சாபங்களை முறிப்பதற்கான ஜெபத்தை செய்து முடித்ததும் சூழ்நிலையில் "நிச்சயமான தெளிவு" ஏற்பட்டது. இத்தெளிவு அசாதாரணமாக உடனே ஏற்படாவிட்டாலும் அது உண்மையே. என் வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் உண்டானது.

நான் முன்னேற்றம் காண்கிறேன். வேதத்தின் அடிப்படையில் என் வாழ்க்கையை என்னால் கட்டுப்படுத்த முடியும் என்று உணர்கிறேன். என் குடும்பத்தில் சரியான இடத்தை இப்பொழுது வகிக்கிறேன். என் வேலையின் மூலம் கனியும், பலனும் கிடைப்பதைக் காணமுடிகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு நம்பிக்கை உண்டாகியுள்ளது. இருள் சூழ்ந்த வருங்காலத்திற்குப் பதிலாக தேவன் செய்கின்ற காரியங்களைக் குறித்த உற்சாகமும், மகிழ்ச்சியும் உண்டாகிறது. "பனி மூட்டம்" என்னை விட்டு விலகுகிறது!

இந்த மனைவியின் தாயார் அவருடைய வார்த்தைகளினால்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 131 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தன் மகள் பேரிலும் மருமகன் பேரிலும் உண்டான விளைவுகளை அறியாது இருந்தாள் என்பது கவனிக்கப்பட வேண்டியது. அவள் தானே தன் குடும்ப பின்னணியினால் வந்த ஒரு ஆவிக்குரிய சக்திக்குச் சிறைப்பட்டிருந்தாள். அது அநேக தலைமுறைகளுக்கு அந்த குடும்பத்தைப் பாதித்திருக்கக்கூடும். அதனுடைய கட்டுப்பாட்டிலிருந்து அவளுடைய மகள் விடுதலையடைய தேவனுடைய இரக்கம் ஒரு வழியை உண்டாக்கி இருந்தது.

அதிகார உறவுகள் முக்கியமானதாகக் காணப்படும் மற்றொரு பகுதி பாடசாலை வாழ்க்கையாகும். மாணவர்கள் மேல் ஒரு ஆசிரியருக்கு இருக்கும் அதிகாரம், ஒரு பெற்றோருக்குத் தன் பிள்ளைகள் மேல் இருக்கும் அதிகாரத்தைப் போன்று தெளிவாக வரையறுக்கப்பட்டதாக இல்லையாயினும் ஒரு மாணவனிடம் ஒரு ஆசிரியர் பேசிய எதிர்மறையான வார்த்தைகள் ஒரு பெற்றோர் பேசிய வார்த்தைகளைப் போன்றே கேடான விளைவுகளை தோற்றுவிக்கக்கூடும். உதாரணமாக கற்றுக் கொள்வதில் மந்தமான, பாடத்தில் கவனம் செலுத்தாத ஒரு மாணவனிடத்தில் ஓர் ஆசிரியர் எரிச்சல் அடைந்து இவ்வாறு சீறக்கூடும்: "உன்னால் சரியாகவே படிக்க முடியாது!" அல்லது "நீ எப்பொழுதும், எதையும் தவறாகவே செய்வாய்; நீ வெற்றியே காணமாட்டாய்!" எனலாம்.

அந்த ஆசிரியர் இப்படிப்பட்ட வார்த்தைகளில் உள்ள ஆபத்தை அறியாதே இருக்கிறார். மாணவர்களின் பிற்கால வாழ்க்கையில் அவைகள் உண்டாக்கக்கூடிய விளைவை அவர் உணராது இப்படி பேசுகிறார். எனினும் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியர் பேசின வார்த்தைகளின் விளைவை வாழ்நாள் முழுவதும் எதிர்த்துப் போராடிய முதிர்ச்சி அடைந்த ஆண்களையும், பெண்களையும் நான் சந்தித்திருக்கிறேன். பக்தி நிறைந்த ஒரு கிறிஸ்தவப் பெண் நாற்பது ஆண்டுகளாகத் தாழ்வு மனப்பான்மையினால் தாக்கப்பட்டு வந்ததை நான் நினைவு கூறுகிறேன். அவளுடைய ஆசிரியை அவளை நோக்கி "நீ ஒன்றுக்கும் உதவமாட்டாய்!" என்று பல ஆண்டுகளுக்கு முன்பு சொல்லியிருந்தார்கள். உண்மையில் இப்படிப்பட்ட வார்த்தைகள் யார் பேரில் சொல்லப்பட்டாலும் அவைகள் அதன் பலனை உடையதாய் இருக்கும்.

உறவுகளின் அடிப்படையில் அதிகாரத்தைச் செலுத்தும் மக்களினால் பேசப்பட்ட வார்த்தைகளில் உள்ள கேடான



Blessing or Curse Tamil text 2012 revised.p65 132 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

விளைவின் ஆற்றலைப் பற்றிய உதாரணங்களை மேலே குறிப்பிட்டோம். குறிப்பிட்ட சில உறவுகள் உதாரணத்திற்கு என்று தெரிந்தெடுக்கப்பட்டவை: கணவன், தந்தை, தாய், பாடசாலைஆசிரியர் என்பதாகும். இந்த அதிகாரமுள்ள மக்கள் அதைப் பயன்படுத்தும் விதத்தில் ஒரு அடிப்படைப் பண்பு உள்ளது. அவர்கள் கூறியதைச் சுருக்கமாகக் கூறினால் "உன் வழி எப்பொழுதுமே தவறானது. வெற்றிக்கும் உனக்கும் வெகுதூரம்!" என்பதாகும்.

நிச்சயமாக மோசே இஸ்ரவேல் மக்களுக்கு "நியாயப்பிரமாணத்தின் சாபம்" செயற்படுவதை விளக்குவதற்கு இதே வார்த்தைகளைச் சரியாக பயன்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது: "உன் வழிகளில் ஒன்றும் உனக்கு வாய்க்காதேபோம்" (உபாகமம் 28:29). என்னைப் பொறுத்தமட்டில் இப்படிப்பட்ட வார்த்தைகளை யாராவது பேசக் கேட்டால் ஒரு சாபம் கூறப்படுகிறது என்ற சாத்தியக்கூறு இருப்பதினால் என்னை எப்பொழுதும் பாதுகாத்துக் கொள்கிறேன்.

அதிகாரத்தைச் செலுத்தும் மற்றொரு முக்கிய பகுதி மதம் ஆகும். சில குறிப்பிட்ட பதவியை வகிப்பவர்களுக்கு இதில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர்கள் வகிக்கும் பதவியின் அதிகாரத்தைப் பொறுத்து அவர்களின் வார்த்தைகள் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ ஏதுவான ஆற்றல் உடையதாய் இருக்கிறது. ஐரோப்பாவில் அநேக நூற்றாண்டுகளாக ரோம கத்தோலிக்க திருச்சபையின் போப்புகள் தங்களின் "தடையை" (அதாவது, சாபத்தை) ஒரு பிரதான ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தனர். மதவிரோதிகள் என அவர்கள் கருதுபவர்கள் அனைவர் மேலும் இத்தடையை விதித்தனர். போப்பினுடைய இத்தடையின் விளைவுகளைப் புறக்கணித்து விட்டு ஐரோப்பாவின் சரித்திரம் முழுவதையும் சரியாக எழுதுவது என்பது முடியாததொன்று. நாடுகளை ஆட்சி செய்தவர்கள் கூட உண்மையான போர் முழக்கத்தை விட இத்தடைக்கு அதிகமாக பயந்துள்ளனர்.

புராட்டஸ்டண்ட் திருச்சபைப் பிரிவில் எந்தத் தனி நபரும் போப்பிற்கு நிகரான அதிகாரத்தைப் பெற்றதில்லை. என்றாலும் திருச்சபை ஊழியர்கள் தங்கள் அதிகாரத்தைத் தவறுதலாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புண்டு. சில அங்கத்தினர்களை மட்டுமே கொண்ட ஒரு சிறிய "தனிப்பட்ட" சபையின் போதகர்கூட



Blessing or Curse Tamil text 2012 revised.p65 133 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சாபத்தை விளைவிக்கும் வார்த்தைகளைப் பேசக்கூடும்.*

*வியாபாரத்தில் சிறந்த அனுபவம் பெற்ற ஒருவர் என் நினைவிற்கு வருகிறார். அவரை நாம் ஃபிராங் என்று அழைப்போம். அவர் என்னிடம் ஆலோசனைக்காக வந்தார். சோகம் நிறைந்த பத்து ஆண்டுகளை எதுவுமே சரியாக வாய்க்காத நிலையில் கழித்தவர். அவர் தன் மனைவியையும், குடும்பத்தையும் காப்பாற்ற முடியாமல் அவதிப்பட்டவர். ஃபிராங்கிற்குக் காரியங்கள் தவறாகச் செல்ல ஆரம்பித்த நேரத்தில் நான் அவரைப் பார்த்து அவருடைய வாழ்க்கையில் ஏதாவது சம்பவித்ததா என்று கேட்டேன். அவரும் அவரது குடும்பமும் ஒரு சிறிய தனிப்பட்ட சபைக்குச் சென்று வந்த நாட்களை அப்பொழுது அவர் நினைவு கூர்ந்தார். போதகருடன் பல காரியங்களில் அவர்களுக்குக் கருத்து வேற்றுமை ஏற்பட்டதினால் அவர்கள் அந்த சபையிலிருந்து விலகினர்.*

*அந்தக் குடும்பம் அந்த சபைக்கு அதிகமாகப் பணம் கொடுத்து வந்ததால் அந்தப் போதகர் பாதுகாப்பற்ற நிலையில் பயத்துடன் செயற்பட்டார். இறுதியாக ஃபிராங்கும் போதகரும் —இரு தரப்பினரும்—கடுங்கோபத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தனர். கடைசியில் போதகர் "தேவன் உங்களை இந்த சபையில் வைத்திருக்கிறார். நீங்கள் வெளியேறுவீர்களானால் அவருடைய சித்தத்தை விட்டு விலகிச் செல்வீர்கள். அதற்குப் பின்பு ஒன்றுமே உங்களுக்குச் சரியாய் இராது!" என்று கூறினார்.*

*நிச்சயமாகவே அந்நாளிலிருந்து ஃபிராங்கிற்கு எதுவுமே சரியாக வாய்க்கவில்லை. அதிர்ஷ்டவசமாகத் தன் துயரத்திற்கான காரணத்தை அவர் அறிந்த கொண்ட பொழுது போதகர் இட்ட சாபத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவரால் முடிந்தது. ஆனால் முதலாவது அவர் போதகரை மன்னித்து அவர்களுக்கு இடையே உள்ள காரியங்களை சரிசெய்ய வேண்டியதாய் இருந்தது. அதற்குப் பின்பு ஃபிராங்கின் வாழ்க்கை முன்னேற ஆரம்பித்தது.*

*ஃபிராங்கினுடைய சம்பவம் அசாதாரணமானதல்ல. நான் சந்தித்த மக்களில் இதே போன்ற அனுபவங்களில் கடந்து வந்தவர்களின் எண்ணிக்கை அதிசயிக்கச் செய்யும் அளவிற்கு அதிகமாய் உள்ளது. இவைகளில் கொஞ்சமும் மாற்றமில்லாமல்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 134 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

போதகர் இவ்வாறாகவே கூறியுள்ளார்:"தேவன் உங்களை இந்த சபையில் வைத்திருக்கிறார். நீங்கள் வெளியேறுவீர் களானால் செழிப்படையமாட்டீர்கள்!" (இவைகள் பழக்கப்பட்ட வார்த்தைகள்!) ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இந்த இரு சாராருக்கும் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ள தேவன் ஒரு தீர்வை வைத்திருந்தார்..

1985 ஆம் ஆண்டு நான் ஆஸ்திரேலியாவில் ஊழியம் செய்த போது 3 நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வந்த ஒரு சாபத்தின் விளைவுகளைக் கண்டேன். ஒரு பெண்—அவளை மார்கிரேட் என்று அழைப்போம்—அவள் ஆசீர்வாதங்கள் சாபங்கள் என்ற தலைப்பில் என்னுடைய போதனையைக் கேட்டாள். என்னுடைய செய்தியின் இறுதியிலே தன் குடும்பத்தில் ஒரு சாபம் செயல்படுவதற்கானத் தெளிவான அடையாளம் இருப்பதைக் கண்டு கொண்டாள். மார்கிரேட்டும் மற்ற அநேகருடன் எழுந்து நின்று விடுதலைக்கான ஜெபத்தைத் திரும்பச் சொன்னாள். பின்பு அந்த சாபத்திற்கான பின்னணியைக் குறித்த ஒரு கடிதத்தை எனக்கு எழுதினாள்.

அவளுடைய முன்னோர்கள் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த "நிக்சான்" இனத்தைச் சார்ந்தவர்கள். 1600 ஆம் ஆண்டு காலத்திலே இந்த இனத்தவர் ஸ்காட்லாந்து நாட்டிற்கும், இங்கிலாந்து நாட்டிற்கும் இடையே ஏற்பட்ட எல்லை யுத்தங்களில் ஈடுபட்டிருந்தனர். இதன் விளைவாக ஸ்காட்லாந்து பிஷப் (இங்கிலாந்து நாட்டாரால் நியமிக்கப்பட்டிருந்தவர்) ஒரு சாபத்தை நிக்சான் இனம் முழுவதின் மேலும் கூறினார். மார்கிரேட் அந்த சாபத்தின் ஒரு பிரதியைச் சேர்த்து அனுப்பியிருந்தாள். அதில் மற்ற காரியங்களோடு அந்த இனத்தவர்கள் தூக்கில் இடப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டு நான்கு துண்டுகளாக துண்டிக்கப்பட வேண்டும் * என்றும் பின்பு அவர்களின் மாம்சம் நாய்களுக்கும் பன்றிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்றும் எழுதப்பட்டு இருந்தது. இந்த இனத்தார் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட பின்பு உயிருடன் பிடிபட்டவர்களுக்கு இந்தத் தண்டனை திட்டமாய் நிறைவேற்றப்பட்டது.

* முதலாவது அவர்கள் தூக்கில் இடப்பட்டனர். பின்பு அவர்களின் சரீரங்கள் குதிரை அல்லது மற்ற மிருகங்களினால் தெருக்களில் இழுத்துச் செல்லப்பட்டன. இறுதியில் அவைகள் நான்கு துண்டுகளாகத் துண்டிக்கப்பட்டன.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 135 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு நான் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிய போது மார்கிரேட்டைச் சந்தித்தேன். அதற்குப் பின்பு அவள் கீழ்க்கண்ட கடிதத்தை எழுதினாள்:*

> *எனக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்ததற்காய் மிக்க நன்றி. நீங்கள் மெல்போனில் இருந்த பொழுது எங்களுக்கு தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தையைக் கூறினீர்கள். அந்த சாபத்திலிருந்து விடுபட்ட நாளிலிருந்து எங்கள் குடும்பத்தில் மாற்றம் ஏற்பட்டதா எனக் கேட்டீர்கள். நான் உங்களோடு பேசிய பொழுது எனக்கு அதைச் சொல்ல நேரமில்லை. ஆனால் என் முழுக்குடும்பமும்—என் கணவர், என் இரு பெண் மக்கள் (வயது 24,23), 21 வயதுள்ள என் மகன்—ஆகிய அனைவரும் கடந்த இரண்டு ஆண்டுகளில் இரட்சிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் இப்பொழுது இங்கு மெல்போனில் உள்ள ஒரு பூரண சுவிசேஷ சபையில் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்துள்ளோம்.*

*இது சாபத்தின் வல்லமை நீக்கப்பட்டதைக் குறிக்கும் அற்புதமானதோர் சாட்சி! இது மார்கிரேட்டின் இனத்தை 3 நூற்றாண்டுகள் பாதித்திருக்கிறது. உலகத்தில் பிரிட்டன் முதல் ஆஸ்திரேலியா வரை பரவியிருக்கும் மார்கிரேட்டின் கிளையைச் சார்ந்த மக்களை இது பாதித்துள்ளது. மார்கிரேட்டின் குடும்பத்திற்கு தேவனுடைய ஆசீர்வாதம் வராதபடி தடுத்து வந்த இந்த சாபமானது கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்ட பொழுது அவளுடைய குடும்பத்தினர் அனைவரும் இரட்சிப்பிற்குள் வந்தனர்.*

*இயற்கையாகவே இது ஒரு கேள்வியை எழுப்புகிறது:* ***கண்டு பிடிக்கப்படாத ஒரு சாபத்தினால் இன்னும் எத்தனை குடும்பங்கள் இரட்சிப்பிற்குள் வராமல் தடுக்கப்பட்டுள்ளன?***



Blessing or Curse Tamil text 2012 revised.p65 136 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

12

# தனக்குத் தானே இட்ட சாபங்கள்

*கடந்த அத்தியாயத்தில் கூறப்பட்ட உதாரணங்களுள் ஒன்றில் ஜேக் தன் மனைவியைப் பார்த்து, "நீ பரிமாறும் உணவினால் நான் சுகவீனமானேன்" என்று கூறியதைக் கேட்டோம். இவ்விதமாக அவர் சொன்ன வார்த்தைகளினால் தனக்கே தெரியாத நிலையில் உணவு செரிக்காத சாபத்தைத் தன் மேல் அவர் வரவழைத்துக் கொண்டார். அது அவரை வாழ்நாள் முழுவதும் பாதிக்கலாயிற்று.*

*இந்த உதாரணத்தை மனதிற்கொண்டு தனக்குத் தானே இட்ட சாபங்களைப் பற்றி முழு விளக்கமாய்க் காண்போம். நம்முடைய சொந்த முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள நம் எல்லாருக்குமே இது முக்கியமானது. நம்மைப் பற்றி நாம் பேசக்கூடிய வார்த்தைகளின் தீய சக்தியை, இது ஒப்பற்ற முறையில் எடுத்துக்காட்டுகிறது. இவைகள் அநேக நேரங்களில் அதைப் பேசியவர்களையே திரும்பி வந்து ஓர் ஏவுகணையைப் போலத் தாக்குகிறது.*

*மத்தேயு* 12:36–37*ல் இயேசு வீணாய் பேசப்பட்ட வார்த்தைகளினால் வரும் அபாயத்தைக் குறித்து எச்சரிக்கிறார்:*

> "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
>
> ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று



Blessing or Curse Tamil text 2012 revised.p65 137 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்."

*இயேசு இங்கு "பயனற்ற வார்த்தைகளைக்" குறித்துப் பேசுகிறார். இவைகள் முன் யோசனையின்றி வீணாய் பேசப்படுபவை. பெரும்பாலான நேரங்களில் ஒரு மனிதன் அறிவற்ற தன்மையிலே தன்னைக் குறித்தே எதிர்மறையாகப் பேசி முடித்துவிட்டு "ஆனால் இதை நான் யதார்த்தமாக வெறுமனே சொன்னேன்" என்று சொல்வதுண்டு. இருப்பினும் இப்படிப்பட்ட நிலையில் "அர்த்தம் உணராது சொல்லப்பட்ட" வார்த்தைகளைக் குறித்தே இயேசு நம்மை எச்சரிக்கிறார். அதைப் பேசியவர் "அர்த்தத்தை உணராது பேசியிருக்கலாம்;" என்றாலும் அது அவர் பேசிய வார்த்தைகளின் விளைவை குறைக்கவோ, நீக்கவோ செய்வதில்லை. அதற்கு அவர் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதிலிருந்து அவர் விடுபடுவதில்லை.*

*நீதிமொழிகள் 6:2ல் சாலொமோன் தன்னுடைய அயலகத்தானுக்கு ஞானமற்ற நிலையில் பாதுகாப்பைக் கொடுக்க வாக்களித்த ஒருவனைப் பற்றி "நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய்" என்று கூறுகின்றார். அநேகர் "தங்கள் வாயின் வார்த்தைகளினாலே பிடிபடுகிற" எண்ணிலடங்கா வழிகளில் இது ஓர் உதாரணம் மாத்திரமே. நாம் உணராத நிலையிலே கூட இப்படிப்பட்ட வலையில் அகப்படக்கூடும். ஆனால் இதிலிருந்து விடுபட நாம் வேதத்தின் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். தேவன் நம்மைவிட நமது வார்த்தைகளுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.*

*மாற்கு 14:66–72ல் பிரதான ஆசாரியனின் பிராகாரத்தில் பேதுரு மூன்று தடவைகள் தான் இயேசுவின் சீடன் என்பதை மறுதலிக்கிறான். மூன்றாம் முறை மறுதலிக்கும் போது அவன் "சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்குகிறான்." வேறு வார்த்தைகளில் சொன்னால் தன் மேலேயே ஒரு சாபத்தை அவன் வரவழைத்துக் கொள்கிறான்.*

*பேதுரு இதைக் குறித்து உடனே மனம் கசந்த பொழுதிலும் தன் சொந்த வார்த்தைகளினால் உண்டான*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 138 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

விளைவைச் சரியாகப் புரிந்து கொண்டானா என்பது சந்தேகம் தான். மூன்று நாட்களுக்குப் பின்பு காலியான கல்லறைக்கு வந்த பெண்களைத் தேவ தூதர்கள் பார்த்து "நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும், பேதுருவினிடத்திற்கும் போய்: அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" (மாற்கு 16:7) என்றனர். பேதுரு சீஷர்களுள் ஒருவனாக இங்கு கருதப்படவில்லை. தன் சொந்த வார்த்தைகளினாலேயே இயேசுவிற்கு சீஷனாய் இருக்கும் சிலாக்கியத்தை அவன் இழந்து விடுகிறான்.

பின்பு யோவான் 21:15–17ல் கலிலேயா கடல் அருகில் கிருபையாக இயேசு பேதுருவை மீண்டும் சீஷனாக மாறும்படி செய்கிறார். மூன்று தடவை பேதுருவைப் பார்த்து, "நீ என்னை நேசிக்கிறாயா?" எனக்கேட்கிறார். ஒவ்வொரு தடவையும் பேதுரு "ஆம்" என்று சொன்ன பொழுதிலும், இயேசு இந்தக் கேள்வியை மூன்று முறை கேட்டதினால் அவன் துக்கமடைந்தான். பேதுரு அதற்கு முன்பு செய்த மறுதலிப்புகளை இப்படி செய்ததின் மூலம் இயேசு இரத்து செய்கிறார் என்பதை அவன் உணரவில்லை. ஒவ்வொரு முறை அவன் செய்த தவறான அறிக்கைக்கும் சரியான அறிக்கையைச் செய்யும்படி அவர் செய்கிறார். இதன் அடிப்படையில் அவன் ஒரு சீடனாக மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றான்.

பேதுருவிடம் இயேசு நடந்து கொண்ட விதத்திலிருந்து தவறான அறிக்கையின் வலையிலிருந்து விடுபடுவது எப்படி என்பதற்கான ஒரு சிறந்த மாதிரியைக் கற்றுக் கொள்கிறோம். இதில் மூன்று படிகள் உள்ளன : மனம்திரும்பு—இரத்து செய்—மாற்றி கூறு. முதலாவதாக நாம் தவறான அறிக்கை செய்தோம் என்று ஏற்றுக் கொண்டு அதிலிருந்து மனம் திரும்ப வேண்டும். இரண்டாவதாக நாம் கூறினதை முறித்துப் போட வேண்டும்—நாம் தவறாக எதையெல்லாம் சொன்னோமோ அதை நீக்கிப் போட வேண்டும். மூன்றாவதாக தவறான அறிக்கைக்குப் பதிலாக சரியான அறிக்கை செய்ய வேண்டும். விசுவாசத்தில் செய்யப்பட்ட இந்த மூன்று படிகளும் நம்மை வலையிலிருந்து விடுபடச் செய்யும்.

ஆதியாகமம் 27:12–13 வசனங்கள் தன் மேலேயே இட்ட சாபத்திற்கு இன்னொரு உதாரணம்: ரெபெக்காள் தனது



Blessing or Curse Tamil text 2012 revised.p65 139 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*குமாரன் யாக்கோபிற்கு அவனுடைய கண் தெரியாத தகப்பனார் ஈசாக்கிடத்தில், (அவர் தனது மூத்த மகனாகிய ஏசாவிற்கு கொடுக்க இருந்த) ஆசீர்வாதத்தை ஏமாற்றிப் பெற்றுக் கொள்ளும்படி கூறுகிறாள். யாக்கோபிற்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள ஆசைதான். ஆனால் ஏமாற்றுவதில் கண்டுபிடிக்கப்பட்டால் வரும் விளைவுகளைக் குறித்து அவன் பயப்படலானான்.*

> "ஒருவேளை என் தகப்பனார் என்னைத் தடவிப் பார்ப்பார். அப்பொழுது அவருக்கு நான் எத்தனாய்க் காணப்படுவேன். அதனால் என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தையே வரவழைத்துக் கொள்வேன் என்றான்.
>
> இதற்கு உடனே இரெபெக்காள் என் மகனே, உன் மேல் வரும் சாபம் என் மேல் வரட்டும்" என்றாள்.

*யாக்கோபிற்கு ஆசீர்வாதத்தைப் பெறும்படியான இரெபெக்காளின் திட்டம் வெற்றி கண்டது. ஆனால் அவளுடைய சொந்த வார்த்தைகள் வெற்றியின் பலனை அவள் அனுபவிக்க முடியாதபடி சாபத்தை உண்டாக்கியது. அவளுடைய மனப்பான்மை உடனடியாக நம்பிக்கையற்றதாகவும் பிற்போக்குடையதாகவும் மாறியது. சில நாட்களுக்குப்பின் அவள் ஈசாக்கைப் பார்த்து, "ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன?" என்றாள் (ஆதியாகமம்* 27:46).

*உடனே தானே யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்குப் பயந்து தன் வீட்டைவிட்டு இருபது ஆண்டுகளுக்கு வெளியே செல்ல வேண்டியதாயிற்று. இதற்குப் பின்னான இரெபெக்காளின் வாழ்க்கையைப் பற்றி வேதம் ஒன்றும் சொல்லவில்லை. அவள் எப்பொழுது மரித்தாள், எவ்வாறு மரித்தாள் என்றும் கூறவில்லை. இருப்பினும் அவள் யாக்கோபிற்கு தான் வஞ்சகமாகப் பெற்றுத் தந்த ஆசீர்வாதத்தை அவன் அனுபவிப்பதை அவளால் காணமுடியாமற் போயிற்று.*

*பல ஆண்டுகளாக அநேகம் மக்கள் இரெபெக்காளைப்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 140 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

போலவே பேசுகிறதை நான் கேட்டிருக்கிறேன்: "வாழ்க்கையே வெறுத்துப் போயிற்று ... எதுவும் சரியாக இல்லை ... என்ன பலன்? ... நான் தளர்ந்து போனேன்! ... நான் மரித்திருந்தால் நலமாயிருக்கும் ...." என்று பலர் அடிக்கடி கூறுகின்றனர். என்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் இப்படிப்பட்ட வார்த்தைகள் அவற்றைப் பேசுகிறவர்களின் வாழ்க்கையில் தன் மேலேயே இடப்பட்ட சாபமாக செயலாற்றுகிறது என்பதை நான் கற்றுக் கொண்டேன்.

மத்தேயு 27:20–26 வரையுள்ள வசனங்கள் வருங்காலத்தில் தொடர்ந்து துயரத்தை விளைவிக்கும் தன்மேல் இடப்பட்ட சாபத்திற்கு உதாரணமாய் உள்ளது. தான் வழங்க இருந்த சொந்த நியாயத்தீர்ப்புக்கு விரோதமாக ரோம அதிபதியான பிலாத்து, பரபாஸ் எனப்பட்ட கொலையாளியை மக்களுக்காக விடுதலை செய்யவேண்டியதாயிற்று. பரபாசுக்குப் பதில் இயேசுவை அவன் மரண தண்டனைக்குட்படுத்துகிறான். எனினும் இந்த செயலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும்படி மக்களுக்கு முன்பு தன்னுடைய கைகளைக் கழுவி "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்" என்று கூறுகின்றான்.

இதற்கு அந்த மக்கள் "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று கூறுகின்றனர்.

இந்த வார்த்தைகள் இரண்டு விதமான சாபத்தை தோற்றுவித்தன: (1) தங்கள் மேலேயே தாங்கள் வருவித்துக் கொண்ட சாபம்; (2) அவர்களுடைய சந்ததியினர் மேல் அவர்கள் வருவித்துக் கொண்ட சாபம். சரித்திரத்தின் ஏடுகள் இவ்விரு சாபங்களும் அவர்கள்மேல் செயல்பட்டதை உறுதி செய்கிறது. ஒரு தலைமுறையிலேயே ரோம இராணுவம் எருசலேமை அழித்தது; மக்கள் அடிமைகளாய் விற்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர்.

அந்த நாளிலிருந்து பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு இரத்தம் சிந்துதலும் கொடூரமும் யூத மக்களைத் தொடர்ந்து மாறி மாறி தாக்கி வருகிறது. திட்டமிடப்பட்டு ருசிய நாட்டில் பல யூதர்கள் கொல்லப்பட்டனர். யூதர்கள் தங்களுக்கு விடுதலை செய்யும்படி தெரிந்து கொண்ட பரபாசைப் போல் அஞ்ஞான



Blessing or Curse Tamil text 2012 revised.p65 141 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆட்சியாளர்கள் செயல்பட்டு மீண்டும் மீண்டும் பல நிகழ்ச்சிகளில் ஆதரவற்ற இஸ்ரவேலர்களைக் கொடுமைப்படுத்தி வந்துள்ளனர்.

தேவனுக்கு நன்றி. அது முடிவன்று! தேவன் அவர்களின் மனந்திரும்புதலையும், அவர்கள் தங்கள் பழைய நிலைக்குத் திரும்புவதற்கான வழியையும் வகுத்துள்ளார். அவருடைய எல்லையற்ற ஞானத்தினாலும், அற்புத இரக்கத்தாலும் குற்றவாளியாக அவர்களுக்காக மரித்த இயேசுவின் மூலம் சாபத்தின் விளைவுகளிலிருந்து அவர்கள் தப்பும்படி வழி வகுத்தார். பதினேழாம் அத்தியாயம் இதை விரிவாய் விளக்குகிறது.

முன்பு எட்டாம் அத்தியாயத்தில் தேவன் ஆரம்பத்தில் ஆபிரகாமை அழைத்து ஆசீர்வதித்த போது அவனை சபிப்பவர்கள் அனைவர் மேலும் ஒரு சாபம் வரும் எனக்கூறியதைப் பார்த்தோம். பின்பு இந்த சாபமானது ஈசாக்கு, யாக்கோபு ஆசீர்வதித்த பொழுது உறுதி செய்யப்பட்டது. பிலேயாம் இஸ்ரவேலர்களை ஒரு நாடாக அவர்கள் மேல் தீர்க்கதரிசன ஆசீர்வாதத்தைக் கூறியபோது மீண்டும் இது உறுதிசெய்யப்பட்டது. இவ்வாறாக தேவன் யாக்கோபிற்கும், அவன் சந்ததியாராகிய யூத மக்களுக்கும் அவர்கள் மேல் சாபத்தை இட நினைத்த அனைவரிடமிருந்தும் பாதுகாப்பை அளித்துள்ளார். எனினும் பின்னான சரித்திரம் தேவனால் கூட தம் மக்களைப் பாதுக்காக்க முடியாத ஒருவித சாபம் உள்ளது என்று வெளிப்படுத்துகிறது. அது அவர்கள் தாங்களே தங்கள் மேல் இட்ட சாபம் ஆகும்.

இவ்வாறாகவே ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குச் சுதந்திரவாளிகளான பிற இனத்தவரான கிறிஸ்தவர்கள் மேல் இயேசு கிறிஸ்துவினால் உண்டாக்கப்பட்ட புதிய உடன்படிக்கையினால் ஆசீர்வாதம் வரக்கூடியதாயிற்று. இந்த உடன்படிக்கையின் பயனாக வெளிப்புறத்திலிருந்து வரும் எந்த சாபத்திலிருந்தும் தேவ பாதுகாப்பை உண்டாக்கும் உரிமை ஏற்பட்டது. எனினும் தேவனாலேயே பாதுகாப்பு அளிக்க முடியாத ஒருவித சாபம் உண்டு. அது கிறிஸ்தவர்கள் தங்கள் மேலே இட்ட சாபங்கள்.

இப்படியாகக் கிறிஸ்தவர்கள் எங்கு ஆரம்பமானது என புரிந்து கொள்ளாத நிலையில் அடிக்கடி பலவித பிரச்சனைகளைத் தங்கள் மேல் வருவித்துக் கொள்கின்றனர். தங்களைப் பற்றி



Blessing or Curse Tamil text 2012 revised.p65 142 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

எதிர்மறையான வார்த்தைகளைப் பேசுவதின் மூலம் அவர்கள் ஆசீர்வாதங்களிலிருந்துத் தங்களை நீக்கி சாபங்களுக்குள் உட்படுத்துகின்றனர்.

இதற்கும் இஸ்ரவேலின் சரித்திரம் ஒரு நல்ல உதாரணமாய் உள்ளது. எண்ணாகமம் 13, 14ம் அதிகாரங்களில் மோசே தேவன் இஸ்ரவேலர்களுக்குச் சுதந்திரமாக வாக்குப்பண்ணின கானான் நாட்டை வேவு பார்க்கும்படி பன்னிரண்டு கோத்திரத் தலைவர்களை அனுப்புகிறார். அவர்களில் இருவரான யோசுவாவும், காலேபும் நல்ல பதிலைக் கொண்டு வருகின்றனர்:"நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம்; நாம் அதை எளிதில் மேற்கொள்ளலாம்" என்றனர். மற்றப் பத்து பேரும் இராட்சதர்களைப் பற்றியும் அரணிப்பான பட்டணங்களைப் பற்றியும் எண்ணி, எதிர்மறையான அறிக்கையைக் கூறுகின்றனர். அவர்களின் முடிவு என்னவென்றால்: "நாம் போய் அந்த மக்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள்" என்பதாகும்.

நாளடைவில் கர்த்தர் தமது நியாயத்தீர்ப்பை வழங்கினார். எதிர்மறையான அறிக்கையைச் செய்த எல்லா இஸ்ரவேலர்களுக்கும் தேவன் கூறியதாவது: "நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் எனக்கு விரோதமாய் முறுமுறுத்த உங்கள் பிரேதங்கள் இந்த வனாந்தரத்தில் விழும்" என்றார். அவிசுவாசிகளான வேவுக்காரர்களின் பிரேதங்களே முதலில் வனாந்தரத்தில் விழுந்தன. அதற்கு மாறாக, கர்த்தர் யோசுவாவிற்கும், காலேபிற்கும் அவர்கள் செய்த முற்போக்கான அறிக்கையின் படியே அந்த நாட்டைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று வாக்களித்தார்.

அந்த வேவுக்காரர்கள் அனைவரும்—விசுவாசிகளும், அவிசுவாசிகளும்—தங்களைப் பற்றி அவர்கள் பேசின வார்த்தைகளின் மூலம் தங்களின் சொந்த முடிவைத் தாங்களே தீர்மானித்துக் கொண்டார்கள். "நம்மால் அந்த நாட்டிற்குள் பிரவேசிக்க முடியும்" என்று சொன்னவர்கள் அதில் பிரவேசித்தார்கள். "நம்மால் முடியாது" என்று சொன்னவர்கள் அதில் பிரவேசிக்கவில்லை. அவர்கள் சொன்ன



Blessing or Curse Tamil text 2012 revised.p65 143 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*வார்த்தையின்படியே தேவன் செய்தார். அவர் மாறி விடவில்லை! இஸ்ரவேலர்களுக்குச் சொன்னது போலவே கிறிஸ்தவர்களுக்கும், தேவன் இன்றும் "நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன்" என்று சொல்கிறார்.*

*முன்பு ஐந்தாம் அத்தியாயத்தில் ஒரு சாபத்தின் அடையாளங்களாய் இருக்கக்கூடிய ஏழு பண்புகளையும், நிபந்தனைகளையும் வரிசைப்படுத்திக் கூறினோம். பெரும்பாலான வேளையில் மக்கள் தங்களைப் பற்றி பேசுகின்ற விதம் இந்த நிபந்தனைகளுக்கு அவர்களை உட்படுத்துகிறது. அவர்கள் அதைப் புரிந்து கொள்ளாவிடினும் உண்மையில் அந்த சாபங்கள் அவர்கள் மேலேயே கூறப்படுகின்றன. இதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவர்கள் பயன்படுத்தி வரும் தவறான பேச்சு முறைகளை உணர்ந்து அவற்றைத் தவிர்த்து அதற்குப்பதில் சரியான பேச்சைப் பேசும் முறையைக் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*ஒரு சாபத்தை விளக்கக்கூடிய ஏழு நிபந்தனைகளை மீண்டும் கீழே வரிசைப்படுத்தியுள்ளோம். ஆனால் ஒவ்வொரு தலைப்பின் கீழும் மக்களைச் சாராதணமாக அந்த சாபத்திற்கு உட்படுத்தும் பேச்சுமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன. இந்த சில உதாரணங்களிலிருந்து எவ்வாறு நாம் பேசும் பாணியை திருத்திக் கொள்ளவேண்டும் என்றும், எவ்விதமான பேச்சு நமக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியவை என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம். எங்களைப் பொறுத்தமட்டில், ரூத்தும், நானும் அதில் அதிக விழிப்புள்ளவர்களாய் நாங்கள் எதைப் பேசினாலும் அதில் மிகுந்த சுயகட்டுப்பாட்டைச் செலுத்தக் கற்றுக்கொண்டோம்.*

### *1. மனது அல்லது உணர்ச்சி தளத்தில் உண்டாகும் நிலைகுலைவு*

"இது என்னைப் பைத்தியக்காரனாக்குகிறது!"
"இதற்கு மேல் என்னால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை."
"இதை யோசித்தாலே பித்து பிடிக்கிறது...."

### *2. மீண்டும் மீண்டும் வரும் நீங்காத நோய்கள் (சிறப்பாக பரம்பரை நோய்கள்)*

"ஊரில் காய்ச்சல் வந்தால் அது என்னைப் பிடிக்கிறது."



Blessing or Curse Tamil text 2012 revised.p65 144 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"எனக்கு சுகமில்லை களைப்பாய் இருக்கிறது...."

"இது எங்கள் குடும்பத்தில் தொடர்ந்து வருகிறது. ஆகையால் அடுத்தது எனக்குத் தான் வரும் என்று எண்ணுகிறேன்."

### 3. மலட்டுத்தன்மை, கருச்சிதைவு ஏற்படுதல் அல்லது பெண்களுக்குரிய பிரச்சனைகள்

"நான் கருத்தரிப்பேன் என்று தோன்றவில்லை!"

"மீண்டும் "சாபம்" என்னில் வந்தது."

"இதை நான் மீண்டும் இழக்கப்போகிறேன் - இப்படி இழப்பதே என் வழக்கம்!"

### 4. திருமணத்தின் முறிவும், குடும்பத்தின் பிரிவும்

"சோதிடக்காரன் என் கணவர் என்னைவிட்டுப் போய் விடுவார் என்று சொன்னான்."

"என் கணவர் வேறொரு பெண்ணைத் தனக்கு தெரிந்து கொள்வார் என்பது எனக்கு நன்கு தெரியும்."

"எங்கள் குடும்பத்தில் பூனையும், நாயும் போல் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொள்வோம்."

### 5. தொடர்ந்த பணப்பற்றாக்குறை

"என்னால் தேவைகளை ஒருபோதும் சந்திக்க முடியவில்லை—என் தகப்பனாரும் அப்படியே இருந்தார்."

"நான் தசமபாகம் கொடுக்க முடியாது."

"அந்த கனவான்களுக்கு எப்பொழுது பார்த்தாலும் அவர்கள் விரும்புவது கிடைக்கும்—எனக்கு எதுவும் கிடைப்பதில்லை!"

### 6. அடிக்கடி விபத்திற்குள்ளாகும் சூழ்நிலை

"அது எப்பொழுதும் எனக்கு சம்பவிக்கிறது!"

"பிரச்சனை வரும் என்று எனக்குத் தெரியும் ...."

"நான் ஒரு குழப்பமான மனிதன்."



Blessing or Curse Tamil text 2012 revised.p65 145 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

### 7. தற்கொலைகளும், இயற்கைக்கு மாறான அகால மரணங்களும்

"வாழ்வதில் என்ன பயன் உண்டு?"
"என்னுடைய சடலத்தின் மேல்!"
"இப்படி வாழ்வதை விட சாவதே மேல்."

இவ்விதமாகப் பிற்போக்கான மொழியைப் பயன் படுத்துபவர்கள் சுய அறிவின்றி அசுத்த ஆவிகள் தங்களை மேற்கொள்ளும்படி தங்கள் அறிவின்றி அழைக்கின்றனர். எந்த விதமான அசுத்த ஆவி இதற்கு செவிசாய்க்கும் என்பது அவர்கள் பயன்படுத்தும் மொழியைப் பொறுத்தது. மேற்கூறப்பட்டுள்ள ஏழு வகைகளில் ஒவ்வொன்றையும் செயற்படுத்தும் ஆவிகளின் பிரிவு உண்டு.

பரவலாகக் காணப்படும் ஒரு வகையான ஆவி "மரணத்தின்" ஆவியாகும். இது "தற்கொலைகளும், இயற்கைக்கு மாறான அகால மரணங்களும்" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டபடி பேசும் வார்த்தைகளுக்கு செவிசாய்க்கும். இது வாழ்க்கை அர்த்தமற்றது என்றும் நம்பிக்கையற்றது என்றும் எண்ணங்கொள்ளவும், மரணத்தைப் பற்றி சிந்திக்கத் தூண்டி, அதிலேயே கவனம் செலுத்தும்படி கொடூர எண்ணங்கொள்ளவும் செய்யும். இது அநேக நேரங்களில் எந்த மருத்துவக் காரணமுமின்றி தொடர்ச்சியான சரீர பெலவீனங்களை உண்டாக்கும்.

முடிவில் இந்த மரணத்தின் ஆவி ஒருவனைத் தற்கொலை செய்யவோ அல்லது வேறு ஒரு வகையில் காலத்திற்கு முன்பு அவன் உயிரை எடுத்துக்கொள்ளவோ முற்படும். யோவான் 8:44ல் இயேசு சாத்தானை ஒரு கொலையாளி என்று அழைத்து நம்மை எச்சரிக்கிறார். அவன் மரணத்தின் ஆவியைப் பயன்படுத்தி மக்களைக் காலத்திற்கு முன்பாகவே மரணமடையச் செய்கிறான். நான் இதை என் மருத்துவ நண்பரிடம் பகிர்ந்து கொண்டபோது, அவர் போதுமான மருத்துவக் காரணங்கள் இல்லாதிருந்தும் மரித்த அநேகரைத் தன் அனுபவத்தில் கண்டுள்ளதைக் கூறி இதை உறுதிப்படுத்தினார்.

மேலே கூறப்பட்டவற்றில் நீயும் இருப்பதாக உன்னை நீ இனம் கண்டு கொண்டிருக்கக் கூடும். இதை நீ உணர்ந்தால்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 146 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மனச்சோர்வு கொள்ளாதே. இதிலிருந்து மீள வழியுண்டு! இந்த அத்தியாயத்தில் இதற்கு முன்பு அப்போஸ்தலனாகிய பேதுரு மூன்றுபடிகளை நமக்கு உதாரணமாகக் கொடுத்துள்ளார். இதன் மூலம் நம்மேல் வரும் சாபத்திலிருந்து நாம் தப்பக்கூடும்: மனம் திரும்புதல்—நீக்கிப்போடுதல்—மாற்றியமைத்தல்.

முதலாவதாக, நாம் எதிர்மறையான அறிக்கையைச் செய்தோம் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் மனந்திரும்ப வேண்டும். இரண்டாவதாக, இதை ஒதுக்கித்தள்ள வேண்டும் - அதை நீக்க வேண்டும். மூன்றாவதாக, முன்பு செய்த தவறான அறிக்கைக்கு மாறாக சரியான அறிக்கையைச் செய்ய வேண்டும். இவையெல்லாம் இருபத்தியோராம் அத்தியாயத்தில் முழுவதும் விளக்கப்பட்டுள்ளன.

மக்கள் தங்கள் மேல் சாபத்தை வருவித்துக் கொள்ளும் இன்னொரு முறை இரகசிய குழுக்களுக்கும், பொய்யான மதப்பிரிவுகளுக்கும் அவர்கள் செய்து கொடுக்கின்ற உறுதிமொழிகளும், ஆணைகளுமாகும். என் முதல் மனைவி லிடியாவும் நானும் ஒரு கிறிஸ்தவ வாலிபப் பெண்ணை பிசாசின் கட்டுகளிலிருந்து விடுவிக்க முற்பட்டது என் நினைவிற்கு வருகிறது. அதிகம் ஜெபித்தும், போராடியும் அவளுக்கு முதலில் விடுதலை கிடைக்கவே இல்லை. உடனே லிடியா தனது ஆவியில் ஏவப்பட்டபடியால் அந்த வாலிபப் பெண்ணைப் பார்த்து அவள் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றிவிடும்படிக் கூறினாள். அதை அவள் கழற்றிய மாத்திரத்தில் எந்தப் போராட்டமும் இல்லாமல் அவள் விடுதலையானாள்.

லிடியா பரிசுத்த ஆவியின் ஏவுதலின்படி மாத்திரமே அதைச் செய்தாள். அந்த மோதிரத்தைப் பற்றி லிடியாவிற்கு ஒன்றும் தெரியாது. விடுதலை பெற்ற பெண் ஒரு கல்லூரியின் மகளிர் சங்கத்தைச் சார்ந்தவள். அந்த வாலிபப் பெண் அந்த சங்கத்தில் சேருவதற்கு முன்பு அவள் தன்னுடைய கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மாறான சில உறுதிமொழிகளைச் செய்ய வேண்டியதாயிருந்தது. அந்த மோதிரத்தைக் கழற்றியதின் மூலம் அவள் அந்த உறுதிமொழிகளை நீக்கி தான் ஒரு தேவனுடைய பிள்ளை என்கின்றதான விடுதலையை மீண்டும் பெற்றாள்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 147 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*"பிசாசிற்கு நான் பூசாரியாக இருந்தேன்" என்று சொன்ன ஒரு வாலிபப் பெண்ணிற்கு உதவ முற்பட்ட குழுவிலே லிடியாவும், நானும் இருந்தோம். அவள் அணிந்திருந்த மோதிரம் சாத்தானுடன் அவள் செய்து கொண்ட "திருமணத்தின்" அடையாளமாய் இருந்தது. நாங்கள் அவளிடத்திலே அந்த மோதிரத்தைக் கழற்றி விட வேண்டும் என்று சொன்ன பொழுது அவள் அதைக் கழற்றிப் போட்டாள். ஆனால் சாத்தானுடைய கட்டாயப்படுத்தலினால், அதை அவள் விழுங்கி விட்டாள். அங்கேயிருந்த ஒரு வாலிபர், விசுவாசத்தின் சிறப்பு அபிஷேகத்தைப் பெற்று, அப்பெண்ணை அந்த மோதிரத்தைக் கக்கும்படி கட்டளையிட்டார். அவளும் அவ்வாறே செய்தாள்! பின்பு நாங்கள் அந்த மோதிரத்தைப் பக்கத்தில் உள்ள ஒரு குளத்தில் எறிந்து விட்டோம். இறுதியாக அவள் சாத்தானை ஆராதித்த நாட்களில் தான் உடுத்திய ஆடைகள் அனைத்தையும் வெளியரங்கமாக எரித்துப் போட்டபொழுது பூரண விடுதலை அவளுக்குக் கிடைத்தது.*

*இப்படிப்பட்ட சம்பவங்கள் எனக்கு யூதா 22,23 வசனங்களில் "சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்" என்று கூறப்பட்டுள்ள வாசகத்தின் உண்மையை எடுத்துக் காட்டியது.*

*மேற்கூறிய இரு சம்பவங்களிலும் ஒரு மோதிரத்தின் மூலம் சாத்தானின் கட்டு வந்தது. மோதிரத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் அது ஓர் உடன்படிக்கை உறவிற்கான அடையாளமாய் உள்ளது. மேற்கத்திய கலாச்சாரத்தைச் சார்ந்த கணவனும், மனைவியும் அணிந்து கொள்ளும் மோதிரம் அவர்களின் திருமண உடன்படிக்கையின் அடையாளமாய் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். வேதத்தின்படி உடன்படிக்கை என்பது மிகவும் ஆற்றல் நிறைந்த பக்திக்குரிய ஓர் உறவு. ஒரு மனிதன் தேவனுடன் அல்லது மற்றவர்களுடன் உண்டாக்கிக் கொள்ளும் உடன்படிக்கை ஆற்றல் நிறைந்தது. சாத்தானுக்கு இது நன்கு தெரியும். ஆகவே மக்களைத் தன் வல்லமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும்படி இப்படிப்பட்ட உடன்படிக்கையின் உறவிற்குள் அவனும் அவர்களைக் கொண்டு வர பிரயாசப்படுகிறான்.*

*ஆகையால் தான் யாத்திராகமம் 23:32ல் தேவன்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 148 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இஸ்ரவேலர்களை விக்கிரக ஆராதனைக்கு அடுத்த கானான் நாடுகளைப் பற்றி எச்சரிக்கிறார்: "அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக" என்று கூறுகிறார். தேவன் தம் ஜனங்கள் பொய்யான தேவர்களை வணங்கும் கானானியர்களுடன் உடன்படிக்கை செய்வார்களானால் அந்த உடன்படிக்கை அவர்களைக் கானானியரோடு மட்டுமல்ல அவர்களின் தேவர்களோடும் இணைக்கும் என்று எச்சரிக்கிறார். இவ்வாறாக அந்த தேவர்களுக்கு அவர்கள் அடிமைகளாவார்கள்.

சிறப்பாக நம் காலத்தில் உள்ள ஃபிரிமேசனரி சமுதாயம்பற்றி நாம் எச்சரிப்புள்ளவர்களாய் இருக்கவேண்டும். அவர்களோடு கொள்ளும் தொடர்பு இரகசியமாய் வைக்கப்படும் என்று அவர்கள் கூறுவார்கள். இது சரியானதல்ல. ஃபிரிமேசனரியின் எல்லாப் பிரதான சடங்குகளும், சூத்திரங்களும் முன்பு இந்த நிறுவனத்தில் அங்கத்தினர்களாக இருந்த மக்களினால் அடிக்கடி வெளியிடப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் மிக கனத்திற்குரிய பதவி வகிப்பவர்கள். மற்றவர்கள் இந்தக் கொள்கையைப் பிறரிடமிருந்து பெற்று கவனமாய் ஆராய்ச்சி செய்துள்ளனர்.

ஃபிரிமேசனரியைப் பற்றி நம்முடைய தலைப்புக்கு சம்பந்தப்பட்ட இரண்டு முக்கிய குறிப்புகளை எடுத்துக் கொள்வோம். முதலாவது, இதில் சேருவதற்கு முன்பு ஒருவன் மிக கொடூரமான மரணத்திற்கடுத்த சபதங்களுத் தன்னைச் சிறைப்படுத்தி ஃபிரிமேசனரியின் இரகசியங்களை எக்காரணத்தைக் கொண்டும் வெளியிடுவதில்லை என உறுதி செய்து தரவேண்டும். இந்த வாக்குமூலங்களை விடத் தன் மேலே சாபங்களை வருவித்துக் கொள்ளும் கொடூரமான காரியம் வேறெதுவும் இல்லை.

இரண்டாவதாக மேசனரி என்பது ஒரு போலி மதம். இதின் சில அங்கத்தினர்கள் இது ஒரு மதம் என்பதை மறுக்கின்றனர். ஆனால் அது அப்படித்தான் என்பதைத் தெளிவாகக் குறிக்கக் கூடிய சில காரியங்களைத் தருகிறேன். மேசனரிக்கு என்று தனிப்பட்ட வெளிப்பாடுகள் உண்டு; அவர்களுக்கென்று தனி ஆலயங்கள் உள்ளன; அவர்களுக்கென்று தனி பலிபீடங்கள் உண்டு; அவர்களுக்கு மதத்திற்கடுத்த அடையாளங்களும், சின்னங்களும் உண்டு (இதில் ஒரு மோதிரமும் அடங்கும்);



Blessing or Curse Tamil text 2012 revised.p65 149 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அவர்களுக்கென்று தனியான விசுவாச அறிக்கையும், ஆசாரியர்களும், சடங்காச்சாரங்களும் உண்டு. அவர்களுக்கென்று தனிப்பட்ட ஒரு போலியான கடவுள் உண்டு. அதை அவர்கள் "படைப்பின் மூலதத்துவம்" என்றும் "இப்பிரபஞ்சத்தின் மாபெரும் கட்டட வல்லுநர்" என்றும் அழைக்கின்றனர்.*

*மேசனரி ஒரு பொய்யான கடவுளைக் கொண்டதாக இருப்பதால் இது ஒரு போலி மதமாகும். கிறிஸ்தவத்தோடு தொடர்புடைய வேதமும், பலபொருட்களும் அடையாளங்களும் மேசனரியில் பயன்படுத்தப்பட்டாலும் அது வேண்டுமென்றே செய்யப்படும் ஏமாற்றமாகும். மேசனரிகள் ஒப்புக்கொள்ளும் கடவுள் நம் வேதத்தின் தேவன் அல்ல. வேதத்தின் நான்கு எழுத்துகளைக் கொண்ட பரிசுத்தமான நாமம் JHVH ("யெகோவா" என்று பொதுவாக சொல்லப்படும்) இது மேசனரியின் இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டாலும், இது ஆண், பெண் இருவரின் தத்துவங்களையும் இணைக்கின்ற ஒரு தெய்வீகப் பண்பாக விளக்கப்படுகிறது. மேலும், "ராயல் ஆர்ச்" என்னும் அமைப்பு யெகோவாவின் சுருக்கமான நாமத்தை இரண்டு அந்நிய தெய்வங்களான பாகால், ஓசிரிஸ் என்பவைகளின் சுருக்கமான நாமங்களோடு இணைத்துப் பயன்படுத்துகிறது. இது வேதம் வெளிப்படுத்தும் யெகோவா என்னும் மெய்யான தேவனுக்கு வேண்டுமென்றே செய்யப்படும் இழுக்காக உள்ளது.* *

*என்னைப் பொறுத்தமட்டில் ஃபிரிமேசனரி பற்றி நான் கவனம் எடுத்துக் கொண்டதேயில்லை. என்னிடத்தில் ஜெபத்திற்கு வந்தவர்களின் வாழ்க்கையில் இது உண்டாக்கின கேடான விளைவுகளை நான் கண்டறிய ஆரம்பித்த பொழுது தான் இது பற்றி கவனம் செலுத்தலானேன். நான் கண்ட மக்கள் வாழ்வில் செயல்பட்ட மிகவும் பயங்கரமான சாபங்கள் ஃபிரிமேசனரியோடு தொடர்பு கொண்டதாகவே இருந்தது. தன் குடும்பப் பின்னணியில் மேசனரியில் அங்கத்துவம் வைத்த ஒருவர் இருந்ததினால் இரண்டாம், மூன்றாம் தலைமுறை வரை*

* இதுபற்றி விளக்கமாய் எவரேனும் அறிய விரும்பினால், "Freemasonry" : An Interpretation by Martin L. Wagner என்ற புத்தகத்தைப் படிக்கவும். இது "HRT Ministries, Box 12, Newtonville, N.Y. 12128 - 0012" என்ற முகவரியில் கிடைக்கும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 150 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சாபத்தின் விளைவுகள் வெளிப்பட்டிருக்கின்றன.

இதில் ஒரு குறிப்பிட்ட சம்பவம் என்னை மிகவும் கவர்ந்தது. ஆஸ்திரேலியாவில் ஒரு ஞாயிறு காலை ஆராதனையின் முடிவில் ரூத்தும், நானும் சுகம் தேவைப்பட்ட மக்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தோம். ஜெபத்திற்கு ஒரு வாலிபப் பெண்ணும் மற்றவர்களோடு முன்னே வந்தாள். அவளின் ஒளியில்லாத கண்கள், வாரப்படாத தலை, மெல்லியகுரல் இவைகள் அவள் இப்படிப்பட்ட ஒரு குழுவைச் சார்ந்தவள் என்பதை எங்களுக்கு உணர்த்தியது. அவள் தன் கரங்களில் ஒரு சிறிய குழந்தையை வைத்திருந்தாள்.

அவள் தன் குழந்தையைக்காட்டி “அவள் எதையுமே சாப்பிடுவது இல்லை” என்று தலையைத் திருப்பினவளாக முறுமுறுத்தாள். “ஒரு வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு அவுன்சு தான் சாப்பிடுகிறாள்” என்றாள்.

“அந்தக் குழந்தைக்கு என்ன வயது?” என்று நாங்கள் கேட்டோம்.

அதன் தாய் “ஆறு வாரங்கள்” என்றாள். ஆனால் அந்தக் குழந்தை ஆறு வாரங்கள் ஆன குழந்தை போல காணப்படவில்லை. ஆறு நாட்கள் ஆன குழந்தையைப் போலவே காணப்பட்டது.

ரூத்தும் நானும் அந்தத் தாயாரின் மீது எங்கள் கைகளை வைத்து ஜெபிக்க ஆரம்பித்த பொழுது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் அவள் பின்னாக சரிந்து விழுந்தாள். அவள் கீழே விழுந்த போது ரூத் அந்தக் குழந்தையைப் பிடித்துத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டாள். சபை ஊழியர்களில் இருவர் தரையில் இருந்த தாயாருக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர்.

அப்பொழுது பரிசுத்த ஆவியானவரால் ரூத்திற்கு அறிவை உணர்த்தும் வார்த்தை வந்தது. அவள் மற்ற இரண்டு ஊழியர்களையும் பார்த்து, “அவள் தந்தை ஒரு ஃபிரிமேசனரியைச் சார்ந்தவர்” என்றாள். “அந்த ஆவியைக் கடிந்து விரட்டும்படி அவளிடம் கூறுங்கள்” என்றாள்.

தரையில் கிடந்த அந்த அம்மாள் இந்த வார்த்தைகளைச்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 151 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சொல்லத் திணறினார்கள். "நான் ... அந்த ஃபிரிமேசனரி ... ஆவியை வெறுக்கிறேன்." இந்த வார்த்தைகளை அவள் சொல்லிமுடித்த மாத்திரத்தில் மிகுந்த கூச்சலிட்டுக் கொண்டே அந்தப் பொல்லாத ஆவி அவளைவிட்டு வெளியேறியது. அதே நேரத்தில் ரூத்தின் கரங்களிலிருந்த குழந்தையும் அவ்வாறே கூச்சலிட்டது. பின்பு சரியானது. அந்த ஊழியர்கள் அப்பெண்ணை எழுந்து நிற்கச் செய்தனர். ரூத் அந்தக் குழந்தையை அவள் கரங்களில் கொடுத்தாள்.

சுமார் ஆறு மணி நேரத்திற்குப் பின்பு அதே ஆலயத்திற்கு மீண்டும் ஒரு மாலை ஆராதனைக்குச் சென்றோம். அதன் முடிவில் அந்த வாலிபப் பெண் தன் குழந்தையுடன் மீண்டும் முன்னே வந்தாள்.

அந்தக் குழந்தை எப்படியிருக்கிறது என நாங்கள் கேட்டோம்.

அந்தக் குழந்தை முற்றிலும் வித்தியாசமாய் உள்ளது என அப்பெண் பதிலளித்தாள். "காலையிலிருந்து இது வரை மூன்று புட்டிகள் பால் குடித்தது" என பதிலளித்தாள். அந்தத் தாயாரும் கூட முற்றிலும் மாறியவளாய் காணப்பட்டாள். அவளுடைய கண்களில் ஒளி காணப்பட்டது. குரலில் தெளிவு இருந்தது.

இந்தச் சம்பவத்திலிருந்து ஃபிரிமேசனரியால் வந்த சாபமானது எவ்வாறு நீக்கப்படக்கூடும் என்றும் அது இரண்டு தலைமுறையைத் தாக்கவல்லது என்பதையும் தெளிவாய்க் கண்டோம். மேசனரியின் அங்கத்தினராய் இருந்த தகப்பனிடத்திலிருந்து மகளுக்கும், மகளிடத்திலிருந்து ஆறு வாரமான பேத்திக்கும் அச்சாபம் கடந்து வந்தது. இந்தக் குழுவில் சேர்வதினால், மக்கள் தாங்கள் மாத்திரமல்ல தங்கள் குடும்பத்தின் அங்கத்தினர்களும், ஃபிரிமேசனரியுடன் நேர்தொடர்பு கொள்ளாத மற்றவர்களும் கூட தங்கள் மூலமாய் இத்தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள் என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்.

இவ்விதமாகத் தீய அமைப்புகளுடன் ஒரு உறுதிமொழி மூலமாகவோ, வாக்குமூலமாகவோ தங்களை இணைத்துக் கொண்டவர்களைக் குறித்து சாலொமோன் நீதிமொழிகள்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 152 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

6:4–5ல் ஒரு முக்கியமான ஆலோசனையைக் கூறுகிறார்:

"உன் கண்ணுக்கு நித்திரையும், உன் கண்ணிமைக்குத் தூக்கமும் வரவிடாமல், உன் சிநேகிதனிடத்தில் போய், உன்னைத் தாழ்த்தி, அவனை வருந்திக் கேட்டுக்கொள்.

வெளிமான் வேட்டைக்காரன் கைக்கும், குருவி வேடன் கைக்கும் தப்புவது போல, நீ உன்னைத் தப்புவித்துக் கொள்."

*விடுதலைக்குத் தேவையானவை முக்கியமான இரு காரியங்கள்: முதலாவதாக, வாய் மொழியினால் இந்தத் தொடர்பை முறித்து அறிக்கையிடவேண்டும். நீ வாயினால் சொன்னவற்றை நீ தான் மறுத்துக் கூறவேண்டும். இந்த வார்த்தைகளை, விசுவாசத்தில் உன்னை ஆதரிக்கும் மக்களுக்கு முன்பதாக நீ சொல்ல வேண்டும்.*

*இரண்டாவதாக, நீ அவர்களோடு உனக்குள்ள தொடர்பைக் குறிக்கும் சின்னங்கள், மற்றப் பொருட்கள் எல்லாவற்றையும் உன்னிடமிருந்து அகற்றி, அவற்றை அழித்துப்போட வேண்டும். மேற்கூறப்பட்ட மூன்று சம்பவங்களிலும் ஒரு மோதிரம் முக்கியமானதாக உள்ளது. ஃபிரிமேசனரியைப் பொறுத்தமட்டில் மேலாடை முக்கியமானதாக உள்ளது. யூதா 23ல் எழுதப்பட்டுள்ள "மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்" என்னும் வார்த்தைகளை நினைவிற் கொள்க.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 153 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 13

## சாத்தானின் ஊழியர்கள்

இந்த அத்தியாயத்தில் முற்றிலும் வித்தியாசமான சாபங்களுக்கான காரணத்தைக் காண்போம்: சாத்தானின் ஊழியர்கள்.

சாத்தானைக் குறித்து கிறிஸ்தவர்களின் எண்ணங்கள் இரண்டு எதிர்த் திசையில் பரவலாக வித்தியாசமாய் உள்ளது. சிலர் சாத்தான் முற்றிலும் இல்லை என்று சொல்லி அவன் இல்லாதது போலவே நடந்து கொள்கின்றனர். மற்றவர்கள் அவனுக்கு பயந்து அவனுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இந்த இரு எண்ணங்களுக்கும் மத்தியில் நாம் நடுநிலைமையுடன் காணப்பட வேண்டும்.

சாத்தான் படைக்கப்பட்டவன். அவன் எதிர்த்துப்போராடி நிற்கும் தூதன்; தேவனுடைய பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டவன். அவன் எதிர்த்து நின்ற தூதர்களையும், “பிசாசுகள்” என்று அழைக்கப்படும் மற்ற கீழான அசுத்த ஆவிகளையும் கொண்ட தீய சக்திகளின் உலகை ஆளுகை செய்கிறான்.

சாத்தான் என்ற சொல்லுக்கு “எதிர்த்து நிற்பவன்” அல்லது “விரோதி” என்று அர்த்தம். இவன் தேவனுக்கும், மக்களுக்கும், தேவனின் நோக்கங்களுக்கும் ஒப்புரவாகாத நிலையில் எதிர்த்து நிற்கும் விரோதியானவன். மனுக்குலம் அனைத்தையும் அவனுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவனுடைய நோக்கமாயிருக்கிறது. அவனின் பிரதான தந்திரம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 154 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஏமாற்றுவது. இதில் தலைசிறந்தவன் அவன். வெளிப்படுத்தின விசேஷம் 12:9ல் "**உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற** பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்" என அவன் அழைக்கப்படுகிறான்.

சாத்தான் ஏற்கெனவே மனுக்குலத்தின் பெரும்பாலானோர் மேல் தன் அதிகாரத்தைச் செலுத்தி வருகிறான். இவர்களெல்லாரும் தேவனை எதிர்த்து நிற்கும் எண்ணங் கொண்டவர்கள். எபேசியர் 2:2ல் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளினிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆவி" என அவன் அழைக்கப்படுகிறான். அநேகருக்குத் தங்களின் உண்மை நிலை தெரிவதில்லை. அவர்களால் புரிந்து கொள்ள முடியாததும் கட்டுப்படுத்த முடியாததுமான சக்திகளினாலே அவர்கள் முன்னும் பின்னும் அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

இருப்பினும் அவர்களுள் அநேகர் சாத்தானின் உண்மையான சாயலை அறியாமலே, அவனுக்குத் தங்களை மனமுவந்து ஒப்புக் கொடுத்தவர்களாக இருக்கிறார்கள். வல்லமையையும், பொருளாதார இலாபத்தையும் அடைய விரும்பி சாத்தான் அவர்களுக்குக் கொடுத்த இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளை அவர்கள் தொடர்ந்து செயல்படுத்த ஆரம்பிக்கின்றனர். இப்படிப்பட்ட சாத்தானின் ஊழியர்கள் எல்லாக் கலாச்சாரங்களிலும் உள்ளனர். இவர்களுக்குப் பல விதமான பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பில்லி சூனிய மருத்துவர், சூனியக்காரன், சூனியக்காரி, மந்திரவாதி, மோடி வித்தை செய்பவன், சாத்தானின் ஆசாரியன், ஆசாரியை, சாத்தானின் பிரபு போன்ற பல பெயர்கள் இவர்களுக்கு உள்ளன. எல்லா மலைவாழ் மக்களின் கலாச்சாரங்களிலும், உலகம் அனைத்திலும் பார்த்தால் இப்படிப்பட்டவர்களுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாத்தானைப் பற்றிய தகவலைக் கொடுப்பதில் இயேசு கிறிஸ்துவே நமக்கு முக்கியமான மூலகாரணராக உள்ளார். அவர் எழுபது சீடர்களைத் தமக்கு முன் வழியை ஆயத்தம் பண்ணும்படி அனுப்பியபோது, அவர்கள் மகிழ்வுடன் திரும்பி வந்து, "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 155 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கீழ்ப்படிகின்றன" என்றனர். இதற்கு இயேசு: "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது" என்று கூறினார்.

இயேசு சாத்தான் உண்மையானவன் என்பதையும், வல்லமையுடையவன் என்பதையும் மறுக்கவில்லை. என்றாலும் அவர் தமது சீடர்களிடம் அவர் வழங்கும் அதிகாரம் சாத்தானின் வல்லமையின் மேல் அவர்களுக்கு வெற்றியைத் தந்து, அவர்களைத் தாக்கக்கூடிய சாத்தானின் எல்லா முயற்சிகளிலிருந்தும் பாதுகாக்கும் என்று வாக்களித்தார். கர்த்தருடைய ஊழியர்கள் அனைவரும் அவர் கொடுத்த அதிகாரத்தை அறிந்து அதனை வெற்றிகரமாய் செயல் படுத்த கற்றுக் கொள்வது அவர்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது.

"சாபங்கள்"—சாத்தானின் ஊழியக்காரர்கள், தேவனுடைய மக்களுக்கு எதிராக உபயோகிக்கும் முக்கிய ஆயுதங்களில் ஒன்றாகும். இது எண்ணாகமம் 22 முதல் 24 வரை உள்ள அதிகாரங்களில் பாலாக், பிலேயாம் சரித்திரத்தில் தெளிவாய் கொடுக்கப்பட்டுள்ளது.

பாலாக் யோர்தானுக்குக் கிழக்கேயிருந்த மோவாபியரின் அரசனானவன். எகிப்திலிருந்து கானானுக்கு இஸ்ரவேலர்கள் வந்தபொழுது மோவாபின் எல்லையிலே பாளையமிறங்கினார்கள். பாலாக் தன்னுடைய நாடு ஆபத்திற்குள்ளானது என்பதை உணர்ந்தான். ஆனால் இஸ்ரவேல் மீது நேரிடையான தாக்குதலைச் செய்வதற்கு அவனுக்கு பலமோ, தைரியமோ இல்லை. அதற்குப் பதிலாக அவன் பிலேயாமுக்குக் கூலி கொடுத்து அவர்கள் மேல் சாபங்களைக் கூறும்படி கேட்டான். அப்படிச் செய்வதின் மூலம் இஸ்ரவேலர்கள் பெலவீனமடைவதால் மோவாபியர் அவர்களை மேற்கொண்டு தோற்கடிக்கக்கூடும் என்று நம்பினான். பிலேயாம் அந்தப் பகுதி முழுவதிலும் பெயர் பெற்ற ஒரு "சூனியக்காரன்". தனது செயல்களுக்கு உயர்ந்த சன்மானம் பெற்றுக் கொண்டான்.

அநேக கிறிஸ்தவர்கள் இன்று இவை அனைத்தும் மூடபக்திக்குரிய "அர்த்தமற்ற" உண்மையான வல்லமை இல்லாத



Blessing or Curse Tamil text 2012 revised.p65 156 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

காரியங்கள் என இதைத் தள்ளிவிடுவர். ஆனால் தேவனோ இதை இவ்வாறு கருதவில்லை. அவர் பிலேயாம் சொல்லக்கூடிய சாபங்களை இஸ்ரவேலுக்கு தீங்கு விழைவிக்கக் கூடியதாகக் கருதினார். இறுதியாக அவர் இயற்கைக்கப்பாற்பட்ட நிலையில் இடைப்பட்டு பிலேயாமை அந்தக் காரியத்தைச் செய்ய வொட்டாது எச்சரித்தார். ஆனால் பிலேயாமோ பாலாக் தனக்கு வாக்களித்திருந்த செல்வத்தைப் பெற்றுக் கொள்ள ஆவல் உள்ளவனாக, பாலாக் கேட்டுக்கொண்டதை செய்யும்படி முன்னேறிச் சென்றான். எனினும் ஒவ்வொரு முறையும் பிலேயாம் இஸ்ரவேலின் மேல் சாபங்களைக் கூற முற்பட்ட போது தேவன் மீண்டும் மீண்டும் இடைப்பட்டு அவன் கூற இருந்த சாபங்களை ஆசீர்வாதங்களாக மாற்றிச் சொல்லும்படிச் செய்தார்!

இதைத் தொடர்ந்து உபாகமம் 23:5ல் மோசே இஸ்ரவேலர்மீது தேவனுக்குள்ள அன்பை விளக்கும் சாட்சியாக இந்தச் சம்பவத்தை நினைவு படுத்துகிறான்: "உன் தேவனாகிய கர்த்தர் பிலேயாமுக்குச் செவிகொடுக்கச் சித்தமில்லாமல், உன் தேவனாகிய கர்த்தர் உன் மேல் அன்பு கூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்" என்று சொன்னான்.

ஒரு முக்கிய குறிப்பு இங்கு கவனிக்கப்பட வேண்டும். பிலேயாம் இஸ்ரவேலுக்குச் சொல்ல இருந்த சாபங்களை வல்லமையற்ற வெறும் வார்த்தைகளாக தேவன் கருதவில்லை. அவைகளை இஸ்ரவேலர்களுக்கு ஓர் ஆபத்தான காரியமாகக் கருதினார். இதன் காரணமாகவே அவர் சொந்த ரீதியில் ஈடுபட்டு பிலேயாமின் நோக்கங்களைக் குலைத்துப் போட்டார்.

காலம் தேவனுடைய எண்ணங்களை மாற்றிவிடவில்லை. தம்முடைய மக்களுக்கு விரோதமாக, சாத்தானின் அடியார்களால் உரைக்கப்படுகின்ற சாபங்களை ஒதுக்கித் தள்ளிவிடவோ, குறைவாக மதிப்பிடவோ தேவன் முற்படவில்லை. தேவன் சாத்தானின் சக்தியை உணர்ந்து தமது ஊழியக்காரர்களுக்கு உயர்ந்த அதிகாரத்தைக் கொடுக்கிறார் என்பதை இயேசு சீடர்களுக்குக் கொடுத்த மேலான அதிகாரத்திலிருந்து காண்கிறோம்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 157 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சாத்தானின் ஊழியக்காரர்களின் செயல்பாடுகளைப் பற்றிய பலவித விபரங்களை வேதம் தருகிறது. சாத்தானின் கிரியைகள் பொதுவாக தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகச் செயல்படுவதால், அவைகள் எச்சரிப்பாக உள்ளது. உதாரணமாக எசேக்கியேல் 13:17–20ல் தேவன் சில பெண் கள்ளத்தீர்க்கதரிசிகளையும் அல்லது சூனியக்காரிகளையும் கடிந்து கொள்கிறார்:*

"மனுபுத்திரனே, தங்களுடைய இருதயத்தில் இருக்கிறதையே எடுத்து, தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற உன் ஜனத்தின் குமாரத்திகளுக்கு எதிராக உன் முகத்தைத் திருப்பி, அவர்களுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்ல வேண்டியது என்ன வென்றால்:

ஆத்துமாக்களை வேட்டையாடும்படிக்குச் சகல கைகளுக்கும் தழுவணைகளைத் தைத்து, அந்தந்த வயதுள்ளவர்களுடைய தலைக்கும் தலையணைகளை உண்டு பண்ணுகிறவர்களுக்கு ஐயோ! நீங்கள் என் ஜனத்தின் ஆத்துமாக்களை வேட்டையாடி, அவைகளை உங்களுக்கு உயிரோடே காப்பாற்றுவீர்களோ?

சாகத்தகாத ஆத்துமாக்களைக் கொல்வதற்கும், உயிரோடே இருக்கத்தகாத ஆத்துமாக்களை உயிரோடே காப்பாற்றுவதற்குமாக நீங்கள் பொய்க்குச் செவி கொடுக்கிற என் ஜனத்துக்குப் பொய் சொல்லுகிறதினாலே சில சிறங்கை வாற்கோதுமைக்காகவும் அப்பத்துண்டுகளுக்காகவும் என்னை என் ஜனத்துக்குள்ளே பரிசுத்தக் குலைச்சலாக்குவீர்களோ என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நீங்கள் ஆத்துமாக்களைப் பறக்கடிக்கும்படி வேட்டையாடுகிற உங்கள் தழுவணைகளுக்கு விரோதமாக நான் வந்து, அவைகளை உங்கள் புயங்களிலிருந்து பிடுங்கிக் கிழித்து, நீங்கள் பறக்கடிக்க வேட்டையாடுகிற ஆத்துமாக்களை நான் விடுதலை பண்ணி ...." என வசனம் தொடர்கிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 158 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சில குறிப்புகள் தெளிவாய் இல்லாதிருப்பினும் இந்தப் பெண்கள் சூனியக்காரியைப் போல நடந்து கொண்டுள்ளனர். யாராவது ஒருவர் மற்ற நபருடன் சண்டையிட்டுக் கொண்டால், அந்த நபருக்கு விரோதமாகத் தங்களின் மந்திரக்கலைகளை உபயோகிக்கும்படி சூனியக்காரிகளுக்குக் கூலி கொடுத்து வேலை செய்ய அழைப்பது சாதாரணமாய் இருக்கிறது. அவர்களுடைய வழிமுறைகளில் ஒன்று மக்களின் உடைகளில் மந்திரப் பொருட்களை இணைப்பதாகும். இவ்விதமாக அவர்கள் "ஆத்துமாக்களை வேட்டையாடி" ஒன்றுமறியாத அநேகரைக் கொன்றுள்ளனர். இதற்குக் கைமாறாக அவர்கள் கைநிறைய வாற்கோதுமையையும், அப்பத்துண்டுகளையும் பெற்றுள்ளனர்.*

*இவைகள் பழங்காலத்தை நினைவு படுத்தும் நிலையிலான குற்றச்சாட்டு அன்று. இந்தப் பெண்களின்மேல் தேவன்தாமே இந்தக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார். பல காலங்களாக இந்த சாத்தானின் ஊழியக்காரர்கள், இந்த எளிய முறைகளைப் பயன்படுத்தி இன்றும் தேவனுடைய பிள்ளைகளுக்குத் தீங்கிழைத்து வருகின்றனர்.*

*1979–80ல் மேற்கு இங்கிலாந்தில் உள்ள "பாத்" என்னும் பட்டணத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ரோம காலத்தைச் சார்ந்த மினர்வா தேவதையின் ஆலயம் ஒன்றைக் கண்டெடுத்தனர். இந்த ஆலயத்தில் இருந்த ஆசாரியர்கள் எசேக்கியேலின் நாட்களில் இருந்த சூனியக்காரிகளைப் போலவே ஊழியம் செய்து வந்தனர். யார் மேலேயாவது வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்புகிறவர்கள் இந்த ஆசாரியர்களைப் பயன்படுத்தித் தங்களை எதிர்க்கும் நபருக்கு விரோதமாக ஏற்றதொரு சாபத்தை எழுதச் செய்வார்கள். இந்த ஆசாரியர்களுக்கு மட்டுமே இந்தச் சாபத்தை எழுதும் திறமை இருந்தது. இந்தச் சாபம் எழுதப்பட்டதற்குப் பின்பு, அதற்கு ஒருவித மந்திர விழா கொண்டாடி, யார் மீது இது செலுத்தப்பட வேண்டுமோ அவர் மீது அது செயல்படச் செய்வார்கள். இவை எல்லாவற்றிற்கும் அந்த ஆசாரியர்களுக்குத் தகுந்த சன்மானம் தரப்படும். மேலும் இவ்வாறு வழிபடுபவர்கள் அந்த தேவதைக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய காணிக்கைகளை அந்த ஆலயத்திற்கு அடுத்துள்ள அருவியில் எறிவார்கள்.*





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இவ்வாறு சாபங்களையும் மந்திரக்கலையையும் பயன்படுத்தும் பழக்கம் இன்றும் உலகின் பெரும்பாலான மக்களின் இடையே அவர்களின் தின வாழ்க்கையில் நடைபெற்று வருகிறது. குறிப்பாக இதை ஆசியா, ஆப்பிரிக்கா, ஓசேனியா, மத்திய தெற்கு அமெரிக்கா போன்ற இடங்களில் பெரும்பாலாகக் காணலாம். தன் வாழ்க்கை முழுவதையும் மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள ஜாம்பியாவில் கழித்த என்னுடைய மிஷனெரி நண்பர் ஒருவர், இதுபற்றிய தன்னுடைய அனுபவத்தைக் கீழே விளக்குகிறார். அவர் அங்குள்ள மக்களின் மொழிகளிலும் வழக்கங்களிலும் நல்ல அனுபவம் உடையவர்.

ஜாம்பியாவில் எங்களது கிராமப்பகுதியில் நடந்த கன்வென்ஷனிலே பரிசுத்த ஆவியானவர், ஒரு வல்லமையான தீர்க்கதரிசன வார்த்தையைப் பேசி திருச்சபையின் பரிசுத்தத்தை நாடுமாறு கூறினார். அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்விலுள்ள பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டு அதனை அறிக்கை செய்து தேவனுடைய மன்னிப்பை வேண்டிக் கொண்டு உண்மையாகவே மனம் திரும்பினார்கள்.

அந்த ஆராதனைக்குப் பின்பு தூரமாய் இருந்த கிராமப்புறத்து சபையிலிருந்து ஒரு மூப்பர், அந்தப் பிரசங்கியார் முன் கண்ணீருடன் வந்தார். அவர் உடலெல்லாம் நடுங்கிக் கொண்டே வந்தார். அவர் பில்லி சூனியத்தால் ஒருவரைக் கொலை செய்த கொடூர பாவத்தை அறிக்கை செய்துகொண்டே வந்தார்.

அந்த மூப்பர் பல ஆண்டுகளாகத் தன் சபையில் மூப்பராக இருந்தமற்றொருவருடன் சண்டை போட்டு வந்ததாகப் பிரசங்கியாரிடம் கூறினார். சூழ்நிலை மிகவும் மோசமாகப் போகவே அவர் ஒரு சூனியக்காரரிடம் சென்று அந்த மூப்பரைச் சபிக்கப் பணம் தந்து, அவரைத் தண்டிக்கத் தீர்மானித்தார். அந்த இருவரும் கிறிஸ்தவர்கள் என்று அந்த சூனியக்காரர் அறிந்தவுடன் மிகுந்த மகிழ்ச்சியுடன் அதைச் செய்யலானார். அவர் அதற்கு அதிகக் கைக்கூலியைப் பெற்று அந்த மனிதனை மறுநாள் வரும்படிச் சொன்னார்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 160 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவர் திரும்பி வந்த பொழுது அந்த சூனியக்காரர் ஒரு மரத்தின் கீழே கையில் ஒரு கண்ணாடியும் தனக்கு முன்பாக ஒரு பாத்திரத்தில் பில்லி சூனிய மருந்தும் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அந்த பில்லி சூனியக்காரர் ஒரு விதத்துணியின் மூலம் அந்த மருந்தைக் கண்ணாடி முழுவதும் தெளித்து அந்த மூப்பரை கவனமாய் அக்கண்ணாடியில் பார்க்கச் செய்து, அவர் காண்பது என்ன என்று கேட்டார்.

அந்த மூப்பர் வியப்படைந்து தன் உடன் மூப்பரின் முகத்தை அந்தக் கண்ணாடியில் மிகத்தெளிவாய்க் காண்பதாகக் கூறினார். உடனே அந்த சூனியக்காரர் ஒரு சவரக்கத்தியை எடுத்து அந்தக் கண்ணாடியில் கண்ட அவருடைய கழுத்தை வெட்டினார். உடனே அந்தக் கண்ணாடி இரத்தத்தால் மூடப்பட்டது.

அந்த மூப்பர் சத்தமிட்டு "நீ அவரைக் கொன்று விட்டாய்! அவரைச் சபிக்க மாத்திரமே நான் சொன்னேன்" என்று கூறினார். அந்தச் சூனியக்காரர் சிரித்துக் கொண்டே "நான் செய்கிற வேலையைச் சரியாகவே செய்து முடிக்க விரும்பினேன்!" என்று கூறினார்.

அந்த மூப்பர் வீட்டிற்கு விரைந்து போனார்; அதிசயிக்கும் வண்ணம் தன் உடன் பணி செய்த மூப்பர் திடீரென்று இரத்தக்குழாய்கள் வெடிக்க விநோதமாக, மரணத்தைச் சந்தித்தார் எனக் கேள்விப்பட்டார். தனது செயலின் விளைவுகளைக் கண்டு அந்த மூப்பர் மிகவும் பயந்து போனதாலே, அதைக் குறித்து அவர் மௌனமாய் இருந்து விட்டார். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவருடைய பாவத்தை அவருக்கு அழுத்தமாகக் கண்டித்து உணர்த்தினார்.

"எங்கே பாவம் பெருகினதோ அங்கு கிருபையும் அதிகமாகப் பெருகுகிறது" என்னும் வசனத்தின் மூலம் பாவ அறிக்கையினாலும், மனம் திரும்புதலினாலும் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலும் அந்த மனிதன் தேவனுடைய மன்னிப்பிற்கும், சமாதானத்திற்கும் மாத்திரமல்ல, புதிய பிறப்பின் அனுபவத்திற்கும் உள்ளாக வந்தார்.

மேற்கத்திய நாட்டைச் சார்ந்த சில வாசகர்கள் இது "இருண்ட ஆப்பிரிக்காவில்" நடைபெறும் தற்கால மூட நம்பிக்கை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 161 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என ஒதுக்கித் தள்ளிவிடுவர். ஆனால் உண்மை என்னவென்றால் அதிகமான முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும் முன்பு குறைந்து கொண்டு வந்த மந்திரவாத பழக்கங்கள், தற்சமயம் வளர ஆரம்பித்துள்ளன. உதாரணமாக மேற்கு ஜெர்மனியில் கிறிஸ்தவ ஊழியரிடம் ஒருபோதும் ஆலோசனை கேட்க வராத அநேக வியாபாரிகள், தங்கள் வியாபாரக் காரியங்களுக்குக் குறி சொல்லுபவர்களிடம் செல்கின்றனர்.

1980 ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள ஒரு சாத்தான் திருச்சபையின் தலைவர் தொலைக்காட்சியில் பேட்டி அளித்தார். "இந்த சாத்தான் வழிபாட்டுக்காரர்கள் நரபலி செலுத்துகின்றனரா?" என்ற கேள்வி அவரிடத்தில் கேட்கப்பட்டது. அவர் அதற்கு மறுமொழியாக: "நாங்கள் பிரதிநிதியாக ஒன்றை வைத்து மனித நரபலி கொடுக்கிறோம். ஏனென்றால் மனிதர்களைக் கொன்றால் அது எங்களுக்கு விரோதமாகச் சாபங்களாக மாறக்கூடும்" என்றார்.* இது அவருக்கு விரோதமான மற்றொருவரால் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு அன்று. அவர் தானாகவே இதை ஒப்புக் கொண்டார்.

இஸ்ரவேலிலே மோசேயின் சட்டத்திற்குக் கீழே இது மரணத்தினால் தண்டிக்கப்படக்கூடியது. ஆனால் நமது கலாச்சாரத்தில் இப்படிப்பட்ட மந்திரவாதப் பழக்கங்கள் ஒரு குற்றமல்ல. அது மக்களைக் கொல்வதற்கு பயன் படுத்தப்பட்டாலும் அதற்குத் தண்டனை கிடையாது.

மேலே கொடுக்கப்பட்ட சாத்தானைப் பின்பற்றுகிறவருடைய கூற்று, மக்களைக் கொல்வதற்கு அவர்கள் சாபங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை விளக்குகிறது. எனினும் அவர்கள் நரபலி செலுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டு அவர்கள் மீது சுமத்தப்படுவது இல்லை. மேட்டமோரோஸ், மெக்ஸிகோவில் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி நடந்த சம்பவம் நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிகையில் வெளியானது:

* இது America: The Sorcerer's New Apprentice by Dave Hunt and T A. McMahon (Harvest House Publishers, 1988) லிருந்து எடுக்கப்பட்டது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 162 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*செவ்வாய்க்கிழமை ... (அமெரிக்காவையும் மெக்ஸிகோவையும் சார்ந்த) அதிகாரிகள்* 12 *சடலங்களைக் கண்டனர். இதில்* 21 *வயதைச் சார்ந்த டெக்சாஸ் சர்வ கலாசாலையின் மாணவன் ஒருவனும் அடங்குவான். அவன் ஒரு மாதத்திற்கு முன்பாகக் காணப்படாமற்போனவன். இந்தச் சடலங்கள் அமெரிக்காவின் ஒரு கோடியில் இருந்த எட்டு கல்லறைகளில் இருந்தன. இன்று இங்கும், டெக்சாசில் உள்ள பரவுன்ஸ்வில்லிலும் நடந்த செய்தியாளர்களின் கூட்டங்களில், அதிகாரிகள் ஒரு போதைப் பொருள் விற்கும் குழுவானது இந்தக் கொலைகளுக்குரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டதாகக் கூறுகிறது. இவ்வித நரபலி காவல்துறையினரிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள "ஒரு மந்திரக்கேடயமாக" அமையும் என எண்ணி இவ்வாறு செய்திருக்கக்கூடும் என்று கூறுகின்றனர்.*

*சந்தேகத்திற்குள்ளானவர்களில் ஒருவர் கியூபா நாட்டைச் சார்ந்த அடால்போ டி சீசஸ் கான்ஸ்டான்சோ* (Adolfo de Jesus Constanzo) *என்னும் போதைப் பொருள் கடத்தல்காரர் ஆவார். இவர் எல் படிரினோ* (El Padrino)— *ஞானபிதா என மற்றவர்களால் அழைக்கப்படுகிறார். காவல்துறையினர் இவர் இந்த கலாச்சாரக்கொலைகளைச் செய்வதற்குப் பட்டணத் தெருக்களில் உள்ள வாலிபரில் சிலரை மனம் போனவாறு சுட்டிக்காட்டித் தன்னைப் பின்பற்றுகிறவர்களிடத்தில் அவர்களைப் பிடித்து வரச் சொல்வார் என்று கூறுகின்றனர். பின்பு அவர்களைக் கொலை செய்து, துண்டங்களாக்கி எறிந்து விடுவார்களாம்.*

*அதிகாரிகள் இந்தக் கொலைகள் கெய்டி, கீயூபா, ஜமைக்கா போன்ற நாடுகளில் செய்யப்படும் பலி, கருப்பு மந்திர பழக்கங்களின் கலப்படங்கள் என கூறுகின்றனர்.*

*அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சாத்தானை வழிபாடு செய்பவர்கள் தங்களின் சடங்குகளுக்குச் சிசுக்களையும், சின்னக் குழந்தைகளையும் பலி செலுத்துவதாகக் குறிப்புகள் உள்ளன.*

*மந்திரசக்தியின் தாக்குதலுக்கும் சாத்தானின் சாபங்களின் தாக்குதல்களுக்கும் இலக்கானவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களே. சாத்தானை வழிபடுபவர்கள் அவர்களுடைய*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 163 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*விரோதிகள் யார் என்பதைச் சரியாகத் தெரிந்து, அவர்களுக்கு எதிராகத் தங்கள் தாக்குதல்களைச் செய்கின்றனர். என் உடன் ஊழிய நண்பரால் சொல்லப்பட்ட சம்பவம் ஒன்று இதைப் பற்றி தெளிவாய் விளக்குகிறது.*

*என்னுடைய நண்பருக்கு அறிமுகமான கிறிஸ்தவப் பெண் ஒருத்தி தன் குடும்பத்தினரோடு நியூ ஆர்லியன்ஸ் என்ற பட்டணத்தில் ஓர் உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அந்த இடம், அமெரிக்காவில் பில்லி சூனியத்திற்கு மையமான ஆவியின் தலைநகராகும். அவர்கள் அங்கு அமர்ந்திருந்த பொழுது, சாத்தான் வழிபாட்டுக்காரர்கள் அந்த உணவகத்திற்குள் நுழைந்து மேஜைக்கு மேஜை சென்று, கிறிஸ்தவர்கள் சுவிசேஷம் சொல்வது போல, சாத்தானைப் பின்பற்றி வரும்படி அவர்கள் மக்களைத் தீவிரமாய் அழைத்தனர். அந்தப் பெண்ணிடம் கீழேயுள்ள ஆறு குறிப்புகள் அடங்கிய 1988 ஆம் ஆண்டிற்கான உலகத்திட்டத்தின் முக்கிய அம்சங்களைக் காட்டும் விளம்பரம் ஒன்றை காட்டினர். இது உபவாசத்துடனும் ஜெபத்துடனும் அனுசரிக்கப்பட வேண்டியது என்றனர்!:*

1) அந்திக் கிறிஸ்து சீக்கிரத்தில் வெளிப்படுவார்.
2) ஊழியர்களும், தலைவர்களும், மிஷனெரிகளும் வீழ்ச்சியடைவார்கள்.
3) ஊழியங்களும் தேவனுடைய பணிகளும் அழிக்கப்படும்.
4) கிறிஸ்தவர்கள் சுயதிருப்தி அடைவார்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக சமாதானத்தை விரும்புவார்கள்; கிறிஸ்தவர்கள் பூரண சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காத திருச்சபைகளைத் தேடிப் போவார்கள்; எந்தப் பாவமானாலும் அதைக் கவனியாது சமாதானத்தைப் பற்றிப் பேசும் சபையைத் தேடுவார்கள்.
5) கிறிஸ்தவர்கள் தங்கள் உபவாசத்தையும், ஜெபத்தையும் விட்டு விடுவார்கள்.
6) பரிசுத்த ஆவியின் வரங்கள் அசட்டை செய்யப்படும்.

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சபை தற்சமயம் சாத்தானின் வல்லமைகளால் தொடர்ந்து தாக்கப்படுகின்றது என்பதற்கான பல அறிகுறிகளில் இது ஒன்று மாத்திரமே. திருச்சபை இதைக் குறித்து என்ன செய்யக்கூடும்? கிறிஸ்து சாத்தானைச் சிலுவையில் தோற்கடித்தார். முதலாவது நாம்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 164 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நம்மை எவ்வாறு தற்காத்துக் கொள்ளக்கூடும்? இரண்டாவதாக, கிறிஸ்துவின் வெற்றியை நம்முடைய சொந்த வாழ்விலும் நமது சபைகளிலும் அனுதின அனுபவமாகச் செய்வது எவ்வாறு?*

*இஸ்ரவேலின் மேல் சாபத்தைக் கொண்டுவர முயற்சி செய்த பிலேயாமின் வாழ்விலிருந்து நம்மைத் தெளிவுபடுத்தும் சில பதில்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். தேவன் இஸ்ரவேலின் சார்பாக இடைப்பட்டு, சொல்ல இருந்த சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றினார். தேவன் இஸ்ரவேலர்களின் சார்பாகச் சாத்தானுக்கு எதிராக அவர் எழுந்தபோது, இஸ்ரவேலர்களின் நடத்தையில் அவர் கண்டது என்ன?*

*தேவனுடைய ஆதரவை அவருடைய மக்கள் பெறும்படியாக அவர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்புகள்:*

1. இஸ்ரவேல் மக்கள் தேவன் அவர்களுக்குக் கொடுத்த திட்டத்தை நிறைவேற்றுகிறவர்களாகக் கடந்து சென்றனர்.
2. அவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் இரவும், பகலும் மேகஸ்தம்பத்தினாலும், அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தப்பட்டனர். இது புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்படுவதற்கு ஒப்பாய் இருக்கிறது. (ரோமர் 8:14யைப் பார்க்க.)
3. அவர்கள் தேவன் நியமித்த தலைவர்களையும், தேவன் கொடுத்த சட்டங்களையும் கொண்ட ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளான தேசமாய் இருந்தனர்.
4. அவர்களுடைய உறவுகள் தெய்வீக மாதிரியின்படி கவனமாய் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த உறவுகளின் மாதிரிகளை அழகாக பிலேயாம் எண்ணாகமம் 24:5—6ல் கூறுகிறார்:

   *யாக்கோபே, உன் கூடாரங்களும்,
   இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்!
   அவைகள் பரவிப்போகிற பள்ளத்தாக்குகள் போலவும்,
   நதியோரத்திலுள்ள தோட்டங்களைப் போலவும்,
   கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப் போலவும்,
   தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும்
   இருக்கிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 165 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அச்சமயத்தில் இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் பாளையம் இறங்கியிருந்தபடியால் அவர்களின் அன்றைய நிலையை இது தெரிவிக்கவில்லை.

5. விசுவாசித்துக் கீழ்படியாத இஸ்ரவேலர்களின் தலைமுறையினர் அனைவரும் அவர்கள் மத்தியில் இருந்து எடுத்துப் போடப்பட்டனர். (எண்ணாகமம் 26:63—65யைப் பார்க்க.)

*இஸ்ரவேலர்களைப் பற்றிய இந்தக் குறிப்புகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் யாது? இதன் முக்கியக் குறிப்புகளை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்: இஸ்ரவேலர்கள் தேவனால் கட்டுப்படுத்தப்பட்டு வழிநடத்தப்பட்டு ஒருவருடன் ஒருவர் அன்பு கொண்டு இணைந்து வாழ்ந்த ஓர் இனம். வேறு வகையில் சொன்னால் இஸ்ரவேலர்கள் "தன் சொந்தக்காரியங்களைச் செய்து வரும்" தனிப்பட்ட நபர்களைக் கொண்ட ஒரு கூட்டம் அல்ல.*

*தேவன் தம் மக்களிடத்தில் எதை எதிர்பார்க்கிறாரோ அதில் மாறிவிடவில்லை. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாகச் சாத்தானும் தன்னுடைய வழிகளை மாற்றிக் கொள்ளவில்லை. இப்பொழுது சபையானது தேவனுடைய ஆதரவையும், பாதுகாப்பையும் பெறக்கூடிய நிபந்தனைகளை நிறைவேற்றவில்லையானால், அதற்கு நம்பிக்கை இல்லை : சபையில் மாற்றம் ஏற்படவேண்டும்.*

*ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக இஸ்ரவேலுக்கு விரோதமான பிலேயாமின் தந்திரமான கூற்று, இஸ்ரவேலர்களின் முழு வெற்றியில் முடிவடையவில்லை. இஸ்ரவேலர்கள் மேல் ஒரு சாபத்தைக் கொண்டு வரும் முயற்சியில் பிலேயாம் தோல்வியுற்றதினால், இன்னொரு யுக்தியைக் கையாண்டான். அவன் பாலாக்கிடம் ஆண்களை ஏமாற்றிச் சிக்க வைக்கும்படி மோவாபியப் பெண்களைப் பயன்படுத்த ஆலோசனை கூறினான். முதலாவது விபச்சாரப் பாவத்திலும், பின்பு விக்கிரக ஆராதனையிலும் ஈடுபடச் செய்தான். பிலேயாமின் முதல் தந்திரம் தோல்வி அடைந்த போதும், அவனது இரண்டாவது தந்திரம் வெற்றி அடைந்தது.*

*அதன் பின்பு, இஸ்ரவேலர்களின் பேரில் அவன் சாபத்தைக் கூறுவதற்கு அவசியமில்லாமற் போயிற்று.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 166 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தேவனுடைய முதலாம் கற்பனையை அவர்கள் மீறியதால் தேவனுடைய சாபத்தைத் தாங்களே வரவழைத்துக் கொண்டனர். இதனால் 24,000 பேர் மாண்டனர். (எண்ணாகமம் 25யைக் காண்க.) எண்ணாகமம் 31:6ல் மோசே இது பிலேயாமின் ஆலோசனையால் நிகழ்ந்தது என்று கூறுகின்றார்.

1 கொரிந்தியர் 10:8ல் பவுல் இந்தச் சம்பவத்தைப் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு ஓர் எச்சரிப்பாகக் கூறுகிறார். பிலேயாமின் சூழ்ச்சிகரமான தந்திரம் புதிய ஏற்பாட்டில் இன்னும் மூன்று இடங்களில் குறிப்பிடப்படுகிறது: 2 பேதுரு 2:15–16; யூதா 11; வெளிப்படுத்தின விசேஷம் 2:14. இஸ்ரவேலுக்கு விரோதமாக பிலேயாம் செய்த தந்திரம் புதிய உடன்படிக்கையின் விசுவாசிகளுக்கும் முக்கிய எச்சரிப்பாக உள்ளது. இதன் மையக்குறிப்பு எளிதானது: கட்டுப்பாடுடன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, ஒருவருடன் ஒருவர் இசைந்து வாழும் கிறிஸ்தவர்கள், சாத்தானின் தாக்குதல்களுக்கு தேவனிடமிருந்து பாதுகாப்பை எதிர்பார்க்கலாம். ஆனால் கட்டுப்பாடற்ற, கீழ்ப்படிதல் இல்லாத, பிறருடன் இசைவு கொள்ளாத கிறிஸ்தவர்கள் தேவனுடைய பாதுகாப்பை இழக்கின்றனர்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 167 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 14

## ஆத்துமத்திற்கடுத்த பேச்சு

*சாத்தானின் ஊழியர்களிடமிருந்து கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக அனுப்பப்படும் ஆவிக்குரிய சக்திகள், ஆபத்தானதும், கேடான விளைவுகளை உண்டாக்கக்கூடியதும் என்பதைப் புரிந்து கொள்வது கிறிஸ்தவர்களுக்குக் கடினமல்ல. ஆனால் சில வேளைகளில் தங்கள் உடன் விசுவாசிகளிடமிருந்து உண்டாகக்கூடிய ஆவிக்குரிய சக்திகளும் தங்களுக்குக் கெடுதியை விளைவிக்கும் என்பதைக் கேட்டால் அநேக கிறிஸ்தவர்கள் வியப்படைவார்கள். என்றாலும் யாக்கோபு 3:14–15ல் அப்போஸ்தலர் யாக்கோபு கிறிஸ்தவர்களுக்கு, கிறிஸ்தவர்களைப் பற்றி எச்சரித்து எழுதுகிறார்:*

> "உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள்.
>
> இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், இலௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாய் இருக்கிறது."

*ஒரு குறிப்பிட்ட "ஞானத்தை" விளக்கும் போது, யாக்கோபு மூன்று காரியங்களை இறங்கு வரிசையில் சொல்லுகிறார்: முதலாவதாக, "இலௌகிக சம்பந்தமானது" அதற்குக் கீழே, "ஜென்ம சுபாவத்திற்குரியது" அதற்குக் கீழே, "பேய்த்தனத்திற்கு அடுத்தது." இரண்டாவது சொல்லப்பட்ட காரியத்திலே இந்த*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 168 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பூமிக்குரிய ஞானத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் உள்ளது. இது "ஜென்ம சுபாவத்திற்குரியது" என இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கான கிரேக்கச் சொல் சுக்கிகாஸ் என்பதாகும். இச்சொல் "ஆத்துமா" அல்லது "மனதைக்" குறிக்கும் "சுக்கி" என்னும் சொல்லிலிருந்து வந்தது. இதற்கிணையான தமிழ்ச்சொல் "ஆத்துமத்திற்கடுத்தது" என்பதாகும். இவ்விதமாக மொழி பெயர்க்கப்படும் பொழுது மனித ஆழ்த்தத்துவத்தைப் பற்றி வேதம் கூறுவதுடன் இது இணைந்து செல்கிறது.

1 தெசலோனிக்கேயர் 5:23ல் பவுல், "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக" என்று ஜெபிக்கிறார். பவுல் இங்கு ஒரு முழு ஆழ்த்தத்துவத்தையும் குறிக்கும் மூன்று கூறுகளை மேலிருந்து கீழாக இறங்கு வரிசையில் கூறுகிறார் : முதலாவது, ஆவி; பின் ஆத்துமா; பின் சரீரம்.

படைப்பின் வேளையிலே தேவன் நேரிடையாக மனிதனுடைய நாசியில் ஊதியது மனிதனின் ஆழ்த்தத்துவமாக உள்ளது. ஆகையால் அது தம்மைப் படைத்தவருடன் நேரிடையாக ஐக்கியமும், தொடர்பும் கொள்ளக்கூடும். 1 கொரிந்தியர் 6:17ல் பவுல், "கர்த்தரோடிசைந்திருக்கிறவனும்." அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் என்று கூறுகிறார். "அவருடனே ஒரே ஆத்துமாவாய் இருக்கிறான்" என்று சொன்னால் அது தவறாகும். மனிதனுடைய ஆவி மட்டுமே தேவனுடன் நேரிடையாகத் தொடர்பு கொள்ளக்கூடும்.

ஆதியிலே படைப்பில் மனிதனுடைய ஆவி மேலே தேவனுடனும் கீழே அவனுடைய ஆத்துமாவுடனும் தொடர்புள்ளதாய் இருந்தது. தேவன் மனிதனின் ஆவியுடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டார். அவனுடைய ஆவியின் மூலம் அவன் ஆத்துமாவோடும் தொடர்பு கொண்டார். ஆவியும் ஆத்துமாவும் சேர்ந்து சரீரத்தில் காரியங்களை நடப்பித்தன.

மனிதன் வீழ்ந்த போது, அவனுடைய கீழ்ப்படியாமையினால் அவனுடைய ஆவி தேவனிடமிருந்து துண்டிக்கப்பட்டது. அதே நேரத்தில், அவனுடைய ஆத்துமா



Blessing or Curse Tamil text 2012 revised.p65 169 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவனுடைய ஆவியின் துணையின்றி தனித்து இயங்க ஆரம்பித்தது. இந்தப் புதிய, "பிளவுபட்ட" உறவு, தேவனுக்கு எதிராக மனிதன் செய்த கலகத்தின் விளைவாக ஏற்பட்டது.

புதிய ஏற்பாட்டிலே மற்ற இடங்களில் "ஆத்துமத்திற்கடுத்தது" என்னும் சொல் மனித ஆவியுடன் சரியான உறவு இல்லாதிருக்கும் ஆத்துமாவின் செயல்பாட்டைக் குறிக்கிறது. ஆகையால் இது தேவனுடைய உயர்ந்த சித்தத்திற்கு எதிரான ஒரு நிலையை விளக்குகிறது. இதைச் சரியாக நிறுவுவதற்கு, சுக்கிகாஸ்—அதாவது "ஆத்துமத்திற்கடுத்தது" என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ள வேறு இரு புதிய ஏற்பாட்டுப் பகுதிகளைக் காண்போம்.

1 கொரிந்தியர் 2:14–15ல் பவுல் "ஜென்ம சுபாவமான (ஆத்துமத்திற்கடுத்த) மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்... அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவும் மாட்டான்" என்று கூறுகின்றார். அதே நேரத்தில், "ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்." "ஆவிக்குரியதும்" "ஆத்துமாவிற்குரியதும்" ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருப்பது இங்கு தெளிவாக உள்ளது. "ஆவிக்குரிய" மனிதன் தேவனுடைய சித்தத்தின்படி செயலாற்றுகிறான்; "ஆத்துமத்திற்குரிய" மனிதனோ தேவனுடைய தொடர்பை இழந்தவன். "ஆத்துமத்திற்குரிய" மனிதன் ஆவிக்குரிய சத்தியங்களை மனதின் தளத்தில் புரிந்து கொள்ள விரும்புகிறான். அதை அவனால் செய்ய முடிவதில்லை. "ஆவிக்குரிய" மனிதன் தன்னுடைய ஆவியின் மூலம் தேவனோடு இணைக்கப்பட்டிருக்கிறான். ஆகவே ஆவிக்குரிய வெளிப்பாடுகளை நேரிடையாக தேவனிடமிருந்து அவன் பெற்றுக் கொள்கிறான்.

யூதா 16–19 வரையுள்ள வசனங்களில் அதன் எழுத்தாளர் மனிதர்களில் ஒரு வகையினரைப் பற்றி விவரிக்கிறார். இவர்கள் திருச்சபையுடன் இணைந்தவர்களாய் இருந்தும் "முறுமுறுக்கிறவர்களாகவும், குறை கூறுபவர்களாகவும், தங்களின் சொந்த இச்சைகளின்படி நடக்கிறவர்களாகவும்" உள்ளனர். இவர்களைப் பற்றி "இவர்கள் பிரிந்து போகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும் (ஆத்துமத்திற்குரியவர்கள்), ஆவியில்லாதவர்களுமாமே (அதாவது, பரிசுத்த ஆவி



Blessing or Curse Tamil text 2012 revised.p65 170 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இல்லாதவர்களுமாமே)" என்று கூறுகிறார்.

1 கொரிந்தியர் பகுதியும், யூதாவின் பகுதியும் "ஆத்துமத்திற்குரிய" மனிதனுக்கு ஒத்த ஒரு விளக்கத்தை நமக்குத் தருகிறது. அவன் சபையோடு இணைந்தவன் போல் காணப்படுகிறவன். ஆனால் அவன் ஆவிக்குரிய முகமூடி தரித்தவன். அதே நேரத்தில் தேவனுடன் அவனுடைய ஆத்துமா அவனுடைய ஆவியினால் இணைக்கப்பட்டதல்ல. அவன் விசுவாசத்தை அறிக்கையிட்டாலும், தேவனுடனும், அவருடைய மனிதர்களுடனும் இணைக்கப்படாத ஒரு கலகக்காரனே. அவனால் ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அவனுடைய கலக மனப்பான்மையும், நடத்தையும் தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்தி கிறிஸ்துவின் சரீரத்தில் பாதிப்பை உண்டாக்குகிறது.

மேற்சொன்ன பகுதிகள் யாக்கோபு 3:15ல் களங்கப்பட்ட ஞானத்தின் இறங்கு வரிசைகளைப் பற்றி விளக்குகிறது: பூமிக்குரியதிலிருந்து ஆத்துமத்திற்கடுத்ததற்கும், ஆத்துமத்திற்கு அடுத்ததிலிருந்து பேய்த்தனத்துக்கடுத்ததற்கும் என்று விளக்குகிறது. இதனுடைய அடிப்படைக் காரணம், தேவனுடைய அதிகாரத்தை எதிர்த்து—அவருக்குக் கீழ்ப்படியாமல் அவருக்கு விரோதமாய் செய்யும் கலகம் ஆகும். இப்படிப்பட்ட கலக மனப்பான்மை ஒரு மனிதனுடைய ஆவியை தேவனிடமிருந்தும், பரலோகத்தின் காரியங்களிலிருந்தும் பிரித்து விடுகின்றது. அவன் இப்பொழுது, உலகத்திற்கடுத்த மதிப்பீடுகளின் தளத்திற்கும் நோக்கங்களுக்கும் உட்பட்டு இருக்கிறான்.

அதே நேரத்தில் அவனுடைய ஆத்துமா—தேவனை விட்டுப் பிரிந்திருப்பதினாலே—அதனுடைய கலக மனப்பான்மையினால் பிசாசுகளுடைய செல்வாக்கிற்குள் அவனைக் கொண்டு வருகிறது. இதனை அவனுடைய கூர்மையற்ற ஆவிக்குரிய புலன்களால் கண்டு கொள்ள முடியாது. இதன் விளைவாக வெளிப்படக்கூடிய ஞானம் "ஆவிக்குரியதாகக்" காணப்பட்டாலும் அது "பிசாசிற்கடுத்ததே."

யாக்கோபு மூன்றாம் அதிகாரம் முழுவதும் நாவைத் தவறுதலாகப் பயன்படுத்துதல் என்னும் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை விளக்குகிறது. மேலும் இந்த நிருபம் முழுவதும் முக்கியமாக—கொஞ்சம் கூட விடாமல்—கிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைப்பவர்களுக்கு எழுதப்பட்டது. ஆகையால்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 171 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

யாக்கோபு பேசுகின்ற இந்த களங்கப்பட்ட, பொய்யான, பிசாசிற்கடுத்த ஞானம் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளில் காணப்படுகிறது என்பது தெளிவாகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை எவ்வாறு உண்டாகிறது?

இரண்டு தளங்களில் கிறிஸ்தவர்கள் அடிக்கடி குற்றமுள்ளவர்களாய்க் காணப்படுகின்றனர். அவர்கள் பேசும் வார்த்தைகளே இதற்குக் காரணம். முதலாவதாக கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளேயே பேசும் வார்த்தைகளினாலும், இரண்டாவதாக —சிறப்பாக ஜெபத்தில்—தேவனிடம் பேசும் வார்த்தைகளினாலும் இக்குற்றம் உண்டாகிறது.

புதிய ஏற்பாடு, கிறிஸ்தவர்கள் எவ்வாறு மற்றவர்களைப் பற்றி—முக்கியமாகத் தங்களின் உடன் விசுவாசிகளைப் பற்றி—பேச வேண்டும் என்பதற்கு மிகத்தெளிவான எச்சரிப்புகளைக் கொடுக்கிறது. தீத்து 3:2ல் பவுல் நாம் "ஒருவனையும் தூஷிக்கக் கூடாது" என கூறுகிறார். இங்கு ஒருவனையும் என்னும் வார்த்தை விசுவாசிகளையும், அவிசுவாசிகளையும் கொண்ட அனைத்து மக்களையும் குறிக்கின்றது.

"தூஷணம்" என்னும் பாவம் தேவனுக்கு விரோதமாய்ப் பேசப்படும் வார்த்தைகளை மட்டுமல்ல, மற்றவர்களைக் குறித்து நாம் பேசும் வார்த்தைகளையும் குறிக்கும் என்பதை அறிந்து கொள்வது முக்கியம். தேவனிடத்திலானாலும் சரி மனிதனிடத்திலானாலும் சரி, கிறிஸ்தவர்கள் இவ்விதமான பேச்சுகளைப் பேசுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

யாக்கோபு 4:11ல் யாக்கோபு குறிப்பாகக் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் பேசும் வார்த்தைகளைப் பற்றிக் கூறுகிறார் "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்" என்கிறார். மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாய் பொய்யாய் ஒன்றையும் பேசக்கூடாது என்று யாக்கோபு கூறுவதாக கிறிஸ்தவர்கள் இதை எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் அவர் இங்கு உண்மையில் சொல்லியிருப்பது, உடன் விசுவாசிகளுக்கு விரோதமாய் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், அது உண்மையாய் இருப்பினும் அதைத் தவிர்க்க வேண்டும் என்கிறார். இங்கு யாக்கோபு



Blessing or Curse Tamil text 2012 revised.p65 172 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கூறும் பாவம் பொய்யாய் பேசுவதை குறித்துக் கூறாமல் எதிராகப் பேசுவதைக் குறித்தே கூறுகிறார்.*

*கிறிஸ்தவர்கள் மிகவும் எளிதில் குற்றத்திற்குள்ளாகும் பாவங்களுள் ஒன்று புறங்கூறுதலாகும். சில கிறிஸ்தவ திருச்சபைகளில் புறங்கூறுதலை அழித்து விட்டால், அவர்கள் மத்தியிலே உரையாடுதல் என்பதே ஒன்றும் இராது!*

*காலின்ஸ் ஆங்கில அகராதி "புறங்கூறுதலைப்" பற்றிக் கீழ்கண்ட இரண்டு விளக்கங்களைத் தருகிறது.*

1. தற்செயலாய் பேசும் வீணான பேச்சு.
2. வதந்திகளின் அடிப்படையில் பேசும் கேடான நோக்கமுடைய பேச்சுகள்.

*இங்கு புறங்கூறுதலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள இரு வார்த்தைகள்* ***வீணானதையும், கேட்டை விளைவிக்கும் பேச்சையும்*** *குறிப்பதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் கேட்டை விளைவிக்கின்ற பேச்சினைத்தவிர்த்தால் மட்டும் போதாது. மத்தேயு 12:36ல் இயேசு கிறிஸ்து வீணான பேச்சுகளைக் குறித்துத் தெளிவாக நம்மை எச்சரிக்கிறார்: "மனுஷர் பேசும்* ***வீணான*** *வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்கிறார்.*

*புதிய ஏற்பாடு புறங்கூறுதலைத் தவிர்க்க வேண்டும் என்று தெளிவாய்ச் சொல்கின்ற பொழுதிலும் அநேக கிறிஸ்தவர்கள் அதை "பாதிப்பு விளைவிக்காத" பாவம் என்று கருதுகின்றனர். ஆனால் மிக நிச்சயமாக தேவன் இதை அப்படிக் கருதுவதில்லை. பவுல் ரோமர் 1:29–30ல் தேவனைவிட்டு மனிதன் விலகிச் செல்வதினால் வரும் சில விளைவுகளைப் பட்டியலாக அளிக்கிறார். இதோ அந்தப் பட்டியலின் ஒரு பகுதி:"...பொறாமையினாலும், கொலையினாலும், வாக்கு வாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், கர்வம் உள்ளவர்களுமாய், அகந்தை உள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், ..." என்று தொடர்கிறார்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 173 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இந்தப் பட்டியலில் புறங்கூறுதலைத் தவிர்க்க வேண்டுமென்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. புறங்கூறுதலுடன் இணைக்கப்பட்ட இருதயத்தின் சில நோக்கங்கள் வாக்குவாதமும், வஞ்சகமும், வன்மமுமாகும். புறங்கூறுகிறவர்களை அவதூறு பண்ணுகிறவர்கள், தேவபகைஞர், கர்வமுள்ளவர்கள், அகந்தையுள்ளவர்கள், வீம்புக்காரர் ஆகிய இவர்களுடன் இணைத்தே கூறப்பட்டுள்ளது. புறங்கூறும் கிறிஸ்தவர்கள் தங்களை "வித்தியாசமாக" எண்ண முற்பட்டாலும் தேவன் அவர்களை அவ்வாறு காண்பதில்லை.

இவ்விதமான பேச்சின் ஆபத்தை யாக்கோபு 3:15ல் இறங்கு வரிசையில் சொல்லப்பட்டுள்ள காரியங்களான, "பூமிக்குரியது, ஆத்துமத்திற்கடுத்தது, பேய்த்தனத்துக்கடுத்தது" என்பவை விளக்குகிறது. மற்ற மக்களைப் பற்றி புறங்கூறும் கிறிஸ்தவர்கள் (முக்கியமாக உடன் விசுவாசிகளைப் பற்றி புறம் கூறுபவர்கள்) தேவனுடைய வார்த்தைக்கு நேரிடையாகக் கீழ்ப்படியாதவர்கள் ஆவார்கள். இதன் விளைவாக இவர்கள் வழுக்கி விழச்செய்யும் சரிவில் நிற்பவர்கள் போல் இருக்கின்றனர். என்ன சம்பவிக்கிறது என்று அவர்கள் உணருவதற்கு முன்பே அவர்கள் "பூமிக்குரிய நிலையிலிருந்து" "ஆத்துமத்திற்கடுத்ததற்கும்," "ஆத்துமத்திற்கடுத்ததிலிருந்து" "பேய்த்தனத்துக்கடுத்ததற்கும்" சரிந்து விழுகின்றனர்.

இந்த மக்கள் மற்றவர்களைப் பற்றி பேசுகின்ற வார்த்தைகள் சாதாரணமாய் "சாபங்கள்" எனக் கருதப்படாவிட்டாலும் அவைகளின் விளைவு சாபத்தின் விளைவு போலவே உள்ளது. கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள மற்ற அங்கத்தினர்களுக்கு விரோதமாக பிசாசின் சக்திகள் செயல்பட இவைகள் கால்வாய்களாய் உள்ளன. மேலும் இதனால் யாரைப் பற்றிப் பேசப்படுகிறதோ அவர்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்ல; யாக்கோபு 3:6ல் "நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்துகிறது" என்று கூறுகின்றார். இவ்விதமாய்ப் பேசி குற்றத்திற்குள்ளாகின்ற விசுவாசி தன்னையும் தன் சம்பந்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தையும் கறைப்படுத்துகிறான் என்று கூறப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பாக நான் ஐரோப்பிய நாட்டிற்கு ஊழியத்தினிமித்தம் பயணத்தை மேற்கொண்ட பொழுது, நான்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 174 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆத்துமத்திற்கடுத்த பேச்சின் ஆபத்துகளைப் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருந்தேன். நான் மிக முக்கியமானதோர் கூட்டத்தில் பேச ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த போது என் அடி வயிற்றில், தாங்க முடியாத வலி ஏற்பட்டது. அன்று மாலையில் பேசுவதற்கு நான் ஒப்புக் கொண்டதை இரத்து செய்ய நேரிடலாம் என்ற பயத்தினால் நான் தேவனை நோக்கி உதவியை நாடி ஜெபித்தேன்.

உடனடியாக நான் 6000 மைல்களுக்கு அப்பால் அமெரிக்க ஐக்கிய நாட்டில் என்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த என் இரு கிறிஸ்தவ நண்பர்களை என் மனத்திரையில் கண்டேன். எங்கள் மூவர் மத்தியிலும் நல்ல ஐக்கிய உறவு இருந்தது. ஆனால் என் இரு நண்பர்களும் நான் சமீபத்தில் ஈடுபட்ட ஒரு காரியத்தைக் குறித்து கடுமையாகக் கருத்து வேறுபாடு தெரிவித்தனர். அவர்களின் உரையாடலில், அவர்கள் என்னுடைய செயலுக்காய் கண்டனம் தெரிவிப்பது போல நான் உணர்ந்தேன். அவர்கள் என்னைப்பற்றி பேசின எதிர்மறையான வார்த்தைகள் என்னில் அந்த வலியைத் தோற்றுவித்திருந்தது. மேலும் இது அன்று மாலையில் நான் ஊழியம் செய்யாதபடி தடுத்து நிறுத்த சாத்தானின் தந்திரமாய் இருந்தது.

நான் இரு காரியங்களைச் செய்ய வேண்டும் என உணர்ந்தேன். முதலாவதாக, என் சித்தத்தின் அடிப்படையில் செய்த ஒரு தீர்மானத்தினால், என்னுடைய நண்பர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின வார்த்தைகளுக்காக அவர்களை மன்னித்தேன். பின்பு மத்தேயு 18:18ல் இயேசுவின் வாக்குத்தத்தத்தின் பேரில் செயல்பட்டேன்: "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்பதை நினைவு கூர்ந்தேன். இயேசுவின் நாமத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினால் எனக்கு விரோதமாகச் செயலாற்றிய சாத்தானின் சக்திகளைக் கட்டினேன். பின்பு, என்னைக்குறித்து என் நண்பர்கள் கூறிய வார்த்தைகளின் விளைவிலிருந்து என்னைக் கட்டவிழ்த்தேன். ஐந்து நிமிடங்களில் என் வயிற்றுவலி முற்றிலும் நின்று போயிற்று. (அது மீண்டும் வரவேயில்லை!). சில மணி நேரம் கழித்து அந்தக் கூட்டத்தில் திறம்படப் பேசினேன். அங்கு தேவனுடைய நோக்கம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 175 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நிறைவேறியதாக நான் கண்டேன்.*

*பின்பு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத் திரும்பிய பொழுது நான் என் இரு நண்பர்களையும் சந்தித்துப் பேசினேன். எங்களுக்கிடையில் இருந்த வேறுபாடு தீர்க்கப்பட்டது. இன்று எங்களுக்கு மத்தியில் உள்ள உறவு முன்பைவிட நெருக்கமாக உள்ளது.*

*மத்தேயு* 7:1–2*ல் இயேசு இவ்வாறு கூறுகிறார்*:
"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.

ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்."

*"குற்றம் தீர்ப்பது" என்ற வினைச்சொல்லின் மொழிபெயர்ப்பிலிருந்துதான் ஆங்கிலத்தில் குறை கூறுபவன், குறை கூறுதல் என்ற சொற்கள் உண்டாயின. நாம் மற்றவர்களை—முக்கியமாக உடன் விசுவாசிகளை—அவர்கள் மேல் தீர்ப்புக் கூறுகிற விதத்தில் குறை சொல்லும் போது, நாம் வேத வசனத்திற்குக் கீழ்ப்படியாமல், தேவனுக்கு எதிர்த்து நிற்பவர்களாக உள்ளோம். இது யாக்கோபு* 3:15*ல் "பூமிக்குரிய, ஆத்துமத்திற்கடுத்த, பேய்த்தனத்திற்கடுத்த" என்று சொல்லப்பட்ட "நோய்க்கு" நம்மை ஆளாக்குகிறது.*

*ஓர் உடன் விசுவாசியின் நடத்தையில் நாம் கருத்து வேறுபாடு கொண்டால், யூதப் பழக்கமுறைகளைக் குறித்து பேதுருவுடன் பவுல் கொண்டிருந்த கருத்து வேற்றுமையின் வேளையில், அவர்கள் பின்பற்றிய மாதிரியைக் கடைப்பிடிக்க வேண்டும். சில வேளைகளில் இவ்வாறு செய்வது அவசியமானதாகவும் உள்ளது. கலாத்தியர்* 2:11*ல் பவுல் "நான் முகமுகமாய் அவனோடே (பேதுருவோடே) எதிர்த்தேன்" என்கிறார்.*

*பவுல் பேதுருவின் நடத்தையைப் பற்றித் தன் உடன் ஊழியர்களான பர்னபாவுடனோ, தீத்துவுடனோ குறை சொல்லிப் பேசவில்லை. அதற்குப் பதிலாக அவர் பேதுருவிடமே நேரில்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 176 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சென்று தனக்குள்ள கருத்து வேறுபாட்டைக் கூறி தீர்த்துக் கொள்கிறார். பவுல் பேதுருவை அவருடைய முதுகிற்குப் பின்னால் குற்றம் சாட்டியிருப்பாரென்றால் அவர்கள் இருவருக்கும் மத்தியில் இருந்த உறவு நிரந்தரமாய் முறிவுற்றிருக்கும். அப்படி இல்லாததினால் தான், பேதுரு தன் வாழ்க்கையின் முடிவில் 2 பேதுரு 3:15ல் "நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலுக்கு அருளப்பட்ட ஞானத்தைப்" பற்றி மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்.

நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி சாலொமோன் கூறும் பொழுது நீதிமொழிகள் 27:5ல் "மறைவான சிநேகத்தைப் பார்க்கிலும் வெளிப்படையான கடிந்து கொள்ளுதல் நல்லது" என்கிறார்.

சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து, பிறருடைய குற்றத்தைப் பற்றி சாட்சி கூற வேண்டியது ஏற்படுமானால் அது ஒரு அசாதாரண சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையில் "சத்தியத்தை, முழு சத்தியத்தைப் பேசுவதும், சத்தியமல்லாத வேறொன்றையும் பேசாமல் இருப்பதும்" நமது கடமையாகும். யாருமே ஒரே நேரத்தில் சாட்சியாகவும், நியாயாதிபதியாகவும் இருக்கமுடியாது. இந்தச் சூழ்நிலையில் நாம் ஒரு நியாயாதிபதியின் நிலையில் செயல்படாது ஒரு சாட்சியின் பணியைச் செய்பவராக மட்டுமே இருக்கிறோம். இச்சூழ்நிலையில் நியாயத்தீர்ப்பு வழங்கும் பொறுப்பு வேறு ஒருவருக்குக் கொடுக்கப்படுகிறது.

இயேசு கிறிஸ்து நம்மை எச்சரிக்கும் குறிப்பிட்ட பாவம் என்னவென்றால், தேவன் நம்மை நியாயாதிபதியாக நியமித்திருக்காதபோது நியாயாதிபதியாக நாம் செயல்பட முற்படுவதேயாகும். நாம் பிறரைக் குற்றப்படுத்துவோமென்றால், காலப் போக்கில் எப்படியாவது பிறருக்கு விரோதமாய் நாம் கூறிய குற்றச்சாட்டுகள் நம்பேரிலும் சுமத்தப்படும் என்றும் அவர் நம்மை எச்சரிக்கிறார்.

வேதம் நாவைத் தவறுதலாகப் பயன்படுத்துவதினால் விளையும் தீமையைக் குறித்து விவரித்துக் கூறுவதைப் பார்க்கும் பொழுது நம்மில் வெகு சிலர்தான் "குற்றவாளிகளல்ல" என தைரியமாய்ச் சொல்லமுடியும். நாம் பிறரை நமது நாவின் மூலம் காயப்படுத்தி இருப்போமென்றால் நம்மையும், கிறிஸ்துவின் சரீரத்தையும் களங்கப்படுத்துகின்றவர்களாய் இருப்போம். நாம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 177 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இப்படிப்பட்ட குற்றத்திற்குள்ளாக இருப்பதை அறிந்தால், தேவனுடைய மன்னிப்பையும், சுத்திகரிப்பையும் நாடி மனம் திரும்ப வேண்டும். நாம் யார் மனதைக் குற்றப்படுத்தினோமோ அவர்களிடத்திலும் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இதற்கு மேல், நமக்கு விரோதமாய் மற்றவர்கள் தீமையாய்ப் பேசும் வார்த்தைகள் நம்மைக் காயப்படுத்தாதபடி எவ்வாறு காத்துக் கொள்வது எனவும் தெரிந்திருக்க வேண்டும். இந்தப் பாதுகாப்பைப் பற்றி 3ம் பிரிவில் விளக்கியிருக்கிறேன்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 178 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 15

# ஆத்துமத்திற்கடுத்த விண்ணப்பங்கள்

*அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் மத்தியில் மற்றவர்களைப் பற்றி, தவறாகப் பேசும் பொழுது தீங்கை விளைவிக்கின்றனர். இதைவிடப் பெரிய தீங்கை அவர்கள் தங்களுடைய ஜெபத்தில் தேவனிடம் மற்றவர்களைப் பற்றி தவறாக ஜெபிக்கும்போது உண்டாக்குகின்றனர். அவர்கள் ஜெபம் எப்பொழுதுமே ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதென்றும் அதன் பலன் எப்பொழுதும் நன்மையானது எனவும் கருதுகின்றனர். ஆனால் இந்தக் கருத்தை வேதம் ஆதரிக்கவில்லை.*

*நீதிமொழிகள் 28:9ல் உதாரணமாக நாம் கீழ்க்கண்டவாறு எச்சரிக்கப்படுகிறோம்:*

> "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்கு கிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது."

*வேதத்திலே தேவன் தமக்கு ஏற்புடையதான ஜெபத்தின் நியமங்களைப்பற்றிக் கூறியுள்ளார். இந்த நியமங்களை அசட்டை செய்து இதற்கு மாறுபாடாக ஜெபத்தை ஏறெடுக்கும் எவரும் தேவனைப் பிரியப்படுத்தாத நிலையில், அவர்களுடைய ஜெபம் கேட்கப்படாமற் போகிறது. இவ்வித ஜெபத்தைப் பற்றி தேவனின் மதிப்பீட்டை விளக்கும்போது, சாலமோன் மிகவும் கடினமான எதிர்ப்பைத் தெரிவிக்கும் வார்த்தைகளுள் ஒன்றான அருவருப்பானது என்பதைப் பயன்படுத்துகிறார்.*

*சரியான விதத்தில் ஜெபிக்க வேண்டியது மிகவும் முக்கியமாய் இருப்பதால், நாம் நம்முடைய சொந்த ஞானத்தைச்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 179 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சார்ந்திருக்கக்கூடாது. தேவன் இரக்கமாக நம்மை இந்த விஷயத்தில் தனித்து விடவில்லை. அவர் நமக்கு ஒரு தெய்வீக துணையாளரைக் கொடுத்திருக்கிறார்: அவர் பரிசுத்த ஆவியானவரே. அவருடைய உதவியால் நாம் தேவனுக்குப் பிரியமான ஜெபத்தைச் செய்யமுடியும். பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் தேவனைப் பிரியப்படுத்தும் ஜெபத்தைச் செய்து அவருடைய நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.*

*ரோமர் 8:26–27ல் பவுல் இந்தக் காரியங்களை மிகவும் தெளிவாகக் கூறுகிறார்:*

> “அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.
>
> ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.”

*நம்முடைய மாம்சீக சுபாவத்தில் சில பெலவீனங்கள் உள்ளன. இந்தப் பெலவீனங்கள் சரீரத்தைப் பற்றியதல்ல; அது நமது புரிந்து கொள்ளும் தன்மையில் உள்ளது. ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட இருவழிகளில் இதைக் காணலாம். முதலாவது நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று அறியாமல் இருக்கிறோம். இரண்டாவதாக, எதற்காக நாம் ஜெபிக்க வேண்டும் என்று அறிந்திருந்தாலும், எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று நாம் அறியாமல் இருக்கிறோம். ஆகவே நாம் பரிசுத்த ஆவியானவரையே முற்றிலும் சார்ந்தவர்களாக இருக்கிறோம். அவர் மாத்திரமே நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் காட்டக்கூடியவர்.*

*பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்திலே இரண்டு இடங்களில் தேவனுக்கு ஏற்ற ஜெபத்தைச் செய்யும்படி நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும் என மேலும் வலியுறுத்திக் கூறுகிறார். எபேசியர் 2:18ல் பரிசுத்த ஆவியானவர்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 180 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மட்டுமே நமக்கு தேவனிடம் சேரும் சிலாக்கியத்தை அருளுகிறார் என்று அதன் எழுத்தாளர் வலியுறுத்துகிறார்: “அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் (யூதரும், பிற இனத்தாரும்) ஒரே ஆவியினாலே (பரிசுத்த ஆவியினாலே) பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் (இயேசு) மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.” தேவனுக்கு உகந்த ஜெபத்தைப் பற்றி இரண்டு நிபந்தனைகள் இங்கு கூறப்பட்டுள்ளன: ஒன்று இயேசுவின் மூலம் செய்யப்படும் ஜெபம், மற்றது பரிசுத்த ஆவியானவராலே செய்யும் ஜெபம். ஒவ்வொன்றும் முக்கியமானதே.

பூவுலகிலிருந்து சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனுடைய செவிகளுக்கு நமது மெல்லிய குரலை எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் வேறு எதுவுமில்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த ஆவியானவரின் வல்லமையே இதைச் செய்யக்கூடும்; அவரின்றி நாம் தேவனை அணுக முடியாது.

எபேசியர் 6:18ல் பவுல் பரிசுத்த ஆவியானவரின் உதவி நமக்கு அத்தியாவசியமானது என மீண்டும் கூறுகிறார். சிறப்பாக நமது சகவிசுவாசிகளுக்காக வேண்டிக் கொள்வதற்கு ஆவியானவர் அவசியம் தேவை. பவுல் நாம் “எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே (பரிசுத்த ஆவியினாலே) … சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபம் பண்ணி” என்று கூறுகிறார். பரிசுத்த ஆவியானவராலே ஜெபிக்கின்ற ஜெபங்கள் மாத்திரமே யாருக்காக நாம் ஜெபிக்கிறோமோ அவர்களுக்குத் தேவையான உதவியையும் உற்சாகத்தையும் பெற்றுத் தரமுடியும்.

அப்படியானால் பரிசுத்த ஆவியானவரின் உதவியை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது? இதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு. ஒன்று தாழ்மை, மற்றொன்று பரிசுத்தமான நோக்கம். முதலாவதாக, பரிசுத்த ஆவியானவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி அவர் நமக்குத் தேவை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். பின்பு அவர் நம்மைத் தவறான எண்ணங்களிலிருந்து சுத்திகரிக்கவும், சுயநலமான எண்ணங்களிலிருந்து நம்மைச் சரிப்படுத்தவும் அவரை நாம் அனுமதிக்க வேண்டும். யாருக்காக நாம் ஜெபிக்க விரும்புகிறோமோ அவர்களின் பேரில் மெய்யான அன்பைக் காட்ட அவரே உதவுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் நம்மை ஜெபிக்கும்படி ஏவும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 181 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*ஜெபங்கள் நீளமானதாகவோ, சரளமானதாகவோ இருக்கத் தேவையில்லை. சிறந்த வார்த்தைகளைப் பயன் படுத்துவதினாலோ அல்லது நமது குரல் சிறப்பாய் இருப்பதினாலோ அதைக் கண்டு தேவன் திருப்தி அடையப்போவதில்லை. வேதத்தில் பதிலைப் பெற்ற சிறந்த ஜெபங்கள் மிகவும் எளியதாகவே இருப்பதை நாம் காண்கிறோம். மோசே தன் சகோதரியான மிரியாமிற்கு தொழுநோய் கண்டபோது எளியமுறையிலே ஜெபிக்கிறார்: "என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்!" (எண்ணாகமம் 12:13) என வருகிறது. தேவாலயத்தில் ஆயக்காரன் ஜெபித்த பொழுது "தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என ஒரு சின்ன வாக்கியத்தில் ஜெபித்தான் (லூக்கா 18:13). என்றாலும் தேவன் இந்த இரண்டு ஜெபங்களையும் கேட்டு பதிலளித்தார் என்பதை நாமறிவோம்.*

*ஜெபத்தின் தேவையை நீ உணரும்போது எப்படி அதை ஆரம்பிப்பது என்பது உனக்குத் தெரியாதிருக்குமானால், தேவனிடத்தில் உதவியை நாடிக்கேள். கீழ்கண்ட எளிய வார்த்தைகளை நீ பயன்படுத்தலாம்:*

> "கர்த்தாவே! நான் ஜெபிக்க விரும்புகிறேன். அதை எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. நீர் கேட்டு பதிலளிக்கும் வகையான ஜெபத்தை நான் செய்ய, உமது பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவி செய்வாராக."

*அதற்குப் பின்பு தேவன் அளிக்கும் பதிலை விசுவாசத்தில் ஏற்றுக்கொண்டு உன் இருதயத்திலிருந்து எழும் வார்த்தைகளைக் கூறி ஜெபி. இயேசு, தேவனிடத்தில் அப்பத்தைக் கேட்டால் அவர் நமக்குக் கல்லைக் கொடுக்க மாட்டார் என உறுதி கூறியுள்ளார் (மத்தேயு 7:9).*

*எனினும் நாம் நம்மைப் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுத்து அவரின் வழிநடத்துதலை நாடுவதில்லை. இதற்கு மாறாக நம்முடைய ஜெபங்கள் (யாக்கோபு 3:14ல் சொல்லப்பட்டுள்ளபடி) வைராக்கியத்தினாலும், விரோதத்தினாலும் கட்டுப்படுத்தப்படுவதாக உள்ளது. இல்லையெனில் மற்ற மாம்சீக எண்ணங்களான கோபம், குறைகூறுதல், சுயநீதி போன்றவற்றினாலே ஏவப்பட்டதாக நமது ஜெபம் உள்ளது. இப்படிப்பட்ட ஜெபங்களைப் பரிசுத்த ஆவியானவர்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 182 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அங்கீகரிப்பதுமில்லை; அவைகளைப் பிதாவாகிய தேவனுக்கு முன்பு அளிப்பதுமில்லை.

ஆகையால் நம்முடைய ஜெபம் நிச்சயமாய் யாக்கோபு 3:15ல் சொல்லப்பட்டுள்ள பூமிக்குரிய—ஆத்துமத்திற்கடுத்த—பிசாசிற்குரிய "நோயாக" தரத்தில் குறைவுபடுகிறது. இப்படிப்பட்ட ஆத்துமத்திற்கடுத்த ஜெபங்களின் விளைவு ஆத்துமத்திற்கடுத்த பேச்சுக்கு இசைந்ததாக உள்ளது. இது நேர் மறையானதாக இல்லாமல் எதிர் மறையாக உள்ளது. இது யாருக்காக நாம் ஜெபிக்கிறோமோ அவர்களுக்கு எதிராக, காணப்படாத, விளக்க முடியாத அழுத்தங்களை உண்டாக்குகிறது. இவ்வகை ஜெபம் அவர்களின் பாரங்களை நீக்காமல் அவைகளை அதிகரிக்கின்றது.

நாம் உடன் விசுவாசிகளுக்கு ஜெபிக்கும்போது ஆத்துமத்திற்கடுத்த காரியங்களைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும்: நாம் குறைகூறக்கூடாது. பிறரைக் கட்டுப்படுத்த முற்படக்கூடாது.

மற்ற கிறிஸ்தவர்களுடைய குறைகளைக் காண்பது மிகவும் எளிது. உண்மையில் இதுதான் நம்மை மற்றவர்களுக்காக ஜெபிக்கும்படித் தூண்டுகிறது. ஜெபிப்பது சரியானதே. ஆனால் நாம் எப்படி ஜெபிக்கிறோம் என்பதைக் குறித்து கவனமுடையவர்களாய் இருக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக அவர்களுடைய குறைகளின் பட்டியலை எடுத்துக் கொண்டு ஜெபிக்கச் செல்லக்கூடாது.

நாம் குறைகூறுபவர்களின் பணியைச் செய்யும்போது கிறிஸ்துவைப் பின்பற்றாமல் சாத்தானின் மாதிரியைப் பின்பற்றுகிறோம். சாத்தானுடைய பெயரான—பிசாசு— என்பதற்கு "தூற்றுபவன்" அல்லது "குறை சொல்பவன்" என்று பொருள். வெளிப்படுத்தின விசேஷம் 12:10ல் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்தவர்களை இரவும் பகலும் குறை கூறுகிறவன் என்று அவன் விளக்கம் பெறுகிறான். அவன் ஆரம்ப காலமுதல், இதைச் செய்து வருகிறான். அவன் இதில் திறமை உடையவன். கிறிஸ்தவர்களின் உதவி அவனுக்குத் தேவையில்லை!

பவுல் தன் உடன் கிறிஸ்தவர்களுக்காகச் செய்யும் எல்லா ஜெபங்களையும் உற்றுநோக்கும் போது—அவைகள் தனிப்பட்ட



Blessing or Curse Tamil text 2012 revised.p65 183 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நபர்களுக்காய் செய்யப்பட்ட ஜெபமாயினும் சபைகளுக்காகச் செய்யப்பட்டதாயினும், அவர்களுக்காக தேவனைத் துதிக்கின்றவராய் அந்த ஜெபங்களை ஆரம்பிக்கின்றார். 1 கொரிந்தியரின் ஆரம்பம் இதற்குச் சிறப்பான எடுத்துக்காட்டு. இக்கடிதத்தில் பவுல் பின்பு எழுதும்போது அச்சபையில் அநேக வகையான பாவங்கள் இருந்ததாக எழுதுகிறார். அம்மக்கள் மத்தியிலே பிரிவினை, மாம்சீகம், முறைகேடான பாலுறவு, கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு முன்பு குடிமயக்கம் போன்ற பாவங்கள் காணப்பட்டன. எனினும் பவுல் தனது கடிதத்தை மிகுந்த நன்றி செலுத்தி ஆரம்பிக்கின்றார்:*

> "கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டபடியே
>
> நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால்,
>
> அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.
>
> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்."
>
> 1 கொரிந்தியர் 1:4–6,8.

*ஒரு ஜெபத்தில் நன்றி சொல்லி ஆரம்பிப்பது, மனதில் நற்பலனைத் தோற்றுவிக்கிறது. ஜெபிக்கிறவனுடைய உள்ளத்தில் அது நேர்மறையான எண்ணத்தை உண்டாக்குகிறது. இப்படிப்பட்ட ஆரம்பத்திலிருந்து நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களுடைய குற்றங்களையும் பிரச்சனைகளையும் அறிந்திருந்தும் அவர்களுக்காக முற்போக்கான விசுவாசத்தோடு ஜெபிப்பது மிகவும் எளிதானது. என்னைப் பொறுத்தமட்டில் உடன் விசுவாசிகளுக்காக முதலில் தேவனுக்கு நன்றி செலுத்தாமல் நான் எப்பொழுதுமே ஜெபிப்பதில்லை. அதை என்னால் செய்ய முடியவில்லை என்றால் ஜெபிக்காதிருப்பதே நலம் என்று நான் கருதுவதுண்டு!*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 184 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கடந்த தலைமுறையில் இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்த ஒருவர் ஒரு வல்லமையான ஜெப ஊழியத்தை மேற்கொண்டதால், அவர் "ஜெபிக்கின்ற ஹைடு" (Hyde) என அழைக்கப்படலானார். ஒரு சமயத்தில் தன் ஊழியத்தில் வல்லமையையும், கனியையும் காணாத ஒரு இந்திய சுவிசேஷகருக்காய் அவர் ஜெபித்துக்கொண்டிருந்தார். "கர்த்தாவே, உமக்குத்தெரியும் அந்த சகோதரர் எவ்வளவு குளிர்ந்து போயிருக்கிறார்" என்று அவர் சொல்ல முற்பட்டார். ஆனால் அவர் "கர்த்தாவே, உமக்குத் தெரியும்..." என்னும் வார்த்தைகளை ஆரம்பித்ததும், பரிசுத்த ஆவியானவர் அந்த வாக்கியத்தை முடிக்க அவரை அனுமதிக்கவில்லை.*

*உடனே ஹைடு தன்னுடைய உடன் ஊழியரைக் குற்றப்படுத்துவது தன் வேலை இல்லை என்பதை உணர்ந்தார். அந்த மனிதருடைய குற்றங்களின் மீது கவனத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக அவரில் தன்னால் காணமுடிந்த எல்லா நல்ல காரியங்களுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்த ஆரம்பித்தார். சில மாதங்களுள் அந்த இந்திய சகோதரர் முற்றிலும் மாற்றப்பட்டார். அந்தப் பகுதி முழுவதிலும் அவர் அர்ப்பணிக்கப்பட்டவராயும், சிறந்த ஆத்தும ஆதாயம் பண்ணுகிறவராயும் கருதப்பட்டார்.*

*ஒரு மனிதனில் உள்ள நற்காரியங்களுக்கு நன்றி செலுத்தி முற்போக்காய் அவனைப் பாராட்ட முற்படுவது வல்லமையுள்ள ஜெபத்தின் பண்பாகும். ஹைடு பரிசுத்த ஆவியானவருக்கு முன் உணர்வுடன் இல்லாதிருந்தால், அவர் எதிர்மறையாகக் கண்டனத்தின் ஆவி உடையவராய் ஜெபித்திருப்பார். அப்படியிருந்திருப்பினும் அவரது ஜெபம் வல்லமையுள்ளதாய் இருந்திருக்காதா? இருந்திருக்கும். ஆனால் அது எதிர் திசையில் அவ்வாறு இருந்திருக்கும். தன்னுடைய உடன் வேலைக்காரர் மேல் பாரம் நிறைந்த குற்றச்சாட்டை வரவழைத்து அதற்கு மேல் ஒருபோதும் அவர் உயரமுடியாதபடி செய்திருக்க மாட்டாரா?*

*வேளாவேளைகளில் அநேகக் கிறிஸ்தவர்களைப் போல் நான் ஆவிக்குரிய ஒரு "பாரத்தை" உணர்ந்திருக்கிறேன். விளக்கமுடியாதபடி நான் குற்றம் உள்ளவனாகவும், குறைவுள்ளவனாகவும், தகுதியற்றவனாகவும் இருப்பதாக*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 185 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உணர்ந்துள்ளேன். எனினும் இந்த உணர்ச்சிகளை விளக்குவதற்கு என்னுடைய வாழ்க்கையிலோ நடத்தையிலோ எந்த குறையையும் நான் கண்டதில்லை.

இவ்வேளையில் நான் என்னுடைய அனுபவத்தினால் இவ்வித உணர்விற்கு நான் காரணமல்ல என்பதைக் கற்றுக் கொண்டேன். என்னுடைய "பாரமானது" மற்ற கிறிஸ்தவர்களினால் உண்டாயிருக்கக் கூடும்—அவர்கள் நல்ல நோக்கத்துடன் ஜெபம் செய்திருப்பார்கள். ஆனால் தவறுதலாக தேவனுக்கு முன்பாக என்னைக் குற்றப்படுத்தியிருப்பார்கள். சிறப்பாக குற்றஉணர்வு அநேக நேரங்களில் ஒரு எச்சரிப்பின் அடையாளமாக உள்ளது. பொதுவாகப் பிறரால் குற்றம் சாட்டப்படுவதின் விளைவாகவே குற்ற உணர்வு உண்டாகிறது. ஒருமுறை என் பிரச்சினை என்ன என்பது எனக்கு விளங்கியது. என் குறைவுகள் அனைத்தையும் கண்டும் எனக்காகப் பிதாவிடம் தொடர்ந்து பரிந்து பேசும் பிரதான ஆசாரியரிடம் நான் இதற்கு முடிவுகாண திரும்ப வேண்டும் எனக் கண்டேன்.

பயனற்ற ஜெபம் என்று ஒன்றில்லை. நம்முடைய ஜெபங்கள் பயனுள்ளதாய் இருக்கிறதா என்பது கேள்வியல்ல. ஜெபத்தின் பலன் நன்மை விளைவிப்பதாக இருக்கிறதா அன்றி தீமை விளைவிப்பதாக உள்ளதா என்பதே கேள்வி. அவைகளின் மூலம் செயல்படும் வல்லமை இதை நிருணயிக்கிறது. அவைகளின் ஆரம்பம் பரிசுத்த ஆவியானவரில் உள்ளதா அல்லது மாம்சீகத்தில் உள்ளதா எனக் காண வேண்டும்.

மெய்யான பரிந்து மன்றாடுதல் ரோமர் 8:33–34ல் விளக்கியுள்ளபடி இயேசுவின் மாதிரியைச் சார்ந்ததாகும்:

> "தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.
>
> ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே."



Blessing or Curse Tamil text 2012 revised.p65 186 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

விசுவாசிகளாகிய நமது குறைகளை நாம் ஒருவருக்கொருவர் காண்பதைவிட கிறிஸ்து நிச்சயமாக மிகத் தெளிவாகக் காண்கிறார். எனினும் அவர் நமக்காகப் பரிந்து பேசுவது நம்மை குற்றப்படுத்தாமல் நம்மை நீதிமான்கள் ஆக்குகின்றது. நமது குற்றத்தை அவர் நிரூபிப்பவர் அல்லர்; ஆனால் நமது நீதியையே அவர் நிலைநாட்டுகிறார்.

நமது உடன் விசுவாசிகளுக்கு நாம் செய்கின்ற பரிந்து மன்றாடுதலின் ஜெபமும் இதே மாதிரியைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும். தேவன் தெரிந்து கொண்டவர்களின் மேல் குற்றம் சாட்ட நாம் தைரியம் கொள்ளலாமா? அல்லது தேவன் நீதிமான்களாக்கியவர்களின் மேல் தீர்ப்பளிக்கலாமா? தீர்ப்பளிக்கும் போது நாம் தவற்றின் உச்சக்கட்டத்தை எட்டுகிறோம்!

வேதத்தின் செய்தி மிகவும் திட்டமான செய்தியாகும். நம்முடைய ஜெபங்களில் உடன் விசுவாசிகளைக் குறைகூறுவதற்கு எந்த அனுமதியும் அதில் தரப்படவில்லை. என்றாலும், ஜெபத்தின் வல்லமையைத் தவறுதலாகப் பயன்படுத்தும்படியான இரண்டாவது சோதனையும் உண்டு. அது மிகவும் நுணுக்கமானது. அதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும். நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களை ஜெபத்தின் மூலம் கட்டுப்படுத்துவதாகும்.

நாம் வீழ்ந்து போன ஆதாமின் சுபாவத்தில், பிறரைக் கட்டுப்படுத்தி அவர்கள் மேல் நமது சித்தத்தைத் செலுத்த ஆசைப்படுவது சாதாரணமானதே. ஆறாம் அத்தியாயத்தில் பிறரைக் கட்டுப்படுத்த வேண்டும் என்னும் இந்த ஆசையே பில்லி சூனியத்திற்கு மூல காரணமாய் உள்ளது எனப்பார்த்தோம். இது மாம்ச கிரியையில் ஆரம்பித்து மாந்திரீகக் கிரியையில் முடிவடைகிறது.

இச்சக்தி செயலாற்றும் முறையைக் குறிக்கும் திறவுகோல் வார்த்தைகளில் ஒன்று சாதுர்யமாய் செய்ய முயல்வதாகும். மனிதர்கள் பிறரிடமிருந்து தாங்கள் விரும்பியதைப் பெற்றுக்கொள்ள கையாளும் சூழ்ச்சிகள் எண்ணில் அடங்காதவைகளாய் உள்ளன. கணவன்மார், தங்கள் மனைவிகளைச் சாதுர்யமாய்க் கட்டுப்படுத்துகின்றனர்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 187 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மனைவிமார் தங்கள் கணவர்களையும், பிள்ளைகள் தங்கள் பெற்றோரையும், பிரசங்கிமார் தங்கள் சபைகளையும், விளம்பரத்துறை பொது மக்களையும் கட்டுப்படுத்தி தாங்கள் விரும்பியதைச் செய்யத்தூண்டுகிறது. இது நடைமுறை வாழ்க்கையில் சாதாரணமாய்க் காணப்படுவதால் மக்கள் இதைத் தங்களிலோ, மற்றவர்களிலோ இருப்பதாகப் பொதுவாகக் கண்டு கொள்ள முற்படுவதில்லை.

என்றாலும் சாதுர்யமாய்க் கட்டுக்குள் ஒருவரைக் கொண்டுவருவது தேவனுடைய சித்தமல்ல. தேவன் தாமே நம்மை ஒருபோதும் கட்டுப்படுத்துவதில்லை. நாம் பிறரை கட்டுப்படுத்துவதற்கும் அவர் ஒருபோதும் அதிகாரம் கொடுக்கவில்லை. எப்பொழுதெல்லாம் சூழ்ச்சியினால் நாம் செய்ய விரும்புவதைப் பிறரைச் செய்யத் தூண்டுகிறோமோ அந்த வேளையில் ஆவியின் தளத்திலிருந்து ஆத்துமத்தளத்திற்கு நாம் இறங்கி விடுகிறோம். அப்பொழுது பூவுலகிற்கு அடுத்த ஞானத்தில் செயலாற்றுகிறோம்.

நாம் சாதாரணமாய் ஜெபத்தை நல்லதென்றும், ஆவிக்குரியதென்றும் நினைப்பதினால், ஜெபத்தினால் நாம் அடையும் எந்த பலனும் நியாயமானது எனவும், தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது எனவும் நினைக்க ஆரம்பிக்கிறோம். நம்முடைய ஜெபங்களில் செயல்படும் வல்லமை பரிசுத்த ஆவியின் வல்லமையாய் இருக்குமானால் அது நற்பலனைத் தரும். ஆனால் நம்முடைய ஜெபங்கள் நம் சொந்த ஆத்தும தீர்மானத்திற்கடுத்ததாய் இருந்தால் அதன் பலன் தீயதாகவும் பயனற்றதாகவும் இருக்கும்.

மற்றவர்கள் வாழ்வில் தாம் "தேவனாகச் செயலாற்றும்" உரிமை பெற்றவர்களைப் போல இப்படி ஜெபம் செய்கின்றவர்கள் செருக்குடன் நடக்கின்றனர். உண்மையாகவே ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆதிக்கத்தை ஒதுக்கித் தள்ளக்கூடிய எந்தக் காரியமும் பரிசுத்த ஆவியானவரால் உண்டாவதல்ல.

அநேக சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய நிலையில் ஜெபிப்பதாகக் கருதலாம். ஆனால் அது உண்மையில் ஆத்துமத்திற்கடுத்ததாகவே உள்ளது. இதற்கான இரண்டு



Blessing or Curse Tamil text 2012 revised.p65 188 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உதாரணங்களைக் கீழே காண்போம்:

### 1. அவதூறான குற்றச்சாட்டிற்குரிய ஜெபம்

ஒரு திருச்சபை "பிளவு" படுமானால் அந்த இரண்டு பிரிவுகளிலும் மாம்சீகத் தன்மை காணப்படுவது வழக்கமே. இந்தச் சம்பவத்தில் முதல் பூரண சுவிசேஷ திருச்சபையைச் சார்ந்த போதகர் ஜோன்ஸ், இசைக்குப் பொறுப்பான சகோதரனான வில்லியம்சுடன் தன் மனைவி தொடர்பு கொண்டுள்ளதாகக் கண்டு பிடித்தார். ஆகவே அவர் தன் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு சகோதரன் வில்லியம்சையும் வேலையிலிருந்து நீக்கினார்.

எனினும் சகோதரன் வில்லியம்ஸ் விபசாரக்குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார். போதகர் செய்தது "அநியாயம்" என்று கூறி, சபை மக்களில் பாதிப்பேரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு ஒரு புதிய சபையைக் கட்டத் தொடங்கினார். கட்டட நிதியைப் பிரிக்கின்ற காரியத்தில் இந்த இரு குழுவினரிடையேயும் பெரிய சண்டை ஏற்பட்டது.

ஓராண்டிற்குப் பின்பு போதகர் ஜோன்ஸ் மீண்டும் திருமணம் செய்து கொண்டார். விவாகரத்து செய்து கொண்டவர் மீண்டும் திருமணம் செய்து கொள்வது வேதத்திற்கு முரண்பாடானது என்று சகோதரன் வில்லியம்சும் அவருடைய குழுவைச் சார்ந்தவர்களும் கூறினர். "நியாயத்தீர்ப்பு" வரும்படியாக ஒரு சிறப்பு ஜெபக்கூட்டத்தை ஒழுங்கு பண்ணினார்கள்.

அதைத் தொடர்ந்த இரண்டு ஆண்டுகளில் போதகர் ஜோன்ஸின் புதிய மனைவி கருத்தரித்தாள். ஒவ்வொரு தடவையும் அவளுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. பேர்கால மருத்துவ நிபுணர்கள் இந்தக் கருச்சிதைவிற்கு மருத்துவத் துறையின்படி எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை என்கின்றனர். சகோதரன் வில்லியம்சும் அவருடைய குழுவைச் சார்ந்தவர்களும் இதனை அவர்களுடைய ஜெபத்தின் பலன் என்று கூறினார்கள்; தேவன் நீதிக்குப் பதிலளித்ததாக அவர்கள் கருதினார்கள்.

அவர்களின் முதல் முடிவு எனக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இந்த இரண்டு கருச்சிதைவிற்கும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 189 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவர்களின் ஜெபங்களே காரணம் என்று கருதினர். ஆனால் அந்த ஜெபங்களின் மூலம் செயலாற்றிய வல்லமை யாது? பரிசுத்த ஆவியானவர் வேதத்திலே நமது உடன் விசுவாசிகளை நியாயம் தீர்க்கக் கூடாது என்று கூறியுள்ளார். இப்படிப்பட்ட தவறான நோக்கங்களுடைய ஜெபத்திற்கு அவரால் பதிலளிக்க முடியாது. இதற்கான பதில் யாக்கோபு 3:15ல் உள்ளது. இப்படிப்பட்ட ஜெபங்களின் மூலம் செயற்படும் வல்லமை "லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்திற்குரியதும், பேய்த்தனத்திற்கடுத்ததுமாய் இருக்கிறது" என யாக்கோபு கூறுகிறார்.

### *2. ஆதிக்கம் செலுத்தும் சூழ்ச்சி நிறைந்த ஜெபங்கள்*

போதகர் ஸ்ட்ராங் தம்மைச் சூழ உள்ளவர்களைக் கட்டுப்படுத்திப் பழக்கப்பட்டவர். அவர் மனைவியை இழந்தவர். அவருக்கு இரு பையன்களும், ஒரு மகளும் உள்ளனர். தன் இரண்டு குமாரரும் ஊழியர்களாக வருவார்கள் என அவர் எதிர்பார்த்தார். ஆனால் முடிவிலே அவர்கள் உலக வேலையிலேயே அமர்ந்தனர். மகள் மேரி வீட்டிலேயே இருக்கிறாள். அவள் தந்தைக்கு விசுவாசமாய் நடக்கிறவள். சபையிலும் அதிகம் உதவி செய்கிறவள்.

ஒரு நற்செய்திக் கூட்டத்திலே, மேரி வேறொரு சபைப் பிரிவைச் சார்ந்த கிறிஸ்தவ ஊழியரான பாபைச் சந்திக்கிறாள். அவர்கள் ஒருவரில் ஒருவர் பிரியம் கொள்கின்றனர். போதகர் ஸ்ட்ராங்கிற்கு பாப் செல்லக்கூடிய சபையின் மேல் அதிகக் கோபம். ஆகவே ஆரம்பத்திலிருந்தே இந்த உறவைக் கடிந்து கொள்கிறார். அவர் மேரியின் உதவியை சபையிலும், வீட்டிலும் இழந்துவிடக்கூடும் என்று பயப்படுகின்றார். இறுதியாக மேரி தன் தகப்பன் வீட்டை விட்டு, தன் சிநேகிதியுடன் வேறோரிடத்தில் தங்க முற்படுகிறாள். போதகர் ஸ்ட்ராங் இதை "அடங்காத செயல்" என்று அழைக்கிறார். மேரி தான் நிச்சயதார்த்தம் செய்துகொண்டதாக அவரிடம் கூறும்போது அவர் திட்டமிடப்பட்டுள்ள இந்தத் திருமணத்திற்கு விரோதமாக ஜெபிக்கிறார்.

பாப்பும் மேரியும் தங்களுடைய திட்டங்களில் முன்னேறிச்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 190 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*செல்கின்றனர். ஆனால் அவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வளவு அதிகமாக நேசித்தனரோ அவ்வளவிற்கு வெறுப்பு உண்டாக ஆரம்பித்தது. ஒருவர் இருப்பது மற்றவருக்குப் பொறுக்க முடியாமற்போகிறது. சிறிய மனத்தாங்கல்கள் எப்படியோ வேதனை நிறைந்த பிரச்சனைகளாய் உருவாகின்றன. அவர்கள் திட்டமிடும் ஒவ்வொரு காரியமும் விவரிக்க முடியாத மனச்சோர்வையே உண்டாக்குகிறது. இறுதியாக மேரி, "பாப், இது நம் வாழ்வைக் குறித்த தேவசித்தமன்று!" என்று முடிவுசெய்து, அவருடைய மோதிரத்தைத் திரும்பக் கொடுத்து விடுகிறாள்.*

*கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் எல்லாரையுமே தவிர்த்து விடுவது தான் தன்னுடைய மனச்சோர்வுக்கு வழி என மேரி முடிவெடுக்கிறாள். தன் தந்தையையும், சபையையும் விட்டுவிட்டு, தன் சகோதரர்களைப் பின்பற்றி உலக வேலையை எடுக்கின்றாள். இறுதியிலே அவள் ஒரு நாத்திகனைச் சந்தித்து அவனைத் திருமணம் செய்கிறாள்.*

*போதகர் ஸ்ட்ராங்கின் ஜெபங்களைப் பற்றி நாம் என்ன கருதக்கூடும்? உண்மையில் அவைகள் வல்லமையானவை. ஆனால் அதன் பயன் தீமையையே விளைவித்தது. தனக்கு அருகில் உள்ளவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவேண்டும் என்ற அவருடைய வாழ்நாளின் ஆசைகளை இது காட்டின. தன்னுடைய மகளுக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் கொடுக்கக்கூடிய அந்த உறவை முறிப்பதற்கு அந்த ஜெபம் வல்லமை நிறைந்ததாக இருந்தது. அவளை மீண்டும் அவளது விசுவாசத்திற்குக் கொண்டு வரவோ அல்லது வேதத்திற்கு முரண்பாடான திருமணத்திலிருந்து அவளை தடுத்து நிறுத்தவோ அந்த ஜெபத்தால் முடியவில்லை. இப்படிப்பட்ட எதிர்மறையான பலனை விளைவிக்கும் ஜெபம் பரிசுத்த ஆவியினால் வருவதன்று.*

*இந்த இரு உதாரணங்களில் விளக்கப்பட்ட அடிப்படை உண்மைகள் தற்காலத் திருச்சபை வாழ்வில் நேரக்கூடிய பலவித நிலைகளுக்குப் பொருந்துவதாக உள்ளது. இவைகள் கற்றுத்தரும் பாடங்கள் மிகவும் முக்கியமானவை: ஆத்துமத்திற்கடுத்த ஜெபமானது உண்மையாகவே ஆபத்தை விளைவிப்பதாக உள்ளது. ஆசீர்வாதத்திற்குப் பதில் சாபமே இதன் பலன்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 191 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கடந்த அத்தியாயத்தில் நாம் கண்ட ஆத்துமத்திற்கடுத்த பேச்சுக்களைப் பாவமாகக் கருதுவது போலவே, ஆத்துமத்திற்கடுத்த ஜெபங்களையும் பாவமாகக் கருதவேண்டும். இப்பகுதியில் நம்மைக் குற்றமுள்ளவர்களாகக் காண்போமென்றால் நாம் மனந்திரும்பி, தேவனுடைய மன்னிப்பைப் பெறவேண்டும்.*

*இறுதியாக, வரும் காலத்தில் மற்றவர்களைக் குற்றப்படுத்துவதை நாம் தவிர்க்க வேண்டும். நாம் ஜெபத்தில் பயன்படுத்தும் வார்த்தைகளால் அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடாது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 192 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 16

# இரண்டாம் பிரிவின் தொகுப்பு

*கடந்த பத்து அத்தியாயங்களில் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சாபத்திற்கான மிகமுக்கியமான பல காரணங்களை ஆராய்ந்தோம். இக்காரணங்களை இப்பகுதியில் தொகுத்துக் கூறுகிறோம். இது உங்களுக்கு உதவியாக இருக்கும்.*

*உருவாக்கப்பட்ட பொய்யான தெய்வங்களை ஏற்றுக்கொண்டு வழிபடுதல்*
*மாந்திரீகத்தில் உள்ள ஈடுபாடு*
*பெற்றோரைக் கனவீனப்படுத்துதல்*
*மெலிவுற்றவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் விரோதமாகச் செய்யும் அநியாயமும், அவர்களை வருத்தும் எல்லா முறைகளும்.*
*சட்ட விரோதமான இயற்கைக்கப்பாற்பட்ட பாலுணர்ச்சிக்கடுத்த பாவங்கள்*
*யூதப்பகைமை*
*சமய சித்தாந்தம், உடல் இன்ப வேட்கை, சமய எதிர்ப்பு*
*திருடுதல் அல்லது பொய்சாட்சி சொல்லுதல்*
*தேவனுக்குரிய பணத்தைச் செலுத்தாது இருத்தல்; தேவனுக்குரியதைக் கொடாமல் இருத்தல்*
*உறவுமுறை அதிகாரத்துடன் தந்தை, தாய், கணவன், மனைவி, ஆசிரியர், பாதிரியார் அல்லது போதகர் பேசிய வார்த்தைகள்*
*தன்மேலேயே கூறப்பட்ட சாபங்கள்*
*தெய்வீகத்திற்குப் புறம்பான குழுக்களுக்குக் கொடுத்த*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 193 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உறுதி மொழிகளும், வாக்குமூலங்களும் மக்களை கட்டுக்குள்ளாக்குதல்.

சாத்தானின் ஊழியக்காரர்களிடமிருந்து புறப்படும் சாபங்கள்

மற்றவர்களுக்கு விரோதமாகப் பேசப்பட்ட ஆத்துமத்திற்கடுத்த பேச்சுக்கள்

மற்றவர்களைக் குற்றப்படுத்துகின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஆத்துமத்திற்கடுத்த ஜெபங்கள்.

மேற்கூறிய பட்டியலில் குறிக்கப்படாத வேதம் சொல்லும் சாபங்களுக்கான மற்ற காரணங்களும் உண்டு. இவைகளில் மிகமுக்கியமானவற்றை அவைகள் வேதத்தில் வரக்கூடிய வரிசையின் படியே இங்கு கொடுக்கிறோம். உபாகமம் 27,28 அதிகாரங்களில் சொல்லப்பட்ட சாபங்களை உறுதிப்படுத்தும் மற்ற பகுதிகள் இங்கு குறிக்கப்படவில்லை.

தேவனுடைய சாபத்தை தங்கள் மேல் வருவித்துக் கொள்பவர்களுள் அநேகர் ஏமாற்றுகின்ற பொய் தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும், போதிப்பவர்களும் ஆவர் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இவர்கள் மேல் வரும் சாபம் சிறப்புக் குறியீட்டினால் குறிக்கப்பட்டுள்ளது.

மேரோசின் மக்கள் மேல் வந்த சாபம். இது சிசெராவிற்கு எதிராகக் கர்த்தருடைய இராணுவத்தின் தலைவனான பாராக்கை இவர்கள் ஏற்றுக் கொள்ளாததினால் வந்தது (நியாயாதிபதிகள் 5:23).

யோதாமிடமிருந்து கிதியோனின் குமாரர்களைக் கொலை செய்தவர்கள் மேல் வந்த சாபம் (நியாயாதிபதிகள் 9:57).

பில்லி சூனியம் செய்ததினாலும், வேசித்தனத்தின் காரணமாகவும் யேசபேலின் மேல் வந்த சாபம் (2 இராஜாக்கள் 9:34 - 1 இராஜாக்கள் 9:22யுடன் ஒப்பிடு).

பெருமையின் காரணமாக தேவனுடைய கட்டளைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மேல் வரும் சாபம் (சங்கீதம் 119:21).



Blessing or Curse Tamil text 2012 revised.p65 194 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*துன்மார்க்கரின் வீட்டின் மேல் வரும் கர்த்தரின் சாபம் (நீதிமொழிகள்* 3:33).

*குடிகள் பூமியைக் கெடுத்துப்போட்டதினால் பூமியின் மேல் வந்த சாபம்; தேவனுடைய சட்டங்களையும் உடன்படிக்கையையும் மீறினதால் வந்த சாபம் (ஏசாயா* 14:6).

*இஸ்ரவேலர்களுக்கு விரோதமாய் தொடர்ந்து எழும்பி நின்ற ஏதோம் மக்களின் மேல் வந்த சாபம் (ஏசாயா* 34:5).

* *தேவனுக்குக் கீழ்ப்படியாத மக்களுக்கு, "சமாதானம்" கூறிய கள்ளத்தீர்க்கதரிசிகள் மேல் வந்த சாபம் (எரேமியா* 29:18).

* *கற்புநெறி தவறிய கள்ளத்தீர்க்கதரிசிகளின் மேல் வந்த சாபம் (எரேமியா* 29:22).

*தேவனுடைய எச்சரிப்பை மீறி எகிப்துக்குச் சென்ற இஸ்ரவேலர்களின் மேல் வந்த சாபம் (எரேமியா* 42:18 - 44:8,12 *ஒப்பிடு).*

*கர்த்தருடைய விரோதிகளின் மேல் அவருடைய நியாயத்தீர்ப்பை வழங்கத்தவறிய எந்த மனிதன் மேலும் வந்த சாபம் (எரேமியா* 48:10).

* *தேவனுடைய கட்டுப்பாட்டை மீறிய ஆசாரியர்கள் மேல் வந்த சாபம் (மல்கியா* 2:2)

*இயேசுவின் சகோதரர்கள் மேல் இரக்கம் காட்டாத "வெள்ளாட்டு" நாடுகளின் மேல் வந்த சாபம் (மத்தேயு* 25:41).

*தேவனுடைய சத்தியம் ஒழுங்காகப் போதிக்கப்பட்டும் கனிதராத மக்களின் மேல் வரும் சாபம் (எபிரெயர்* 6:8).

* *பேராசை, ஏமாற்றம், நெறிபிறழ்தல் ஆகியவற்றைக் கொண்ட பொய்யான போதகர்கள் மேல் வந்த சாபம்* (2 *பேதுரு* 2:14).



Blessing or Curse Tamil text 2012 revised.p65 195 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

Blessing or Curse Tamil text 2012 revised.p65 196 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# பிரிவு 3

# சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு

## முன்னுரை

உன்னுடைய வாழ்க்கை ஏதாவது ஒரு விதத்தில் சாபத்தினால் தாக்கப்பட்டுள்ளது என்பதை இப்பொழுது உன்னால் உணர்ந்து கொள்ள முடிகிறதா? தேவனுடைய ஆசீர்வாதம் என்னும் சூரிய ஒளியை மறைத்து, சாபத்தின் நிழலை உண்டாக்கும் சூழ்நிலையிலிருந்து விடுபட வழியிருக்கிறதா என்று யோசிக்கின்றாயா?

ஆம், அதற்கு ஒரு வழி உண்டு! அதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு: அவ்வழி தியாகமாய் இயேசு சிலுவையில் மரித்ததின் வழியாகும்.

இப்பகுதியில் எளிய பின்பற்றக்கூடிய வழிகளைக் கூறியிருக்கிறேன். இதனால் நிழலிலிருந்து சூரிய ஒளிக்கும், சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கும் செல்ல உதவும் தேவனுடைய வழியை நீ கண்டு கொள்வாய்.

இதைத் தொடர்ந்து நீ உற்சாகம் அடைய, இருபதாம் அத்தியாயத்தில் மனச்சோர்விலும் நம்பிக்கையற்ற நிலையிலுமிருந்து மனநிறைவிற்கு வழியைக்கண்ட ஒரு மனிதனின் கனிதரும் வாழ்க்கையை விளக்கியிருக்கிறேன். அவ்வழியை நீயும் பின்பற்றக்கூடும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 197 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 17

# தெய்வீக பரிமாற்றம்

சுவிசேஷ செய்தி முழுவதும் ஓர் ஒப்பற்ற சரித்திர சம்பவத்தை மையமாகக் கொண்டு சுழல்கிறது. அச்சம்பவம் சிலுவையில் இயேசுவின் தியாக மரணம் ஆகும். இதைக் குறித்து எழுதும் போது எபிரெய நிருபத்தின் ஆசிரியர் "ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் (இயேசு) என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்." (எபிரெயர் 10:14). இங்கு ''பூரணப்படுத்தியிருக்கிறார்'' என்னும் வார்த்தையும் "என்றென்றைக்கும்" என்னும் வார்த்தையும் ஆற்றல் நிறைந்த இரு வார்த்தைகள். இவ்விரண்டும் மனுக்குலம் முழுவதின் எல்லாத் தேவைகளையும் சந்திக்கின்ற ஒரு தியாக மரணத்தைத் தெளிவாய் விளக்குகிறது. அதனுடைய பலன்கள் தொன்றுதொட்டு நித்தியம் வரைத் தொடர்கிறது.

இந்தத் தியாகத்தின் அடிப்படையில் பிலிப்பியர் 4:19ல் பவுல் "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" எனக் கூறுகிறார். "உங்கள் குறைவை எல்லாம்" என்று சொல்லும் பொழுது குறிப்பாக சாபத்திலிருந்து உனக்குத் தேவையான விடுதலையும் அதில் அடங்குகிறது. ஆனால் முதலில் நீ இந்தச் சத்தியத்தை முழுமையாகப் பார்க்க வேண்டியது அவசியமாகும்—உன்னதமான தேவனின் ஓர் ஒப்பற்ற தனிச் செயல் மனுக்குலத்தின் எல்லா பாவத்தையும், துயரத்தையும் ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 198 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*மனுக்குலத்தின் எண்ணிறந்த பிரச்சனைகளுக்குப் பலவிதமான தீர்வுகளை தேவன் கொடுக்க முற்படவில்லை. அதற்கு மாறாக, அவர் எல்லாவற்றையும் சந்திக்கும் ஆற்றலை உள்ளடக்கிய ஒரு தீர்வை நமக்குத் தருகிறார். அதுதான் எல்லா பிரச்சனைகளுக்கும் அவருடைய பதிலாக உள்ளது. நமது பின்னணி பலதரப்பட்டதாக இருக்கலாம். நாம் ஒவ்வொருவரும் நமது சொந்தத் தேவைகளைச் சந்திக்க முடியாதவாறு பாரப்பட்டிருக்கிறோம். ஆனால் தேவனுடைய பதிலைப் பெற்றுக்கொள்ள நாம் அனைவரும் வரவேண்டிய இடம் ஒன்றே. அது இயேசுவின் சிலுவையே.*

*ஏசாயா தீர்க்கதரிசி சிலுவையில் நிறைவேற்றப்பட்ட காரியத்தின் முழுமையான விவரத்தை அது நடைபெறுவதற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். ஏசாயா* 53:10*ல் தீர்க்கதரிசி பாவ நிவாரணபலியாக தேவனுக்கு செலுத்தப்பட வேண்டிய "கர்த்தருடைய ஊழியனின்" ஆத்துமாவைப் பற்றி விளக்குகிறார். புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் ஒருமனதாக பெயர் குறிக்கப்பெறாத இந்த ஊழியரை இயேசு என இனம் கண்டுள்ளனர். இந்த தியாக பலியினால் நிறைவேற்றப்பட்ட தெய்வீக நோக்கம் ஏசாயா* 53:6*ல் தொகுத்து கூறப்பட்டுள்ளது*:

> "நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

*மேற்கூறப்பட்டுள்ளது மனுக்குலம் அனைத்திற்கும் உண்டான அடிப்படை பிரச்சனையாகும்: நாமெல்லாரும் வழிதப்பித் திரிந்து ஒவ்வொருவரும் அவரவர் வழியிலே போனோம். நம்மில் அநேகர் ஒருபோதும் செய்திராத கொலை, விபசாரம், களவு போன்ற குறிப்பிட்ட பாவங்கள் உள்ளன. ஆனால் நாம் எல்லாரும் ஏகமாய் செய்த ஒன்று உள்ளது: நாம் நமது சொந்த வழியில் செல்லலானோம். அப்படிச் செய்ததின் மூலம் நாம் **தேவனுக்குப் புறமுதுகு காட்டியுள்ளோம்.** இதைத் தொகுத்துக் கூறும் எபிரெயச் சொல் "**அவான்**"* (avon) *என்பதாகும். இது "**அக்கிரமம்**" என்று இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதை வேறு விதமாகச் சொன்னால் "முரட்டாட்டம்" எனலாம். இது மனிதனுக்கு விரோதமானது*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 199 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அல்ல; தேவனுக்கு விரோதமானது. நான்காம் அத்தியாயத்தில் உபாகமம் 28ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சாபங்களுக்கும் இதுவே பிரதான காரணம் என நாம் பார்த்தோம்.

**அக்கிரமமோ**, முரட்டாட்டமோ வேறு எந்த தமிழ்ச் சொல்லோ அவான் என்னும் வார்த்தையின் முழு அர்த்தத்தை நமக்கு எடுத்துக் காட்டுவதில்லை. வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள **அவான்** என்ற சொல் அக்கிரமத்தை மாத்திரமல்ல, அக்கிரமத்தோடு வரக்கூடிய **தண்டனையையும், தீய விளைவுகளையும்** குறிப்பதாக உள்ளது.

உதாரணமாக ஆதியாகமம் 4:13ல் தன் சகோதரனைக் கொன்றதற்கு காயீனுக்கு தேவன் நியாயத்தீர்ப்பு வழங்கியபோது, காயீன் "எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது" என்றான். இங்கே "தண்டனை" என்னுமிடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் **அவான்** என்பதாகும். இது காயீனுடைய "அக்கிரமத்தை" மாத்திரமல்ல, அதற்குரிய "தண்டனையையும்" உள்ளடக்கிக் கூறுகிறது.

லேவியராகமம் 16:22ல் பாவநிவாரண நாளிலே போகவிடப்பட்ட ஆட்டைக்குறித்து கர்த்தர் சொல்லும் போது, "அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் தன் மேல் சுமந்து கொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக" என்று கூறுகின்றார். இந்த உவமானத்தில் அந்த வெள்ளாடு இஸ்ரவேலர்களின் அக்கிரமங்களை மட்டுமல்ல அக்கிரமங்களுக்கான தண்டனையையும் சுமந்து செல்கிறது.

புலம்பல் 4ம் அதிகாரத்தில் **அவான்** என்னும் சொல் இதே அர்த்தத்தில் இரண்டு தடவை வருகிறது. 6ம் வசனத்தில் என் ஜனமாகிய குமாரத்தியின் **அக்கிரமத்துக்கு** வந்த **தண்டனை**..." என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மீண்டும் 22ம் வசனத்தில் "சீயோன் குமாரத்தியே, **உன் அக்கிரமத்துக்கு** வரும் **தண்டனை**" என்று வருகிறது. இவ்விரண்டிடங்களிலும் **அவான்** என்ற தனிப்பதம் அக்கிரமத்துக்கு வந்த தண்டனை என்னும் அர்த்தத்தைத் குறிக்கும்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொன்னால் **அவான்** என்பது அக்கிரமத்தை மாத்திரமன்று, அக்கிரமத்தின் மேல் தேவ நியாயத்தீர்ப்பு கொண்டு வரும் எல்லா **தீய விளைவுகளையும்** ஒன்று சேர குறிக்கிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 200 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இது சிலுவையில் இயேசு செய்த தியாகத்தைக் குறிக்கிறது. இயேசு தாமே எந்தப் பாவத்தையும் செய்யவில்லை. ஏசாயா 53:9ல் தீர்க்கதரிசி, "அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" என்று கூறுகின்றார். ஆனால் 6ஆம் வசனத்தில் "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்" என்று கூறுகின்றார். நம்முடைய அக்கிரமத்தை மட்டும் இயேசு ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அக்கிரமத்தினால் உண்டான எல்லா தீயவிளைவுகளையும் அவர் ஏற்றுக் கொண்டார். தம்மைச் சித்தரித்த அந்த வெள்ளாட்டுக்கடாவைப் போலவே, நமது அக்கிரமத்தையும் அதற்குரிய தண்டனையையும் நம்மீது திரும்பி வராதிருக்கும்படி நிரந்தரமாய் அவரே சுமந்து தீர்த்தார்.*

*இதுவே சிலுவையின் முக்கிய அர்த்தமும் நோக்கமுமாயிருக்கிறது. இதிலே தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு பரிமாற்றம் நடைபெற்றது. முதலாவதாக, நாம் இருக்க வேண்டிய இடத்தில் இயேசு இருந்து நமது அக்கிரமத்திற்குரிய தெய்வீக நியாயத்தீர்ப்பின் எல்லாத் தீய விளைவுகளையும் அவர் ஏற்றுக்கொண்டார். இதற்குப் பதிலாக தேவன் நம்மனைவருக்கும் பாவமற்ற இயேசுவின் கீழ்படிதலினால் உண்டாகக்கூடிய எல்லா நற்பலன்களையும் வழங்குகின்றார்.*

*இரத்தினச் சுருக்கமாகக் கூறினால் தீமையின் காரணமாக நம்மேல் வர இருந்த தீய பலன் இயேசுவின் மேலும், இயேசுவிற்கு உரிய நற்பலனின் நன்மை நம்மேலும் வந்தது. தேவன் தமது சொந்த நித்திய நியாயத்தீர்ப்பைக் கைவிட்டுவிடவில்லை. நமது அக்கிரமங்களினிமித்தமாக நியாயமாய் நம்மேல் வர இருந்த தண்டனையை இயேசு ஏற்றுக் கொண்டதினாலே, தேவனால் இவ்வாறு நமக்கு நன்மை செய்ய முடிந்தது.*

*இவை அனைத்தும் அளக்க முடியாத தேவ கிருபையினால் மட்டுமே நமக்கு வருகிறது. இது முற்றிலும் விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்கு நாம் காரண காரியத்தைத் தர்க்கரீதியில் கூற முடியாது. இப்படிப்பட்ட ஈவைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியாக நாம் யாரும் எதையுமே செய்ததில்லை. நம்மில் எவரும் எக்காலத்திலும் எதையாவது செய்து இதைச் சம்பாதித்துக் கொள்ளவே முடியாது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 201 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வேதம் இந்தப் பரிமாற்றத்தின் பலவிதமான பரிமாணங்களைப் பற்றியும் அது பெற்றுத்தரும் பலவிதமான நற்பலன்களைப் பற்றியும் விளக்குகிறது. இவையனைத்திற்கும் கீழ் ஒரே அடிப்படைக் கொள்கை தான் உள்ளது: இயேசுவினால் வரும் நற்காரியங்கள் நமக்குக் கொடுக்கப்படும்படி, நம்மேல் வரவேண்டிய தீமை அனைத்தும் இயேசுவின் மேல் வந்தது.

இந்தப் பரிமாற்றத்தின் இரு முக்கியக் கூறுகளை ஏசாயா 53:4–5ல் அறியலாம்:

> "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை (சரியான பதம்: நோய்களை) ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை (சரியான பதம்: வலிகளை) சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.
>
> நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை (தண்டனை) அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் (காயங்களால்) குணமாகிறோம்."

இங்கு இரு சத்தியங்கள் பிணைத்து வருகின்றன. ஒன்று ஆவிக்குரியது, மற்றொன்று சரீரப்பிரகாரமானது. ஆவிக்குரிய தளத்தில், நமது மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்குமான தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார். இதன் மூலம் நாம் மன்னிக்கப்பட்டு தேவனுடன் சமாதானம் பெறுகிறோம். (ரோமர் 5:1யைப் பார்க்கவும்). சரீர தளத்தில் இயேசு நமது நோய்களையும், வலிகளையும் ஏற்றுக் கொண்டார். ஆகவே அவரது காயங்களின் மூலம் நாம் குணமாகிறோம்.

சரீரப் பிரகாரமான ஆசீர்வாதத்தைக் குறித்த பரிமாற்றம் புதிய ஏற்பாட்டில் இரண்டு பகுதிகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மத்தேயு 8:16–17 ஏசாயா 53:4யைக் குறிப்பிட்டு "இயேசு பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்: அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார், என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி



Blessing or Curse Tamil text 2012 revised.p65 202 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இப்படி நடந்தது.” என்று கூறுகிறது.*

*மீண்டும் 1 பேதுரு 2:24ல் அதை எழுதியவர் ஏசாயா 53:5–6யைக் குறிப்பிட்டு இயேசுவைப் பற்றி இவ்வாறாகக் கூறுகிறார்:*

> “நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் (காயங்களால்) குணமானீர்கள்.”

*மேலேயுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள இருநிலை பரிமாற்றத்தை நாம் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்:*

**நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.**
**நாம் சுகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி**
**இயேசு காயமடைந்தார்.**

*இந்தப் பரிமாற்றத்தின் மூன்றாவது கூறு ஏசாயா 53:10ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பிதாவாகிய கர்த்தர், இயேசுவின் ஆத்துமாவை “குற்ற நிவாரண பலியாக” ஒப்புக் கொடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது. பலவிதமான பாவநிவாரண பலிகளுக்கான மோசேயின் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். பாவம் செய்த மனிதன் தன் பாவத்திற்கான பலியை—ஓர் ஆடாகவோ அல்லது வெள்ளாடாகவோ அல்லது ஒரு காளையாகவோ அல்லது வேறு ஒரு மிருகமாகவோ—ஆசாரியனிடத்தில் கொண்டுவர வேண்டும். அந்தப் பலியின் மேல் அவன் தன் பாவத்தை அறிக்கையிடுவான். பலியாட்டின் மேல் அறிக்கையிடப்பட்ட பாவத்தை அறிக்கையிட்டவன் மேலிருந்து எடுத்து அந்த மிருகத்தின் மேல் அடையாள நிலையில் சுமத்தப்பட்டதாக ஆசாரியன் செய்வான்.*

*எல்லாவற்றிற்கும் போதுமான இயேசுவின் தியாகபலி தனித்து எல்லா நிபந்தனையையும் சந்திப்பதாக தேவ ஞானத்தால் திட்டமிடப்பட்டிருந்தது. சிலுவையில் உலகத்தின் பாவம் அனைத்தும் இயேசுவின் ஆத்துமாவிற்கு மாற்றப்பட்டது. இதனுடைய விளைவு ஏசாயா 53:12ல் “அவர் தம்முடைய*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 203 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*ஆத்துமாவை மரணத்திலூற்றி" என்று விளக்கப்பட்டுள்ளது. இயேசு தம்முடைய ஒப்பற்ற தியாக மரணத்தினால், மனுக்குலம் அனைத்தின் பாவத்திற்கும் பரிகாரம் செய்தார்.*

*2 கொரிந்தியர் 5:21ல் பவுல் ஏசாயா 53:10யைக் குறிப்பிட்டு இப்பரிமாற்றத்தினால் வரும் முற்போக்கான பலனைச் சொல்லுகிறார்:*

> "நாம் அவருக்குள் (இயேசுவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவமறியாத அவரை (இயேசுவை) நமக்காகப் பாவமாக்கினார்."

*இங்கு பவுல் நமது சொந்த முயற்சிகளினால் நாம் அடையக்கூடிய எந்த விதமான நீதியைப் பற்றியும் சொல்லவில்லை. ஆனால் பாவத்தையே அறியாத தேவனுடைய சொந்த நீதியைக் குறித்துச் சொல்லுகிறார். நம்மில் யாரும் இதை ஒருபோதும் சம்பாதிக்க முடியாது. பூமிக்கு வானம் எவ்வளவு உயரத்தில் இருக்கிறதோ தேவனுடைய நீதியும் நம்முடைய சொந்த நீதியிலிருந்து அவ்வளவு உயர்வானதாய் இருக்கிறது. இதை விசுவாசத்தின் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.*

*பரிமாற்றத்தின் இந்த மூன்றாவது, பகுதியைக் கீழ்கண்டவாறு தொகுத்துச் சொல்லலாம்:*

**இயேசுவின் நீதியினால் நாம் நீதிமான்களாகும்படிக்கு, நம்முடைய பாவங்களினால் அவர் பாவமானார்.**

*இந்தப் பரிமாற்றத்தின் அடுத்த செயல்பாடு இதற்கு முந்திய கூற்றிலிருந்து தொடர்வதாக உள்ளது. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆகியவற்றைக் கொண்ட வேதம், பாவத்தின் இறுதி பலன் மரணம் என்று வலியுறுத்துகிறது. எசேக்கியேல் 18:4ல் கர்த்தர் "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்" என்று சொல்கின்றார். யாக்கோபு 1:15ல் அப்போஸ்தலர் "பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" என்று கூறுகின்றார். இயேசு நமது பாவத்தை ஏற்றுக்கொண்ட பொழுது பாவத்தின் விளைவான மரணத்தையும் அனுபவிக்க வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாய் இருந்தது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 204 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இதையே உறுதிப்படுத்தி எபிரெயர் 2:9ல் அதன் எழுத்தாளர், "...தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம்..." என்று கூறுகின்றார். அவர் ஏற்றுக்கொண்ட மரணம், தன்மேல் அவர் ஏற்றுக்கொண்ட மனித பாவத்தின் தவிர்க்க முடியாத விளைவாக இருந்தது. அவர் மாந்தர் அனைவரின் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு எல்லா மனிதர்களுக்குரிய மரணத்திலும் பங்கேற்றார்.*

*அவருடைய தியாக மரணத்தை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் அவர் நித்திய ஜீவனை ஈவாக அளிக்கிறார். ரோமர் 6:23ல் பவுல் இவ்விரண்டையும் ஒப்பிட்டு "பாவத்தின் சம்பளம் (நியாயமான வெகுமானம்) மரணம்; (சம்பாதியாத) தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" என்று கூறுகின்றார்.*

*பரிமாற்றத்தின் நான்காவது பகுதியை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்:*

**நாம் இயேசுவினுடைய ஜீவனில் பங்கு உள்ளவர்களாகும்படி அவர் நமது மரணத்தை ஏற்றுக் கொண்டார்.**

*இந்தப் பரிமாற்றத்தின் அடுத்த பகுதி பவுலினால் 2கொரிந்தியர் 8:9ல் கூறப்பட்டுள்ளது: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே." இந்தப் பரிமாற்றம் தெளிவாக உள்ளது: வறுமையிலிருந்து செல்வத்திற்கு மாற்றப்பட்டுள்ளோம். நாம் ஐசுவரியவான்களாகும்படி இயேசு தரித்திரரானார்.*

*எப்பொழுது இயேசு தரித்திரரானார்? சிலர் அவரது பூலோக ஊழியம் முழுவதிலும் அவர் ஏழையாக இருந்ததாகச் சித்தரிக்க முற்படுகின்றனர். ஆனால் இது சரியான கணிப்பு அல்ல. அவர் தாமே பெருமளவில் பணத்தைச் சுமந்து செல்லாவிட்டாலும் அவருக்குத் தேவையானது எதுவுமே*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 205 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*எவ்வேளையிலும் குறைவுபட்டதில்லை. அவருடைய சீஷர்களையும் அவர் அனுப்பிய பொழுது அவர்களுக்கும் ஒன்றும் குறைவுபடவில்லை. (லூக்கா* 22:35*யைப் பார்க்கவும்) ஏழைகளாய் இல்லாமல் அவரும் அவருடைய சீஷர்களும் எப்போதும் ஏழைகளுக்கு உதவினார்கள். (யோவான்* 12:4–8; 13:29 *பார்க்கவும்).*

*சில வேளைகளில் இயேசு விநோதமான முறையில் பணத்தைப் பெற்றார் என்பது உண்மைதான். ஆனால் ஒரு வங்கியிலிருந்து எடுத்தாலும் அல்லது ஒரு மீனின் வாயிலிருந்து எடுத்தாலும் பணத்தின் மதிப்பு ஒன்று தான்! (மத்தேயு* 17:27*யைப் பார்க்கவும்) சில வேளைகளில் அவர் உணவளித்த விதமும் வியப்பிற்குரியதாய் இருந்தது. ஒரு மனிதன் ஐயாயிரம் ஆண்களுக்கும், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் திருப்தியாக உணவளிப்பார் என்றால் அவரை ஏழை என்று எந்த நிலையில் சொல்லக்கூடும்! (மத்தேயு* 14:15–21 *யைப் பார்க்க.)*

*உண்மையில் தம்முடைய பூலோக ஊழியம் முழுவதிலும் இயேசு ஐந்தாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்ட "பரிபூரண" வாழ்விற்கு உதாரணமாய் வாழ்ந்தார். தம்முடைய சொந்த வாழ்வில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற அவருக்குத் தேவையான யாவற்றையும் அவர் எப்பொழுதும் உடையவராயிருந்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவர் மற்றவர்களுக்கும் கொடுத்தார். அவருக்கு எப்பொழுதுமே இல்லை என்ற நிலை வரவில்லை.*

*இயேசு எப்பொழுது நமது நிமித்தமாய் ஏழையானார்? அதற்கான பதில் : **சிலுவையில்** என்பதாகும். உபாகமம்* 28:48*ல் மோசே பூரணமாய் தரித்திரத்தை நான்கு வார்த்தைகளில் தொகுத்துக் கூறுகிறார்: பட்டினி, தாகம், நிர்வாணம், சகலத்திலும் குறைவு—இவை அனைத்தின் முழுமையையும் இயேசு சிலுவையில் அனுபவித்தார்.*

*அவர் பசியுள்ளவராய் இருந்தார். அவர் சுமார்* 24 *மணி நேரம் உணவு உட்கொள்ளவில்லை.*

*அவர் தாகமுள்ளவராய் இருந்தார். அவருடைய கடைசி*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 206 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வாசகங்களில் ஒன்று: "நான் தாகமாயிருக்கிறேன்" என்பதாகும் (யோவான் 19:28).

அவர் ஆடையற்றவராய் இருந்தார். போர்ச்சேவகர்கள் அவருடைய வஸ்திரங்கள் அனைத்தையும் அவரிடமிருந்து எடுத்துக் கொண்டனர். (யோவான் 19:23)

அவர் சகலத்திலும் குறைவு பட்டிருந்தார். அவருக்கு எதுவுமே சொந்தமாக இல்லை. அவருடைய மரணத்திற்குப் பின்பு அவர் கடன் வாங்கப்பட்ட ஆடையுடன் கடன் வாங்கப்பட்ட கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் (லூக்கா 23:50–53). இவ்வாறாக இயேசு ஏழ்மையின் உச்சக்கட்டத்தை நமது நிமித்தமாக முழுமையாக ஏற்றுக் கொண்டார்.

2 கொரிந்தியர் 9:8ல் இந்த பரிமாற்றத்தின் நேர்மறையான பகுதியை பவுல் விவரமாக விளக்குகிறார்: "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்." *இந்தப் பரிமாற்றத்திற்கு தேவனுடைய கிருபை மாத்திரமே அடிப்படைக் காரணம் என வலியுறுத்துவதில் பவுல் கவனமாக உள்ளார். இதனை ஒருபோதும் சம்பாதிக்க முடியாது. இதை விசுவாசத்தின் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும்.

அநேக தடவைகளில் இயேசு கிறிஸ்துவிற்கு பூலோக நாட்களில் உண்டாயிருந்த "அபரிமிதம்" நமக்கும் உண்டாயிருக்கும். நமது கையில் அதிகப் பணமிருக்காது அல்லது வங்கியிலும் அதிகச் சேமிப்பு நம்பேரில் இருக்காது. ஆனால் நமது அன்றாடத் தேவைகளுக்குப் போதுமானது போக மற்றவர்களுக்கும் கொடுக்க நம்மிடம் இருக்கும்.

தேவைகள் இவ்விதமாய்ச் சந்திக்கப்படுவதின் ஒரு முக்கிய காரணம் அப்போஸ்தலர் 20:35ல் கூறப்பட்டுள்ள இயேசு சொன்ன வார்த்தைகளினால் விளக்கப்படுகிறது: "வாங்குகிறதைப்

*இந்த வசனத்தின் மற்ற கருத்துகள் ஐந்தாம் அத்தியாயத்தில் 55 பக்கத்தில் விளக்கப்பட்டது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 207 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்." தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் உயர்ந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்க வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாய் உள்ளது. ஆகவே அவர் நமது சொந்த தேவைகளுக்கும் கொடுத்துவிட்டு மற்றவர்க்கும் கொடுக்கும்படியான நிலையில் நம்மை வைக்கிறார்.*

*இந்தப் பரிமாற்றத்தின் ஐந்தாம் பகுதியை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்:*

> **அவருடைய ஐசுவரியத்தினால் நாம் செல்வந்தர்கள் ஆகும்படி இயேசு நமது ஏழ்மையை ஏற்றுக் கொண்டு ஏழையானார்.**

*சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றம் மனிதனுடைய பாவத்தைத் தொடரும் உணர்ச்சிக்கடுத்த விளைவுகளின் துயரத்திற்கும் பரிகாரம் அளிக்கிறது. மீண்டும் இங்கு நாம் நன்மையையே அனுபவிக்கும்படி இயேசு தீமையை ஏற்றுக்கொண்டார். நம்முடைய அக்கிரமம் நம்மேல் கொண்டு வந்த இரண்டு கொடூரமான காயங்கள் வெட்கமும், புறக்கணிப்புமாகும். இவைகள் இரண்டும் சிலுவையில் இயேசுவின் மேல் வந்தன.*

*வெட்கம் என்பது கேவலமான மனக்கவலையிலிருந்து அருகதையற்ற மனப்பான்மை வரை நீண்டதாய் இருக்கலாம். இது ஒருவனை தேவனுடனான அல்லது மனிதனுடனான அர்த்தமுள்ள ஐக்கியத்திலிருந்து பிரித்து விடுகிறது. இதற்கான பொதுவான காரணங்களில் ஒன்று—நம்முடைய தற்கால சமுதாயத்தில் அடிக்கடி காணப்படுவது—பாலுணர்ச்சியைத் தகாதமுறையில் பயன்படுத்துதல் அல்லது பிள்ளைப்பருவத்தில் அனுபவித்த இடையூறு. இவைகள் அடிக்கடி காயத்தின் தழும்புகளை நம்மில் உண்டாக்குகிறது. இத்தழும்புகள் தேவகிருபையினால் மட்டுமே குணமடையக்கூடும்.*

*சிலுவையில் தொங்கிய இயேசுவைக்குறித்து சொல்லும் பொழுது எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் "**'அவமானத்தை எண்ணாமல்,'** சிலுவையைச் சகித்து" என்று கூறுகிறார்.* (எபிரெயர் 12:2). *சிலுவை மரணம் எல்லாவித மரணங்களிலும் மிகவும் வெட்கத்திற்குரியது. இது கீழ்த்தரமான கைதிக்கே*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 208 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அளிக்கப்படும். சிலுவையில் அறையப்பட இருக்கும் நபரின் ஆடைகள் அனைத்தையும் எடுத்து விடுவார்கள். அவரின் நிர்வாணத்தை, கடந்து செல்பவர்கள் கண்டு சத்தமிட்டு கேலி செய்யமுற்படுவர். இப்படிப்பட்ட அவமானத்தின் உச்சக்கட்டத்தை இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது அனுபவித்தார்.* (மத்தேயு 27:35–44).

*இயேசு அனுபவித்த வெட்கத்திற்குப் பதிலாக தேவனுடைய நோக்கமானது அவரில் நம்பிக்கை வைப்பவர்கள் அவருடைய நித்திய மகிமையில் பங்கு கொள்ள வேண்டும் என்பதாகும். எபிரெயர்* 2:10*ல் அதன் எழுத்தாளர்* "... ***அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில்*** *அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை (அதாவது இயேசுவை) உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கு ஏற்றதாயிருந்தது" என்று கூறுகின்றார். இயேசு சிலுவையில் சகித்த அவமானம் அவரில் நம்பிக்கை வைக்கும் யாவருக்கும் அவர்களுடைய சொந்த அவமானத்திலிருந்து விடுபடும்படிக்கு வாசலைத் திறந்தது. அது மாத்திரமல்ல. நித்திய உரிமையினாலே, அவருக்குரிய மகிமையை நம்முடன் அவர் பகிர்ந்து கொள்ளுகிறார்*!

*அநேக நேரங்களில் வெட்கத்தைவிட அதிகமாக நம்மை வருத்தும் இன்னொரு காயம் உள்ளது. அது* ***புறக்கணிக்கப்படுதல் ஆகும்.*** *இது சாதாரணமாக முறிந்த உறவினால் உண்டாகிறது. இது ஆரம்ப நிலையில் தங்கள் பிள்ளைகளைப் புறக்கணிக்கும் பெற்றோர்களால் உண்டாகிறது. புறக்கணிக்கப்படுதல், கடுமையானதாக எதிர்மறையான வழிகளில் வெளிப்படுத்தப்படலாம்; அல்லது ஒதுக்கித்தள்ளப்பட்டு அன்பு காட்டப்படாத நிலை ஏற்படலாம். கருத்தரித்த ஒரு பெண் தன் கருப்பையில் வளரும் குழந்தைக்கு விரோதமாக எதிர்மறையான எண்ணங்களை அனுமதிப்பாள் என்றால் அந்தக் குழந்தை அநேகமாக புறக்கணிக்கப்பட்ட ஒரு மனோ நிலையில் பிறக்கும். அப்புறக்கணிப்பின் விளைவு அதனுடைய முதிர்பருவம் வரை தொடர்ந்து கல்லறை வரை கூடச் செல்லும்.*

*புறக்கணிப்பினிமித்தமாக அடிக்கடி அநேக திருமணங்கள் தோல்வியைக் காண்கின்றன. இது ஏசாயா* 54:6*ல் கர்த்தருடைய வார்த்தைகளில் அழகாக படம் தீட்டப்பட்டுள்ளது:*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 209 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீயைப் போலவும், இளம் பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப் போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்."

*புறக்கணிக்கப்பட்ட காயத்திற்கு தேவன் தரும் மருந்து மத்தேயு 27:46,50ல் சொல்லப்பட்டுள்ளது. இது இயேசு துயரத்தின் உச்சக்கட்டத்தில் கூறியதாகும்:*

"ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்."

*உலக சரித்திரத்தில் முதல் முறையாக தேவகுமாரன் தன் தந்தையை நோக்கிக் கூப்பிட்டபொழுது அவர் ஒரு பதிலையும் பெறவில்லை. இயேசு மனிதனுடைய அக்கிரமத்தை முற்றிலும் ஏற்றுக் கொண்டதினால், விட்டுக் கொடுக்கமுடியாத தேவனுடைய பரிசுத்தமானது தன் சொந்தக் குமாரனையும் புறக்கணிக்கும்படியாகச் செய்தது. இவ்விதமாக இயேசு மிகவும் துன்பம் நிறைந்த புறக்கணிப்பை ஏற்றுக் கொண்டார்: அது ஒரு தந்தையின் புறக்கணிப்பு. அதற்குப் பின்பு உடனே அவர் மரித்தார்—சிலுவையில் உண்டான காயங்களினால் அல்ல; உடைந்த உள்ளத்தினாலேயே. இவ்வாறாக சங்கீதம் 69:20ல் "நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது" என்று மேசியாவைப் பற்றிச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகளை அவர் நிறைவேற்றினார்.*

*மத்தேயு இதைத் தொடர்ந்து எழுதும்போது, "அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது." என்று எழுதுகின்றார். இது பாவமுள்ள மனிதன் பரிசுத்தமான தேவனுடன் நேரடியாக ஐக்கியம் கொள்வதற்கான வழி திறக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. இயேசு புறக்கணிக்கப்பட்டதால் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வழி பிறந்தது. இது*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 210 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பவுலினால் எபேசியர் 1:5–6ல் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது : "நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்... பிரியமானவருக்குள் நம்மை தேவன் ஏற்றுக் கொண்டார்." இயேசு புறக்கணிக்கப்பட்டது நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏதுவாயிற்று.*

*வெட்கத்திற்கும், புறக்கணிப்பிற்கும் உரிய தேவனுடைய பரிகாரம் முற்காலத்தை விட நமது காலத்தில் மிகவும் அதிகம் தேவையாயுள்ளது. என்னுடைய கணிப்பின்படி இன்று அமெரிக்க நாட்டிலுள்ள வயது வந்தவர்களுள் குறைந்தது கால் பகுதி வெட்கம் அல்லது புறக்கணிப்பின் காயங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இயேசுவின் சிலுவையிலிருந்து கிடைக்கக்கூடிய ஆரோக்கியத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதில் நான் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.*

*சிலுவையின் பரிமாற்றத்தால் புறக்கணிப்பு, வெட்கம் ஆகிய இவ்விரண்டு உணர்வுகள் எவ்வாறு நீங்கலாயிற்று என்பது கீழே தொகுத்துக் கூறப்பட்டுள்ளது:*

> **இயேசுவினுடைய மகிமையில் நாம் பங்குள்ளவர்களாகும்படி அவர் நமது வெட்கத்தை ஏற்றுக் கொண்டார்.**
>
> **நாம் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்படும்படி இயேசு நம்மேல் வர இருந்தபுறக்கணிப்பை ஏற்றுக்கொண்டார்.**

*இப்பரிமாற்றத்தைக் குறித்து மேலே ஆராய்ந்தோம். இந்த ஆய்வு எல்லாப் பகுதியையும் விளக்கி உள்ளது என்று கூறமுடியாது. எனினும் மனுக்குலத்தின் அடிப்படை முக்கியத் தேவைகளைச் சந்திப்பதாக உள்ளது. இந்தப் பரிமாற்றத்திற்கு அப்பாற்பட்ட சந்திக்கப்பட முடியாத மனித தேவை எதுவும் இல்லை. உண்மையில் மனிதனுடைய முரட்டாட்டத்தில் விளைந்த அனைத்து தீய பலனும் இந்தப் பரிமாற்றத்தால் நீக்கப்படுகிறது:* ***"நமக்கு நன்மை அளிக்கப்படும்படி இயேசுவின் மேலே தீமை வந்தது."*** *இந்த அடிப்படைத் தத்துவத்தை நாம் நமது வாழ்வில் செயல்படுத்தக் கற்றுக்கொள்வோமானால் நமது எல்லாத் தேவைகளும் தேவ உதவியினால் சந்திக்கப்படும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 211 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இப்பொழுது உன்னுடைய வாழ்க்கையில் சிறப்புத் தேவையான, சாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு நீ இந்த மூல சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பவுல் இந்தப் பரிமாற்றத்தின் முக்கியக் கூற்றை கலாத்தியர் 3:13–14ல் விவரிக்கிறார்:*

> "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.
>
> ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று."

*பவுல், இயேசு சிலுவையில் தொங்கினது உபாகமம் 21:23ல் கூறப்பட்டுள்ள மோசேயினுடைய நீதிச்சட்டத்தை நடப்பித்தது எனக் குறிப்பிடுகின்றார். அதன்படி ஒரு "மரத்தில்" (ஒரு மரக்கம்பத்தில்) அறையப்பட்ட எவனும் தேவனுடைய சாபத்திற்குள்ளாகிறான். பின்பு இதன் பலனாக உண்டாகும் எதிரான காரியத்தைக் குறிப்பிடுகின்றார்: ஆசீர்வாதம்.*

*நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி இயேசு சாபமானார் என்ற இந்தப் பரிமாற்றத்தின் பலனை ஒரு இறையியல் வல்லுநர் அலசி ஆராயத் தேவையில்லை.*

*இயேசுவின் மேல் வந்த சாபம் "நியாயப்பிரமாணத்தின் சாபம்" என்று விளக்கப்படுகிறது. உபாகமம் 28ம் அதிகாரத்தில் மோசே அளித்த பட்டியலின் சாபங்கள் அனைத்தையும் இது உள்ளடக்கி இருக்கிறது. இந்த சாபங்கள் நான்காம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டன. இந்த சாபங்கள் ஒவ்வொன்றும் இயேசுவின் மேல் முழுமையாய் வந்தது. இவ்வாறாக நாம் அதற்கு சமமான முழு விடுதலையைப் பெறவும் அதற்கு ஏற்ற ஆசீர்வாதங்களுக்குள் செல்லவும் அவர் நமக்கு வழியை உண்டாக்கினார்.*

*இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்ததை ஒரு*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 212 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நிமிடம் கற்பனை செய்து பார். அப்பொழுது சாபம் எவ்வளவு கொடூரமானது என்பதை நீ உணர்ந்து கொள்ளலாம்.

இயேசு அவருடைய சொந்த இனத்தாரால் புறக்கணிக்கப்பட்டார்: சீஷர்களில் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டார், மற்றவர்களினால் கைவிடப்பட்டார். (சிலர் அவருடைய இறுதி வேதனையைக் காண மீண்டும் திரும்பினர்). அவர் பூமிக்கும் பரலோகத்திற்கும் இடையே ஆடையற்றவராய் தொங்கிக் கொண்டிருந்தார். அவருடைய சரீரமானது எண்ணிறந்த காயங்களின் வேதனையால் தாக்கப்பட்டது; அவருடைய ஆத்துமாவோ மனுக்குலம் அனைத்தின் பாவத்தினால் தொய்ந்து போனது. பூலோகத்தார் அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டனர், பரலோகம் அவர் குரலுக்குச் செவி சாய்க்கவில்லை. சூரியன் தன் ஒளியை குறைத்துக் கொள்ள இருள் அவரைச் சூழ்ந்தது; அவருடைய ஜீவ இரத்தம் தூசிபடிந்த கல்மண் தரையில் வடிந்தது. என்றாலும் அந்த இருளிலும் அவர் மரிப்பதற்கு முன்பு "அது முடிந்தது!" என்று இறுதியாக ஒரு வெற்றிக்குரலை எழுப்பினார்.

கிரேக்கத்திலே "அது முடிந்தது." என்னும் பதம் ஒரே ஒரு வார்த்தையினால் ஆனது. இது "ஒன்றை முற்றுப் பெறச் செய்வது அல்லது பரிபூரணப்படுத்துவது" என்று அர்த்தம் கொண்ட வினைச் சொல்லின் முற்றுப்பெற்ற காலமாகும். தமிழிலே இதை "முழுமையான முடிவு" எனவும் "பரிபூரணம் அடைந்த பரிபூரணம்" எனவும் கூறலாம்.

இயேசு தன் மேலே மனுக்குலத்தின் கீழ்ப்படியாமையினால் வந்த தீய விளைவுகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார். மீறப்பட்ட தேவ சட்டத்தினால் வந்த ஒவ்வொரு சாபத்தையும் அவர் ஏற்றுக் கொண்டார். அவருடைய கீழ்ப்படிதலினால் உண்டான ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் நாம் பெற்றுக் கொள்ளும்படி இதைச் செய்தார். இப்படிப்பட்ட தியாகம் அதன் நோக்கத்தில் வியப்பானது; எனினும் அதன் எளிமையில் அதிசயமானது.

இயேசுவின் இந்தத் தியாகத்தையும் அவர் உனக்காய் பெற்றுத் தந்த யாவற்றையும் விசுவாசத்துடன் உன்னால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா? குறிப்பாக, நீ ஒரு சாபத்தின் நிழலுக்குக்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 213 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கீழாய் வாழ்ந்து கொண்டு இருப்பாய் என்றால் இயேசு செலுத்திய எல்லையற்ற விலைக்கிரயத்தால் உனக்கு முழு விடுதலை உண்டாயிருக்கிறது என்பதைக் காண்கிறாயா?*

*அப்படியென்றால், நீ உடனே செய்ய வேண்டிய எளிதான, தூய்மையான ஒரு காரியம் உண்டு—அது உன்னுடைய மெய்யான விசுவாசத்தை வெளிப்படுத்தும். அது "உமக்கு நன்றி" எனக் கூறுவதாகும்.*

*அதை இப்பொழுதே செய்! "உமக்கு நன்றி! ஆண்டவராகிய இயேசுவே நீர் எனக்காய் செய்த யாவற்றிற்கும் உமக்கு நன்றி! நான் இதை முற்றிலும் புரிந்து கொள்ளாவிட்டாலும் நான் விசுவாசிக்கிறேன். நான் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன்!" என்று சொல்.*

*இப்பொழுது தொடர்ந்து உன்னுடைய சொந்த வார்த்தைகளில் அவருக்கு நன்றியைத் தெரிவி. அவருக்கு நீ அதிகமாய் நன்றி செல்த்தும் போது அவர் உனக்குச் செய்ததை அதிகமாய் நீ விசுவாசிக்கிறாய் என்று பொருள். நீ அதிகமாய் விசுவாசிக்கும் பொழுது நீ அதிகமாய் அவருக்கு நன்றி செலுத்துவாய்.*

**நன்றி செலுத்துவதே விடுதலையின் முதல்படி.**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 214 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 18

# விடுதலை பெற ஏழு படிகள்

சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றத்தின் மூலமாக மட்டுமே அனைத்துத் தேவைகளையும் சந்திக்கக்கூடிய தேவ இரக்கத்தை நாம் பெற்றுக் கொள்ளமுடியும். கடந்த அத்தியாயத்தில் எட்டு முக்கியக் குறிப்புகளைத் தொகுத்துக் கூறினேன்:

1. நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.
2. நாம் சுகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி இயேசு காயப்படுத்தப்பட்டார்.
3. இயேசுவின் நீதியினால் நாம் நீதிமான்களாகும்படி, நம்முடைய பாவங்களினால் அவர் பாவமானார்.
4. இயேசுவினுடைய மெய்வாழ்வில் நாம் பங்கு கொள்ளும்படி அவர் நமது மரணத்தை ஏற்றுக் கொண்டார்.
5. அவருடைய செல்வத்தால் நாம் செல்வந்தர்களாகும்படி இயேசு நமது தரித்திரத்தை ஏற்றுக் கொண்டு தரித்திரரானார்.
6. இயேசுவினுடைய மகிமையில் நாம் பங்கு உள்ளவர்களாகும்படி அவர் நமது வெட்கத்தை ஏற்றுக் கொண்டார்.
7. நாம் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்படும்படி இயேசு நம்மேல் வர இருந்த புறக்கணிப்பை அனுபவித்தார்.
8. நாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படி இயேசு சாபமானார்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 215 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இந்தப்பட்டியல் இன்னும் முற்றுப் பெறவில்லை. இத்துடன் இணைக்கப்படக்கூடிய பரிமாற்றத்தின் மற்ற காரியங்களும் உள்ளன. ஆனால் இவையெல்லாம் இயேசுவின் தியாக மரணத்தின் மூலம் தேவன் நமக்குத் தந்தருளின காரியத்தின் வெவ்வேறு பிரிவுகளாகும். வேதம் இவைகளைத் தொகுத்து அனைத்தையும் உள்ளடக்கிய இரட்சிப்பு என்னும் ஓர் அழகான வார்த்தையால் சொல்லுகிறது. கிறிஸ்தவர்கள் அநேக நேரங்களில் இரட்சிப்பை—பாவமன்னிப்புப் பெற்று, மறுபடியும் பிறக்கும் அனுபவத்தின் வரம்புக்கு உட்படுத்துகின்றனர். இது அற்புதமான காரியமே. ஆயினும் இது புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முழு இரட்சிப்பின் முதற்பகுதி மாத்திரமே.*

*இரட்சிப்பின் முழுநோக்கமும் மொழி பெயர்ப்பின் பிரச்சனைகளினாலே நமக்குப் புலப்படாததாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் மூல கிரேக்க மொழியின் சோசோ* (sozo) *என்னும் வினைச்சொல் பொதுவாக "இரட்சிப்பது" என்று மொழி பெயர்க்கப்பட்டாலும் பாவங்களின் மன்னிப்பிற்கு அப்பாற்பட்டு இது பலவித வழிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, இது மக்களில் அநேகர் சரீர சுகத்தை அடைந்த பொழுது பயன்படுத்தப்பட்டுள்ளது.* * *பிசாசுகளிலிருந்து ஒருவர் விடுதலை அடைந்த போதும்,* ** *மரித்த ஒருவர் மீண்டும் வாழ்வைப் பெற்ற வேளையிலும்* *** *இது பயன் படுத்தப்பட்டுள்ளது. லாசருவின் சம்பவத்தில், மரணத்துக்கேதுவான வியாதியிலிருந்து அவன் மீண்டு வந்ததற்கு இது பயன்படுத்தப்பட்டுள்ளது.* **** *2 தீமோத்தேயு 4:18ல் ஒரு மனிதனுடைய வாழ்வு முழுமையிலும் தேவன் தொடர்ச்சியாக அளிக்கும் பாதுகாவலை விளக்க இச்சொல்லையே பவுல் பயன்படுத்துகின்றார்.*

*இரட்சிப்பின் முழுமையான கிரியை மனிதனுடைய*

* மத்தேயு 9:21-22; 14:36; மாற்கு 5:23,28,34; 6:56; 10:52; லூக்கா 8:48; அப். 4:9; 14:9; யாக். 5:15

** லூக்கா 8:36

*** லூக்கா 8:50

**** யோவான் 11:12



Blessing or Curse Tamil text 2012 revised.p65 216 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஒவ்வொரு பகுதிக்கும் உரியதாக உள்ளது. இது 1தெசலோனிக்கேயர் 5:23ல் உள்ள பவுலின் ஜெபத்தில் அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளது: "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" என்று கூறுகின்றார். இரட்சிப்பு என்பது மனிதனின் முழு ஆழ்தத்துவத்திற்கும்—ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதற்கும்—உரியது. இது கிறிஸ்து வரும்பொழுது உண்டாகும் சரீரத்தின் உயிர்த்தெழுதலுடன் மாத்திரமே நிறைவடைகிறது.

ஆனால் இரட்சிப்பின் இந்த எல்லாவித சிலாக்கியங்களையும் யாரும் ஒரே நேரத்தில் அல்லது ஒரே செயலினால் பெற்றுக் கொள்வதில்லை. சாதாரணமாக ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குப் படிப்படியாக முன்னேறிச் செல்கிறோம். அநேக கிறிஸ்தவர்கள் அவர்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றதற்குப்பின்பு அதற்குமேல் கடந்து செல்வதே கிடையாது. தங்களுக்கு இலவசமாய் கிடைக்கக்கூடிய மற்ற அநேக சிலாக்கியங்களைக் குறித்து அவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

ஒரு மனிதன் இச் சிலாக்கியங்களை எந்த வரிசையில் பெற்றுக் கொள்கிறான் என்பது, நம்மைத் தனிப்பட்ட முறையில் கண்காணிக்கும் தேவனுடைய வல்லமையினாலே தீர்மானிக்கப்படுகிறது. அதன் ஆரம்பம் பொதுவாக, பாவங்களுக்கான மன்னிப்பாய் இருக்கிறது. ஆனால் எப்பொழுதும் அது அவ்வாறு இருப்பதில்லை. இயேசுவின் பூவுலக ஊழியத்தில், மக்கள் பெரும்பாலாக முதலாவது சரீர சுகத்தைப் பெற்றுக் கொண்டனர். பின்பு பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக் கொண்டனர்.

இது இன்றும் இவ்வாறு நடக்கக்கூடும். 1969 ஆம் ஆண்டு என்னுடைய மனைவி ரூத் யூதப் பெண்ணாகத் தனிமையில் இருந்த பொழுது அநேக வாரங்கள் படுக்கையில் சுகவீனமாய் இருந்தாள். அப்பொழுது அவளுடைய படுக்கை அறையில் இயேசுவிடமிருந்து ஓர் அற்புதமான சந்திப்பு அவளுக்கு ஏற்பட்டது. அவளுக்கு உடனடியாக பூரண சுகம் உண்டாயிற்று. ஆனால் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பே அவள் தன் பாவங்கள்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 217 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மன்னிக்கப்பட வேண்டும் என்பதின் அவசியத்தை உணர்ந்தாள். அப்பொழுது தான் அவள் மறுபடியும் பிறந்தாள்.

கிறிஸ்து நமக்காகச் செய்த தியாகத்தின் அடிப்படையில் நம்முடைய தேவைகளுக்காக நாம் தேவனிடத்தில் வரும்பொழுது நாம் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை உணர்ந்து கொள்ளக்கூடியவர்களாய் இருக்கவேண்டும். நாம் நமக்கு முக்கியமானதை தேவனிடம் கூறமுற்படாமல், அவருடைய பாணியில் நம்மில் செயல்பட அனுமதிக்கவேண்டும். உதாரணமாக ஒருவன் பொருளாதார ஆசீர்வாதத்தைத் தேடுவதில் உறுதியாய் இருக்கலாம். ஆனால் அவன் நீதியை முதன்மைப்படுத்த வேண்டுமென தேவன் விரும்பலாம். நீதியை விட பொருளாதார ஆசீர்வாதத்தைத் தேடுவதில் அவன் பிடிவாதமாய் இருந்தால் இரண்டுமே அவனுக்குக் கிடைக்காமற் போகலாம்!

மேலும் ஒரு மனிதன் சரீர சுகத்தைத் தேடலாம். தன் சரீர நோய்க்கு அடிப்படையான காரணம் பிறர் தன்னைப் புறக்கணித்தது, துயரம், பாதுகாப்பின்மை போன்ற தனக்குள் இருக்கும் உணர்ச்சிகளுக்கடுத்த பிரச்சனை என்பதை அவன் அறியாதிருக்கலாம். இவ்வேளையில் தேவன் அவனுக்குத் தேவைப்படும் உணர்ச்சிகளுக்கடுத்த சுகத்தை வழங்குவார். இதற்கு அந்த மனிதன் தன்னை விட்டுக்கொடுக்காமல், சரீர சுகத்தை மட்டும் அவன் விரும்புவானென்றால் இறுதியில் அவன் எந்த சுகத்தையும்—சரீர சுகத்தையோ, உணர்ச்சிகளுக்கடுத்த சுகத்தையோ—பெற்றுக் கொள்ளப் போவதில்லை.

சில வேளைகளில் தேவன் நமக்கு மிகவும் உடனடியாய் தேவைப்படும் இரட்சிப்பின் ஒரு சிலாக்கியத்தை வெளிப்படுத்த முற்படுகிறார். ஆனால் அதை நாம் அறிந்து கொள்வதில்லை. இது முக்கியமாக ஒரு சாபத்திலிருந்து நாம் விடுபட வேண்டும் என்பதைப் பற்றியதாக இருக்கலாம். அநேகம் தடவைகளில் ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் மேலுள்ள சாபமானது அவன் இரட்சிப்பின் மற்ற சிலாக்கியங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதபடி அவனைத் தடுத்து நிறுத்தும் சந்தேகமற்ற தடையாக உள்ளது. பொதுவாக இந்தத்தடை மற்ற தேவைகள் சந்திக்கப்படுவதற்கு முன்பு நீக்கப்பட வேண்டும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 218 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இந்த சிலாக்கியத்தைப் பற்றி நாம் இப்பொழுது கூர்ந்து காண்போம்: **சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வரும் பரிமாற்றம்.** இந்த வேளையில் இஸ்ரவேலர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்த போது மோசே அவர்களுக்கு முன்பாக வைத்த அதே காரியங்களை அப்படியே நாமும் சந்திக்கிறோம்: "நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு ..." (உபாகமம் 30:19). இந்தக் காரியங்கள் மிகவும் பயபக்தியானதும், அதன் விளைவுகள் மிகவும் முக்கியமானதும் ஆகும். ஆகவே மோசே இஸ்ரவேலர்களின் மறுமொழியை வானமும் பூமியும் காணும்படி அவைகளை சாட்சியாக அழைக்கிறார்.*

*தெரிந்து கொள்ள வேண்டிய எதிர்மறையான காரியங்கள் தெளிவானவை: ஒரு பக்கம் ஜீவனும் ஆசீர்வாதங்களும்; மறுபக்கம் மரணமும் சாபங்களும். தங்கள் சொந்தத் தீர்மானத்தை இஸ்ரவேலர்கள் செய்யும்படி தேவன் எதிர்பார்த்தார். அவர்கள் சரியான தீர்மானத்தைச் செய்யும்படி அவர் விரும்பினார் : ஜீவனும் ஆசீர்வாதங்களும். ஆனால் அவர்கள் சார்பில் அந்தத் தீர்மானத்தை அவர் செய்யப்போவதில்லை. மேலும் அவர்கள் எடுக்கும் தீர்மானம் அவர்களுடைய சொந்த வாழ்வை மட்டுமல்லாமல் அவர்களுடைய சந்ததியினரின் வாழ்க்கையையும் பாதிக்கக்கூடியது என்று அவர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். இது ஆசீர்வாதங்கள், சாபங்கள் இவைகளின் சிறப்பியல்பாகும்: அதாவது அவைகள் தலைமுறை தலைமுறையாக தொடர்கின்றன.*

*இஸ்ரவேலர்கள் அப்பொழுது செய்த தீர்மானம் அவர்களின் வருங்காலத்தையே தீர்மானித்தது. இது நமக்கும் இன்று உண்மையாக உள்ளது. தேவன் நமக்கு முன்பாக அப்படியே அதே இரண்டு வழிகளை வைக்கிறார்: ஜீவனும் ஆசீர்வாதங்களும், மரணமும் சாபங்களும். தெரிந்து கொள்ளுதலை அவர் நம்மிடத்தில் விடுகிறார். இஸ்ரவேலர்களைப் போலவே நாம் செய்யும் தீர்மானத்தினால் நம்முடைய வருங்காலத்தை நாம் தீர்மானிக்கிறோம். நாம் எடுக்கும் தீர்மானம் நமது சந்ததியினரின் வாழ்வையும் பாதிக்கும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 219 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மோசேயின் அந்த வார்த்தைகளை முதலில் நான் படித்தபொழுது என்னில் தேவன் ஒரு மறுமொழியை எதிர்பார்க்கிறார் என்று அறிந்து நான் அதிசயிக்கலாயினேன். நான் தீர்மானம் எடுக்கும்படி தேவன் எனக்காகக் காத்திருக்கிறார்! இந்தக் காரியத்தை நான் தவிர்க்கமுடியாது. தீர்மானம் எடுக்காதிருப்பது என்பது உண்மையில் தவறான தீர்மானத்தை எடுப்பதாகும்.

சரியான தீர்மானத்தை எடுக்க தேவன் எனக்கு கிருபையைத் தந்ததற்காக நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இதைத் தொடர்ந்த ஆண்டுகளில் அதைக் குறித்து நான் கவலைப்பட்டது கிடையாது. கொஞ்ச காலத்தில் தேவன் நான் எடுத்த தீர்மானத்தின் பலனை எனக்குக் காட்ட ஆரம்பித்தார். வாழ்நாட்கள் முழுவதிலும் விசுவாசமுள்ள, கீழ்ப்படிதலாக நடக்க அழைத்துச் செல்லும் ஒரு வாசல் வழியாகக் கடந்து வந்தேன். அதிலிருந்து நான் திரும்பவேயில்லை.

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து செல்ல விரும்புகிறவர்கள் அனைவரும் அதே வாசல் வழியாகக் கடந்து செல்ல வேண்டும். முதலாவது, தேவன் நமக்கு முன்பு வைத்துள்ள காரியங்களை நாம் தெளிவாக அறிய வேண்டும். பின்பு ஒரு எளிய பயனுள்ள அறிக்கையைச் செய்ய வேண்டும்: “கர்த்தாவே, உம்முடைய வார்த்தையின் அடிப்படையில் நான் என் தீர்மானத்தைச் செய்கிறேன். மரணத்தையும் சாபங்களையும் நான் எதிர்க்கிறேன். ஜீவனையும் ஆசீர்வாதங்களையும் தெரிந்து கொள்கிறேன்” என்று கூறவேண்டும்.

இந்தத் தீர்மானத்தை நாம் செய்ததற்குப் பின்பு நம்முடைய வாழ்வில் உள்ள எந்த சாபங்களிலிருந்தும் விடுதலை பெறமுடியும். இதற்கு நாம் பின்பற்ற வேண்டிய படிகள் எவை? அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒரு குறிப்பிட்ட மாதிரி என்று ஒன்றுமில்லை. மக்களை விடுதலை பெற்றுக் கொள்ளும் நிலைக்குக் கொண்டு வருவதற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏழுபடிகளின் வழியாக அவர்களை நடத்துவது உதவியாக உள்ளது என நான் கண்டுள்ளேன்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 220 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இதைப்பின்பற்றினால் நீ பிறருக்கு உதவக்கூடும். பிறருக்கு ஆலோசனை அளிக்க நீ விருப்பங்கொண்டால் முழு பலனையும் பெற்றுக் கொள்வதற்கு நீ விடுதலை தேவைப்படுபவரின் இடத்திலே உன்னை வைத்துக் கற்பனை செய்து பார்க்கும்படியாக நான் விரும்புகிறேன். இப்படிச் செய்வதின் மூலம் உண்மையில் நீ அங்கிருப்பதாகவே கண்டுகொள்வாய்!

1. கிறிஸ்துவின் பேரிலும் அவர் உனக்காகச் செய்த தியாகத்தின் பேரிலும் உனக்குள்ள விசுவாசத்தை அறிக்கை செய்.

ரோமர் 10:9–10ல் பவுல் கிறிஸ்துவின் தியாகத்தினால் கிடைக்கக்கூடிய பலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு முக்கிய நிபந்தனைகள் உள்ளன என விளக்குகிறார்: முதலாவதாக தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடெழச் செய்தார் என்று இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும். பின்பு வாயினால் அவரை கர்த்தராக அறிக்கையிட வேண்டும். இருதயத்தில் இருக்கும் விசுவாசம் மட்டும் முழுப்பலனைத் தராது. அதை வாயினால் அறிக்கையிடும் பொழுதே அதன் பலனை நாம் பெற்றுக் கொள்கிறோம்.

அறிக்கையிடுதல் என்னும் சொல்லை சரியாகச் சொன்னால் “சொன்னபடியே சொல்தல்” எனலாம். வேதத்தின் விசுவாசத்தின் அடிப்படையில் அறிக்கை என்பது தேவன் தமது வசனத்தில் ஏற்கெனவே சொல்லியுள்ளதை நமது வாயினாலே மீண்டும் சொல்வதாகும். எபிரெயர் 3:1ல் இயேசு “நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியர்” என அழைக்கப்படுகிறார். அவரைப் பற்றிய வேதத்திற்கடுத்த சரியான அறிக்கையை நாம் செய்யும்போது நமக்காக அவர் ஆசாரிய ஊழியத்தை ஆற்றும்படி செய்கிறது.

கிறிஸ்துவின் தியாகத்தின் பலன்களைப் பெறும்படி நாம் நமது அறிக்கையைத் திட்டவட்டமானதாகவும், சொந்தமானதாகவும் செய்ய வேண்டும். உதாரணமாக:

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நீர் தேவனுடைய குமாரன் என்றும் தேவனிடம் செல்வதற்கு நீர் ஒருவரே வழி



Blessing or Curse Tamil text 2012 revised.p65 221 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்றும் விசுவாசிக்கிறேன்; என்னுடைய பாவங்களுக்காக நீர் சிலுவையில் மரித்து மரணத்தினின்று மீண்டும் உயிருடன் எழுந்தீர்.

2. உன்னுடைய முரட்டாட்டத்தையும் பாவங்களையும் குறித்து மனந்திரும்பு.

உன்னுடைய வாழ்வில் உள்ள சாபம் அநேக வெளிப்புற சக்திகளால்—கடந்த தலைமுறைகளில் இருந்து தொடரும் சக்திகளால் கூட—உண்டாகியிருக்கலாம். எனினும் உன் எல்லாப் பிரச்சனைகளுக்கான மூலகாரணம் உன்னிலேயே உள்ளது. அது (Avon) **அவான்** (அக்கிரமம்) என்னும் அந்த ஒரு வார்த்தையில் தொகுத்து கூறப்படுகிறது: அது தேவனுக்கு விரோதமாக உன்னுடைய முரட்டாட்ட எண்ணத்தையும் அதினால் விளைந்த பாவங்களையும் குறிக்கிறது. அதற்கு நீ சொந்த ரீதியில் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஆகையால் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் முன்பு நீ மனந்திரும்ப வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். நீ இந்தத் தீர்மானத்தை நிதானித்து சுயமாய் செய்யவேண்டும்: உன் முரட்டாட்டத்தை நிறுத்திவிட்டு, தேவன் உன்னிடத்தில் எதிர்பார்க்கும் அனைத்திற்கும் எந்த நிபந்தனையுமின்றி உன்னை ஒப்புக் கொடு. உண்மையாகவே மனந்திரும்பியவன் தேவனிடத்தில் வாதாடமாட்டான்!

மனந்திரும்புதலைக் கவனியாது செல்லும் விசுவாசத்திற்கு புதிய ஏற்பாடு இடம் தருகிறதில்லை. இயேசுவிற்கு முன்பு வழியை ஆயத்தம் பண்ண வந்த யோவான் ஸ்நானகன் தன் செய்தியில் கூறிய முதல் வார்த்தை "மனந்திரும்புங்கள் ...!" (மத்தேயு 3:2) என்பதாகும். பின்பு இயேசு தம் பொது ஊழியத்தை ஆரம்பித்தபோது, யோவான் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்கிறார்: "மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:15) என்கிறார். மனந்திரும்புதல் இல்லாமல் வல்லமையான விசுவாசத்திற்கு வழியில்லை. அநேக கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதல் என்னும் இந்த முதல் நிபந்தனையை நிறைவேற்றாததினால் விசுவாசத்திற்காய் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதன் காரணமாக அவர்கள் கிறிஸ்துவின் தியாகத்தின் முழுப் பலனையும் பெற்றுக்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 222 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கொள்வதில்லை.*

*தேவன் எதிர்பார்க்கும் மனந்திரும்புதலை வெளிப் படுத்துவதற்கான அறிக்கை இங்கே கொடுக்கப் பட்டுள்ளது: நான் என் எல்லா பாவங்களையும், என் எல்லா முரட்டாட்டத்தையும் விட்டு விடுகிறேன். உம்மை என் கர்த்தராக ஏற்றுக் கொண்டு உமக்கு என்னை ஒப்புக் கொடுக்கிறேன்.*

### *3. எல்லா பாவங்களுக்கும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்.*

*நம்முடைய வாழ்க்கையிலிருந்து தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தடுத்து நிறுத்தும் பெருந்தடை **மன்னிக்கப்படாத பாவமாகும்**. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு தேவன் ஏற்கெனவே வழியை வகுத்து விட்டார். ஆனால் நாம் அவற்றை அறிக்கை இடாவிட்டால் அவர் நமக்கு மன்னிப்பை வழங்கமாட்டார். "**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்**, பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9). தேவன் தமது வாக்கை நமக்கு அளித்துள்ளதினாலே நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு அவர் **உண்மை உள்ளவராயிருக்கிறார்**. அவருடைய வாக்குத்தத்தங்களை அவர் எப்பொழுதும் காப்பாற்றுகின்றார். நமது பாவங்களுக்கான முழு தண்டனையையும் இயேசு ஏற்கெனவே ஏற்றுக் கொண்டதினால் அவர் **நீதியுள்ளவராயும்** இருக்கிறார்.*

*ஒரு வேளை உன்னை ஒரு சாபத்திற்கு இலக்காக்கிய குறிப்பிட்ட பாவங்களை தேவன் உனக்கு வெளிப்படுத்தி இருக்கலாம். அப்படியானால் அந்தப் பாவங்களைக் குறிப்பாக அறிக்கையிடு.*

*உன் முன்னோர்கள் செய்த பாவங்களினாலும்— முக்கியமாக விக்கிரக ஆராதனை, மாந்திரீகம் போன்ற பாவங்களினால் உன்மேல் ஒரு சாபம் வந்திருக்கக்கூடும். உன்னுடைய முன்னோர்கள் செய்த பாவங்களின் குற்ற உணர்விற்கு நீ பொறுப்பாளி இல்லை. ஆனால் அவர்கள்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 223 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*செய்த பாவங்களின் விளைவினால் நீ பலவிதங்களில் பாதிக்கப்படக்கூடும். இவ்வாறு நீ உணருவாயாயின் அந்த விளைவுகளிலிருந்து விடுபடவும் தேவனிடத்தில் வேண்டிக்கொள்.*

*இதைக்குறித்த ஏற்ற ஜெபத்தைக் கீழே தருகிறேன்:*

*என் பாவங்கள் அனைத்தையும் உமக்கு முன்பாக அறிக்கையிட்டு அவைகளுக்காக உம்முடைய மன்னிப்பைக் கோருகிறேன்—முக்கியமாக என்னை சாபத்திற்குட்படுத்திய பாவங்களுக்காக ஜெபிக்கிறேன். என் முன்னோர்களின் பாவங்களின் விளைவுகளிலிருந்தும் என்னை விடுவித்தருளும்.*

### 4. *உனக்குத் தீங்கு இழைத்த அல்லது உன்னைத் தவறாய் நடத்திய அனைவரையும் மன்னி.*

*நம்முடைய வாழ்க்கையிலிருந்து தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தடுத்து நிறுத்தும் மற்றொரு பெரிய தடை இருதயத்தில் பிறரை நாம் மன்னியாதிருப்பதாகும். மாற்கு* 11:25*ல் நம்முடைய ஜெபங்களுக்கு தேவன் பதிலளிக்க நாம் எதிர்பார்ப்போமாயின் இதைச் சரிசெய்ய வேண்டும் என்று இயேசு தமது விரலைச் சுட்டிக் காட்டுகிறார்:*

> "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும் போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்."

*இதே தத்துவம் புதிய ஏற்பாடு முழுவதிலும் காணப்படுகிறது. தேவன் நம்மை மன்னிக்க வேண்டுமாயின் நாம் பிறரை மன்னிக்க ஆயத்தமாய் இருக்கவேண்டும்.*

*முதலாவது, ஒரு நபரை மன்னிப்பது என்பது ஓர் உணர்ச்சிக்கடுத்த காரியமன்று; அது ஒரு தீர்மானம். இதனை நான் அடிக்கடி ஒரு சிறிய "உவமையுடன்" விளக்குவதுண்டு. உன் கரத்தில் ஒருவன் உனக்கு மொத்தம்* 10,000 *ரூபாய் கடன்பட்டுள்ளதற்கான கடன் பத்திரங்கள் உள்ளன என*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 224 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*வைத்துக்கொள். ஆனால், பரலோகத்தில் தேவன் தமது கரத்தில் நீ அவருக்கு மொத்தம் 10,000,000 ரூபாய் கடன்பட்டுள்ளதற்கான கடன்பத்திரங்களை வைத்திருக்கிறார். தேவன் உனக்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறார்: "உன் கரத்திலுள்ள அவனுடைய கடன் பத்திரங்களை நீ கிழித்துப் போடுவாயானால், என் கரத்திலுள்ள உன் கடன் பத்திரங்களை நான் கிழித்துப் போடுவேன். அவ்விதமின்றி அவன் கடன் பத்திரங்களை நீ கிழித்துப் போடாதிருப்பாயானால், என் கரத்திலுள்ள உன் கடன் பத்திரங்களை நானும் கிழித்துப் போடுவதில்லை!"*

*இந்த நிலையில் பார்க்கும் போது பிறரை மன்னிப்பது என்பது ஒரு மிகப்பெரிய தியாக செயலன்று. அது வெறும் தன்னலம் கருதிய செயலே. தன்னுடைய சொந்த கடன் 10,000,000 ரூபாயை நீக்குவதற்கு பிறருடைய 10,000 ரூபாய் கடனை மன்னித்து விட மனதற்றவன் வியாபார ரீதியிலே இழப்பை அடைவான்.*

*இப்பொழுது நீ மன்னிக்க வேண்டிய சில நபரையோ, நபர்களையோ தேவன் உன் சிந்தனைக்குக் கொண்டு வரலாம். அப்படியானால் பரிசுத்த ஆவியானவரின் உதவியை நோக்கிப்பார். நீ சரியான தீர்மானம் எடுக்க அவர் வழிநடத்துவார். ஆனால் அவர் உனக்காக அந்தத் தீர்மானத்தைச் செய்யமாட்டார். அவருடைய ஏவுதலை நீ உணரும்போது அதற்குக் கீழ்ப்படி. மன்னிக்க வேண்டும் என்ற திட்டமான தீர்மானத்தைச் செய். பின்பு உன்னுடைய தீர்மானத்தை வாய்மொழியாகக் கூறு. "கர்த்தாவே, நான் ... (சம்பந்தப்பட்ட நபரின் அல்லது நபர்களின் பெயரைக் கூறு) ஆகிய இவர்களை மன்னிக்கிறேன்" என சத்தமாகக் கூறு. யாருடைய பெயரைச் சொல்வதற்கு நீ அதிகக் கஷ்டப்படுகிறாயோ அவர்களைத் தான் நீ அதிகம் மன்னிக்க வேண்டும்! நீ பயன்படுத்தக்கூடிய சில எளிய வார்த்தைகளைக் கீழே தருகிறேன்:*

*என்னுடைய சித்தத்தின் அடிப்படையில் செய்த தீர்மானத்தினால் எனக்குத் தீங்கிழைத்தவர்கள் அல்லது என்னைத் தவறாய் வழி நடத்தியவர்கள் அனைவரையும் நான் மன்னிக்கிறேன்—என்னை தேவன் மன்னிக்க வேண்டும் என நான் விரும்புவது போல நான் அவர்களை மன்னிக்கிறேன்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 225 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*முக்கியமாக … (அந்த நபரின் அல்லது நபர்களின் பெயரைக் கூறு) இவர்களை நான் மன்னிக்கிறேன்.*

## ௫. *மாந்திரீகத்துடனான அல்லது சாத்தானுடனான எல்லா ஈடுபாட்டையும் ஒதுக்கித் தள்ளிவிடு.*

உண்மையான விடுதலையின் ஜெபத்திற்கு நீ வருவதற்கு முன்பு மேலும் ஒரு முக்கியமான காரியம் சரிசெய்யப்பட வேண்டும்: அது மாந்திரீகத்துடனான அல்லது சாத்தானுடனான எல்லாத் தொடர்பையும் விட்டுவிடுவதாகும். இதனால் பல பழக்கங்களையும், செயல்பாடுகளையும் நீ விட வேண்டியது வரும். சற்று நேரத்திற்கு நீ 6 ஆம் அத்தியாயத்தில் 73 முதல் 76 வரையுள்ள பகுதியைப் பார்க்குமாறு கேட்கிறேன். அங்கே இவற்றைப் பற்றிய சில காரியங்கள் பட்டியலாகத் தரப்பட்டுள்ளன. இந்தப்பட்டியலைத் தவிர வேறு பல காரியங்களும் உள்ளன. இந்தப் பட்டியலில் சொல்லப்படாத ஒரு பகுதியைக் குறித்து உனக்குத் தெளிவு இல்லையாயின், தேவனிடத்தில் அதைத் தெளிவுபடுத்தும்படி கேள்.

இவ்விதமான பழக்கங்களிலோ காரியங்களிலோ எப்பொழுதாவது நீ ஈடுபட்டிருப்பாயாயின் காணப்படாத ஒரு எல்லையைக் கடந்து சாத்தானின் அரசுக்குள் சென்று விட்டாய். உனக்குத் தெரிந்திருந்தாலும், தெரியாவிட்டாலும் அந்த வேளையிலிருந்து சாத்தான் உன்னைத் தனக்குக் கீழ்ப்பட்டவனாகவே கருதுகிறான். உன் மேல் சட்டரீதியில் அவனுக்கு அதிகாரம் உள்ளது என்று அவன் எண்ணுகிறான். தேவனுடைய அரசும் சாத்தானுடைய அரசும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டதாய் இருப்பதினால், நீ சாத்தானுடனான முழு தொடர்பையும் என்றென்றைக்கும் துண்டித்து, அவன் உன் மேல் உரிமை பாராட்டுவதை முற்றிலும் நீக்கி விடுவாயானால் மட்டுமே, தேவனுடைய அரசில் ஒரு குடிமகனாக அதற்குரிய முழு உரிமைகளையும், பலன்களையும் நீ அனுபவிக்க முடியும்.

2 கொரிந்தியர் 6:14–15 ல் பவுல் சாத்தானுடைய அரசிலிருந்து முற்றிலும் வெளிவருவதின் அவசியத்தை வலியுறுத்தி கூறுகிறார்: "… ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் (அதாவது சாத்தானுக்கும்) இசைவேது? …" என்கிறார். 17 ஆம் வசனத்தில் கர்த்தர் கூறும் கட்டளையை





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நேரிடையாகக் கூறுகிறார்:*

> "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

*இவ்வாறு உன்னைத் துண்டிக்கும் போது, "தொடர்பு பொருட்கள்" —அதாவது சாத்தானுடன் உன்னை இணைக்கும் பொருட்கள்—ஏதாவது இருக்குமாயின் அவற்றையும் நீ நீக்கிவிட வேண்டும். இது பலவிதமான பொருட்களாய் இருக்கக்கூடும். என் வாழ்வில் நான் 2 ஆம் அத்தியாயத்தில் சொல்லியபடி அவைகள் நான் சுதந்தரித்த சீன நாட்டு வலுசர்ப்பத்தின் தையல்வேலைப்பாடாகும். உன்னுடைய சூழ்நிலையில் இது எவ்வாறு பொருந்தும் என உனக்கு சந்தேகம் இருக்குமாயின், தேவனுக்கு விரோதமாய் உள்ள காரியங்கள் என்ன என்பதை அவர் சுட்டிக்காட்டும்படி அவரிடத்தில் கேள். பின்பு அதை மிக சிறப்பான முறையில் உன்னைவிட்டு அப்புறப்படுத்தி விடு: அதை எரித்துப் போடு அல்லது நொறுக்கிப் போடு அல்லது தண்ணீரின் ஆழத்தில் எறிந்து விடு அல்லது வேறு ஏதாவது வழியில் அழித்துவிடு!*

*சாத்தானிடமிருந்தும் அவனுடைய அரசிலிருந்தும் நீ முற்றிலும் இந்தத் துண்டிப்பைச் செய்ய ஆயத்தமாய் இருப்பாயாயின் அதை உறுதிப்படுத்துவதற்குத் தகுந்த இந்த அறிக்கையைச் செய்:*

> "மாந்திரீகத்துடனான அல்லது சாத்தானுடனான எல்லா ஈடுபாட்டையும் நான் உதறித் தள்ளுகிறேன்—நான் ஏதாவது "தொடர்பு பொருட்களை" வைத்திருந்தால் அவைகளை அழிப்பதற்குத் தீர்மானிக்கிறேன். சாத்தான் என்மேல் உரிமை பாராட்டுவதை முற்றிலும் ரத்து செய்கிறேன்" என்று கூறு.

6. ***இப்பொழுது எந்த சாபமானாலும் அதிலிருந்து விடுபடுவதற்கான ஜெபத்தைச் செய்வதற்கு நீ ஆயத்தமுள்ளவனாய் இருக்கிறாய்.***

*மேற்கூறிய ஐந்து படிகளையும் கைக்கொள்ள நீ முற்படுவாயாயின் உன் வாழ்வில் உண்டாகக்கூடிய எந்த*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 227 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சாபத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்கான உண்மையான ஜெபத்தை ஜெபிக்கக்கூடிய நிலையில் நீ இப்பொழுது இருக்கிறாய். ஆனால் தேவன் தமது இரக்கத்தை ஒரே ஒரு அடிப்படையின் பேரில் தருகிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்: அது இயேசு சிலுவையில் மரித்த பொழுது ஏற்பட்ட பரிமாற்றம் ஆகும். அந்தப் பரிமாற்றத்தில் ஒவ்வொரு சாபத்திலிருந்தும் விடுபடுவதற்கான வழி உள்ளது. இயேசு சிலுவையில் தொங்கினதின் மூலம் உன்மேல் வரக்கூடிய எல்லாவித சாபத்திற்கும் அவர் சாபமானார். நீ ஒவ்வொரு சாபத்திலிருந்தும் விடுபட்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் நிலைக்கு வருவதற்காகவே அவர் அவ்வாறு செய்தார்.

இயேசு சிலுவையின் மேல் தாம் செய்த தியாகத்தின் மூலம் உனக்காக அவர் எதைச் சம்பாதித்துள்ளாரோ அதன் மீது மட்டும் உனது விசுவாசம் சார்ந்திருக்க வேண்டும் என்பது முக்கியம். நீ உன் விடுதலையை "சம்பாதிக்க" வேண்டியதில்லை. அதற்கு நீ "தகுதியாய்" இருக்கத் தேவையில்லை. இந்த வித எண்ணங்களுடன் நீ தேவனிடம் வருவாயாயின் உன் விசுவாசத்திற்குத் திடமான அடித்தளம் இல்லாமற் போகிறது. நமக்குள்ள நற்பண்புகளைச் சார்ந்திராமல் இயேசு நமக்காக என்ன செய்துள்ளார் என்பதின் அடிப்படையில் மட்டுமே தேவன் நமக்கு பதிலளிக்கிறார்.

இந்த விசுவாச அடிப்படையில் நீ ஜெபம் செய்வாய் என்றால், உன்னுடைய ஜெபத்தில் வெறும் விண்ணப்பத்துடன் மட்டும் நிறுத்திவிடாமல் உண்மையாய் பெற்றுக் கொள்ளுதலும் அதில் இருக்க வேண்டும். மாற்கு 11:24ல் இயேசு இதை ஒரு குறிப்பிட்ட மூலக்கோட்பாடாகக் கூறியுள்ளார்: "ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்" என்கிறார்.

இந்த வகையான ஜெபத்தில் காரணமும், காரியமும் என்று இரண்டு தெளிவான படிகள் உள்ளன: அவைகள் பெற்றுக் கொள்ளுதலும், உடையவனாய் இருத்தலும் ஆகும். பெற்றுக் கொள்வது என்பது காரணம். அதைத் தொடர்ந்து உடையவனாய்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 228 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இருத்தல் என்பது காரியமாய் இருக்கிறது. பெற்றுக் கொள்வது என்பது கடந்த காலத்திற்குரியது; உடையவனாய் இருத்தல் என்பது வருங்காலத்திற்குரியது. நாம் ஜெபிக்கும் பொழுது பெற்றுக் கொள்கிறோம். பின்பு அதைத் தொடர்ந்து தேவனுடைய வல்லமையினால் தீர்மானிக்கப்பட்ட நேரத்திலும் வழியிலும் அதை உடையவர்களாய் இருக்கிறோம். ஆனால் இங்கு இயேசு வலியுறுத்தும் கருத்து இதுதான்: ஜெபிக்கும் வேளையில் நாம் பெற்றுக் கொள்ளவில்லையானால் நாம் உடையவர்களாய் இருப்போம் என்ற நிச்சயம் நமக்கு இராது.

அதற்கு ஏற்ற ஒரு ஜெபத்தை இங்கு தருகிறேன். முதலாவது இந்த ஜெபத்தைப் படித்துப்பார், பின்பு ஆலோசனைகளையும் கற்றுக் கொள்.

கர்த்தராகிய இயேசுவே, என் மேல் வரக்கூடிய எல்லா சாபங்களையும் சிலுவையில் நீர் உம்மேல் சுமந்து தீர்த்தீர் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே! உமது நாமத்தில் என் வாழ்வில் உள்ள எல்லா சாபங்களிலிருந்தும் நீர் என்னை விடுவிக்கும்படி வேண்டுகிறேன்!

விசுவாசத்தின் மூலம் என் விடுதலையை இப்பொழுது பெற்றுக் கொள்கிறேன். அதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

நிற்க! விடுதலைக்கான இந்த விண்ணப்பத்தைச் செய்வதற்கு முன்பு நீ ஏற்கெனவே செய்த முந்திய ஐந்து அறிக்கைகள் ஒவ்வொன்றையும் மீண்டும் உறுதிப்படுத்துவது நலம். அதை நீ எளிதாகச் செய்வதற்கு வேறு எந்த குறிப்புகளும் விளக்கமும் இன்றி, அந்த அறிக்கைகளை மட்டும் கீழே தந்திருக்கிறேன்.

அவைகளில் உன் கவனத்தைப் பதித்தவனாய் சத்தமாகவும் மெதுவாகவும் அர்த்தம் உணர்ந்து அதை வாசி. எந்தப் பகுதியைக் குறித்தாவது உனக்கு நிச்சயம் இல்லையாயின், மீண்டும் அப்பகுதிக்குச் சென்று அதை மறுபடியும் வாசி. நீ சொல்லும் வார்த்தைகளை உணர்ந்து சொல். அவைகளை முழுவதும் வாசித்து முடித்ததும் நீ பேசிய வார்த்தைகளினால் உன்னை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 229 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தேவனிடம் கொண்டுவந்துள்ளாய் என்பதை உணர்வாய். பின்பு மறுபடியும் கொடுக்கப்பட்டுள்ள அந்த விடுதலையின் விண்ணப்பத்திற்குச் செல்லலாம்.

முழுமையான ஜெபம் கீழே தரப்பட்டுள்ளது:

“கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் தேவனுடைய குமாரன் என்றும் தேவனிடம் செல்வதற்கு நீர் ஒருவரே வழி என்றும் விசுவாசிக்கிறேன்; என்னுடைய பாவங்களுக்காக நீர் சிலுவையில் மரித்து மரணத்தினின்று மீண்டும் உயிருடன் எழுந்தீர்.

நான் என் எல்லா பாவங்களையும், என் எல்லா முரட்டாட்டத்தையும் விட்டு விடுகிறேன். உம்மைக் கர்த்தராக ஏற்றுக் கொண்டு, என்னை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.

என் பாவங்கள் அனைத்தையும்—முக்கியமாக என்னை சாபத்திற்குட்படுத்திய பாவங்களை உமக்கு முன்பாக அறிக்கையிட்டு உம்முடைய மன்னிப்பைக் கோருகிறேன். என் முன்னோர்களின் பாவங்களின் விளைவுகளிலிருந்தும் என்னை விடுவித்தருளும்.

என்னுடைய சித்தத்தின் அடிப்படையில் செய்த தீர்மானத்தினால் எனக்குத் தீங்கிழைத்தவர்கள் அல்லது என்னைத் தவறாய் வழி நடத்தியவர்கள் அனைவரையும் நான் மன்னிக்கிறேன்—என்னை தேவன் மன்னிக்க வேண்டும் என நான் விரும்புவது போல, நான் அவர்களை மன்னிக்கிறேன். முக்கியமாக . . . இவர்களை நான் மன்னிக்கிறேன்.

மாந்திரீகத்துடனான அல்லது சாத்தானுடனான எல்லா ஈடுபாட்டையும் நான் உதறித் தள்ளுகிறேன்—நான் ஏதாவது “தொடர்பு பொருட்களை” வைத்திருந்தால் அவைகளை அழிப்பதற்குத் தீர்மானிக்கிறேன். சாத்தான் என்மேல் உரிமை பாராட்டுவதை நான் ரத்து செய்கிறேன்.

“கர்த்தராகிய இயேசுவே, என் மேல் வரக்கூடிய எல்லா சாபங்களையும் சிலுவையில் நீர் உம்மேல் சுமந்து தீர்த்தீர் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆகவே கர்த்தராகிய இயேசு



Blessing or Curse Tamil text 2012 revised.p65 230 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கிறிஸ்துவே! உமது நாமத்தில் என் வாழ்வில் உள்ள எல்லா சாபங்களிலிருந்தும் நீர் என்னை விடுவிக்கும்படி வேண்டுகிறேன்!

விசுவாசத்தின் மூலம் என் விடுதலையை இப்பொழுது பெற்றுக் கொள்கிறேன். அதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்." என்று ஜெபி.

"உமக்கு நன்றி" என்று சொல்வதை ஓரிரு தடவை மட்டும் சொல்லி நிறுத்தி விடாதே. நீ உனக்காக தேவனிடத்தில் எதைச் செய்யும்படி கேட்டுக் கொண்டாயோ அதில் சிறிதளவு கூட உன் மனதினால் புரிந்து கொள்ளமுடியாது. ஆனால் உன் இருதயத்தின் மூலம் தேவனுக்குக் கீழ்ப்படி! பல ஆண்டுகளாக உனக்குள்ளாய் தேங்கிக்கிடக்கும் காயங்களையும், அழுத்தங்களையும், தடைக்கட்டுகளையும் நீக்கும் நேரம் இதுவாக இருக்கக்கூடும். உன் இதயத்திலிருந்து ஓர் அணை உடைந்ததுபோல கண்ணீர் வரமுற்படுமானால் அதைத் தடுத்து நிறுத்த முற்படாதே.

குழப்பமோ, சுயநினைவோ உன்னைத் தேங்கச் செய்து விடாது பார்த்துக் கொள்! உனக்குள்ளே நீ அடக்கி வைத்திருந்த காரியங்கள் அனைத்தையும் தேவன் அறிவார். அதைக் குறித்து அவர் சற்றும் கிலேசமடைவதில்லை. அப்படியிருக்கும் பொழுது உன்னைப் பற்றி நீ ஏன் கலக்கமடைய வேண்டும்? நீ அவரை உண்மையில் எவ்வளவாய் நேசிக்கிறாய் என்பதை தேவனிடத்தில் சொல். நீ உன் அன்பை அதிகம் வெளியிடும் போது அது உன்னைப் பொறுத்தமட்டில் மெய்யாய் செயல்படும்.

தேவனிடத்தில் வருவதற்கு ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய ஒரு குறிப்பிட்ட மாதிரி என்று ஒன்றுமில்லை. இந்த வழியில் தான் விடுதலையானது வரும் என்பதற்கான திறவுகோல் இல்லை. விசுவாசத்தைப் பல வழிகளில் வெளிப்படுத்தக்கூடும். தேவனிடத்தில் நீ உள்ளவாறே நடந்து கொள். ஒரு மலரானது சூரியனுக்கு முன் மலர்வது போல உன்னை முற்றிலும் தேவனுடைய அன்பிற்குத் திறந்து கொடு.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 231 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

### 7. இப்பொழுது நீ பெற்றுக் கொண்டாய் என்று விசுவாசித்து தேவனுடைய ஆசீர்வாதத்திற்குள் கடந்து செல்!

இந்த நேரத்தில் அந்த ஆசீர்வாதம் எந்த வடிவில் இருக்கும் என்றோ தேவன் அதை உனக்கு எப்படிக் கொடுப்பார் என்றோ ஆராய முற்படாதே. அதை தேவனுடைய கரத்திலே விட்டுவிடு. அவர் விரும்புகிற வண்ணமாக ஏற்ற நேரத்தில் அதை அவர் செய்யட்டும். அதைக் குறித்து நீ கவலைப்படத் தேவையில்லை. உன் பங்கு என்னவென்றால் தேவன் தமது ஆசீர்வாதத்தின் மூலமாக உன்னிலும் உனக்காகவும் செய்ய விரும்புகிற அனைத்திற்கும் நீ எந்தவித நிபந்தனையுமின்றி உன்னை ஒப்புக் கொடுப்பதேயாகும்.

தேவன் "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார்" (எபேசியர் 3:20) என்பதை நினைவிற் கொள். ஆகவே நீ நினைப்பதை மட்டும் தேவன் செய்வார் என அவரைக் கட்டுப்படுத்தாதே.

நீ பயன்படுத்தக்கூடிய எளிய வார்த்தைகளை இங்கு தருகிறேன்:

கர்த்தாவே, உமது ஆசீர்வாதத்தை நீர் எந்த விதத்தில் கொடுக்க விரும்புகிறீரோ அப்படியே அதை நான் பெற்றுக் கொள்ளும்படி என்னை விட்டுக் கொடுக்கிறேன்.

தேவன் இதைக் கேட்டு உனக்குப் பதிலளிப்பதைக் கண்டு நீ அதிசயிப்பாய்!



Blessing or Curse Tamil text 2012 revised.p65 232 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 19

# நிழல்களிலிருந்து சூரிய ஒளிக்குள்

*கடந்த அத்தியாயத்தின் அறிவுரைகளைப் பின்பற்றி இருப்பாயென்றால், நீ கண்ணிற்குப் புலப்படாத ஒரு தடையைக் கடந்து விட்டாய்; இப்பொழுது உனக்குப் பின்புறம் பல்வேறு இடங்களிலிருந்து வரும் பலவிதமான சாபங்களால் சூழப்பட்ட ஒரு பரவலான பகுதி உள்ளது. உனக்கு முன்னால் தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்னும் சூரியப் பிரகாசமான ஒரு பகுதி உள்ளது. நீ மேலும் முன்னேறிச் செல்வதற்கு முன்பு உபாகமம் 28:2–14 வரையுள்ள வசனங்களில் மோசே அளித்த பட்டியலின் தொகுப்பிற்கு உன் கவனத்தை மீண்டும் செலுத்து:*

| | |
|---|---|
| *மேன்மை* | *செழுமை* |
| *ஆரோக்கியம்* | *வெற்றி* |
| *கனிதருதல்* | *தேவ தயவு* |

*இவைகள் அனைத்தும் கிறிஸ்துவில் உனக்கு நியமிக்கப்பட்ட சுதந்திரத்தின் பகுதிகளாகும். இவைகளை நீ முன்னேறிச் சென்று சுதந்தரித்துக் கொள்ள வேண்டும்.*

*மேற்கூறிய முக்கியமான வார்த்தைகளை உரத்தகுரலில் பல முறைகள் அறிக்கையிடுவது நல்லது. அநேக வேளைகளில் சாபத்தின் கீழ் வாழும் ஒரு மனிதனுக்கு அதன் மறுதலையான ஆசீர்வாதங்களை அனுபவிப்பது எவ்வாறு இருக்கும் என்பதை அவனுடைய மனதினால் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது. உன்னுடைய புதிய சுதந்திரத்தை தேவன் உனக்கு மெய்யாகவும் தெளிவாகவும் காட்டும்படி கேள். இவ்வார்த்தைகளை—அவைகள் உனக்குச் சொந்தம் என நீ உணர்ந்து கொள்ளும் மட்டும்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 233 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அடிக்கடி—ஒரு நாளைக்கு அநேகம் தடவைகள் கூட சொல்லிக்கொண்டிரு!

அவைகளை நீ தொடர்ந்து சொல்லும் போது, சற்று நிறுத்தி அவைகள் ஒவ்வொன்றும் இப்பொழுது உனக்குச் சொந்தமானது என்பதால் தேவனுக்கு நன்றி செலுத்து. நன்றி செலுத்துவதே விசுவாசத்தைத் தெரிவிக்கும் எளிய களங்கமற்ற முறை என்பதை மறவாதே. உன் வாழ்வின் மேல் உள்ள ஒரு சாபத்துடன் நீ நீண்ட நாட்கள் போராடியிருப்பாயாயின், உன் மனதில் இருள் நீக்கப்படாத சில பகுதிகள் இருக்கலாம். ஆசீர்வாதத்தைக் குறிக்கும் இந்தப் பயனுள்ள வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்வது, ஓர் இருண்ட பள்ளத்தாக்கில் சூரிய ஒளியின் முதல் கிரணங்களைக் காண்பது போல் உள்ளது. பின்பு அந்தக் கிரணங்கள் பள்ளத்தாக்கு முழுவதும் பிரகாசமடையும்படிச் செய்து பரவுகிறது.

இருண்ட பகுதியிலிருந்து சூரிய ஒளி நிறைந்த பகுதிக்குச் செல்வது பல வழிகளில் நேரிடலாம். எல்லாருக்கும் பொருந்தக் கூடிய ஒரு சிறந்த மாதிரி என்று ஒன்றில்லை. சில மக்கள் உடனடியாக விடுதலையை அனுபவித்து வேதம் வாக்களிக்கும் ஆசீர்வாதங்களுக்குள் நேராக வருகின்றனர். மற்றவர்களுக்கு அவர்கள் அதேபோல் உண்மையுள்ளவர்களாய் இருந்தும், இது நீண்ட கடுமையான போராட்டத்திற்குப் பின்பே வருகிறது. மாந்திரீகத்தில் மிக ஆழமாய் ஈடுபட்ட மக்களுக்கு அதிலிருந்து விடுதலையடைவது கடும் முயற்சியாய் உள்ளது. சாத்தான் அவர்களைத் தனது சட்டப்பூர்வமான இரையாகக் கருதி அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதில் உறுதியாய் உள்ளான். அவர்களைப் பொறுத்தமட்டில் இயேசுவின் தியாகத்தின் மூலம் அவர்களுக்கென்று சம்பாதிக்கப்பட்ட விடுதலையை சுதந்தரிப்பதில் அவர்கள் சாத்தானை விட அதிக உறுதியாய் இருக்க வேண்டும்.

மேலும் சாத்தான் தன்னுடைய தாக்குதலிலிருந்து தப்பிச் செல்பவர்களுக்கு, தேவன் எதை ஆயத்தம் செய்து வைத்துள்ளார் என்பதைக் குறித்து ஓரளவு அறிந்து வைத்திருக்கிறான். ஒருவனுக்கு அதிகமான ஆசீர்வாதங்கள் காத்திருக்கிறதென்றால் அவைகளை, பெறாதபடி சாத்தான் அவனை விடாது பிடித்து வைத்துக் கொள்வதில் உறுதியாய் இருக்கிறான். இக்கண்ணோட்டத்தில் காணும் பொழுது நமக்கு முன்பாக





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*ஆசீர்வாதங்களின் நிழல்கள் இருப்பதால், நம்முடைய போராட்டங்களில் நாம் உண்மையில் உற்சாகமாய் இருக்கமுடியும்.*

*இந்தக் காரியங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனுடைய வல்லமையை நாம் சந்திக்கின்றோம். தேவனுடைய கண்ணோட்டம் நம்முடைய கண்ணோட்டத்தைவிட மாறுபட்டது. ஒரு சூழ்நிலையில் நமக்குத் தெரியாத குறிப்புகளையும் அவர் கருத்தில் கொள்கிறார். அவர் தம்முடைய வாக்குத்தத்தங்களை எப்பொழுதும் காத்துக் கொள்பவராக இருப்பினும், பெரும்பாலான வேளைகளில் அவர் இரண்டு காரியங்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவதில்லை. அவைகள்: ஒவ்வொருவருடைய வாழ்விலும் அவர் செயல்பட இருக்கும் திட்டமான வழியும், சரியான நேரமும் ஆகும். தேவன் தமது வாக்குத்தத்தங்களை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று யாரும் அவருக்கு உத்தரவிட முடியாது. நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் தேவன் தமக்குச் சரியெனத் தோன்றுகிற முறையில் ஏற்ற காலத்தில் செயல்படுவார் என்பதில் அசையாத, நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.*

*கலாத்தியர் 3:13–14ல் பவுல் விளக்கியுள்ள பரிமாற்றத்தின் நற்பலனை நாம் மீண்டும் காணமுற்பட வேண்டும்:*

> "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.
>
> ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று."

*வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தைப் பற்றிய மூன்று முக்கிய உண்மைகளை பவுல் குறிப்பிடுகிறார்:*

*முதலாவது அது தெளிவற்ற, வரையறுக்கப்படாத ஏதோ ஒன்று அல்ல. அது மிக திட்டமானதே: **ஆபிரகாமின் ஆசீர்வாதம்.** ஆதியாகமம் 24:1ல் அது இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது: "கர்த்தர்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 235 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார்.”* *தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமின் வாழ்வில் அனைத்துப் பகுதிகளிலும் காணப்பட்டது. அவருடைய நிபந்தனைகளை நிறைவேற்றக்கூடிய ஒவ்வொருவருக்கும் அதற்கேற்ற ஆசீர்வாதங்களை அவர் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார்.*

*இரண்டாவதாக, ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவிலிருந்து மட்டுமே வருகிறது. அதை நம்முடைய நற்குணங்களினால் சம்பாதிக்க இயலாது. இயேசு கிறிஸ்து மூலமாக தேவனிடம் கொள்ளும் உறவின் அடிப்படையில் மாத்திரமே இது நமக்கு வழங்கப்படுகிறது. நமது வாழ்க்கையில் ஆசீர்வாதம் கடந்து வர வேறொரு வழியில்லை. கிறிஸ்துவுடன் நாம் கொள்ளும் உறவு அவிசுவாசத்தினாலோ அல்லது கீழ்ப்படியாமையினாலோ முறிவுபடும் பொழுது ஆசீர்வாதம் கடந்து வருவது நின்றுவிடும். ஆனால் உண்மையான மனந்திரும்புதலின் மூலம் அது உடனே சரி செய்யப்படக்கூடும் என்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்*!

*மூன்றாவதாக, ஆசீர்வாதம்—*“(*பரிசுத்த*) *ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தம்*” *என்று மேலும் குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது. இதைக் குறித்து இயேசு நமக்கு யோவான்* 16:13–15*ல் இவ்வாறு கூறுகிறார்*:

> “சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்... அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.”

*இவை அற்புதமும் ஆறுதலுமான வார்த்தைகள் அல்லவா? தேவத்துவத்தில் மூவரும்—பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும்—தங்களின் நோக்கத்தில் இணைந்து இயேசுவின் தியாக மரணத்தின் மூலம் நமக்காகச் சம்பாதிக்கப்பட்ட அனைத்தையும் குறித்து நம்மிடம் பகிர்ந்து கொள்கின்றனர். இது நமது இயல்பான மனதால் புரிந்து கொள்ளமுடியாதது. நமக்கு ஆயத்தப்படுத்தப்பட்டவற்றைப் பெற்றுக்கொள்ளும் வழியைக் காட்டவும், நமது முழு உரிமைகளுக்கு நம்மை நடத்திச் செல்லவும்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 236 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நாம் ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும்.

ரோமர் 8:14ல் பவுல் பரிசுத்த ஆவியானவரின் ஒப்பற்ற பணியை மீண்டும் வலியுறுத்துகிறார்: "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" என்கிறார். பவுல் இங்கு "எவர்கள் தேவனுடைய ஆவியினால் தொடர்ந்து நடத்தப் படுகிறார்களோ" என்று தொடர்ச்சியான நிகழ்காலத்தைப் பயன்படுத்துவதில் கவனமாய் இருக்கிறார். "பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவது" என்பது ஒரே ஒரு முறை நடைபெற்று முடிகின்ற அனுபவம் அன்று; இது நாம் ஒவ்வொரு நொடிப் பொழுதும் சார்ந்திருக்க வேண்டிய ஓர் அனுபவம். இதுவே ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு ஒரே வழி. இதன் மூலம் நாம் சிறு குழந்தை நிலையிலிருந்து பூரண வளர்ச்சியடைந்த தேவனுடைய புத்திரர்களாகிறோம்.

துரதிர்ஷ்டவசமாக, அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலையும், ஐக்கியத்தையும் முழுமையாய் அனுபவிக்காததற்கு ஓர் அடிப்படைக் காரணம்: அவர்கள் ஆவியானவரை ஒரு நபராக உணராதிருப்பதே. "கர்த்தரே ஆவியானவர்" (2 கொரிந்தியர் 3:17). பிதாவாகிய தேவன் கர்த்தராயிருப்பது போல குமாரனாகிய தேவனும் கர்த்தராயிருப்பது போல ஆவியானவரும் கர்த்தராய் இருக்கிறார். அவர் அறிய முடியாத இறையியல் கொள்கையோ, சட்ட திட்டங்களின் தொகுப்போ, அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின் கடைசியில் உள்ள அரை வாக்கியமோ அன்று. அவர் ஒரு நபர். அவருடன் நாம் நெருக்கமான தனிப்பட்ட உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

பரிசுத்த ஆவியானவருக்கே உரித்தான பண்புகள் உள்ளன. அவர் ஆக்கிரமிப்பு செய்பவரோ அல்லது "பலாத்காரமாய்" நுழைபவரோ அன்று. அவர் நம்மை நோக்கி உரக்க ஓலமிடுவது இல்லை. அவர் பொதுவாக மெல்லிய குரலில் பேசி, சாந்தமான உந்துதல்களின் மூலம் நம்மை வழி நடத்துகிறார். அவருடைய வழி நடத்துதலைப் பெற்றுக் கொள்ள நாம் அவருடைய குரலுக்குக் கவனமாகவும் அவருடைய உந்துதல்களுக்கு நுண்ணுணர்வுடனும் இருக்க வேண்டும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 237 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மேலும் பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட நிலையிலே நம் ஒவ்வொருவருடன் ஈடுபடுகிறார். தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குள் செல்வதற்கு அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒரு குறிப்பிட்ட சட்டதிட்டங்கள் என்று ஒன்றுமில்லை. நம் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட ஆழ்தத்துவமும் தனிப்பட்ட தேவைகளும், ஆசைகளும், தனிப்பட்ட பெலமும், பெலவீனங்களும் உள்ளன. நம்முடைய ஒப்பற்ற தன்மையை பரிசுத்த ஆவியானவர் மதிக்கிறார். தேவன் எவரையும் மற்றொருவரைப் போல கார்பன் பிரதியாக உண்டாக்குவதில்லை என யாரோ ஒருவர் கூறியுள்ளார். அவர் கிறிஸ்தவர்களை ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்து அடுக்கி வைத்திருக்கும் பொருட்களைப் போல படைப்பதில்லை.

ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை அச்சுறுத்தும் சிறப்பான அபாயங்களையும் அல்லது நம்முடைய தனிப்பட்ட தேவைகளை சந்திக்கக்கூடிய குறிப்பிட்ட ஆசீர்வாதங்களையும் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே அறிவார். அவர் உண்மையுள்ளவராய் நம்மை அபாயங்களின் மத்தியிலிருந்து வெளிவரச் செய்து ஆசீர்வாதங்களுக்குள் நடத்திச் செல்கிறார். நாம் ஒரு மதமுறையையோ அல்லது மற்ற கிறிஸ்தவர்களின் மாதிரியையோ பின்பற்ற ஆரம்பிப்போம் என்றால், தேவன் நமக்கென்று குறித்து வைத்திருக்கும் சிறப்பான ஆசீர்வாதங்களை இழந்து விடுவோம்.

ஆகையால், நீ ஞானமாய் சிறிது நேரமெடுத்து இந்த சுருக்கமான ஜெபத்தைச் செய்:

பரிசுத்த ஆவியானவரே, என் இதயத்தையும், மனதையும் உமக்குத் திறந்து கொடுக்கிறேன். இயேசு எனக்காகச் சம்பாதித்த ஆசீர்வாதங்களையும், அவைகளை நான் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதையும் எனக்கு வெளிப்படுத்தும்.

17ஆம் அத்தியாயத்தில் ஏற்கெனவே மேற்கோளாகக் காட்டப்பட்ட எபிரெயர் 10:14ன்படி சிலுவையில் நடந்த பரிமாற்றத்தின் எதிர்மறையான இரு கூறுகள் காட்டப்பட்டுள்ளன. இயேசு நிறைவேற்றியதை விளக்குவதற்கு அவர் முற்றுப் பெற்ற காலத்தைப் பயன்படுத்துகிறார்: "ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்கிறார். இயேசு செய்தது முற்றிலும், நித்தியம் வரை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 238 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நிறைவுள்ளது. அதில் சேர்க்க வேண்டியதும் ஒன்றுமில்லை; அதிலிருந்து கழிக்கப்பட வேண்டியதும் ஒன்றுமில்லை.

மறுபக்கம் அந்த பலியை தங்களுக்கென்று ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்வில் அது கிரியை செய்யும் விதத்தை விளக்குவதற்கு எழுத்தாளர் தொடர் நிகழ்காலத்தைப் பயன்படுத்துகிறார்: "பரிசுத்த மாக்கப்படுகிறவர்களை". இந்த பலியை நமது வாழ்வில் சொந்தமாக்கிக் கொள்வது என்பது உடனடியாய் நிறைவடைவதில்லை; அது தொடர்ந்து நிகழுகின்ற ஒரு காரியம் ஆகும். நாம் இதை சொந்தமாக்கிக் கொள்ளும் முறை "பரிசுத்தமாக்கப்படுதல்" என விளக்கப்பட்டுள்ளது—அதாவது தேவனுக்கு என்று பரிசுத்தமாக நம்மைப் பிரத்தியேகப்படுத்தி வைப்பது. நாம் நமது வாழ்வை தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தத்திற்கு இணையாகக் கொண்டு வரும்பொழுது அவருடைய ஆசீர்வாதத்தின் பூரணத்திற்குள் நாம் வருகிறோம்.

இந்த அறைகூவலை சந்திக்கும்போது, கிறிஸ்தவர்கள் சில வேளைகளில்—"ஆனால் நான் மறுபடியும் பிறந்த பொழுது எல்லாவற்றையுமே பெற்றுக் கொண்டதாக நினைத்தேன்!" என்று கூறுவதுண்டு. அதற்கு ஆம் என்றும் இல்லை என்றுமே பதில் சொல்ல வேண்டும். இந்தக் காரியத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன: அவைகள் சட்ட ரீதியானதும், அனுபவ ரீதியானதும் ஆகும். நாம் எந்தக் கோணத்திலிருந்து பார்க்கிறோம் என்பதைப் பொறுத்து பதில் வித்தியாசப்படும்.

சட்டப் பூர்வமாக நீ மறுபடியும் பிறந்த போது "எல்லாவற்றையுமே" உண்மையில் பெற்றுக் கொண்டாய். ரோமர் 8:17ன் படி நீ தேவனுடைய பிள்ளையான போது "தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாய்" மாற்றப்பட்டாய். சட்டப் பூர்வமாக அந்த நேரத்திலிருந்து கிறிஸ்துவுடன் அவருடைய முழு சுதந்திரத்தையும் பகிர்ந்து கொள்ளும் உரிமையை நீ பெறுகிறாய்.

என்றாலும் அனுபவ பூர்வமாக நீ சுதந்தரித்துக் கொள்ளுதலின் ஆரம்பத்தில் மட்டுமே இருக்கிறாய். முழுவதையும் பெற்றுக் கொள்ள வாழ்க்கை முழுவதுமே போதாது. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சட்ட ரீதியில் உரிமையான ஆசீர்வாதங்களை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 239 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அனுபவத்தின் தளத்திற்குக் கொண்டுவரும் ஓர் அனுபவமாகும். விசுவாசத்தில் படிப்படியாக முன்னேறி கிறிஸ்துவில் நமக்குள்ள விசுவாசத்தின் மூலம் சட்டப்படி நமக்கு ஏற்கெனவே சொந்தமான அனைத்தையும் அனுபவ ரீதிக்குக் கொண்டு வர வேண்டும். இதையே எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் "பரிசுத்தமாக்கப்படுதல்" என்கிறார்.

யோவான் 1:12–13ல் அப்போஸ்தலர் இயேசுவை ஏற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்தவர்களுக்கு "தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரத்தை" தேவன் அவர்களுக்குக் கொடுத்தார் என்கிறார். எனவே ஒருவன் புதிதாய் பிறக்கும்போது தேவனுடைய பிள்ளையாகும்படி அதிகாரத்தைப் பெறுகிறான்.

எனினும் அதிகாரம் எந்த அளவிற்கு செயல்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு மட்டுமே பயனுள்ளதாயிருக்கும். புதிய பிறப்பின் ஆற்றல் எல்லையற்றது. ஆனால், அதனால் உண்டாகும் மெய்யான பலன்கள் புதியபிறப்புடன் கூடிய அதிகாரத்தைச் செயல்படுத்துவதைச் சார்ந்து உள்ளது. புதிய பிறப்பின் மூலம் ஒரு மனிதன் எந்த உயர்வான நிலையில் உள்ளான் என்பது தேவன் அவனுக்குக் கொடுத்துள்ள அதிகாரத்தை அவன் எந்த அளவிற்குச் செயல்படுத்துகிறான் என்பதின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

புதிய உடன்படிக்கையில் விசுவாசிகள் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குள் நுழையும் அனுபவத்திற்கும், பழைய உடன்படிக்கையில் இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நுழையும் அனுபவத்திற்கும் இடையே நெருக்கமான தொடர்பு உள்ளது. முதல் உடன்படிக்கையில் யோசுவா என்னும் தலைவரின் கீழாய் தேவன் தமது மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் கொண்டு வந்தார். இரண்டாம் உடன்படிக்கையில் இயேசு என்னும் தலைவரின் கீழ் (யோசுவா என்னும் சொல்லிலிருந்தே இயேசு என்னும் சொல் வந்துள்ளது) தேவன் தமது மக்களை அந்நாட்டின் வாக்குத்தத்தங்களுக்குள் அழைத்து வருகிறார். கானான் நாடு இஸ்ரவேலருக்குச் சரீரப்பிரகாரமான சுதந்திரமாய் நியமிக்கப்பட்டிருந்தது போல, இயேசுவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இக்காலத்து கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய சுதந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டைச் சுதந்தரிப்பதற்கு இஸ்ரவேலர்களுக்கு



Blessing or Curse Tamil text 2012 revised.p65 240 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அளிக்கப்பட்ட அதே அடிப்படைக் கொள்கைகள் இன்று கிறிஸ்தவர்களுக்கும் பொருந்துகிறது.*

*யோசுவா 1:2–3ல் தேவன் யோசுவாவிற்கு இஸ்ரவேலர்கள் தங்கள் சுதந்திரத்தை எவ்வாறு சுதந்தரிப்பது என்பதைப் பற்றிய அறிவுரைகளைத் தந்தார்:*

> "என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்.
>
> நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்."

*இங்கு எபிரெயர் 10:14யைப் போலவே அதே மாதிரியான எதிர்மறையான காலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண். 2 ஆம் வசனத்தில் கர்த்தர் தொடர்கின்ற நிகழ்காலத்தைப் பயன்படுத்துகிறார்: "நான்* **கொடுக்கும்** *(தேசத்திற்கு)" என்கிறார். ஆனால் 3ம் வசனத்தில் முற்றுப்பெற்ற காலத்தைப் பயன்படுத்துகிறார்: "நான் ... (தேசத்தை) உங்களுக்குக்* **கொடுத்தேன்**" *என்கிறார். 3 ஆம் வசனத்திலிருந்து கானான் நாட்டிற்குரிய சட்ட ரீதியிலான சொத்துரிமை தீர்மானிக்கப்படுகிறது: அது இஸ்ரவேலருக்குச் சொந்தமானது. என்றாலும் அனுபவ பூர்வமாக எதுவும் மாறவில்லை. கானானியர்கள் அந்த நாட்டிலே தொடர்ந்து இருந்தனர்.*

*யோசுவாவிற்கும் அவனுடைய மக்களுக்கும் கொடுக்கப்பட்ட அறைகூவல்—சட்ட ரீதியிலிருந்து அனுபவ ரீதிக்குக் கடந்து செல்வதாகும். இதை அவர்கள் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்துப் பொறுமையுடன் சுதந்தரிக்க வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் காலடி எடுத்து வைத்த பொழுது, சட்ட ரீதியில் மட்டுமல்லாமல் உண்மையான அனுபவத்திலும் அது அவர்களுக்குச் சொந்தமானது.*

*சில கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ளும் விதமாக இஸ்ரவேலர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிக்கச் செயல்பட்டிருப்பார்கள் என்றால், சரித்திரம் திசை*





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

திரும்பியிருக்கும். அவர்கள் அனைவரும் யோர்தானின் கிழக்குக் கரையில் நின்று கொண்டு கைகளை மடக்கினவர்களாய் மேற்குப் பக்கமாகப் பார்த்து "இது அனைத்தும் எங்களுடையது!" என்று சொல்லியிருப்பர். ஆனால் கானானியர்கள் அவர்களைப் பார்த்து சிரித்திருப்பார்கள். ஏனெனில் நாடு அவர்கள் வசம் இருப்பதை அவர்கள் அறிவார்கள்.

ஆனால் யோசுவாவும், அவனுடைய மக்களும் வித்தியாசமாகச் செயல்பட்டனர். முதலாவதாக அவர்களுடைய கீழ்ப்படிதலின் நிமித்தம் தேவன் செய்த அற்புதத்தினால் அவர்கள் யோர்தானைக் கடந்தனர். பின்பு அவர்கள் எரிகோவை முற்றுகையிட்டு மீண்டும் ஓர் அற்புதத்தினால் அதைக் கைப்பற்றினர். ஆனால் அதற்குப் பின்பு அவர்கள் முன்னேறிச் சென்றதெல்லாம் சிறப்பாக யுத்தம் செய்ததின் மூலமாகவேயன்றி அற்புதங்களினாலல்ல. அவர்கள் கானானின் ஒவ்வொரு திசைக்கும் சென்று அந்த நாட்டில் வாழ்ந்த பல்வேறு குடிமக்களுக்கு எதிராக நீண்ட கால யுத்தங்களைச் செய்தனர். அதிக சிரமத்துடன் யுத்தம் செய்தும் அவர்களுடைய வேலை முடிவடையவில்லை. வெகு காலத்திற்குப் பின்பு தேவன் யோசுவாவைப் பார்த்து "சுதந்தரித்துக் கொள்ள வேண்டிய தேசம் இன்னும் மகா விஸ்தாரமாயிருக்கிறது" (யோசுவா 13:1) என்று கூறுகின்றார்.

புதிய ஏற்பாட்டின் விசுவாசிகளாகிய நமக்கும் இதே அறைகூவல் வைக்கப்படுகிறது : அது சட்ட ரீதியிலிருந்து அனுபவ ரீதிக்குக் கடந்து செல்வதாகும். இஸ்ரவேலர்களைப் போல நாம் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து முன்னேற வேண்டும். இஸ்ரவேலர்களைப் போல நாமும் எதிர்ப்பைச் சந்திப்போம். நம்முடைய முன்னேற்றம் சாத்தானின் சக்திகளினால் தொடர்ந்து தாக்கப்படும். தேவன் நமக்களித்துள்ள ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொண்டு நாம் அவைகளை மேற்கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். இறுதியாக புதிய உடன்படிக்கையில் கிறிஸ்து கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறது:அது "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ" (வெளிப்படுத்தின விசேஷம் 2,3 ஆம் அதிகாரங்களைக் காண்க) அவனுக்குக் கொடுக்கப் படுகிறது. சுதந்தரித்துக் கொள்ளுவதற்கான உரிமை வெளிப்படுத்தின விசேஷம் 21:7ல் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது: "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்."



Blessing or Curse Tamil text 2012 revised.p65 242 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*தேவன் நம்மை மேலும் பெலப்படுத்தவும் உற்சாகப்படுத்தவும், "நம்மெல்லாருக்கும் தகப்பன்" என்று அழைக்கப்படுகிற ஆபிரகாமின் உதாரணத்தையும் நமக்கு முன்பாக வைக்கிறார். தேவன் ஆபிரகாமின் மூலம் நம்மை "சகல காரியங்களிலும்" ஆசீர்வதிக்கிறார். அவர் நம் ஒவ்வொருவருக்கும் ஆயத்தப்படுத்தி வைத்துள்ள ஆசீர்வாதத்தின் அளவை மட்டும் நிர்ணயிக்காமல் அந்த ஆசீர்வாதத்திற்கு நம்மை நடத்திச் செல்லும் வழியையும் வகுத்திருக்கிறார். ஆபிரகாமின் வாழ்க்கை மூன்று முக்கிய பகுதிகளில் நமக்கு உதாரணமாகவும் அறைகூவலாகவும் உள்ளது: அவருடைய காலம் தாழ்த்தாத கீழ்ப்படிதல், தேவனுடைய வார்த்தையில் அவர் வைத்த முழு நம்பிக்கை, சகலத்தையும் சகித்துக் கொள்ளும் தன்மை.*

*எபிரெயர் 11:8ல் அதன் எழுத்தாளர் ஆபிரகாம் எதிர் பேசாமல் உடனடியாகக் கீழ்ப்படிந்ததை வலியுறுத்தி "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப் போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்" என்கிறார்.*

*ஆபிரகாம் தான் ஏன் செல்ல வேண்டும் என்ற விளக்கத்தையோ, தான் செல்ல இருக்கும் இடத்தின் விளக்கத்தைப் பற்றியோ கேட்கவில்லை. தேவன் அவனுக்குச் செய்யச் சொன்னதைக் கேள்வி கேட்காமல் உடனடியாக அப்படியே செய்தான். அதே விதமான கீழ்ப்படிதல் அவன் வாழ்க்கை முழுவதிலும் காணப்பட்டது: உதாரணமாக, அவனும் அவன் வீட்டார் அனைவரும் விருத்த சேதனம் செய்ய வேண்டும் என்று சொன்ன பொழுது (ஆதியாகமம் 17:9–14,23–27); தேவன் அவனுடைய குமாரனாகிய ஈசாக்கை பலியிடச் சொன்ன போது (ஆதியாகமம் 22:1–14) அவன் கீழ்ப்படிந்தான். எந்தக் காலத்திலும் ஆபிரகாம் தன்னுடைய கீழ்ப்படிதலில் தயக்கம் காட்டவில்லை. தேவன் அவனை எதைச் செய்யச் சொன்னாரோ அதைக் குறித்து கேள்வி கேட்கவில்லை.*

*ரோமர் 4:16–21 வரையுள்ள வசனங்களில் தேவன் ஆபிரகாமை "அநேக ஜாதிகளுக்குத் தகப்பன்" என்று அழைத்தபோது அவனுக்கு அடிமைப் பெண்ணான ஆகார் மூலம் ஒரே மகன் மட்டும் தான் இருந்தான்; அவனுடைய மனைவியான*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 243 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சாராளோ அநேக ஆண்டுகளாக மலடியாய் இருந்தாள் என்று பவுல் குறிப்பிடுகிறார். தன்னைப் பற்றி கர்த்தரால் சொல்லப்பட்டது உண்மை என்று, அது சொல்லப்பட்ட நேரத்திலிருந்து அவன் விசுவாசித்தான். இவ்வாறாகத் தன் புலன்களுக்கு விரோதமாக சூழ்நிலை இருந்தும், அவன் தேவனுடைய வார்த்தையைக் கேள்வி கேட்காமல் அதை ஏற்றுக் கொண்டதினால், இறுதியில் அவனுடைய புலன்களினால் உறுதி செய்யப்படக்கூடிய நிலையில், சரீரப்பிரகாரமாக அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறியது.

உண்மையில் தேவன் முதலில் ஆபிரகாமிடம் அவனுடைய சந்ததியினர் நட்சத்திரங்களைப் போல் பெருகியிருப்பர் என்று வாக்குத்தத்தம் செய்ததற்கும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வாரிசாக ஒரு குமாரன் பிறப்பதற்கும் இடையே சுமார் 25 ஆண்டுகள் கடந்து சென்றன. அத்தனை ஆண்டுகள் முழுவதிலும் தேவனுடைய வாக்குத்தத்தமே அன்றி அவனுக்குப் பிடித்துக் கொள்ள வேறொன்றும் இல்லாதிருந்தது. அவன் மனதைத் தளரச் செய்யும் முடிவற்ற சோதனைகளை அவன் சந்தித்திருப்பான். எனினும் அவன் தன் விசுவாசத்தைக் கைவிட்டுவிடவில்லை. இறுதியில் அவனுடைய பொறுமைக்கான வெகுமானம் எபிரெயர் 6:15ல் இவ்வாறாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது: “அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.”

ரோமர் 4:11–12ல் “நாம் ஆபிரகாமின் விசுவாசத்தின் அடிச்சுவடுகளில் நடப்போமென்றால்” நாம் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று பவுல் கூறுகிறார். இது தான் கலாத்தியர் 3:14ல் வாக்களிக்கப்பட்டுள்ள “ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள்” நுழைவதற்கான வேதம் கூறும் நிபந்தனையாகும். ஆபிரகாமைப் போல நாம் தேவனுடைய வார்த்தையை நம்முடைய அனுபவத்தில் மாறாத, நிலையான ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும். மனிதர்களுடைய பலதரப்பட்ட கருத்துக்களும், நம்முடைய புலன்களின் மாறுபாடான உணர்ச்சிகளின் எண்ணங்களும் “உலர்ந்து போகும் புல்லைப்” போல் உள்ளன. ஆனால் “நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்” (ஏசாயா 40:8).

என்றாலும் நாம் மனதின் அளவில் மட்டும் தேவனுடைய



Blessing or Curse Tamil text 2012 revised.p65 244 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*வார்த்தையை ஏற்றுக் கொண்டால் போதாது. ஆபிரகாம் செய்தது போலவே நாம் நமது செயல்களில் அதைச் செய்து காட்ட வேண்டும்: கேள்வி கேட்காத உடனடியான கீழ்ப்படிதலினாலும், எல்லாச் சோர்வுகளுக்கும் மத்தியில் நீடித்த பொறுமையினாலும் நாம் அதைச் செயற்படுத்த வேண்டும். இவ்விதமாகச் செய்தால், இறுதியில் நம்முடைய அனுபவத்தில் தேவனுடைய வார்த்தையானது உண்மையானது என நிரூபிக்கப்படுவதைக் காண்போம். ஆபிரகாம் கண்டு கொண்டது போல "எல்லாக் காரியங்களிலும்" நாம் தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கண்டு கொள்வோம்.*

*சாத்தான் தொடர்ந்து நம்மை மனதின் தளத்திலும், உணர்ச்சியின் தளத்திலும்—சந்தேகங்கள், பயம், குற்ற உணர்வு, குழப்பம் போன்ற அழுத்தங்களினால் தாக்குவான். நமது சரீரங்களையும், பலவித உபாதைகளினால் வருத்தமடையச் செய்வான். இவை அனைத்திற்கும் எதிராக தேவன் நமக்கு உன்னத, பயனுள்ள ஆயுதத்தைக் கொடுத்துள்ளார்: அது அவருடைய வார்த்தை ஆகும். எபேசியர் 6:17ல் பவுல் நம்மை இவ்வாறாக வழிநடத்துகிறார்: "தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்."*

*இதில் மனிதனும், தேவனும் இணைந்து செயல்பட வேண்டும். பட்டயம் பரிசுத்த ஆவியானவரின் பட்டயம். ஆனால் அதை "எடுத்துக் கொள்ள" வேண்டியது நம்முடைய பொறுப்பு. நாம் அதை எடுத்துக் கொண்டால் பரிசுத்த ஆவியானவர் அதைப் பயன்படுத்துவார். ஆனால் நாம் அதை எடுத்துக் கொள்ளாவிட்டால் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிராது.*

*இங்கு பவுல் தேவனுடைய வார்த்தையை விளக்குவதற்கு பயன்படுத்தும் கிரேக்கச் சொல் ரேமா* (rhema) *என்பதாகும். இது முக்கியமாக பேசப்பட்ட வார்த்தை ஆகும். அது விசுவாசமுள்ள உதடுகளின் மூலம் பேசப்படும் பொழுது மட்டுமே பயனுள்ளதாகிறது. இங்கு பவுல் குறிப்பிடுவது அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் வேத புத்தகத்தைக் குறிக்கவில்லை. வேதத்தின் வார்த்தைகளை நம்முடைய உதடுகள் மூலம் தைரியமான விசுவாசத்துடன் பேசுவதையே அவர் குறிப்பிடுகிறார்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 245 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இப்பட்டயத்தை பயன்படுத்துவதில் நமக்கு மாதிரியாய் அமைபவர் கர்த்தராகிய இயேசு. அவர் வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்ட பொழுது, வார்த்தை என்னும் பட்டயத்தைப் பயன்படுத்தினார்.* (மத்தேயு 4:1–11.) *சாத்தான் தன்னுடைய மூன்று சோதனைகளிலும்* ***ஆனால்*** *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறான். வேறு வார்த்தைகளில் சொன்னால் அது சந்தேகத்தை உண்டாக்கும் வார்த்தை.*

*முதல் இரண்டு சோதனைகளும் "நீர் தேவனுடைய குமாரனே* ***ஆனால்*** *..." என்று ஆரம்பமாகிறது. இதற்குச் சற்று முன்பு இயேசு யோர்தானிலே யோவானால் ஞானஸ்நானத்தைப் பெற்ற பொழுது பிதாவாகிய தேவன் வெளியரங்கமாக "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" எனக் கூறினார்* (மத்தேயு 3:17). *இப்பொழுது தன்னைப் பற்றி பிதா சொன்னதை சந்தேகிக்கும்படி, சாத்தான் இயேசுவை சோதிக்கிறான்.*

*மூன்றாவது சோதனையும்* ***ஆனால்*** *என்ற அர்த்தத்திலேயே ஆரம்பிக்கிறது. ஆனால் அது சந்தேகத்தை உண்டாக்கும் சோதனையாய் மட்டுமல்லாமல் கீழ்ப்படியாமைக்கும் நேராய் நடத்துகிறது: "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால் ...." இப்பொழுது சாத்தான் இயேசுவை எல்லாப் பாவங்களிலும் மிகப்பெரிய பாவத்தைச் செய்யும்படித் தூண்டினான்: அது முதலாம் கற்பனையை மீறுவதாகும்.*

*இயேசுவின் சீடர்களாகிய நமக்கு விரோதமாக சாத்தான் கொண்டுவரும் சோதனைகளும் இதே போன்றே இருக்கும். முதலாவதாக நம்மைப் பற்றி தேவன் கூறியுள்ளதை சந்தேகிக்கும்படி அவன் நம்மைச் சோதிப்பான். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன என்பதிலும், தேவன் நம்மை உண்மையாகவே நேசிக்கிறார் என்பதிலும், நாம் தேவனுடைய குடும்பத்தில் அவருடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதிலும், சாபத்திலிருந்து விடுபட்டு ஆசீர்வாதத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம் என்பதிலும் நம்மைச் சந்தேகம் கொள்ளச் செய்வான். ஆனால் எப்பொழுதுமே இறுதியில் அவன் கீழ்ப்படியாமைக்கு நம்மை நடத்தி கீழே தள்ளும்படி முயற்சிப்பான்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 246 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இயேசு சாத்தானைத் தோற்கடிக்க ஒரே ஒரு ஆயுதத்தை மட்டுமே பயன்படுத்தினார்: அது ரேமா என்னும் தேவனுடைய பேசப்படும் வார்த்தையாகும். அவர் ஒவ்வொரு சோதனையிலும் "அது எழுதப்பட்டிருக்கிறது" என்று சொல்லி அவனை மேற்கொண்டார். அவர் சொன்னது பழைய ஏற்பாட்டின் வசனங்களின் மேற்கோளாகும். இவ்வாறாக சாத்தானுக்கு விரோதமாக தேவனுடைய வார்த்தையை மேற்கோளாகச் சொல்லும் போது, அதை எதிர்த்து நிற்க அவனால் முடியாது. அவன் தோல்வியுற்றவனாக விலகிப் போக நேரிடும்.*

*இவை அனைத்திலும் இயேசுவே நமக்கு சரியான உதாரணம். அவர் தன் சொந்த ஞானத்தையோ தர்க்கங்களையோ சாரவில்லை. தேவன் நமக்குக் கொடுத்துள்ள அதே ஆயுதத்தையே அவரும் பயன்படுத்தினார்: தேவனுடைய வார்த்தையாகும். நம்முடைய பாதுகாப்பு இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுவதில் உள்ளது. நாம் நமது சொந்த ஞானத்திலோ, பெலத்திலோ, நீதியிலோ சார்ந்திருப்பது அறிவீனமாகும். சாத்தான் நம்மைவிட ஆயிரம் மடங்கு ஞானமுள்ளவனும் பெலமுள்ளவனும் ஆவான். நம்முடைய சொந்த ரீதியில் ஆயிரம் குறைகளை அவன் சுட்டிக் காட்டக்கூடும். ஆனால் ஒரு ஆயுதத்திற்கு எதிராக அவனால் எதிர்த்து நிற்கமுடியாது: அது விசுவாசத்தில் பேசப்படும் தேவனுடைய வார்த்தையாகும்.*

*இவ்வழியைப் பின்பற்றும் போது நாம் சாபங்களின் சூழ்நிலையிலிருந்து தேவனுடைய ஆசீர்வாதங்களின் ஒளிக்கு வருகிறோம். இதற்கு முதலாவது தேவையானது சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றத்தில் நமக்கு இருக்க வேண்டிய விசுவாசமாகும். இவ்விதமான விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அவைகள் சொல்லப்பட்ட நேரத்திலிருந்து பயனுள்ளதாக எண்ணுகிறது. புலன்கள் இதற்குச் சான்று தரவேண்டும் என்று நாம் காத்திருக்க வேண்டியதில்லை. கேள்வி கேட்காத, உடனடியான கீழ்ப்படிதலினாலும், பொறுமையினாலும் கிறிஸ்துவில் நமக்குள்ள சட்ட ரீதியிலான உரிமைகளிலிருந்து அனுபவ ரீதியான மகிழ்ச்சிக்கு நாம் கடந்து செல்கிறோம். சாத்தானுடைய எதிர்ப்புகள் அனைத்தையும் "ஆவியானவரின் பட்டயமாகிய" பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையினால் நாம் சந்திக்கக்கூடும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 247 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 20

# பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்

*இஸ்ரவேலர்களை கானானில் தங்கள் சுதந்திரத்திற்கு நடத்திச் செல்ல யோசுவா தலைவனாக நியமிக்கப்பட்ட பொழுது, அவனுக்கு ஒரே அறிவுரை மூன்று முறை சொல்லப்பட்டது: "பலங்கொண்டு திடமனதாயிரு"* (யோசுவா 1:6,9,18). *முதல் இரண்டு அறிவுரைகளும் கர்த்தரிடத்திலிருந்து வந்தது; மூன்றாவது அவனுடைய சக இஸ்ரவேலர்களிடமிருந்து வந்தது. மூன்றாவது அறிவுரைக்குப் பின்பு யோசுவா நிச்சயமாய் ஒரு காரியத்தைப் புரிந்து கொண்டிருப்பான்: வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிப்பது எளிய காரியமல்ல என்று*!

*புதிய உடன்படிக்கையில் வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களைத் தங்கள் வாழ்வில் சொந்தமாக்கிக் கொள்ள நினைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இன்று இது பொருந்துவதாக உள்ளது. தேவன் நம்முடன் இருந்து, தம்முடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவார் என உறுதி கூறுகிறார். அதே நேரத்தில் நாம் பலவித எதிர்ப்புகளைச் சந்திப்போம் என்று நம்மை எச்சரிக்கிறார். இந்த எதிர்ப்புகள் நமது விசுவாசத்தையும், நமது அர்ப்பணிப்பையும் பரிசோதிக்கும்.*

*மத்தேயு* 11:12*ல் இயேசு தாம் உருவாக்க முற்பட்ட சுவிசேஷத்தின் காலத்தை, பற்றி "யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோக இராஜ்யம் பலவந்தம்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 248 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்" என்று கூறியுள்ளார். இதே குறிப்பை அவர் லூக்கா 16:16ல் வலியுறுத்துகிறார்: "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது; அது முதல் தேவனுடைய இராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்" என்று கூறுகிறார்.*

*மெய்யாகவே தேவனுடைய அரசின் வாக்குத்தத்தம், வெறும் கனவான ஆசை கொள்பவர்களுக்கோ, மதத்தை அடுத்த நிலையில் பேசுபவர்களுக்கோ உரியதல்ல. அதற்கு "பலவந்தம்" தேவை—இது எந்தப் பிரச்சனை வந்தாலும் எந்தச் சோர்வு ஏற்பட்டாலும் முன்னேறிச் செல்கின்ற ஓர் அசையாத தீர்மானம் ஆகும்.*

*அப்போஸ்தலர் 14:22ல் பவுலும், பர்னபாவும் இதே போன்ற ஒரு எச்சரிப்பைப் புதிதாக மனந்திரும்பியவர்களுக்கு கூறுகின்றனர்: "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்". உபத்திரவங்களை ஒதுக்கித் தள்ளும் எந்தப் பாதையும் நம்மை தேவனுடைய இராஜ்யத்திற்கு எடுத்துச் செல்லாது. இந்த காரியத்தை நாம் மனதில் நன்கு புரிந்து கொண்டு விட்டால், உபத்திரவங்கள் நம்மை எந்த விதத்திலும் தடுத்து நிறுத்தாது.*

*அட்டோ அகுயர்* (Otto Aguiar) *என்பவன் தேவனுடைய வாக்குத்தத்தங்களை பலவந்தமான தீர்மானத்துடன் பற்றிக் கொள்ள முற்பட்ட ஒரு மனிதன். அட்டோ, பிரேசில் நாட்டைச் சார்ந்தவன். அநேக தலைமுறைகளாகத் தொடரும் சாபங்களைத் தன் வாழ்வில் கொண்டவனாகப் பிறந்தவன். தன்னுடைய அறிவுக் குறைவினால் இன்னும் அநேக சாபங்களைத் தன்மேல் வருவித்துக் கொண்டவன். எனினும் அவன் இறுதியில் சாபங்களின் இருண்ட பகுதியிலிருந்து தேவ ஆசீர்வாதங்களின் சூரிய ஒளி நிறைந்த பகுதிக்குக் கடந்து சென்றான். இங்கே தான் அவன் தற்சமயம் வாழ்கிறான்.*

**ஓட்டோ அகுயர் தன் கதையைச் சொல்கிறான்:**

நான் பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரோவில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தேன். என்னுடைய தந்தை ஐரோப்பிய



Blessing or Curse Tamil text 2012 revised.p65 249 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இந்திய கலப்பில் பிறந்த ஒரு பிரபலமான அதிகாரி; என்னுடைய தாய் அரசியல் தலைவர்கள் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவள். என் குடும்பத்தின் இருதரத்தாரும் அநேக தலைமுறைகளுக்கு ஆவிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

பத்து பிள்ளைகளில் நான் ஏழாவது பிள்ளை. பதினான்கு பவுண்டு எடையுள்ளவனாய்ப் பிறந்தவன். அநேக ஆண்டுகளாக நான் என் தாயாரைக் கொலை செய்ய முற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டேன். நான் குற்றவுணர்வுடன் தனித்து விடப்பட்டேன். என் கைகளினால் தலையைப் பிடித்துக் கொண்டு நான் கடந்து வந்த கடினமான பாதையைப் பற்றி சிந்திக்கலானேன். சூழ்நிலையை என்னால் தாக்கு பிடிக்க முடியவில்லை. முதலாம் வகுப்பிலேயே தேறாமல் **நான்கு** ஆண்டுகள் தேங்கிவிட்டேன். இரண்டாம் வகுப்பிற்கு நான் சென்ற போது என் ஆசிரியரைப்போல் பெரியவனாக இருந்தேன்.

நான் சிறிய பிள்ளையாக இருந்த பொழுதே முன்னோர்களின் சாபங்கள் என் குடும்பத்தின் மூத்த அங்கத்தினர்களைத் தாக்க ஆரம்பித்தன. என் மூத்த சகோதரி ஒரு கண்டிப்பான கத்தோலிக்க பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த போது, செத்த ஆவிகளுடன் தொடர்பு கொள்ளும் ஓரிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். பிரேசில் நாட்டில் சொல்லப்படுவது போல் அங்கு *புனிதர்களின் ஆவிகளைப் பெற ஆரம்பித்தாள். தன் வாழ்வில் பெரும்பகுதியை அவள் பைத்தியக்கார நிலையங்களில் செலவிட்டாள்.

இரண்டாவது பிள்ளையான என் மூத்த சகோதரன் ஞானமுள்ளவன். ஆனால் அவன் தன் பத்தாவது வயதில் தலை கீழாக விழுந்ததால், காயப்பட்டு ஒரு வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டான். அந்நாட்களிலே பிரேசிலில் வலிப்பு நோய் என்பது ஒரு தொற்று நோய் என பொதுவாகக் கருதப்பட்டதினால் அவன் தன் உடமைகள் அனைத்துடன் எங்கள் வீட்டிலிருந்து வேலைக்காரர்கள் தங்கும் பகுதிக்கு மாற்றப்பட்டான். அவனுக்கு வலிப்பு வரும் போதெல்லாம் என் தாய் மிகவும் கலங்கினவளாக *தேவனேயில்லை என்று ஓலமிட்டுக் கதறுவாள். கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவன் ஊனமுற்றோர்களின் நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

எனக்கு பதினாறு வயதாய் இருந்த பொழுது வலிப்பு நோயின் எல்லா அறிகுறிகளும் எனக்கும் வர ஆரம்பித்தன வாயில் நுரை தள்ளி, வாந்தி எடுத்து, குழப்பத்துடன் நான் மயங்கி விழுவதுண்டு. எனினும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 250 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என் மூளையைச் சோதித்துப் பார்த்த பொழுது அதில் எந்தவிதக் கோளாறும் காணப்படவில்லை.

நாட்டின் சிறந்த தலைவரான என் தந்தை, தன்னுடைய ஏழு குமாரர்கள் பேரில் எப்பொழுதும் கோபம் கொண்டதே கிடையாது; அவர்கள் மேல் எந்த அதிகாரமும் செலுத்தியது கிடையாது. நான் பெரியவனாகுவதற்கு முன்பு அவர் என்னுடன் ஒருமுறை கூட பேசியது கிடையாது. என்றாலும் நான் அவரை மிக்க அன்போடும் மரியாதையோடும் மதித்தேன். அவர் ஆவிகளுடன் தொடர்பு கொள்ளும் இடத்திற்கு அடிக்கடிச் சென்றார். ஆவிகளைப் பற்றி எனக்கு நல்ல எண்ணம் இல்லாவிட்டாலும் சில வேளைகளில் நானும் அங்கு சென்றேன்.

நான் நுண்கலைப் பாடசாலையில் மாணவனாகச் சேர்க்கப் பட்டேன். அங்கே சித்திரக்கலையில் முதுநிலை பட்டத்தைப் பெற்றேன். ஆனால் எப்படி அது நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதை நான் என் தொழிலாகக் கொள்ளவில்லை. நான் விளம்பரப் புகைப்படங்களுக்கு ஒரு மாடலாக அமர்வதைத் தெரிந்துகொண்டு, பிரேசில் முதல் பாரீஸ் வரை பயணம் செய்தேன்.

நான் போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டு வேகமாக இயங்கும் இயந்திரம்போல் செயலாற்றினேன். சில வேளைகளில் கடலோரத்தில் கட்டப்பட்டிருந்த என் சொந்த வீட்டில் தனித்து அதிக நேரம் செலவிட்டேன். அப்பொழுது நான் வானத்தைப் பார்க்கும் போதெல்லாம் வானத்தில் விண்மீன்களை வைத்தவரையும், சூரியனை உதிக்கச் செய்பவரையும் பற்றி தியானிப்பதுண்டு. அவர் யார் என்பதை அறிந்து கொள்ள ஆவல் கொண்டேன். ஆனால் அவரை எங்கே தேடுவது என்று தெரியவில்லை.

இவ்வேளையில் என்னைப் போலவே விளம்பர மாடலாக அமரும் அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த எலன் என்னும் யூதப் பெண்ணைச் சந்தித்தேன். நான் அவளைச் சந்தித்த போது என் வாழ்க்கை முறையை மாற்றத் தீர்மானித்தேன். ஆனால் என்னால் அதைச் செய்ய முடியவில்லை. தன் பணியின் நிமித்தம் ஐந்து நாட்கள் அவள் வெளியே போயிருந்தாள். அவ்வேளையில் என் நண்பர்களுடன் நான் கடற்கரைக்குச் சென்றேன். நாங்கள் போதை மயக்கத்தில் நீந்தச் சென்றபோது, ஒரு வேகமான அலையினால் நான் உடனே உள்ளே இழுத்துக் கொண்டு செல்லப்பட்டேன். அலையின் மேல் அலை



Blessing or Curse Tamil text 2012 revised.p65 251 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

என்மேல் மோதியது. என் மூச்சுத் திணறியது. "**தேவனே** நான் எலனை இப்பொழுது சந்தித்ததினால் என் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதா நான் **சாகப்** போகிறேன்?'' என்று எண்ணலானேன். என்னுடைய 37 ஆண்டுகளில் முதல் தடவையாக நான் தேவனை நோக்கிக் கூப்பிட்டேன். அவர் எனக்குச் செவி கொடுத்தார் திடீரென நான் உடலெல்லாம் காயப்பட்டவனாக, அதிக பயத்தோடு, நடுங்கிக் கொண்டு கரையில் ஒதுக்கித் தள்ளப்பட்டு கிடப்பதைக் கண்டேன்; எனினும் பிழைத்திருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

இதைத் தொடர்ந்து பதினொரு மாதங்களுக்குள் எனக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் பிறந்தது. என்னால் வாழ்க்கையைச் சமாளிக்க முடியவில்லை. நான் சிறுவனாக இருந்தபோது செய்த வண்ணமாக என் கரங்களின் கீழ் என் தலையை மறைத்துக் கொள்ளாமல், என்னை மறந்தவனாய் ஞானதிருஷ்டியில் மேற்கூரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன் ... நான் தொடர்ந்து மாடலாகவே இருந்து வந்தேன். நான் முயற்சி செய்த மற்ற அனைத்து வேலைகளும் தோல்வியுற்றது ... ஆகவே நான் என் மனைவியையும், என் மகனையும் ஃபுளோரிடாவிலுள்ள ஃபோர்ட் லாடர்டேல் என்ற இடத்திற்கு அழைத்துச் செல்லத் தீர்மானித்தேன்.

லாஸ் ஒலாஸ் பூலூவார்ட் என்னும் தெருவில் உள்ள ஆண்களுக்கான உடைகளை விற்கும் துணிக்கடை ஒன்றில் ஆரம்பத்தில் பகுதி நேர வேலையில் அமர்ந்தேன். ஆங்கிலம் சரியாக பேசமுடியாததினால் நான் பயந்தேன் ஆகையால் நான் குழிகளைத் தோண்டுதல், சிமெண்டில் துளைகளை இடுதல், குளியலறைகளைச் சுத்தம் செய்தல், கார்களைக் கழுவுதல் போன்ற வேலைகளிலும் ஈடுபட்டிருந்தேன். நான் ஒழுக்கக்கேடான புத்தகங்களைப் படிப்பதைத் தவிர்க்க முடியாததால் முற்றிலும் சோர்புற்றவனாகக் காணப்பட்டேன். அமெரிக்கக் கலாச்சாரமும் எனக்கு ஒத்து வரவில்லை. மேலும் நான் வேலை பார்த்த பல இடங்களில் அவர்கள் என்னை ஏமாற்றி விட்டார்கள். சரியாகவே சம்பளம் தரவில்லை.

அப்பொழுது நற்செய்தி திருச்சபைக்கு நாங்கள் அழைக்கப்பட்டோம்; மனதின் தளத்தில் முற்றிலும் புரிந்து கொள்ளாவிட்டாலும் எலன் பயத்துடனும், நடுக்கத்துடனும் முழங்காற்படியிட்டு கர்த்தரை ஏற்றுக் கொண்டாள்! அடுத்த வாரத்தில் இரட்சிப்படைய நான் முன்னே சென்றேன். ஆனால் எதுவும் நடந்ததாக நான் உணரவில்லை. அடிக்கடி மெய்மறந்த நிலையில்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 252 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இருந்தேன்; ஒரு வாரத்திற்குக் கூட ஒரு வேலையை என்னால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை; நான் அதிகம் சோர்புற்றிருந்தேன்; எங்களுக்குப் பணம் இல்லாததால் நானும் எலனும் தொடர்ந்து போராடி வந்தோம்.

எலன் மாந்திரீகத்தில் ஈடுபட்டிருந்ததினால் அவளுக்கு விடுதலை தேவை என்பதை அவள் உணர்ந்தாள். மாந்திரீகத்துடனான எல்லா ஈடுபாட்டையும் ஒழித்துக் கட்டியபொழுது அவள் விடுதலையைப் பெற்றாள். அசுத்த ஆவிகளிலிருந்து எனக்கு விடுதலை தேவைப்பட்டது என்பதை என்னால் நம்ப முடியவில்லை. மற்றவர்களை தேவன் ஆசீர்வதித்த வண்ணமாக என்னை அவர் ஆசீர்வதிக்க விரும்புகிறார் என்பதையும் என்னால் நம்ப முடியவில்லை.

இதற்குள்ளாக ஒரு தளபதியின் மகன் செய்ய விரும்பாத எல்லா சாதாரண வேலைகளிலும் சேர்ந்து அவைகளைச் செய்து விட்டேன்! அநேகர் “நீ உன் கலைத்திறமைகளை ஏன் பயன்படுத்தவில்லை” எனக் கேட்பார்கள். ஆனால் நான் ‘‘வெற்றி கைக்கு எட்டாதே போகிறது பயமாயிருக்கிறது” என்றேன்.

நான் டெரிக் பிரின்சின் ‘‘சாபங்கள்: காரணமும் விடுதலையும்’’ என்னும் கருத்தரங்கிற்குச் சென்றேன். ஆனால் அங்கு எனக்கு ஒன்றும் நடக்கவில்லை. நான் அந்த ஒலி நாடாக்களை வாங்கி மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டேன். என்னுடைய தேவையை என்னால் உணரமுடிந்தது. விடுதலை பெற வேண்டும் என்று அதிகமாக வாஞ்சித்தேன். ஆனால் அது எனக்கு எட்டாததாகக் காணப்பட்டது.

எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை கிடைத்தது. நான் கிறிஸ்தவனாக இரண்டரை ஆண்டுகள் வாழ்ந்து எந்த முன்னேற்றமும் காணாததினால் உபவாசித்து தேவனிடத்தில் உதவியை நாடி அவர் என்னை விடுவிக்கும்படியாக ஜெபிக்கத் தீர்மானித்தேன். பத்து நாட்கள் என்னால் உபவாசமிருக்க முடிந்தது. சில கிறிஸ்தவ நண்பர்கள் எனக்காக ஜெபித்த போது எனக்கு ஓரளவுக்கு விடுதலை கிடைத்தது.

என் வாழ்வில் முதல் தடவையாக சிறிது ***மகிழ்ச்சி*** உண்டாயிற்று ... ஆனால் அது தொடர்ந்து நீடிக்கவில்லை. பல கார் விபத்துகள் எங்களுக்கு உண்டாயின, என் குடும்பத்தை என்னால் காப்பாற்ற முடியவில்லை; மரிக்கும் தருவாயில் பிரேசிலில் இருந்த என் தந்தையைக் குறித்து நான் கவலைப்பட்டேன். ஆனால் போதிய பணம் இல்லாததினால் எங்களால் அவரைச் சென்று பார்க்க முடியவில்லை.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 253 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

எனக்கு உதவி செய்ய வந்தவர்கள் என் சூழ்நிலை மிகவும் மோசமானது என்று எண்ணினர் நான் ஒன்றும் செய்யாமல் அமைதியாகவே இருந்தேன். கிறிஸ்தவர்களின் மத்தியில் இருக்கும் பொழுது எனக்குக் கூச்சமுண்டாயிற்று ....

எலனும் அவளுடைய இரு சிநேகிதிகளும் ஜெப வீட்டிலே காலை 6 மணிக்குக் கூடி தங்கள் கணவர்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். அவள் என்னிடத்தில் ''நீங்கள் கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியத்திலும் வெற்றி காணும்படியாக ஜெபிக்கப் போகிறேன். கர்த்தர் உங்களுக்குக் கொடுத்திருக்கும் தாலந்துகளை பயன்படுத்தத் தக்கதாக நீங்கள் விரும்பும் ஓர் வேலையை உங்களுக்குத் தரும்படியாகவும் ஜெபிக்கப் போகிறேன்'' என்பாள். இப்படிப்பட்ட ஜெபத்திற்கு தேவன் பதிலளிப்பார் என என்னால் விசுவாசிக்க முடியவில்லை. அது அவளுக்கு எப்படி முடிந்ததோ தெரியவில்லை. (அதற்குப்பின்பு அந்த மூன்று பெண்களும் தங்கள் ஜெபங்களுக்குப் பதிலைப் பெற்றனர்: ஒருத்தியின் கணவர் இப்பொழுது முழு நேர ஊழியத்தில் இருக்கிறார். இன்னொரு பெண்ணின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை அடைந்தார். எனக்கு என் மனைவி ஜெபித்தது அப்படியே கிடைத்தது.)

கிறிஸ்தவனாக ஆறு ஆண்டுகளைக் கழித்த பின்பு இறுதியாக அசுத்த ஆவிகளிலிருந்து விடுதலையைப் பெறும்படி போதகரிடம் சென்றேன். (இத்தனை ஆண்டுகள் இப்படிப்பட்ட விடுதலை எனக்குத் தேவை என்று ஒப்புக் கொள்ள மனமற்று மேட்டிமையாயிருந்தேன்). பின்பு ''சுவிசேஷ எக்ஸ்புளோஷன்'' என்னும் பயிற்சிக்குச் சென்றேன். இயேசு கிறிஸ்து எனக்காக என்ன செய்துள்ளார் என்பதை அறிந்த பொழுது நான் முற்றிலும் வியப்படைந்தேன். எனக்கு அதிக **மகிழ்ச்சி** உண்டாயிற்று தேவன் பேரில் நேசம் கொண்டேன் என் கடையில் இருந்த என் உடன் வேலையாட்களும் கடைக்கு வருபவர்களும் எனக்கு நடந்தது என்ன என்பதைப் பார்க்கும்படி ஆலயத்திற்கு வர ஆரம்பித்தனர்!

கொஞ்ச நாட்களுக்குப் பின்பு மீண்டும் என் மகிழ்ச்சி குறையலாயிற்று என் வேலைப் பிரச்சனை, பணப்பிரச்சனை, மரித்துக் கொண்டிருக்கும் என் தந்தையைப் பற்றிய கவலை போன்றவை என்னைத் தாக்கவே நான் செய்வதறியாது இருந்தேன். சித்திரம் வரைய வேண்டும் என்னும் ஆவல் எனக்கு உண்டாயிற்று ஆனால் தோல்வி அடைந்து விடுவேனோ என்று மிகவும் பயப்பட்டேன். இறுதியில் நான் முயற்சி செய்தேன் நான் வரைந்த படத்தைப் பார்த்தவர்கள் அது மிகவும் தரம் குறைந்ததாக இருந்ததினாலே, என்னுடைய எட்டு வயது மகன் தான்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 254 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அதை வரைந்திருக்கிறான் என்று நினைத்தனர்! ஆனாலும் தேவன் புதிய எண்ணங்களைத் தர ஆரம்பித்தார் என் மனதில் பல சித்திரங்களைப் படைக்கலாயினேன் ....

நான் நாற்பது நாட்கள் உபவாசம் இருக்க வேண்டும் எனத்தீர்மானித்தேன். துணிக்கடையில் என் வேலையை நான் விட்டுவிட வேண்டும் என தேவன் விரும்புவதாக நான் உணர்ந்தேன். ஆனால் அதைக் குறித்த நிச்சயம் எனக்குத் தேவைப்பட்டது. அவர் என்னுடன் பேசும்வரை நான் சாப்பிடப் போவதில்லை என அவரிடத்தில் சொன்னேன். **நாற்பது** நாட்கள் முடிந்ததற்குப் பின்னும் எனக்குப் பதில் கிடைக்கவில்லை. உபவாசத்தைக் கைவிட்டு இருவாரங்கள் சாப்பிடலானேன். பின்பு கோடைக்காலம் முழுவதிலும் மீண்டும் இரண்டு வாரங்கள் உபவாசமிருந்தேன். அது தான் என் வாழ்வில் கடினமான கோடைக்காலமாய் இருந்தது. அது மிகக் கடினமாய் இருந்ததால் தேவனுடைய இரக்கத்திற்காக அவரை நோக்கிக் **கதறினேன்.** அவர் என்னுடன் பேசும்படிக் **கெஞ்சிக்** கேட்டேன். **அவருடைய சித்தத்தை நான் அறிந்து கொள்ள வேண்டியதாயிருந்தது.** என் மனைவியும் என் பிள்ளைகளும் என்மேல் கைகளை வைத்து தேவன் என் வாழ்வில் ஓர் அற்புதத்தைச் செய்ய வேண்டும் என்று ஜெபித்தனர் ....

அப்பொழுது சித்திரக்கார நண்பன் ஒருவன் சித்திரம் தீட்ட உதவும் திரைகள் சிலவற்றை எனக்குத் தந்தான் .... ஒரு ஞாயிறன்று நான் என் குடும்பத்தை ஆலயத்திற்கு அனுப்பிவிட்டு என் முதற்படத்தைத் தீட்டினேன்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு துணிக்கடையில் நான் உட்கார்ந்திருந்தபோது கர்த்தர் என்னுடன் பேசினார்: ''அட்டே! நான் உன்னை மெய்யாகவே ஆசீர்வதிக்க விரும்புகிறேன் என்பதை நீ விசுவாசிக்கிறாயா?'' என்று கேட்டார்.

நான் ''ஆம், கர்த்தாவே ...'' என்றேன்.

**அப்படியானால் ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிறாய்? ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பாததினாலேயே இங்கே நீ உட்கார்ந்திருக்கிறாய். இதுவே உன் தீர்மானம். உன் வாழ்க்கை முழுவதையும் கட்டுப்படுத்தும்படி நீ என்னை உண்மையில் நம்பவில்லை.**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 255 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

''என் வாழ்வை ஏற்றுக் கொள்ளும். என் வாழ்க்கை உமக்கே சொந்தம்'' என்றேன்.

அதற்கு அவர் ''**உன் பையை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் போ**'' என்றார். (இது எனக்கு ''உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட'' என்று அவர் சொல்லியது போல் இருந்தது.)

நான் எழுந்து திரும்பிப் பார்க்காமல் வெளியேறினேன்.

என் முதல் சித்திரம் ஒரு வாரத்திற்குள்ளாக 80 டாலருக்கு விற்றது. இரண்டு வாரங்களில் ஆறு சித்திரங்கள் விற்றதில் எனக்கு 900 டாலர் கிடைத்தது. இரண்டு மாதங்களுக்குப் பின்பு என் சித்திரங்கள் ஒவ்வொன்றும் 600 டாலருக்கு விலை போயின; ஓராண்டிற்குள்ளாக 1800 டாலரும், இரண்டு ஆண்டுகள் முடிவதற்குள் 6500 டாலர்களும் கிடைத்தன.

நான் தீட்டிய சித்திரங்கள் அனைத்தும் விற்றுப் போயின. என் சித்திரங்களுக்கு அதிக மதிப்பு ஏற்பட்டது **என் வேலையை நேசிக்க ஆரம்பித்தேன்!**

ஒன்பது மாதங்கள் சித்திரம் தீட்டியதற்குப் பின்பு என் குடும்பத்தை நான் தாங்க முடிந்ததோடு மட்டுமல்லாமல் பிரேசில் நாட்டிற்குச் செல்வதற்கும் எங்களுக்குப் போதுமான பணம் இருந்தது. என் தந்தை சுவிசேஷத்தைக் **கேட்டதே** இல்லை. ஆனால் நான் கூறியதைக் கேட்ட போது அவர் விசுவாசித்தார்! 89 வயதான என் தந்தை பாவிகளுக்கான ஜெபத்தை ஜெபிக்க தன்னுடைய எஞ்சிய பெலன் முழுவதையும் ஒன்று திரட்டியதைக் கண்டு நான் மகிழ்ச்சியுற்றேன். என் சகோதரர்கள் சகோதரிகளில் அநேகரையும், தாதிமார்களையும், அந்நியர்களையும் கர்த்தரிடம் வழிநடத்தினேன். அமெரிக்காவிற்கு நாங்கள் திரும்பிய இரண்டு வாரங்களுக்குப் பின்பு என் தந்தை முகத்தில் மகிழ்ச்சியுடன் மரித்தார்! தேவன் எனக்குப் பெரும் சிலாக்கியத்தைத் தந்தார்.

பணரீதியில் என் வாழ்வில் பிரதானமாக மாற்றங்கள் இருந்தபோதும், இயேசு சிலுவையில் எனக்காக என்ன செய்தார் என்னும் வெளிப்பாடே மிகவும் முக்கியமானதாக எனக்கு இருந்தது. இப்பொழுது சாபத்திலிருந்து அவர் நம்மை விடுவித்துள்ளார் என நான் முழுமையாக விசுவாசிக்கிறேன். அவர் நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார் என்றும் நம்முடைய வாழ்க்கையைக் குறித்த எல்லாக் காரியங்களிலும் நாம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 256 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவருக்கு **முழு** உரிமையைத் தரவேண்டும் என்று விரும்புகிறார் எனவும் விசுவாசிக்கலானேன். அவருடைய கிருபையும், வல்லமையும் இல்லாமல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது எதையும் உருவாக்க முடியாது. நான் அவருடைய அபிஷேகத்தில் முழுவதும் சார்ந்திருக்கிறேன். **அவர் என்னை நேசிக்கிறார்** என்பது எனக்குத் தெரியும்!

தேவன் இப்பொழுது சொப்பனங்களின் மூலம் மிகத் தெளிவாக என்னுடன் பேசுகிறார் .... நான் சித்திரம் தீட்டுவதை நிறுத்த வேண்டும் என அவர் விரும்பினால் அது வேறொரு சிறந்த ஆசீர்வாதத்தைக் கொடுப்பதற்காகவே என்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் தொடர்ந்து அவர்மேல் நம்பிக்கை வைத்து அவரைத் துதிப்பேன்.

எனக்கு இப்பொழுது விலையேறப்பெற்ற ஆரோக்கியமான மூன்று பிள்ளைகள், மகிழ்வான திருமணம், அற்புதமான நண்பர்கள் உண்டு. இப்படியாக நான் மனிதர்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவனாய் என்னை நான் கருதுகிறேன். **என் சொந்த வாழ்விலே சாத்தான் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டவனாய் இருக்கிறான்.** தேவன் எனக்குக் கொடுத்துள்ள சாட்சி, எண்ணிறந்த கிறிஸ்தவர்களுக்கு உற்சாகமளிப்பதாகவும், இரட்சிக்கப்படாதவர்களுக்கு வியப்பைத் தருவதாகவும் உள்ளது.

*அட்டோவின் வாழ்க்கை வரலாறு, சாபங்களால் சூழப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் பல அம்சங்களைக் கொண்டுள்ளது. இதே போன்ற சூழ்நிலையில் உள்ள தமக்குப் பிரியமானவர்களுக்கு உதவ முற்படுபவர்களை இது உற்சாகப்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. இதில் கற்றுக் கொள்ள வேண்டிய பிரதான பாடங்களாவன:*

*அட்டோவின் வாழ்வில் இருந்த சாபங்களுக்கான மூலகாரணம் அவனுடைய முன்னோர்கள் பல தலைமுறைகளாக ஆவிகளுடன் முழுமையாக ஈடுபாடு கொண்டிருந்ததாகும். இப்படிப்பட்ட ஈடுபாடு கொள்ளும் போது சாபங்கள், பகலை இரவு தொடர்வது போல நிச்சயமாய்த் தொடர்கின்றன என நான் கண்டிருக்கிறேன்.*

*தொடர்ந்து வந்த சாபங்கள் அட்டோவை தனிப்பட்ட நிலையில் மட்டும் பாதிக்கவில்லை. அவைகள் பல வழிகளில்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 257 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அவனுடைய சகோதர, சகோதரிகள் அனைவரையுமே தாக்கின. அவர்களில் இருவர் நீண்ட காலத்தை மனநல காப்பகங்களில் கழித்தனர் என்று கூறினான்.

அட்டோவின் விடுதலையில் இருந்த முதல் படிகளில் ஒன்று அவன் தன் நிலையைச் சரியாகப் புரிந்து கொண்டதாகும். அவனுடைய வாழ்வு சாபத்திற்கு இலக்காய் உள்ளது என்பதை அவன் தெளிவாய்ப் புரிந்து கொண்டதும், சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றத்தின் மூலம் இயேசு தனக்காய் சம்பாதித்த விடுதலையைப் பெற்றுக் கொள்ளும்படி அவன் ஆர்வம் கொண்டான்.

ஆனால் அநேகரைப் போல அட்டோ சாபத்திற்குக் கீழே நீண்டகாலம் வாழ்ந்தபடியினால் தேவனுடைய ஆசீர்வாதம் தன் வாழ்வில் செயல்படுவதாக அவனால் கண்டு கொள்ள முடியாமல் இருந்தது. அவன் தனித்து விடப்பட்டிருந்தால் அந்த ஆசீர்வாதங்களுக்குள் ஒருவேளை அவனால் பிரவேசித்திருக்கவே முடியாது. அவன் பயந்த சுபாவமுடையவனாய் தனித்தே இருந்தான். தேவனுடைய அரசில் செல்லுவதற்கான "பலவந்தம்" அவனில் காணப்படவில்லை. அட்டோவின் மனைவியினாலும் பிள்ளைகளினாலும் மற்றவர்களினாலும் செய்யப்பட்ட உறுதியான பரிந்து மன்றாடுதலின் ஜெபங்கள், கொஞ்சம் கொஞ்சமாக அந்த பயந்த சுபாவத்திலிருந்து அவனை விடுவித்து, சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து செல்ல உதவும் உறுதியான விசுவாசத்தை அவனில் உண்டாக்கியது.

இது சாபத்தின் கீழாய் வாழும் குடும்பத்தின் அங்கத்தினர்களையும் அல்லது மற்ற நேசத்திற்குரியவர்களையும் குறித்துக் கவலைப்படும் கிறிஸ்தவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். அன்பினால் நிறைந்த பொறுமையுள்ள பரிந்து மன்றாடுதலின் ஜெபம் தங்கள் விசுவாசத்தைச் செயற்படுத்த முடியாமல் தவிப்போரை விடுவிக்கக் கூடும்.

இதை வாசிக்கும் பெற்றோர்களில் சிலர் மாந்திரீகத்தில் கட்டுபாடின்றி தாங்கள் சென்றதின் விளைவாகத் தங்கள் பிள்ளைகள் மேல் சாபங்களை வருவித்து, சாத்தானுக்கு அவர்களை அடிமைப்படுத்தியுள்ளனர். அப்படிப்பட்ட



Blessing or Curse Tamil text 2012 revised.p65 258 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பெற்றோர்கள் மனந்திரும்பி தேவனை முழு இருதயத்துடன் தேடுவார்களானால் அவர்களுக்கு ஏசாயா* 49:24–25*ல் தேவன் ஒரு சிறப்பு வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்:*

> "பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப் பொருளைப் பறிக்கக் கூடுமோ? அல்லது நீதியாய்ச் சிறைப்பட்டுப் போனவர்களை விடுவிக்கக் கூடுமோ?
>
> என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப் பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்; உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்."

*இறுதியாக அட்டோ இப்பொழுது அனுபவிக்கும் ஆசீர்வாதங்களைப் பார்க்கும் போது, அது நம்மை உற்சாகப்படுத்துகிறது. தேவன் ஆபிரகாமை "சகல காரியங்களிலும்" ஆசீர்வதித்தது போல் அவனையும் ஆசீர்வதித்திருக்கிறார்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 259 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 21

# அறிக்கைக்கு அப்பால்: பகிரங்கமான அறிவிப்பு, நன்றி செலுத்துதல், துதித்தல்

18 ஆம் அத்தியாயத்தில் உள்ள விடுதலையின் ஜெபத்தில் நாம் எபிரெயர் 3:1ல் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின் மேல் நமது கவனத்தை முதலாவது செலுத்தினோம்: அதாவது இயேசு "நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியராக" உள்ளார். நாம் கர்த்தருடன் தொடர்ந்து கொள்ளும் உறவும் இதனையே சார்ந்திருக்க வேண்டும். இயேசு நமது பிரதான ஆசாரியராக நமக்காகத் தொடர்ந்து ஊழியம் செய்யும்படி, நாம் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தகுந்த வேதவசன அறிக்கையைச் செய்ய வேண்டும்.

அநேக சூழ்நிலைகளில் நாம் மூன்று விதவழிகளில் அறிக்கையைச் செய்யக்கூடும்: வேதத்திற்கு ஒத்த நேர்மறையான அறிக்கையைச் செய்தல்; எந்த அறிக்கையையுமே செய்யாதிருத்தல்; வேதத்திற்குப் புறம்பான எதிர்மறையான அறிக்கையைச் செய்தல். நாம் நேர்மறையான அறிக்கையைச் செய்தால் இயேசுவின் ஊழியம் நமக்கு உதவும்படியாகவும் நம்முடைய தேவைகள் சந்திக்கும்படியாகவும் வழியை வகுக்கிறோம். நாம் அறிக்கையே செய்யாதிருந்தால் சூழ்நிலைகளின் கட்டுப்பாட்டிற்கு நம்மை ஒப்புக் கொடுக்கிறவர்களாவோம். எதிர்மறையான அறிக்கையைச் செய்தால் நாம் நம்மை தீய பிசாசுகளின் சக்திகளுக்கு



Blessing or Curse Tamil text 2012 revised.p65 260 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இலக்காக்குகிறோம். 12 ஆம் அத்தியாயத்தில் "தன்மேலேயே கூறப்பட்டுக் கொண்ட சாபங்கள்" என்னும் தலைப்பில் எவ்வாறு எதிர்மறையான வார்த்தைகள் தீய ஆற்றலை மக்கள் வாழ்க்கையில் கட்டவிழ்க்கிறது என்பதைப் பற்றிய பல உதாரணங்களைக் கண்டோம்.

மெய்யான விசுவாசத்தை வெளிப்படுத்தும் வேத வசன அறிக்கைக்கும், நான் நினைத்ததே சரி என்று சுய சித்தத்தின் அடிப்படையில் செய்யும் அறிக்கைக்கும் பெரும் வித்தியாசம் உள்ளது என்பதை நீ உணர வேண்டும். இதில் மூன்று முக்கிய வித்தியாசங்கள் உள்ளன. முதலாவதாக, வேதத்தின் அடிப்படையில் "அறிக்கை" என்பது வேத வாக்குத்தத்தங்களையும், வசனங்களையும் மட்டுமே அறிக்கையிடுவதாகும். தேவன் ஏற்கெனவே தமது வசனத்தில் கூறியுள்ளதை நமது வாயினால் சொல்லுவதே இந்த அறிக்கை. இதற்கு அப்பாற்பட்டது அறிக்கை அன்று.

இரண்டாவதாக, அறிக்கை என்பது எந்தக் குறிப்பிட்ட வாக்குத்தத்தத்துடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகளினாலும் வரையறுக்கப்பட்டதாய் உள்ளது. வேதத்தில் வரும் பெரும்பாலான வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்கு உட்பட்டவைகளாகும். தேவன் சொல்வதெல்லாம் "நீ இதைச் செய்தால் அப்பொழுது நான் அதைச் செய்வேன்" என்றே உள்ளது. ஒவ்வொரு வாக்குத்தத்தத்திலும் அதற்குத் தகுந்த "இதை" நாம் செய்யவில்லையானால், அதற்கு ஏற்ற "அதை" தேவன் செய்வார் என எதிர்பார்க்க நமக்கு உரிமையில்லை. தகுந்த நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்டால் மட்டுமே அறிக்கை நியாயமானது. கீழ்ப்படிதலுக்குப் பதிலாக அறிக்கையை நாம் தெரிந்தெடுத்துக் கொள்ளமுடியாது.

மூன்றாவதாக, அறிக்கையை மனித சித்தத்தினால் செயற்படுத்தப்படும் ஏற்றதொரு "முறையாக" குறைத்து விட முடியாது. ரோமர் 10:10ன்படி அறிக்கை இருதயத்தில் உள்ள விசுவாசத்திலிருந்து வெளிப்பட்டால் மட்டுமே அது பயனுள்ளதாய் இருக்கும். இருதயத்தின் விசுவாசத்திற்கும், மனதின் விசுவாசத்திற்கும் அடிப்படை வித்தியாசம் உள்ளது. மனதின் விசுவாசம் நம்முடைய மனதிற்கடுத்த காரியங்களினால் உருவாக்கப்படுகிறது; அது



Blessing or Curse Tamil text 2012 revised.p65 261 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உருவாக்கக்கூடியதெல்லாம் வல்லமையற்ற வார்த்தைகளே. அடுத்தபடியாக இருதயத்தின் விசுவாசம் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே உண்டாகக்கூடும். அது அறிக்கை செய்யப்பட்ட காரியத்தை நிறைவேற்றும்படி வல்லமை நிறைந்த வார்த்தைகளை உருவாக்குகிறது. இருதயத்தின் விசுவாசத்திற்கு தேவன் கொடுத்த வாக்குகளை, மனதிற்கடுத்த விசுவாசத்தால் பெற்றுக் கொள்ளவே முடியாது.

பரிசுத்த ஆவியானவர் தம்முடைய சொந்த வல்லமையைக் காத்துக் கொள்பவராய் இருதயத்திற்கு விசுவாசத்தை அளிக்கிறார். அவர் "பில்லி சூனியத்திற்கு" இணங்குகிறவரல்ல. அவரை அச்சுறுத்தவோ, செல்வாக்கைப் பயன்படுத்தி அவரை கட்டுப்படுத்தவோ, அவருடைய சித்தத்திற்கு விரோதமாக அவரை செயல்படச் செய்யவோ எவராலும் முடியாது. இப்படிப்பட்ட விசுவாசத்தைக் குறித்து பவுல் எபேசியர் 2:8–9ல் "இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" என்று சொல்கிறார். மனதிற்கடுத்த விசுவாசம் அநேக நேரங்களில் பெருமை பாராட்டவும், தன் கருத்தை வலியுறுத்தவும் செய்கிறது. இன்னொரு வகையில் பார்த்தால் இருதயத்திலுள்ள மெய்யான விசுவாசம் மனத்தாழ்மையோடு தான் தேவனை முழுமையாய் சார்ந்திருப்பதை ஒப்புக் கொள்கிறது.

அறிக்கையைப் பற்றி மேற்சொன்ன காரியங்களைச் சரியாகப் புரிந்து கொண்டு அவைகளைச் செய்யும்போது கிறிஸ்தவ வாழ்க்கையை அது தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது. யாக்கோபு 3:4–5ல் அப்போஸ்தலர் நாவை ஒரு கப்பலின் சுக்கானுக்கு ஒப்பிடுகிறார். கப்பலின் முழு உருவத்துடன் சுக்கானை ஒப்பிடும் போது அது சிறியதாக இருந்தாலும், கப்பல் செல்கின்ற பாதையையே அது நிருணயிக்கின்றது. சரியாகப் பயன்படுத்தப்பட்டால் அது கப்பலைப் பத்திரமாகச் சரியான துறைமுகத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கும். தவறாகப் பயன்படுத்தப்பட்டால் அது கப்பற்சேதத்தை விளைவிக்கும்.

நமது விசுவாசத்தை நாம் எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதும் இவ்வாறாகவே உள்ளது. சரியான அறிக்கையானது,



Blessing or Curse Tamil text 2012 revised.p65 262 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*தேவன் வாக்களித்துள்ள எல்லா ஆசீர்வாதங்களுக்குள்ளும் நம்மை வழிநடத்தக்கூடும். தவறான அறிக்கை நம்மை மென்மேலும் தொலைதூரத்திற்கு எடுத்துச் சென்று—பாதை தெரியாத நிலையில் வழிதவறச் செய்து, ஆபத்தான கடலிலே கப்பற்சேதத்தை உண்டாக்கும்.*

*மக்கள் அநேக நேரங்களில் தாங்கள் பேசும் வார்த்தைகளுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள மனதற்றவர்களாய் உள்ளனர். என்றாலும் இயேசுவைப் பொறுத்தமட்டில் இந்தக் காரியத்தில் தப்பித்துக் கொள்வதற்கு வழியில்லை: "ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" (மத்தேயு* 12:37) *என கூறியுள்ளார். நம்முடைய வார்த்தைகள் தேவனுடைய பார்வையில் நம்மை நீதிமான்களாகத் தீர்க்கக்கூடும் அல்லது குற்றவாளிகளாகத் தீர்க்கக்கூடும். இவ்விரண்டிற்கும் மத்தியில் நடுநிலை என்று ஒன்றில்லை.*

*ரோமர்* 10:10*ன் படி இருதயத்தின் விசுவாசம் வாயினால் அறிக்கை பண்ணப்படும் போது மட்டுமே முழுவதும் பயனுள்ளதாகிறது. அவிசுவாசத்தைப் பற்றியும் இது உண்மையாய் இருக்கிறது. நம்முடைய அவிசுவாசத்தை நாம் வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தும் போது அவற்றின் எதிர்மறை சக்தி நமக்கு விரோதமாகச் செயல்பட்டு, விசுவாசத்திற்கு தேவன் வாக்களித்துள்ள ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ளமுடியாதபடிச் செய்கிறது.*

*எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் சரியான அறிக்கையின் முக்கியத்துவத்தைக் குறித்து மேலும் இரண்டு எச்சரிப்புகளைத் தருகின்றார். எபிரெயர்* 4:14*ல்*

> "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்" என்கிறார்.

*மீண்டும் எபிரெயர்* 10:21,23*ல்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 263 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், ...

அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே."

*இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் நமது அறிக்கைக்கும், பிரதான ஆசாரியராக இயேசு செய்யும் ஊழியத்திற்கும் ஒரு நேரிடைத் தொடர்பு உள்ளது. இந்த அடிப்படைக் கொள்கை புதிய ஏற்பாடு முழுவதிலும் உண்மையாய் இருக்கிறது : நமது அறிக்கையே நம்மைப் பிரதான ஆசாரியராகிய இயேசுவுடன் இணைத்து, நமது சார்பில் அவருடைய ஆசாரியப் பணியைப் பெற்றுக் கொள்ளச் செய்கிறது.*

*இந்தப் பகுதிகளில் முக்கியமாய் வலியுறுத்தப்பட வேண்டிய மற்றொரு காரியம் **உறுதியாய்ப் பற்றிக் கொண்டு இருக்கக்கடவோம்** என்னும் வார்த்தைகளாகும். சரியான அறிக்கையை முதலில் செய்ய வேண்டியது முக்கியமாயினும், அதுமட்டும் போதாது; அதே பிரச்சனை மீண்டும் எழுகின்ற வேளையில் நாம் முதலில் செய்த அறிக்கையை விட்டுவிடாமல் தொடர்ந்து செய்ய வேண்டும்.*

*எபிரெயர் 10:23ல் அதன் எழுத்தாளர் நாம் நமது அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல் அதில் **அசைவில்லாமல் உறுதியாய்** இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். நம்மை அசைக்கக்கூடிய பல சாத்தியமான சூழ்நிலைகளை அவர் தெளிவாகத் தன் மனக்கண்ணால் காண்கிறார். "மனவுறுதியின்றி" இருக்கும் போது முதலில் செய்த சரியான அறிக்கையைக் காத்துக் கொள்ள தவறிவிடவோ அல்லது நேர்மறையான அறிக்கையை எதிர்மறையாக மாற்றி விடவோ கூட வாய்ப்புண்டு. அது எப்படியாயினும் மனவுறுதியின்றி இருப்பதற்குக் கொடுக்கப்படும் எச்சரிக்கை நமக்கு விரோதமாக வரும் அழுத்தங்கள் எல்லாம் ஒரே நோக்கத்தைக் கொண்டதாக உள்ளது எனச் சுட்டிக்காட்டுகிறது : அதாவது அவைகள் முதலில் செய்த சரியான அறிக்கையை மாற்றிச் சொல்லவோ அல்லது அதனை*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 264 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*மறுதலிக்கவோ செய்கின்றன.*

*சரியான அறிக்கையைச் செய்வது ஒருவேளை மிக சாதாரணமாகக் காணப்படுகிறது: ஒவ்வொரு பிரச்சனையைக் குறித்தும் அல்லது ஒவ்வொரு சோதனையைக் குறித்தும் வேதம் என்ன சொல்லுகிறதோ அதை மட்டுமே சரியாகச் சொல்ல வேண்டும், தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். ஆம், இது சாதாரணமானதுதான். ஆனால் செய்வதற்கு இது எளிதன்று! உண்மையில் இது குறித்து என் கருத்து என்னவென்றால்—என் சொந்த அனுபவத்தின்படியும் பிறருடைய வாழ்க்கையை உற்று நோக்கியதிலிருந்தும்—இதுவே கிறிஸ்தவ குணத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் சிறந்த பரீட்சையாக உள்ளது.*

*இந்தச் சோதனையைத் தான் இரத்த சாட்சியாய் மரித்த ஒவ்வொருவரும் சந்தித்தனர். குற்றச்சாட்டுகள், பயமுறுத்தல்கள், சித்திரவதைகள் இவைகளைச் சந்திக்கும் பொழுது அவன் ஒரு பிரதான அர்ப்பணிப்பைக் காத்துக் கொள்கிறான்: சத்தியத்தைக் குறித்து அவனுடைய அறிக்கையைக் கடைசி வரை விட்டுவிடாதிருக்கிறான்.*

*காணப்படும் மனித விரோதிகளிடமிருந்து குற்றச்சாட்டுகள் வரும் பொழுது இந்தக் காரியங்கள் ஓரளவிற்குத் தெளிவாக உள்ளது. ஆனால் மிக எளிதில் கண்டுணர முடியாத மற்றொரு வகையான சோதனை உள்ளது: அது காணப்படாத பிசாசின் சக்திகளால் நமது மனதிற்கு விரோதமாக, உள்ளார்ந்த நிலையில் ஏற்படும் குற்றச்சாட்டுகளாகும். என்றாலும் நாம் செயல்பட வேண்டிய விதம் ஒன்றே: அந்தக் காணப்படாத சக்திகள் செயலிழந்து முறியடிக்கப்படும் வரை, அசையாத தீர்மானத்துடன் சத்தியத்தின் அறிக்கையைத் தொடர்ந்து செய்யவேண்டும்.*

*இந்தச் சோதனையை வெற்றிகரமாக கடந்து செல்லும் எந்தக் கிறிஸ்தவனும் நிச்சயமாய் ஜெயம் கொள்ளுகிறவனாக இருந்து, ஜெயம் கொள்ளுகிறவர்களுக்கு தேவன் வாக்களித்துள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வான்.*

*என்றாலும் விசுவாசத்தை முழுமையாக, வெற்றிகரமாக வெளிப்படுத்துவதற்கு, அறிக்கைக்கு அப்பாற்பட்டு மேலும் ஒரு காரியம் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அது "பகிரங்கமாய்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 265 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அறிவிப்பதாகும்." "வெளிப்படையாக ஆரவாரம் செய்தல்" அல்லது "சத்தமிட்டு ஆரவாரிப்பது" என்னும் அர்த்தமுடைய இலத்தீன் வினைச் சொல்லிலிருந்து வந்த இந்த சொல், எந்தவித எதிர்ப்பினாலும் அல்லது சோர்வினாலும் அமைதிப்படுத்த முடியாதபடி உறுதியாய், நிச்சயமான நிலையில் விசுவாசத்தில் பிடிவாதமாக இருப்பதைக் குறிப்பாகக் கூறுகிறது. இது தற்காப்பு நிலையிலிருந்து, தாக்குகின்ற நிலைக்குக் கடந்து செல்வதைக் குறிப்பாக உணர்த்துகிறது.*

*சங்கீதம்* 118:11–17 *வரையுள்ள வசனங்களில் சங்கீதக்காரன் இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை விளக்குகிறான். அவனுடைய விரோதிகள் எல்லாப் பக்கத்திலும் சூழ்ந்து கொண்டு அவனை அழிக்க முற்படுகின்றனர். ஆனால் கர்த்தர் இடைப்பட்டு அவனுக்கு வெற்றியைத் தருகிறார். தற்காப்பு நிலையிலிருந்து தாக்கும் நிலைக்கு அவன் கடந்து செல்வது* 15*ம்* 17*ம் வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது:*

> "நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும் . . .
>
> நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்."

*கர்த்தர் தனக்கு செய்த காரியங்களை சங்கீதக்காரன் மகிழ்ச்சியாய் நம்பிக்கையுடன் பகிரங்க அறிவிப்பு செய்ததுதான் அவனுடைய வெற்றியின் மேல் முத்திரையைப் பதித்தது. இதை சரியாகச் செய்யும் போது நமக்கும் இப்படியே நடக்கும்.*

*இயேசுவின் தியாக மரணத்தின் மூலம் தேவன் நமக்குக் கொடுத்துள்ள சிலாக்கியங்கள் அனைத்தையும் நம்பிக்கையுடன் பகிரங்கமாக அறிக்கை செய்ய நாம் பழக்கிக் கொள்ளும்போது அது மேலும் இரண்டு விதங்களில் வெளிப்படுகிறது: அவைகள் நன்றி செலுத்துதலும், துதித்தலும் ஆகும். நாம் வெளியரங்கமாக அறிவித்ததை உண்மையாய் விசுவாசித்தால் நாம் செய்யும் செயல் இவ்வாறே இருக்கும்! எங்கே மெய்யான விசுவாசம் இருக்கிறதோ அங்கே வெளிப்படையான அறிக்கையைத் தொடர்ந்து நன்றி செலுத்துதலும் துதித்தலும் உண்டாகும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 266 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நன்றி செலுத்துதலும், துதித்தலும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தாலும் அவைகளுக்கிடையில் ஒரு வித்தியாசம் உண்டு. சாதாரணமாகச் சொன்னால் தேவன் செய்பவைகளுக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் யாராய் இருக்கிறார் என்பதற்காக நாம் அவரைத் துதிக்கிறோம். நன்றி செலுத்துதலும், துதித்தலும் இணைந்து நம்மை நேரிடையாக தேவ பிரசன்னத்திற்குள் கொண்டு வருகிறது.*

*இது 100ம் சங்கீதம் 4ம் வசனத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது:*

"அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்."

*தேவனை நெருங்கிச் சேர்வதில் இரு நிலைகளை சங்கீதக்காரன் கூறுகின்றான். முதலாவதாக அவர் வாசல்களில் துதியோடும் பின்பு அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசிக்கிறோம். இது உடனே தானே நம்மை தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டு வருகிறது. நாம் அவருடன் நெருங்கிச் சேர்வதற்கு இந்த நிபந்தனைகளை நிறைவேற்றவில்லையாயின் அவரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடக்கூடும். ஆனால் தூரத்திலிருந்து மட்டுமே கூப்பிடமுடியும். அவர் இரக்கத்துடன் நமது குரலுக்குச் செவி கொடுப்பார். எனினும் அவருடைய பிரசன்னத்திற்கு நாம் நேரிடையாக நெருங்கிச் செல்ல முடியாது.*

*நன்றி செலுத்துதலும் துதித்தலும் தேவனுக்கு நமது விசுவாசத்தை உடனடியாய் தெரிவிக்கும் இரண்டு முக்கிய வழிகளாகும். தேவன் எப்பொழுதெல்லாம் நமக்கு ஒரு ஆசீர்வாத வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறாரோ அல்லது அவர் நமக்கு ஆயத்தப்படுத்தியுள்ள ஒரு சிலாக்கியத்தை வெளிப்படுத்து கிறாரோ, அப்பொழுதெல்லாம் நாம் ஆபிரகாமைப் போல் நடந்து தேவனுடைய வார்த்தையை, அது சொல்லப்பட்ட நேரத்திலிருந்து உண்மை என ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆகையால் நியாயமாய் நாம் உடனே அவருக்கு நன்றி செலுத்தவும் துதிக்கவும் ஆரம்பிக்கிறோம். அந்த வாக்குத்தத்தம் அல்லது சிலாக்கியம் அனுபவரீதியில் வரும்வரை நாம்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 267 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

காத்திருக்கத் தேவையில்லை.

2 நாளாகமம் 20ம் அதிகாரத்தில் யூதாவின் அரசனான யோசபாத் ஆட்சி செய்த பொழுது நடந்த ஒரு சம்பவம் இந்தக் காரியத்தை விளக்குகிறது. தெற்கிலிருந்து ஒரு பெரிய இராணுவம் அந்த அரசனுக்கு விரோதமாக முன்னேறிக் கொண்டு வருகிறது என செய்தி வந்தது. அந்த இராணுவத்தை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் தனக்கில்லை என்பதை யோசபாத் அறிந்திருந்தான். அதன் பயனாக ஒருமனப்பாடுடன் உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் தேவ உதவியை நாடும்படி தனது மக்கள் அனைவரையும் கூட்டிச் சேர்த்தான்.

தேவன் ஒரு லேவியன் மூலம் தீர்க்கதரிசன வார்த்தையை வழங்கி அவர்களுடைய விண்ணப்பத்திற்குப் பதிலளிக்கிறார். அதில் யோசபாத் தனது மக்களை எதிரிக்கு விரோதமாக ஒரு குறிப்பிட்ட வழியில் நடத்திச் செல்லும்படி சொல்லப்பட்டது. உறுதியையும், உற்சாகத்தையும் அளிக்கும் வார்த்தைகளும் அதில் இருந்தன: "நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது … இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" என்றார்.

அதற்குப்பின் அந்த இராணுவ சூழ்நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் யோசபாத் மேற்கொண்டு எந்த அடையாளத்தையும் கேட்காமல் தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசத்தினால் பெற்றுக் கொண்டான். அடுத்த நாளிலே அவன் "பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான்."

யுத்தத்திற்குச் செல்லும் ஓர் இராணுவத்திற்கு நிச்சயமாய் இது வழக்கமான முறையன்று. ஆனால் அது கிரியை செய்தது! கர்த்தர் தம் மக்களின் துதியைக் கேட்டதும் இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக நிலையில் இடைப்பட்டு, எதிர்கொண்டு வரும் இராணுவத்திலிருந்த பல நாடுகளின் பிரிவினர்களுக்கு





Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மத்தியில் ஒரு பிரிவினையின் ஆவியை அனுப்புகிறார். திடீரென எந்தக் காரணமுமின்றி அவர்கள் அனைவரும் அழியும் வரை ஒருவருடன் ஒருவர் சண்டை போட ஆரம்பித்தனர். யூதா மக்கள் சண்டையிடாமலேயே அழிக்கப்பட்ட எதிரிகளின் உடைமைகளை மட்டும் கொள்ளையிட வேண்டியிருந்தது! தம்முடைய மக்கள் வேறு எந்த உறுதிப்பாட்டிற்காகவும் காத்திருக்காமல் விசுவாசத்தினால் தமது வாக்குத்தத்தத்தின் பேரில் செயல்பட்டதினால் தேவன் இவ்விதமாக இடைப்பட்டார்.

இரண்டு முக்கிய தத்துவங்கள் இந்த சம்பவத்தினால் விளக்கப்படுகின்றன. முதலாவது, தேவன் அளிக்கும் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதைக் காணும்படி காத்திருக்காமல் அவைகளுக்காக நாம் அவரைத் துதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இரண்டாவதாக, விசுவாசத்தினால் ஏறெடுக்கப்படும் துதி நமது சார்பில் இயற்கைக்கப்பாற்பட்ட நிலையில் தேவனை செயல்படச் செய்கிறது. சுருக்கமாகச் சொன்னால் வாக்களிக்கப்பட்ட வெற்றியைப் பெறுவதற்கு முன்பே விசுவாசம் தேவனைத் துதிக்க ஆரம்பிக்கிறது; வெற்றி கிடைத்ததற்குப் பின்பு அல்ல.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் 16ம் அதிகாரத்தில் பிலிப்பி பட்டணத்தில் பவுலுக்கும், சீலாவுக்கும் உண்டான அனுபவம் இதே தத்துவங்களை விளக்குகிறது. ஒரு அடிமைப் பெண்ணிடமிருந்து பிசாசைத் துரத்தினதின் விளைவாக அவர்கள் அநியாயமாய் கைது செய்யப்பட்டு, கொடூரமாய் நிந்திக்கப்பட்டு, கால்கள் தொழு மரத்தில் மாட்டப்பட்டவர்களாய் சிறையில் அதிக பாதுகாப்பான பகுதியில் வைக்கப்படுகின்றனர். அவர்களுடைய இருளில் கொஞ்சமேனும் ஒளியின் கிரணம் காணப்படவில்லை. அவர்களுடைய சரீரப்பிரகாரமான சூழ்நிலையில் அவர்களை ஆறுதல்படுத்தவோ உற்சாகப்படுத்தவோ யாரும் இல்லை. எதிர்காலத்தைக் குறித்து எந்த நம்பிக்கையும் இல்லை.

என்றாலும் அவர்களுடைய ஆவியில், அவர்கள் தேவனுடைய நித்திய விசுவாசத்தை எதுவும் மாற்ற முடியாது என்றும் கிறிஸ்து அவர்களுக்காகச் சம்பாதித்த வெற்றியை யாரும் பறித்துக் கொள்ள முடியாது எனவும் அறிந்திருந்தனர்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 269 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அவர்களுடைய விசுவாசம் அவர்களுடைய சூழ்நிலைகளின் மேல் வெற்றிகண்டது. நள்ளிரவில்—இருளான நேரத்திலே—அவர்கள் தேவனுக்குக் துதி கீர்த்தனைகளைப் பாடினர்!*

*யோசபாத்தின் இராணுவத்திற்குச் செய்ததுபோலவே அவர்களின் துதி இயற்கைக்கப்பாற்பட்ட நிலையில் தேவன் அவர்கள் சார்பாக இடைபடும்படிச் செய்தது. "சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டன; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று" (அப்போஸ்தலர்* 16:26).

*யோசபாத்தின் இராணுவத்தின் அனுபவமும் சிறைச்சாலையில் பவுல், சீலா இவர்களின் அனுபவமும் நமக்குக் கற்றுத்தரும் பாடத்தை சங்கீதம்* 50:23*ல் கர்த்தர் தாமே தொகுத்துக் கூறுகிறார்*:

> "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப் படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன்".

*சிலுவையில் இயேசு செய்த தியாகத்தின் மூலம் தேவனுடைய இரட்சிப்பு ஏற்கெனவே முழுமை அடைந்திருக்கிறது. நாம் செய்வதோ, சொல்வதோ எதுவும் அதை மாற்ற முடியாது. ஆனால் நாம் அதற்கு இணங்கி நன்றியறிதலின் பலியையும், ஸ்தோத்திர பலியையும் ஏறெடுக்கும் போது, இரட்சிப்பின் சிலாக்கியங்கள் நம்முடைய வாழ்வில் வெளிப்படும்படி வழியை வகுக்கிறோம். யோசபாத்தைப் போலவும், பவுல் சீலாவைப் போலவும் அந்தப் பலன்களை நாம் உண்மையில் அனுபவிப்பதற்கு முன்பு விசுவாசத்திலே ஸ்தோத்திர பலியைச் செலுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*சங்கீதம்* 20:5*ல் தாவீது "நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம்" என்கிறான். மீண்டும் உன்னதப்பாட்டு* 6:10*ல் கிறிஸ்துவின் மணவாட்டி "கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய்" என்று*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 270 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சித்தரிக்கப்படுகிறாள். தேவன் நமக்குக் கொடுத்துள்ள மூன்று முக்கிய பயனுள்ள "கொடிகள்" வெளிப்படையாக **அறிக்கையிடல், நன்றி செலுத்துதல், துதித்தல்** ஆகும்.

முதலாவதாக, நாம் **வெளிப்படையாக அறிக்கையிடல்** என்னும் கொடியை உயர்த்த வேண்டும். நம்முடைய குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்ற அல்லது நம்முடைய குறிப்பிட்ட தேவையைச் சந்திக்கக்கூடிய தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தத்தையோ அல்லது சிலாக்கியத்தையோ விசுவாசத்தில் தைரியமாய் பறைசாற்ற வேண்டும். பின்பு நாம் வெளியரங்கமாக அறிவித்த சத்தியத்திற்காக விசுவாசத்தில் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இறுதியாக நாம் **நன்றி செலுத்துவதிலிருந்து** மகிழ்வுடன் **துதிக்கு** கடந்து செல்ல வேண்டும். இவையனைத்தையும் நாம் நமது சூழ்நிலையில் எந்த காணப்படக்கூடிய மாற்றத்திற்காகவும் காத்திருக்காமல், **களங்கமற்ற விசுவாசத்தில்** செய்ய வேண்டும்.

தமது சொந்த வழியிலும் ஏற்ற காலத்திலும் தேவன் ஆபிரகாமுக்குச் செய்ததுபோல நமது விசுவாசத்திற்கும் பதிலளிப்பார். நாம் எந்த சத்தியத்தை வெளியரங்கமாய் அறிவித்து தேவனுக்கு நன்றியையும், துதியையும் செலுத்தினோமோ அந்த சத்தியமானது நமது அனுபவத்தில் தோற்றமளிக்கும்.

இந்த வெளியரங்கமான அறிக்கை, நன்றி செலுத்துதல், துதி ஆகிய மூன்று கொடிகளை நாம் உயர்த்தும் பொழுது ஒரே நேரத்தில் இரண்டு நோக்கங்களை அடைகிறோம். முதலாவது நாம் வெளியரங்கமாக அறிவித்த தேவனுடைய வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறோம். இரண்டாவதாக நமக்கு ஆசீர்வாதங்கள் வராதபடி தடுத்து நிறுத்த முற்படும் சாத்தானுடைய சக்திகளை முறியடிக்கிறோம். இவ்விதமாக நாம் நமது சுதந்திரத்திற்குள் வெற்றி நடைபோட்டு "கொடிகள் பறக்கும் படையைப் போல் அச்சமுறுத்துபவளாய்" என்னும் சாலொமோனின் தீர்க்கதரிசன வார்த்தையை நிறைவேற்றுகிறோம்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 271 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 22

# தொடர்ந்து வெற்றிபெற செய்ய வேண்டிய அறிக்கைகள்

*இந்தப்புத்தகத்தில் நான் பகிர்ந்து கொள்ளும் சத்தியங்கள், புதிரான காரியங்களை விளக்கும் அறிவிற்கடுத்த குறிப்புகள் மட்டுமன்று; அதற்கு மாறாக, ரூத்தும் நானும் குறைந்தது மூன்றாண்டுகளாக உறுதியான ஜெபத்திலும் ஆவிக்குரிய போராட்டத்திலும் தரித்திருந்து, இவைகளைச் "சுரங்கத்திலிருந்து" எடுத்துத் தருவதுபோலத் தருகிறோம். இந்தப் புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு முக்கிய சத்தியமும் முதலாவதாக எங்கள் சொந்த அனுபவத்தில் சோதித்து நாங்கள் உண்மையெனக் கண்டவை. எங்களுக்கே பயன்தராத தத்துவங்களைப் பிறருக்கு அளிக்க நான் விரும்பவில்லை.*

*கடந்த அத்தியாயத்தில் வெளிப்படையான அறிக்கையிடுதலும், நன்றி செலுத்துதலும், துதியும் இணைந்து செயல்பட்டு, வாக்களிக்கப்பட்ட தேவனுடைய ஆசீர்வாதங்களை நம் வாழ்வில் உணரச்செய்யக்கூடும் என்பதை நான் விளக்கினேன். இந்த அத்தியாயத்தில் எவ்வாறு ரூத்தும், நானும் இந்தத் தத்துவத்தை எங்கள் சொந்த வாழ்வில் உண்மையெனக் காண்கிறோம் என்பதைக் கூற முற்படுகிறேன். தேவனுடைய வார்த்தையை ஒழுங்காக அறிக்கை செய்து, பின்பு அதற்காக அவருக்கு நன்றியையும், துதியையும் ஏறெடுக்கும் பழக்கம் எங்களுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்வின் மாறாததொன்றாக உள்ளது. இதை தேவன் வேதத்திலிருந்து எங்களுக்கு வெளிப்படுத்தின மிக விலையேறப்பெற்ற சத்தியங்களுள் ஒன்றாகக் கருதுகிறோம்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 272 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பணம் போட்டு வைக்கும் வங்கியைப் போன்று வசனங்களினால் நிறைந்த மத்திய "வங்கி" ஒன்றை நிறுவ தேவன் வழிநடத்தினார். இவ்வசனங்களை நாங்கள் மனப்பாடம் செய்து எங்களுடைய ஜெபவேளையிலும் ஆவிக்குரிய போராட்டத்தில் நாங்கள் ஈடுபடும் போதும், எடுத்துப் பயன்படுத்துகிறோம். இவைகளை விசுவாசத்தில் வெளியரங்கமாக அறிக்கையிடுவது பொதுவாக அதற்கேற்ற நன்றி செலுத்துதலையும், துதியையும் தோற்றுவிக்கிறது.*

*பொதுவாக இவைகளை நாங்கள் சத்தமாக தனித்தோ அல்லது சேர்ந்தோ சொல்லுகிறோம். என்றாலும் நாங்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்தோ அல்லது சுவர்களைப் பார்த்தோ அல்லது எங்கள் அறையின் மேற்கூரையைப் பார்த்தோ கூறவில்லை. நாங்கள் ஒரு பரந்த ஆவிகளின் காணப்படாத உலகத்தை நோக்கி இவைகளைப் பேசுகிறோம்: முதலாவதாக பிதாவாகிய தேவனிடமும் குமாரனிடமும் ஆவியானவரிடமும் கூறுகிறோம்; பின்பு தேவனை ஆராதித்து சேவிக்கும் பரலோகத்தின் தேவதூரதர்கள் அனைவரிடமும் கூறுகிறோம். இவர்களெல்லாரும் "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அனுப்பப் படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்" (எபிரெயர் 1:14). தங்கள் பூவுலகப் பயணத்தை வெற்றிகரமாய் முடித்த, முன் காலங்களில் வாழ்ந்த பரிசுத்தவான்களின் கூட்டமாகிய "மேகம் போன்ற திரளான சாட்சிகளினால்" நாங்கள் சூழப்பட்டிருக்கிறோம் என்னும் எண்ணம் உடையவர்களாயும் இருக்கிறோம் (எபிரெயர் 12:1).*

*இது எபிரெயர் 12:22–24 வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ளதை முறையாக செயற்படுத்துவதாக நாங்கள் விசுவாசிக்கிறோம்:*

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்,

பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 273 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்,

புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்."

*எங்களைக் கவனிக்கும் இக் கூட்டத்தில் சாத்தானும் அவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் எல்லா தீய தூதர்களும் மற்ற பிசாசுகளும் கூட அடங்குவர். இந்த ஆவிகள் தேவனுடைய பணிவிடையின் தூதர்களுக்கு எதிர்மாறாகச் செயல்படுகின்றன. மனுக்குலம் அனைத்தின் மேலும் பலவித தீங்கையும், கெடுதியையும் உண்டாக்க வேண்டுமென்பதே இவைகளின் நோக்கம்; அதிலும் முக்கியமாக மெய் தேவனுக்கு ஊழியம் செய்பவர்களைத் தாக்குவதே முதன்மையானது.*

*இந்தச் சூழ்நிலையில் எங்களுடைய வெளியரங்க அறிக்கை இரு பலன்களை உண்டாக்குகிறது. ஒரு பக்கம் தேவனுடைய உதவியையும் அவருடைய தூதர்களின் உதவியையும் எங்கள் சார்பில் கிடைக்கச் செய்கிறது; மறுபக்கம் அது சாத்தானும், பிசாசுகளின் கூட்டங்களும் தீட்டும் திட்டங்களிலிருந்தும் தாக்குதல்களிலிருந்தும் எங்களைப் பாதுகாக்கிறது.*

*இவ்விதமான வெளிப்படையான அறிக்கை தொடர்ந்து எங்களுடைய விசுவாசத்தை வளர்க்கிறது. ரோமர் 10:17ன் படி "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே (பேசப்பட்ட ரேமா வார்த்தையினாலே) வரும்." தேவனுடைய வார்த்தையை மற்றவர்கள் பேசக் கேட்பது உதவியாயிருக்குமாயினும், அதை நாமே கூற நம் செவிகள் மூலம் கேட்பது இன்னும் அதிக பயனுள்ளதாய் இருக்கும். நாங்கள் இருவரும் வசனத்தைப் பேசிக் கேட்கும் போது இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய தேவனுடைய வார்த்தை எங்களில் ஒரே நேரத்தில் கிரியை செய்கின்றது. (எபிரெயர் 4:12யைப் பார்க்க.)*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 274 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இறுதியாக நாங்கள் ஒரே அறிக்கையை இணைந்து இசைவாய் செய்யும் பொழுது, இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமை வெளிப்படுகிறது. இயேசு "உங்களில் இரண்டு பேர் . . . எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் ... ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 18:19) எனக் கூறுகிறார். ஒரு விசுவாசி சுயமாய் ஓர் அறிக்கையைச் செய்யும் போது அதன் வல்லமை அதிகமாயிருப்பினும், இரண்டு அல்லது அதற்கு மேலானோர் இணைந்து இசைவாய் ஒரு அறிக்கையைச் செய்யும் போது அதன் வல்லமை அதற்கேற்ற நிலையில் மேலும் அதிகரிக்கிறது.

அநேக நேரங்களிலும் சூழ்நிலைகளிலும் அறிக்கையை உரக்கச் செய்வது கூடாததாக இருக்கலாம். அவ்வேளைகளில் அதே அறிக்கையைப் பிறர் கேட்காத வண்ணம் ஒருவன் தன் மனதிலே செய்யலாம். மனதில் சொல்லப்பட்ட வார்த்தைகள் கூட ஆவிக்குரிய தளத்தில் ஒரு வல்லமையான விளைவை உண்டாக்கக்கூடும்.

எதிரியானவன் நம் மனதை பொய்களினாலும், குற்றச் சாட்டுகளினாலும் தாக்கும் போது இதுவே மிகவும் திறமையான வழியாக இருக்கிறது. இவ்வகையான போராட்டங்கள் நடைபெறும் பிரதான யுத்த களம் மனிதனின் மனமே. நாம் நமக்குள்ளாக அறிக்கையிடும் வார்த்தைகளுக்கு இணங்கி செயல்படும்போது, எதிராளியின் எதிர்மறையான எண்ணங்களுக்கும் சதித்திட்டங்களுக்கும் நம்மனதில் இடமில்லாமல் போகிறது.

என்றாலும் இவைகள் எல்லாவற்றிலும், தொடர்ந்து நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்தவர்களாய் இருக்க கவனம் கொள்ள வேண்டும். இல்லையாயின் இக்கருத்துக்கள் ஒரு கோட்பாடாக மாறி "காசைப்போட்டதும் பொருட்களை வழங்கும் பரலோக வெண்டிங் இயந்திரம்போல" தேவன் செயலாற்றுவதாக எண்ண ஏதுவாகும். அப்பொழுது நாம் சரியான அறிக்கையை இயந்திரத்தில் சொருகினால் போதும் நாம் தெரிந்தெடுக்கும் மாம்சீகத்திற்கடுத்த எந்தத் தேவையும் வெளிவரும்! இது தேவனுடன் ஒரு விசுவாசி கொள்ளும் உறவைக் கேலியாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 275 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*நாம் நம்மையே பார்க்கும் விதத்திற்கும் பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பார்க்கும் விதத்திற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. நாம் விரும்புவது ஒன்றாக இருக்கலாம்; ஆனால் பரிசுத்த ஆவியானவரோ நமக்கு எது தேவை என்பதைப் பார்க்கிறார். நம்முடைய தனிப்பட்ட சூழ்நிலைக்கும் விசுவாச அளவிற்கும், ஏற்ற வகையான அறிக்கையைச் செய்ய நம் ஒவ்வொருவரையும் வழிநடத்தும்படி அவர் மட்டுமே நம்பத்தகுந்தவர். இவ்விதமாக தேவன் நமது வாழ்வில் தமது நோக்கத்தை நிறைவேற்றக் கூடும். இது கவனிக்கப்பட வேண்டியது.*

*பல சூழ்நிலைகளுக்கும் ஏற்றதாக அமையக்கூடிய சில அறிக்கைகளை நான் கீழே தந்துள்ளேன். இவற்றை நானும் ரூத்தும் சேர்ந்து செய்து பயனடைந்துள்ளோம். முடிந்த அளவிற்கு நாங்கள் அறிக்கையிடும் வேத வசனங்களை "எங்களுக்கு" உரியதாகவே எடுத்துக் கொள்கிறோம். உதாரணமாக விசுவாசிகளுக்கு சொல்லப்பட்ட வாக்கியத்தில் "நீங்கள்" என்ற சுட்டுப்பெயர் வரும் இடத்தில் நாங்கள் பொதுவாக அதனை "நான்" அல்லது "நாங்கள்" என்று மாற்றி அதற்கேற்ற இலக்கண மாற்றங்களையும் செய்கிறோம்.*

*என்னுடைய பட்டியலில் முதலில் இந்தப் புத்தகத்தின் தலைப்புடன் நேரிடையாக சம்பந்தப்பட்ட வேத வசனங்களைக் கொடுத்துள்ளேன். பின்பு பொதுவாக பொருந்தக்கூடிய மற்ற அறிக்கைகளையும் தந்துள்ளேன். சில குறிப்புகளும், விளக்கங்களும் இடையே சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறிக்கையிலும் ஏற்ற வேதவசனம் அளிக்கப்பட்டுள்ளது.*

### *1. சாபங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஜெபத்தை ஜெபித்ததின் பலனாக (அத்தியாயம் 18யைப் பார்க்க)*

சிலுவையின் மேல் இயேசு செய்த தியாகத்தின் மூலம், நான் சாபத்திலிருந்து விடுபட்டு சகல காரியங்களிலும் தேவன் ஆசீர்வதித்திருந்த ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள் நுழைந்திருக்கிறேன்.

இது கலாத்தியர் 3:13–14யைத் தழுவியது



Blessing or Curse Tamil text 2012 revised.p65 276 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*ரூத் தன்னுடைய வாழ்வில் அநேக சாபங்களிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறாள். அனுபவ ரீதியில் நடைபோடுவதில் அவளுக்குத் தொடர்ந்து போராட்டம் இருந்துள்ளது. ஆகவே இந்த அறிக்கை சிறப்பாக எங்களுக்கு முக்கியமானதாகும். அநேக வேளைகளில் இதை நாங்கள் ஒரு நாளைக்கு பல தடவைகள் செய்கிறோம். கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் இந்த வார்த்தைகளை நூற்றுக்கணக்கான தடவைகள் நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஒவ்வொரு தடவையும் இவ்வாறாகச் சொல்லும் பொழுது சாபங்களின் விளைவுகளிலிருந்து மேலும் விலகிச் சென்று எங்களுடைய சுதந்திரமாகிய ஆசீர்வாதத்திற்குள் கடந்து வந்துள்ளோம்.*

***2. சாத்தானின் பணிவிடைக்காரர்களிடமிருந்தோ அல்லது கிறிஸ்தவர்களின் மனதிற்கடுத்த பேச்சுகளினாலோ எங்களுக்கு விரோதமாக எதிர்மறையான சக்திகள் கிரியை செய்வதை நாங்கள் உணரும்பொழுது (அத்தியாயம் 13,14,15 யைப் பார்க்க)***

"எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் இப்பொழுது குற்றப்படுத்துகிறேன். இது கர்த்தருடைய ஊழியக்காரனான என் சுதந்திரமும், உம்மிடத்திலிருந்து வரும் என் நீதியுமாயிருக்கிறது, கர்த்தாவே!" என்று கூறலாம்.

இது ஏசாயா 54:17யைத் தழுவியது.

*இந்த அறிக்கையுடன் சம்பந்தப்பட்ட இரண்டு முக்கிய குறிப்புகளை நாம் கவனிக்க வேண்டும். முதலாவதாக நமக்கு விரோதமாய் பேசும் எந்த நாவையும் தேவன் குற்றப்படுத்தும்படி நாம் அவரைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என இதில் சொல்லப்படவில்லை. இதை நாமே செய்யும்படியாக தேவன் நமக்கு அதிகாரம் அளித்திருக்கிறார். இதை நாம் செயல்படுத்த வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார்.*

*இரண்டாவதாக, நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையில் தேவனுடைய நீதி நமக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த அதிகாரத்தை நாம் செயல்படுத்துவது மேற்கூறிய உண்மையைச்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 277 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சார்ந்ததாக உள்ளது. தெளிவாக இது சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றத்தினால் நமக்கு உண்டாகிறது. இயேசுவின் நீதியினாலே நாம் நீதிமான்களாகும்படிக்கு அவர் நம்முடைய பாவங்களினாலே பாவமானார். அந்தப் பரிமாற்றத்தின் பல்வேறு நன்மைகள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டது. ஆகையால் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கக்கூடாது.

ஆனால் நமக்கு விரோதமாகப் பேசப்பட்ட தீய வார்த்தைகளைத் திசை திருப்பி விட்டால்மட்டும் போதாது. அதற்குப் பின்பும் நமக்குத் தீங்கு செய்தவர்களை மன்னிக்கும்படி அவர் கூறுகிறார். இறுதியாக, நாம் எதிர்மறையான எண்ணத்திலிருந்து நேர்மறையான எண்ணத்திற்குக் கடந்து செல்லும்படி எதிர்பார்க்கிறார்: அதாவது நம்மேல் கூறப்பட்ட ஒரு சாபத்தை, ஆசீர்வாதத்தால் நாம் மேற்கொள்ள வேண்டும்.*

நமக்குத் தீங்கிழைப்பவர்களை மன்னிப்பது போல நம்மை சபிப்பவர்களை ஆசீர்வதிப்பது நம்முடைய உணர்ச்சிகளுக்கடுத்த தீர்மானமன்று. அது தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்து நமது சித்தத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் திட்டமான தீர்மானம். மன்னித்தல், ஆசீர்வதித்தல் ஆகியவற்றிற்குப் பொருத்தமான வார்த்தைகளைத் தருகிறேன்:

கர்த்தாவே, எனக்கு விரோதமாகத் தீமையாய் பேசிய அனைவரையும் நான் மன்னிக்கிறேன். அவர்களை மன்னித்ததற்குப் பின்பு உம்முடைய நாமத்தில் அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.

மொத்தத்தில் நம்மைப் பிறர் சபிக்கும் போது நாம் மூன்று படிகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். முதலாவதாக, சாபத்தைக் கூறிய அந்த நாவை நாம் கடிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, அந்த சாபம் யாரிடத்திலிருந்து வந்ததோ அந்த மனிதரை நாம் மன்னிக்க வேண்டும். மூன்றாவதாக, தேவன் அந்த மனிதரை ஆசீர்வதிக்கும்படி கேட்க வேண்டும். இந்த மூன்று படிகளையும் நாம் கைக்கொள்வதின் மூலம், ஒரு சாபம் நம்மேல் கொண்டு வந்த எந்த ஆவிக்குரிய இருளையும், பாரத்தையும் நாம் நீக்கக்கூடும்.

* இது 24ம் அத்தியாயத்தில் முழு விளக்கமாய் கூறப்பட்டுள்ளது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 278 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

### *3. பாவம் அல்லது குற்ற உணர்வு அல்லது தகுதியின்மை ஆகியவைகளின் அழுத்தங்கள் கடந்த காலத்திலிருந்து நம்மைத் தொடரும் போது*

"நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன். ஆகவே நான் ஒரு புதிய படைப்பு. பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. என் வாழ்வில் எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனிடத்திலிருந்து வருகிறது" என அர்த்தம் உணர்ந்து கூறவேண்டும்.

இது 2 கொரிந்தியர் 5:17–18 யைத் தழுவியது.

*இப்புதிய படைப்பிற்கான முழு பொறுப்பையும் தேவன் ஏற்றுக் கொள்கிறார். அவையெல்லாம் அவருடைய செயலே. பாவத்தினால் கெடுக்கப்பட்ட, கறைப்படுத்தப்பட்ட பழைய படைப்பிலிருந்து எதுவும் தொடர்ந்து வருவதல்ல.*

*கடந்த காலம் நம்மைத் தாக்கும்போது வெளிப்படுத்தின விசேஷம் 21:5 ல் யோவான் கூறியுள்ளதை தியானம் செய்தல் வேண்டும்:*

"சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும் அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்."

*இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ளவற்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்தவராய் சிங்காசனத்தில் வீற்றிருப்பவரின் வார்த்தைகள் இவை. இதில் நமது வாழ்வின் அனைத்துப் பகுதியும் அடங்கும். அவர் சகலத்தையும் புதிதாக்கப்போவதாக உறுதியளிக்கிறார்.*

*தேவனுக்கே இது பெரிய காரியம் என யோவான் வியந்து கூறுவது போல் உள்ளது. "இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள் என்பதால் இவைகளை எழுது" என தேவன் அவனைத் தேற்றுகிறார். அவர் அவனை நோக்கி, "ஆம், யோவானே, 'நான் சொன்னபடியே செய்வேன்' என்று என் மக்களுக்கு நீ உறுதியாகக் கூறமுடியும்" என்று சொல்வது போல் உள்ளது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 279 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

### *4. நம்பிக்கையற்ற சூழ்நிலையாலும் மரணத்தின் இருண்ட அறிகுறிகளினாலும் தாக்கப்படும் போது*

"நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்" என்று விசுவாசி.

(சங்கீதம் 118:17)

*உண்மையில் இதற்கு "நான் சாவதில்லை" என்று அர்த்தம் ஆகாது—ஆனால் "தேவன் நியமித்த நேரத்திற்கு முன்பாக நான் சாவதில்லை—சாத்தானால் நான் கொலை செய்யப்படும்படி அனுமதிக்கமாட்டேன்" என்பது மட்டுமே இதன் அர்த்தம். புரிந்து கொண்டு விசுவாசத்துடன் அறிக்கை செய்யும் போது இந்த வசனமானது மரணத்தின் ஆவியினாலே தாக்கப்படுபவர்களைப் பாதுகாத்து விடுவிக்கக்கூடும். எதிர்மறையான வார்த்தைகளினால் மக்கள் தங்களை மரண ஆவிக்கு ஒப்புக் கொடுக்கும்போது அந்த வார்த்தைகளை நீக்குவதற்கு இது பயன்படுகிறது. (உதாரணங்களுக்கு அத்தியாயம் 12யைப் பார்க்க.)*

*சிலருக்கு அவர்களுடைய முந்தின எதிர்மறையான எண்ணங்களை எல்லாம் மேற்கொள்ளும் வரைக்கும் இந்த அறிக்கையைப் பல முறைகள் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டுவதாக இருக்கலாம். பேதுரு இயேசுவை அதற்கு முன்பு எத்தனை தடவை மறுதலித்தானோ அத்தனை தடவை அவருக்காகத் தனது அன்பை மீண்டும் உறுதிப்படுத்தும்படி இயேசு எதிர்பார்த்தார் என்பதை நினைவிற்கொள்.*

### *5. சரீரப் பிரகாரமான நோய் அல்லது பெலவீனத்தினால் தாக்கப்படும்பொழுது*

நான் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே என்னுடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானேன் என்று கூறவேண்டும்.

இது 1 பேதுரு 2:24யைத் தழுவியது

*வேதத்தின் பல்வேறு வசனங்களின் சத்தியங்களைத் தொகுத்து கீழ்கண்ட சிறப்பான அறிக்கையையும் நான்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 280 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*தயாரித்துள்ளேன். இது உலகமனைத்திலும் பல பகுதிகளில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவியிருக்கிறது:*

என் சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாக இருக்கிறது. அது இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டுள்ளது. என் அவயவங்கள்—என் சரீரத்தின் உறுப்புகள்—நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கென்று அவருடைய ஊழியத்திற்கும், அவருடைய மகிமைக்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டதாக இருக்கிறது. பிசாசுக்கு என்னிடத்தில் எந்த இடமுமில்லை. என்மேல் அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை. என் காரியங்களில் அவன் உரிமை பாராட்டமுடியாது. எல்லாம் இயேசுவின் இரத்தத்தாலே நீக்கப்பட்டுள்ளது.

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி என் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் என் சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானானவனை ஜெயிக்கிறேன். என் சரீரம் கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் என் சரீரத்திற்கு உரியவர்.

இது 1 கொரிந்தியர் 6:19; எபேசியர் 1:7; 1யோவான் 1:7; எபிரெயர் 13:12; ரோமர் 6:13; 8:33–34; வெளி. 12:11; 1 கொரிந்தியர் 6:13 இவைகளைத் தழுவியது

*என் சரீரத்தில் நோயின் அறிகுறிகளை நான் காணும் பொழுதோ அல்லது என் ஆத்துமாவில் பாவத்தின் எதிர்ப்புகளை நான் உணரும் பொழுதோ இப்படிப்பட்ட அறிக்கைகளைச் செய்வது சரியானதா? என சிலர் கேட்கலாம். இதற்குப் பதில் நீ காணும் விதத்தைப் பொறுத்தது. நீ உன்னுடைய இயற்கை நிலையில் உன்னைக் காண்பாயானால் அது நேர்மையானதன்று. ஆனால் தேவன் உன்னை கிறிஸ்துவுக்குள் காண்பது போல் நீ உன்னைக் காண்பாய் என்றால் இப்படிப்பட்ட அறிக்கையைச் செய்.*

*நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பி கிறிஸ்துவிடம் நம்மை ஒப்புக் கொடுக்கும் போது தேவன் நாம் இருக்கும் இயற்கை நிலையின்படி நம்மைக் காண்பதில்லை.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 281 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அதற்கு மாறாக சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றத்தின் கண்ணோட்டத்திலிருந்து அவர் நம்மைக் காண்கிறார். ஆவிக்குரிய நிலையில் அவர் நம்மை நீதிமான்களாகக் காண்கிறார்; சரீரப்பிரகாரமான நிலையில் அவர் நம்மை ஆரோக்கியமுள்ளவர்களாகக் காண்கிறார்.

வேதத்திலே இயேசுவின் தியாக மரணத்தால் உண்டான ஆரோக்கியமானது வருங்காலத்திற்குரியதாக எங்குமே கூறப்படவில்லை. இயேசுவின் மரணத்திற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே எழுதப்பட்ட ஏசாயா 53:5ல் தெய்வீக சுகமானது ஏற்கெனவே "நிறைவேற்றப்பட்ட உண்மையாக" கூறப்பட்டுள்ளது "அவருடைய தழும்புகளால் **குணமாகிறோம்**" என்றே வருகிறது. புதிய ஏற்பாட்டில் 1 பேதுரு 2:24ல், மேலே சொல்லப்பட்ட ஏசாயா 53:5யை மேற்கோள் காட்டும்போது அப்போஸ்தலர் இறந்த காலத்தைப் பயன்படுத்துகிறார்: "அவருடைய தழும்புகளால் **குணமானீர்கள்**" என்கிறார்.

நம்மைப் பற்றி நாம் பேசும் வார்த்தைகள் கிறிஸ்துவில் தேவன் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார் என்பதுடன் இணைந்து போகவேண்டும். அப்பொழுது நம்மைப் பற்றி அவர் கூறுவது அனைத்தும் நம் வாழ்வில் அனுபவத்தில் உண்டாக ஏதுவாகிறது. ஆனால் நாம் தகுந்த அறிக்கையை—அல்லது வெளிப்படையான அறிவிப்பை—செய்யத் தவறினால் நம்முடைய இயற்கையின் சூழ்நிலையில் சிறைப்படுத்தப் படுகிறோம். அதனால் விசுவாசத்தால் மட்டுமே செயல்பட்டு நம்மை மாற்றியமைக்கும், இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவகிருபையைத் தடைசெய்கிறவர்களாவோம்.

மேலும் சரியாகப் பேசி, சரியாகக் கிரியைகள் நடப்பித்தும் வாக்களிக்கப்பட்ட பலன்கள் தொடரவில்லையே என்ற கேள்வி சிலருக்கு எழலாம். இதற்கான பதிலை உபாகமம் 29:29ல் மோசேயின் வார்த்தைகளில் காணலாம்: "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" என்று கூறப்பட்டுள்ளது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 282 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சிலர் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களில் சிலவற்றைப் பெறாததற்குக் காரணம், அநேக நேரங்களில் அவை "மறைவானவைகள்" என்னும் தலைப்பில் அமைகிறது. தேவனிடத்திலிருந்து அவருடைய இரகசியங்களைத் தெரிந்து கொள்ள ஆவல் கொள்வது வீணான செயலாகும். அது கனவீனப்படுத்தும் செயலாகும். தேவன் ஒரு பதிலைக் கொடாமல் இருப்பார் என்றால், அதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முற்படுவதிலும் அவரை நம்புவதே சிறந்தது.*

*அடுத்ததாக தேவனுடைய மக்களாகிய நாம் அவர் தமது வார்த்தையில் தெளிவாக வெளிப்படுத்தியதை விசுவாசித்து, அறிக்கையிட்டு, அதன்படி செய்ய வேண்டியதின் பொறுப்பை, மோசே தனது வார்த்தைகளில் நினைவு படுத்துகிறார். இயேசு சிலுவையில் மேற்கொண்ட தியாக மரணம் இவையனைத்தையும் நமக்குப் பெற்றுத்தருகிறது. வெளிப்படுத்தப்பட்ட காரியங்களை விசுவாசித்து கீழ்ப்படிய முற்படவேண்டுமேயன்றி, மறைவான காரியங்களைக் குறித்து நமது கவனத்தைச் செலுத்த வேண்டியதில்லை.*

### 6. தேவன் நம்மைப் பொறுப்பாளியாக வைத்திருக்கும் பகுதிகளான நமது வீடு, குடும்பம், வியாபாரம், ஊழியம் போன்றவற்றை சாத்தான் தாக்கும் போது

இரும்பும் வெண்கலமும் எங்கள் பாதரட்சையின் கீழிருக்கும்; எங்கள் நாட்களுக்குத் தக்கதாய் எங்கள் பெலனும் இருக்கும். யெஷூரனுடைய தேவனைப் போல் ஒருவரும் இல்லை; அவர் எங்களுக்குச் சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின்மேலும் ஏறிவருகிறார்.

அநாதி தேவனே எங்களுக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் எங்களுக்கு ஆதாரம்; அவர் எங்களுக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்.

இது உபாகமம் 33:25–27யைத் தழுவியது.

*இந்த அறிக்கையினால் நாம் தற்காப்பு நிலையிலிருந்து தாக்கும் நிலைக்குக் கடந்து செல்ல முடியும். முதலாவதாக "எங்கள்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 283 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பாதரட்சையின் கீழிருக்கும்" என்பது எதிரியின் மீது நமக்கிருக்கும் அதிகாரத்தைக் குறிக்கிறது. இரும்பும், வெண்கலமும் நமது பாதரட்சையின் கீழிருப்பதால், எதிரியின் ஆயுதங்கள் நம்மை ஒன்றும் செய்யாது என்று தேவன் வாக்களிக்கிறார். அடுத்ததாக நமது சார்பில் தேவன் இயற்கைக்கப்பாற்பட்ட நிலையில் இடைப்படுகின்ற அற்புதமானதோர் படம் தீட்டப்பட்டுள்ளது: "அவர் எங்களுக்குச் சகாயமாய் ஆகாய மண்டலங்களின்மேல் ஏறிவருகிறார்." நமது அறிக்கையின் மூலம் அவரை நமது காரியங்களில் ஈடுபடும்படி செய்கிறோம்.*

*இறுதியாக நம்முடைய சத்துருக்கள் தோற்கடிக்கப்படுவர் என்பதற்கான உறுதிமொழி நமக்கு அளிக்கப்படுகிறது: "அவர் (தேவன்) எங்களுக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்துவார்." இந்த இறுதிக் கட்டத்தில் நாம் நமது பங்கைச் செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்; ஆகையால் அவர்களை அழித்துப்போடு என்று நமக்குக் கூறுகிறார். இதை நாம் செய்வதற்கான ஆவிக்குரிய ஆயுதங்களை அவர் நமக்கு வழங்கியிருக்கிறார்.*

### *7. மனம் என்பது சாத்தானுடைய பொய்யும், தேவ வசனத்தின் சத்தியமும் எதிர்த்துப் போரிடும் போர்க்களம் என்னும் உண்மை நம்மில் உதயமாகும் போது*

> என் போராயுதங்கள் தேவபலமுள்ளவைகளாய் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு சாத்தான் என் மனதில் எழுப்பியுள்ள அரண்களை நிர்மூலமாக்குகிறேன். என் எண்ணங்கள் அனைத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் செய்கிறேன். என்னுடைய மூன்று பலமுள்ள ஆயுதங்கள்: அறிக்கையிடுதல், நன்றி செலுத்துதல், துதித்தல் ஆகும்.
>
> இது 2 கொரிந்தியர் 10:3–5யைத் தழுவியது

*என்றாலும் கிறிஸ்தவ வாழ்க்கையிலே "நமது விரோதிகள்" மற்ற மனிதர்கள் அல்ல என்பதை நாம் நினைவிற்கொள்வது அவசியமாகும். நமது விரோதிகள் சாத்தானுடைய அரசிலிருந்து நமக்கு எதிராக அனுப்பப்படும் தீய ஆவிக்குரிய சக்திகளாகும். எபேசியர் 6:12ல் பவுல் இதைத் தெளிவுபடுத்துகிறார்: "ஏனெனில்,*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 284 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல (மனிதர்களோடல்ல) ; (ஆனால் சரீரமற்ற) துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்கிறார்.*

*தேவன் நம்மை அழைத்துள்ள இந்த விந்தையான யுத்தத்தில், பயன்படுத்தப்படும் அளவீடுகள் நமது புலன்களுக்கு அடுத்த உலகத்தில் பயன்படுத்தப்படும் அளவீடுகளினின்று மாறுபட்டவை. இந்த ஆவிக்குரிய அளவீட்டின்படி மன்னிப்பது கோபங்கொள்வதை விட ஆற்றல் நிறைந்தது; ஆசீர்வதித்தல் சாபமிடுதலை விட வல்லமையானது; நன்றி கூறுவது குறைகூறுவதை விட வல்லமையானது; துதிப்பது குற்றப்படுத்துவதை விட வல்லமையானது; அன்பு செலுத்துவது வெறுப்பதை விட வல்லமையானது.*

*இந்த முரண்பாடான காரியங்களின் அடிப்படையில் நம்முடைய திறமை தோல்வி அடையும்போது, தேவனுடைய வல்லமையையும் அவரது உதவியையும் கட்டவிழ்க்கும் இரண்டு அறிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.*

### *8. என் திறமைக்கு மிஞ்சிய செயலை நான் செய்ய எதிர்பார்க்கப்படும் போது*

என்னுள் வல்லமை வழங்கி என்னை பெலப்படுத்துகிற ஒருவராலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.

இது பிலிப்பியர் 4:13யைத் தழுவியது.

### *9. என் சொந்த பெலன் தோல்வியைக் காணும் போது அல்லது குறைவுள்ளதாய் இருக்கும் போது*

என் பலவீனத்திலே தேவ பலம் பூரணமாய் விளங்குகிறது. ஆகையால் நான் பலவீனமாய் இருக்கும் போதே பலமுள்ளவனாய் இருக்கிறேன்.

இது 2 கொரிந்தியர் 12:9,10 யைத் தழுவியது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 285 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*இறுதியாக நம் அனைவரின் வாழ்விலும் சாதாரணமாய் ஏற்படக்கூடிய தேவைகளைச் சந்திக்கக்கூடிய இரு அறிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.*

### *10. பொருளாதார தேவைகளைச் சந்திக்க விசுவாசத்தைப் பயன்படுத்தும் வேளையில்*

"நாம் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் நம்மிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" என அறிக்கையிட வேண்டும்.

இது 2 கொரிந்தியர் 9:8 யைத் தழுவியது.

*தமது மக்களுக்கு தேவன் தேவைகளைச் சந்திக்கும் முறை தேவைகளைமட்டும் சந்திப்பதாக இல்லாமல் பரிபூரணமானதாக உள்ளது. ரூத்தும் நானும் எங்கள் ஊழியத்தின் பணத்தேவைகளுக்காக இந்த அறிக்கையைத் தவறாது செய்கிறோம்.*

### *11. பயத்தினால் தாக்கப்படும் போது*

தேவன் எனக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

இது 2 தீமோத்தேயு 1:7 யைத் தழுவியது

இயேசுவின் நாமத்தினாலே நான் தேவனுக்கு என்னை ஒப்புக் கொடுத்து பயத்தின் ஆவியை எதிர்த்து நிற்கிறேன். ஆகையால் அது என்னை விட்டு ஓட்டம் பிடிக்க வேண்டும்.

இது யாக்கோபு 4:7 யைத் தழுவியது

*சில உதாரணங்கள் மட்டுமே மேற்கூறிய வசனங்களில் உள்ளது. இவ்வாறு நாம் செய்யக்கூடிய வசன அறிக்கை எண்ணிலடங்காதது. நம்முடைய குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ற அறிக்கைகளைத் தெரிந்தெடுப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைச் சார்ந்திருக்க வேண்டும்.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 286 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வசனத்தின் அடிப்படையில் தகுந்த அறிக்கைகளைத் தெரிந்தெடுத்து அவைகளை அறிக்கையிடுவது ஒரு சிறப்பான பலனைத் தரக்கூடியது. தேவனுடைய வார்த்தையைச் சாதாரணமாய் எடுத்துக் கொள்ளாதபடி அது தரக்கூடிய பயனை உணர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இனி நாம் வேதவசனத்தைப் படித்துவிட்டு அப்படியே கடந்து போய் விடக்கூடாது. அதற்கு மாறாக அடுத்தடுத்த மூன்று முக்கிய படிகளைக் கடந்து வரவேண்டும். முதலாவதாக, நமக்குப் பொருத்தமான சிறப்பான வசனங்களை நோக்கி பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்தும்படி நாம் கேட்க வேண்டும். இரண்டாவதாக, இவைகளை நம் மனதில் திடமாய்ப் பதியச் செய்யவேண்டும். மூன்றாவதாக, நமக்குத் தேவைப்படும் பகுதிகளில் இந்த அறிக்கையைச் செய்வதின்மூலம் அதன் வல்லமையை வெளிப்படச் செய்கிறோம்.

ஒருவேளை இன்று "ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ள" வேண்டியதின் அவசியத்தை உணர்கின்ற அநேக கிறிஸ்தவர்களுள் ஒருவனாக நீ இருக்கலாம்—இதைப்பற்றி 19ம் அத்தியாயத்தில் கூறியுள்ளோம். ஆனால் இதைச் செய்வதற்கான எளிய வழியை நீ அறியாது இருக்கலாம். அப்படியானால் ரூத்தும், நானும் வசனங்களைத் தேர்ந்தெடுத்து அறிக்கையிடுதலை உனக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறோம். இதை எங்கள் சொந்த வாழ்க்கையில் நாங்கள் பயன்படுத்தியிருக்கிறோம். **அது** செயல்படுகிறது என்பதை எங்களால் உறுதியாய்க்கூறமுடியும்!

ஆனால் இறுதியாக எச்சரிப்பு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்! உன் விசுவாசத்தை உன் அறிக்கையிலோ அல்லது வேறு ஒரு வழிமுறையிலோ வைக்காதே. நமது **விசுவாசம் தேவனில் மட்டுமே இருக்க வேண்டும்**—வேறு எவரிலும், எதிலும் இருக்கக்கூடாது. நமது அறிக்கை தேவனில் நமக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு சிறப்பான வழி மட்டுமே.

ஆகவே தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்னும் நாட்டை நோக்கித் திரும்பி நிற்கும் நீ யோசுவாவிற்கு மூன்று முறை கொடுக்கப்பட்ட அறிவுரையை மறந்து விடாதே :

**"பலங்கொண்டு திடமனதாயிரு!"**



Blessing or Curse Tamil text 2012 revised.p65 287 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

Blessing or Curse Tamil text 2012 revised.p65 288 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# கவனத்திற்குரிய வார்த்தைகள்

## முன்னுரை

*மனுக்குலத்துடன் தேவன் முழுவதுமாக ஆசீர்வாதங்கள் சாபங்கள் ஆகிய கருப்பொருள்களின் அடிப்படையிலேயே ஈடுபடுகிறார். அதை ஒரு மரத்தின் அடிப்பகுதிக்கு ஒப்பிடலாம். அதின் கிளைகள் பலதிசைகளுக்குப் படர்கின்றன. வேதத்தை முறையாகப் படிக்கும் பொழுது அதின் சத்தியங்களின் மற்ற பல பிரதான பகுதிகளைக் குறித்து முக்கியமான நடைமுறைக் கேள்விகள் நமக்கு எழும்புகின்றன.*

*இப்பகுதியில் இப்படிப்பட்ட இரண்டு கேள்விகளுக்குப் பதில் தரப்பட்டுள்ளன:*

1. மனுக்குலத்தின்மேல் பாவம் கொண்டுவந்துள்ள எல்லா சாபங்களிலிருந்தும் விசுவாசத்தின் மூலம் தற்காலத்தில் விடுதலையை அனுபவிக்கக்கூடுமா? இல்லையாயின், அது எப்பொழுது—எவ்வாறு—இறுதியிலே நீக்கப்படும்?

2. பழைய ஏற்பாட்டிலே அநேக தேவ ஊழியக்காரர்கள் தேவனுடைய விரோதிகளின்மேல் சாபங்களைக் கூறிய அநேக உதாரணங்கள் உள்ளன. ஒரு கிறிஸ்தவன் எதிர்க்கப்பட்டு, தவறாக நடத்தப்படும் பொழுது அவன் என்ன செய்யவேண்டும்?



Blessing or Curse Tamil text 2012 revised.p65 289 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 23

## நீக்கப்படாத சாபங்கள்

தேவனுக்குக் கீழ்ப்படியாமையால் மனுக்குலம் தன்மேல் வருவித்துக் கொண்ட தீய விளைவுகள் அனைத்தையும், இயேசு சிலுவையில் தம்மேல் ஏற்றுக் கொண்டார். இவைகள் இரண்டு முக்கியப் பிரிவுகளாக உள்ளன: தோட்டத்தில் ஆரம்ப நாட்களில் கீழ்ப்படியாமையினால் மனிதன் தன்மீது வருவித்துக் கொண்ட தீய விளைவுகள்; பின்பு மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நீதிச்சட்டத்துடன் சம்பந்தமாகக் கூறப்பட்ட தீய விளைவுகள்.

கலாத்தியர் 3:13ல் பவுல் இந்த இரண்டாவது பிரிவை குறித்துப் பேசுகிறார். அவர் குறிப்பாக "கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" என்கிறார். மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டதை இங்கு சம்பந்தப்படுத்திப் பேசுகிறார். சாபத்தைக் கூறிய அதே நீதிச்சட்டம், இவ்வாறாக கிறிஸ்துவின் பரிகார பலியின் மூலம் சாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியையும் வகுத்துள்ளது.

நான்காம் அத்தியாயத்தில் "நியாயப்பிரமாணத்தின் சாபத்தைக்" குறித்து கீழ்கண்டவாறு தொகுத்துக் கூறினோம்: இழிவு படுத்தப்படுதல்; மலட்டுத்தன்மை, கனியற்ற நிலை; மனம், சரீரம் இவற்றில் வரும் சுகவீனங்கள்; குடும்பத்தில் பிளவு; வறுமை; தோல்வி; மனச்சோர்வு; பேரிழப்பு; தேவனுடைய தயவற்ற நிலை போன்றவை.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 290 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கலாத்தியர் 3:13ல் பவுலின் தெளிவான கூற்றின்படி கிறிஸ்துவின் சிலுவை மரணம் நாம் மீறிய நீதிச்சட்டத்தின் விளைவுகள் அனைத்திலிருந்தும் நமக்கு விடுதலையை அளிக்கிறது. என்றாலும் ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாளின் கீழ்ப்படியாமைக்குப் பிறகு, அவர்கள் மேல் தேவன் கூறிய பலவிதமான ஆரம்பகால சாபங்களை பவுல் இங்கு சேர்த்துக் கூறவில்லை. ஆதியாகமம் 3:16–19 வரையுள்ள வசனங்களில் குறிக்கப்பட்டிருக்கும் இந்த சாபம் இரண்டு பிரதான பிரிவுகளாய் வருகிறது. முதலாவது ஏவாளுக்குக் கூறப்பட்ட சாபம்; இரண்டாவது ஆதாமுக்குக் கூறப்பட்ட சாபம்.*

*ஏவாளிடம் கூறப்பட்ட சாபம் அவளுடைய பெண்மையின் ஒப்பற்ற தன்மையுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. அது மேலும் இரண்டு பிரிவுகளாக உள்ளன :*

1. பிள்ளைப்பேறு அவளுக்குக் கடினமானதாகவும், வலிநிறைந்ததாகவும் இருக்கும்.

2. அவள் தன் கணவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவளாய், குழந்தைகள் பெறுவதற்கான அவளுடைய அடிப்படை பெண்மையின் ஆசையை நிறைவேற்றுவதற்கு அவனைச் சார்ந்திருப்பாள்.

*ஆதாமிற்கு கூறப்பட்ட சாபம் முக்கியமாக தேவன் ஆரம்பத்தில் ஆதியாகமம் 2:15ல் "தோட்டத்தைப் பண்படுத்தவும், காக்கவும்"—அதாவது நிலத்தைப் பண்படுத்தும்படி—அவனுக்கு கொடுத்த வேலையுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. இந்த சாபம் மூன்று முக்கியப் பிரிவுகளாக உள்ளது:*

1. நிலத்தின் இயற்கையான பண்பில் ஒரு மாற்றம் உண்டாகும். இனிமேல் கடினமாக, மனிதன் வியர்வை சிந்தி உழைத்தால் மட்டுமே அது தன் பலனைத்தரும்.

2. நிலத்தில் ஏற்பட்ட அந்த மாற்றம் அது உண்டாக்கும் தாவரங்களின் மாற்றத்தில்—குறிப்பாக முட்கள், குருக்குகள் என்னும் பயனற்ற இருவகைத் தாவரங்கள் முளைப்பதில்—காணப்படும்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 291 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

3. மனிதன்தானே அழிவிற்கும் மரணத்திற்கும் உட்படுத்தப்பட்டு எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டானோ இறுதியில் அந்த மண்ணுக்கே திரும்புவான். இந்த மூன்றாவது காரியம் ஆதாமுக்கு சொல்லப்பட்டாலும் அது உண்மையில் ஏவாளையும் அவர்களின் சந்ததியாரையும் ஒட்டு மொத்தமாகப் பாதிக்கலாயிற்று.

*இந்த வேளையில் கூறப்பட்ட சாபங்கள் பூமியைப் பாதிக்கலாயிற்று என்பதைத் தெளிவாய் காணலாம். இது ஆதாமுக்கும் அவனுடைய சுற்றுப்புறத்துக்கும் இடையே இருந்த நெருக்கமான இணைப்பினால் விளைந்தது. இந்த நெருக்கம் பூமியைக் குறிக்கும் எபிரெய வார்த்தை* ***அதாமா*** *என்பதினால் குறிக்கப்படுகிறது. ஆதாம் தானே பூமியிலிருந்து உருவாக்கப்பட்டவன். அவன் தேவனாலே பூமியைப் பண்படுத்தும் பொறுப்பைப் பெற்றான்.*

*இதைத் தவிர சர்ப்பத்தின் மேல் ஒரு சிறப்பு சாபம் கூறப்பட்டது. அதன்பின் அது மற்ற எல்லா விலங்குகளிலிருந்தும் வித்தியாசமாயிற்று.*

*பிரசங்கி 1:2லும் ரோமர் 8:21லும் இந்த சாபங்களினால் பூமியிலும் அதில் வாழ்கின்றவைகளிலும் உண்டான நிலையைக் குறிப்பதற்கு மாயை என்ற ஒரே பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*கலாத்தியர் 3:13ல் பவுல் குறிக்கும் "நியாயப் பிரமாணத்தின் சாபத்திலிருந்து" வரும் மீட்பு என்பது மேற்கூறிய சாபங்களை உள்ளடக்கவில்லை. இவைகள் ஏதேன் தோட்டத்தில் ஆரம்பத்தில் ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமையினால் உண்டானவை. அக்காலத்தில் தேவனால் எந்தச் சட்டமும் கொடுக்கப்படாததினாலே அதை மீறியதற்கான சாபமும் இல்லாமற் போயிற்று.*

*ரோமர் 5:13–14ல் பவுல் இவ்வாறு கூறுகிறார் : "நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 292 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்."

"ஆதாமிலிருந்து மோசே வரைக்கும்" உள்ள இந்தக் காலத்தில் மனுக்குலத்திற்கு தேவன் எந்தவிதச் சட்டத்தையும் கொடுக்கவில்லை. என்றாலும் ஆதாம், ஏவாள் பேரிலே ஆரம்பத்தில் கூறப்பட்ட சாபத்தின் விளைவுகளினால் எல்லா மனிதர்களும் அவதிப்பட்டனர். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தனிப்பட்ட பாவத்திற்கான கிரயமாகிய மரணத்தைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

நியாயப்பிரமாணத்தின் ஆரம்ப காலம் யோவான் 1:17ல் குறிப்பிடப்பட்டுள்ளது: "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது." நீதிச்சட்டம் கொடுக்கப்பட்ட பொழுது நீதிச்சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அதை மீறுவதினால் அவர்கள் மேல் வரக்கூடிய பலவித சாபங்கள் கூறப்பட்டன. இந்த சாபங்கள் உபாகமம் 28:15–68 வரையுள்ள வசனங்களில் முக்கியமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மொத்தமாக இவைகள் "நியாயப்பிரமாணத்தின் சாபம்" என்றழைக்கப்படுகின்றன. கலாத்தியர் 3:13ல் பவுல் "கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" என்று கூறும் பொழுது இந்தச் சாபங்களையே அவர் குறிப்பிடுகின்றார்.

ஆதாம், ஏவாள் இவர்களின் மேல் ஆரம்பத்தில் கூறப்பட்ட சாபங்கள் பற்றிய காரியம் என்ன? தேவன் இவைகளிலிருந்தும் மீட்பு அளித்திருக்கிறாரா? அப்படியென்றால் எதன் அடிப்படையில் மீட்பை அளித்திருக்கிறார்?

இந்தக் கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு இயேசு உலகில் வந்த பொழுது அவர் இரு வித்தியாசமான வழிகளில் தாம் மீட்க வந்தவர்களுடன் தம்மை இணைத்துக் கொண்டதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். புதிய ஏற்பாடு, அவர் மனுக்குலத்துடன் தம்மை இணைத்துக் கொண்டதின் இரு வித்தியாசமான நிலைகளை விளக்குகிறது. அவைகள் அவருக்கு கொடுக்கப்பட்ட இரண்டு வித்தியாசமான குடும்ப அட்டவணையினால் குறிப்பிடப்படுகிறது.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 293 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மத்தேயுவிலே அவருடைய வம்ச வரலாறு ஆபிரகாம் வரை செல்லுகிறது. வாக்களிக்கப்பட்ட "ஆபிரகாமின் வித்தாக" அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்ட ஆபிரகாமின் சந்ததியாராகிய இஸ்ரவேல் நாட்டாரோடு தம்மை இணைத்துக் கொண்டார். கலாத்தியர் 4:4–5ல் பவுல் இயேசுவைப் பற்றி "நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, ... நியாயப்பிரமாணத்திற்குக் கீழாகப் பிறந்தார்" என்று கூறுகிறார்.

என்றாலும் லூக்காவில் இயேசுவின் வம்ச வரலாறு ஆதாம் வரை செல்லுகிறது. ஆகவே ஆதாமிலிருந்து வந்த இனத்தவர் அனைவருடனும் தம்மை இணைத்துக் கொண்டார். அவருடைய பூலோக நாட்களில் மற்ற எந்தப் பெயர்களையும் விட "மனித குமாரன்" என்று பலமுறை அழைக்கப்பட்டார். எபிரெயத்தில் **ஆதாம்** என்ற சொல்லுக்கு **மனிதன்** என்று அர்த்தம் ஆகும். ஆகவே "மனித குமாரன்" என்பதை "ஆதாமின் குமாரன்" என்றும் சொல்லலாம். ஆகவே இந்தப் பெயரைச் சொல்லி தம்மை அழைத்துக் கொண்டதினால் இயேசு ஆதாமின் சந்ததியார் அனைவருடனும்—மனுக்குலம் அனைத்துடனும்—தாம் இணைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து முக்கியப்படுத்துகிறார்.

இப்படி இனம் கண்டு கொண்டதால் இயேசுவின் பரிகார பலியானது நீதிச்சட்டத்தை மீறியதால் வந்த சாபத்திலிருந்து மீட்பை அளிக்கிறது. மேலும் ஆதாமின் ஆரம்ப பாவம் அவனுடைய சந்ததியார் அனைவர் மீதும்—நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள், உட்படாதவர்கள் அனைவர் மீதும்—வருவித்த எல்லாத் தீய விளைவுகளிலிருந்தும் அது விடுதலை அளிக்கிறது.

இது பவுல் 1 கொரிந்தியர் 15 ஆம் அதிகாரத்தில் இயேசுவிற்குக் கொடுக்கும் இரண்டு பெயர்களின் மூலம் தெளிவாகிறது. 45ஆம் வசனத்தில் அவரை "பிந்தின ஆதாம்" என்றும் 47ஆம் வசனத்தில் "இரண்டாம் மனுஷன்" என்றும் அழைக்கிறார். இந்த இரு பெயர்களும் முறையே இயேசுவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் குறிக்கின்றன.

"பிந்தின ஆதாமாக" இயேசு சிலுவையில் மரித்தார். ஆதாமின் கீழ்ப்படியாமை மனுக்குலம் அனைத்தின் மீதும்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 294 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கொண்டு வந்த எல்லாத் தீய விளைவுகளையும் தம்மேல் ஏற்றுக் கொண்டார். அவர் மரித்த பொழுது அவைகள் நீக்கப்பட்டன.*

*பின்பு மூன்றாம் நாளில் இயேசு மரணத்திலிருந்து "இரண்டாம் மனிதனாக" உயிருடன் எழுந்தார். ஆகவே அவர் தேவ—மனித இனமாகிய இம்மானுவேல் இனம் என்னும் முற்றிலும் புதிய இனத்திற்குத் தலைவரானார். இந்த இனம் தேவனுடைய பண்பும் மனிதனுடைய பண்பும் கலந்த புதிய மானிடமாகும்.*

*விசுவாசத்தின் மூலமும், ஒப்புக் கொடுத்தலின் மூலமும் தங்களை இயேசுவுடன், அவரின் மரணத்திலும், அடக்கம் பண்ணப்படுதலிலும், அவருடைய உயிர்த்தெழுதலிலும் இணைத்துக் கொள்பவர்கள் அனைவரும் இந்தப் புதிய மானிடத்தின் அங்கத்தினர்களாகின்றனர். 1 பேதுரு 1:4ல் அப்போஸ்தலர் இதைக் குறித்து இவ்வாறு கூறுகிறார்: "அவர் (தேவன்), இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" என்கிறார்.*

*ஆகவே இயேசுவின் மரணத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ள சாபத்திலிருந்து வரும் மீட்பானது இரண்டு பூர்த்தியான பகுதிகளை உடையதாக இருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் கீழே பிறந்த "ஆபிரகாமின் வித்தாக" அவர் உபாகமம் 28:15–68 வரையில் கூறப்பட்டுள்ள நீதிச்சட்டத்தை மீறுவதினால் வரும் சாபங்கள் அனைத்தையும் தம்மேல் ஏற்றுக் கொண்டார். "பிந்தின ஆதாமாக" அவர் ஆதாம் ஏவாள் இவர்களின் ஆரம்பகால கீழ்ப்படியாமையின் செயலுக்காக அவர்கள் மேல் கூறப்பட்ட சாபங்களையும் தம்மேல் ஏற்றுக் கொண்டார். நாம் பார்த்ததுபோல் இந்த சாபங்கள் பூமியின் மண்ணிற்கும், அதன் தாவரங்களுக்கும் கூட வந்தன. அவைகள் குறிப்பாக முட்கள், குருக்குகள் என்னும் பயனற்ற இருவகைத் தாவரங்களில் வெளிப்பட்டன.*

*புதிய ஏற்பாடு எவ்வாறு இயேசு, ஆதாம் ஏவாள் இவர்களின் மேல் வந்த சாபங்களை மட்டுமல்லாமல் பூமியின் மேல் வந்த சாபத்தையும் தம்மேல் ஏற்றுக் கொண்டார் என்பதை*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 295 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*வெளிப்படுத்துவதற்கு மிக அழகான உதாரணத்தைப் பயன்படுத்துகிறது. யோவான் 19:5ல் பிலாத்து இயேசுவை அவரைக் குற்றம் சாட்டுபவர்களுக்கு முன்பாக வெளியே கொண்டு வந்த காட்சியை அப்போஸ்தலர் இவ்வாறு கூறுகிறார்:*

> இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி, "இதோ, இந்த மனுஷன்!" என்றான்.

*இங்கு **மனிதன்** என்னும் சொல் இயேசுவை ஆதாமின் சந்ததியாகச் சுட்டிக்காட்டுகிறது. அவர் பரிபூரணத்தில் ஒப்பற்றவராய் இருந்தும், மனுக்குலம் முழுவதற்கும் பிரதிநிதியாக இருக்கிறார். அதே நேரத்தில் இயேசு அணிந்திருந்த ஆடை ஆதாம் பூமியின் மேல் வருவித்த இரட்டிப்பு சாபத்தை வர்ணிப்பதாக உள்ளது. அவர் தலையில் இருந்த கிரீடம் முட்களின் சாபத்தையும் அவரின் இரத்தாம்பர ஆடை குருக்குகளின் சாபத்தையும் குறிக்கிறது.*

*இந்தச் சுருக்கமான—ஆனால் தெளிவான காட்சி, ஆதாம் ஏவாள் மேல் வந்த சாபத்தையும், அவர்களின் பாவம் பூமியின் மேல் கொண்டு வந்த சாபத்தையும் தம்மேல் ஏற்றுக் கொண்ட "பிந்தின ஆதாமாக" இயேசுவை வெளிப்படுத்துகிறது.*

*ஆகையால் எப்படிப் பார்த்தாலும் இயேசுவின் மரணத்தினால், சாபத்திலிருந்து வரும் மீட்பு முழுமை அடைந்திருக்கிறது. அது மனுக்குலத்தின் மேல் வந்த ஒவ்வொரு சாபத்தையும் உள்ளடக்குகிறது. அது ஆதாம், ஏவாளின் மேல் கீழ்ப்படியாமைக்குக் கூறப்பட்ட சாபத்தையும், அவர்களின் கீழ்ப்படியாமை பூமியின் மேல் கொண்டு வந்த சாபத்தையும், மோசேயின் நியாயப் பிரமாணத்துடன் சம்பந்தப்பட்டு அதினிமித்தம் கூறப்பட்ட எல்லா சாபங்களையும் உள்ளடக்குகிறது.*

*என்றாலும் வேதத்தைத் தொடர்ந்து படித்துப் பார்க்கும்போது சாபத்திலிருந்து உண்டாகும் முழு மீட்பானது படிப்படியான நிலைகளில் நமக்கு உண்டாகிறது என்பதை அறியலாம். "நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து" வரும்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 296 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*மீட்பானது, ஏற்கெனவே தற்காலத்தில் விசுவாசத்தினால் அதைச் செயற்படுத்துபவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அதனுடைய முழுமை கிறிஸ்துவின் வருகையிலே மட்டுமே வெளிப்படும். அவ்வேளையிலும் கூட அவரைச் சந்திக்கும்படி எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள் இறுதியாக, நிரந்தரமாக ஆதாமின் சாபத்திலிருந்து விடுவிக்கப்படுவர்.*

*பிலிப்பியர்* 3:20–21*ல் பவுல் அந்த வேளையில் ஒவ்வொரு மீட்கப்பட்ட விசுவாசியின் சரீரத்திலும் உண்டாகும் மாற்றத்தை விளக்குகின்றார்:*

> "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
>
> அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்."

*பவுல் இங்கு இரண்டு விதமான சரீரங்களை வித்தியாசப்படுத்திப் பேசுகிறார்: "நம்முடைய அற்பமான சரீரம்", "தம்முடைய (கிறிஸ்துவினுடைய) மகிமையான சரீரம்." இவைகளை சரியான மொழிபெயர்ப்பிலே "நமது இழிவுக்குரிய சரீரம்" என்றும் "அவருடைய மகிமையின் சரீரம்" என்றும் மொழி பெயர்க்கலாம். ஆதாமின் மேல் கூறப்பட்ட சாபம் அவனையும் –அவனுடைய சந்ததியாரையும்–"இழிவுக்குரிய சரீரத்திற்கு" உட்படுத்தியது. ஆகவே இது நம்முடைய வீழ்ந்துபோன நிலையை நமக்குத் தொடர்ந்து நினைப்பூட்டுகிறது.*

*பிறப்பிலிருந்து இந்த சரீரம் தொடர்ச்சியாக அழிவிற்குட்படுத்தப்பட்டு, ஜீவனுக்கும் நல்வாழ்விற்கும் பல வெளிப்புற காரியங்களைச் சார்ந்து இருக்கிறது. சுகபோகமாய் வாழ்ந்து நம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டு நாம் இயற்கையாய் பெற்ற பெலவீனங்களை சிறிது நேரம் மறக்க முற்படலாம். என்றாலும், கொஞ்ச நேரத்தில் நாம் தவிர்க்கமுடியாமல் மீண்டும் நம்முடைய சரீரத்தின் இழிவான*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 297 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கட்டுப்பாட்டை உணர்வோம்.*

*நாம் மிக அழகான விலையுயர்ந்த ஆடைகளை அணியலாம். ஆனால், நாம் சுறுசுறுப்பாய் இருக்கும் போது நமது சரீரத்தில் ஏற்படும் வியர்வையின் வாடை, நாம் "இழிவான சரீரத்திற்கு" உட்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது; அல்லது நமது வயிற்றை மிகச் சிறந்த உணவினாலும், பானத்தினாலும் நிரப்பலாம். என்றாலும் சில மணி நேரங்களில் நமது குடலிலும் சிறுநீரகப்பையிலும் உள்ள கழிவுகள் வெளியேற்றப்பட வேண்டும். ஆகையால் இந்தக் காரியங்களில் ஆடம்பரத்திற்கோ, தற்பெருமைக்கோ இடமில்லை.*

*கிறிஸ்துவினால் அளிக்கப்படும் மீட்பை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, நமது சரீரத்தின் இந்த இழிவான தன்மைகள் எல்லாம் சிறிது சிறிதாக அன்றி, மகிமையாக ஒரு நொடிப் பொழுதிலே மாற்றப்படும்.* 1 *கொரிந்தியர்* 15:51–53 *வரையுள்ள வசனங்களில் பவுல் இந்த இயற்கைக்கப்பாற்பட்ட மறுரூபத்தைக் குறித்து விவரிக்கிறார்:*

> "நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை (மரணத்தில்); ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.
>
> எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.
>
> அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும்."

*மொத்தத்தில்* 1 *கொரிந்தியர்* 15 *ம் அதிகாரத்தில் பவுல் ஒவ்வொரு விசுவாசியின் சரீரத்திலும் கிறிஸ்து திரும்பி வரும்போது ஏற்பட இருக்கும்* 5 *மாற்றங்களைத் தொகுத்து கூறுகின்றார்:*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 298 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

1. **அழிவுள்ளதிலிருந்து அழியாமைக்கு**
2. **சாவுக்கேதுவானதிலிருந்து சாவாமைக்கு**
3. **அவமானத்திலிருந்து மகிமைக்கு**
4. **பெலவீனத்திலிருந்து பெலத்திற்கு**
5. **இயற்கை நிலையிலிருந்து—சரியாக "ஆத்தும நிலையிலிருந்து" ஆவிக்குரிய நிலைக்கு மாற்றப்படும்.**

*மேற்கூறிய பட்டியலில் வரும் 5 எதிர்மறையான காரியங்களும் ஆரம்பத்தில் ஆதாமின் மேல் வந்த சாபத்தின் விளைவுகள். இவைகள் எல்லாவற்றிலிருந்தும் பூரண விடுதலை, கிறிஸ்து திரும்பி வரும்போது அவரைச் சந்திக்கும்படி எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் விசுவாசிகளுக்கு முதலில் உண்டாகும். யாக்கோபு 1:18ல் இவர்கள் "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களானவர்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது. இவர்களுக்கு உண்டாகும் மறுரூபம்—படைப்பு முழுவதற்கும் இறுதியில் உண்டாக இருக்கும் மீட்பிற்கு உத்தரவாதம் அளிக்கிறது.*

*இதற்குப் பின்னான காலத்தில் உலகத்தில் மீந்திருப்பவர்களுக்கு, நீதியும் நியாயமுமாக கிறிஸ்துவினால் ஆளப்படும் 1000 வருட ஆட்சியிலே, நியாயப்பிரமாணத்தின் சாபம் குறைக்கப்படும்; ஆனால், அது அழிக்கப்படாது. மனிதனுடைய வாழ்க்கை நீட்டிக்கப்படும். ஆனால் ஆதாமின் சாபமும் தொடர்ந்து இருக்கும். பூமியும் மிருக ஜீவன்களும் கூட மனித வீழ்ச்சிக்குப் பின்பு, இதுவரை கண்டிராத செழுமையையும், பரிபூரணத்தையும் அனுபவிக்கும். ஆனால் அந்த "மாயை" முற்றிலும் நீக்கப்படாது. "புதிய வானங்களும், புதிய பூமியும்" உண்டானதற்குப் பின்புதான் ஒவ்வொரு சாபமும் முழுமையாக இறுதியில் அழிக்கப்படும் (2 பேதுரு 3:13).*

*இவையனைத்தும், மனிதனுடைய கீழ்ப்படியாமை அவன் மேலும், படைப்பின் மேலும் கொண்டு வந்த ஒவ்வொரு சாபத்தையும் நீக்கும்படி, இயேசு சிலுவையின் மேல் சாபமான பரிமாற்றத்தின் செயல்பாடுகளே. வெளிப்படுத்தின விசேஷம் 22:3ல் இதன் முழுமை ஒரு சுருக்கமான ஆனால் பரந்த கருத்துடைய வாக்கியத்தில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது: "இனி ஒரு சாபமுமிராது."*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 299 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# 24

## ஆசீர்வதிப்பதா? சபிப்பதா?

*கிறிஸ்துவிலுள்ள நமது விசுவாசத்திற்காக மக்கள் நம்மை நிந்தித்து, சபித்து, எதிர்த்து, துன்பப்படுத்துகின்றனர் என்று எண்ணிக்கொள். அவர்கள் நம்மைப் பற்றி பொய்யான காரியங்களைப் பரப்பி நமக்குத் தீங்கிழைக்க எல்லா விதமான நேர்மையற்ற, சட்ட விரோதமான முறைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று எண்ணிக்கொள். அவ்வேளையில் அவர்களுக்கு விரோதமாக ஏதாவதொரு சாபத்தைக் கூறுவதற்கு நமக்கு அதிகாரம் உள்ளதா? இதற்கு புதிய ஏற்பாட்டின் பதில், தெளிவாக, அழுத்தமாக* **இல்லை** *என்பதாகும்!*

ரோமர் 12:9–21 வரையுள்ள வசனங்களில் பவுல் கிறிஸ்தவ நடத்தையைக் கட்டுப்படுத்தும் பல்வேறு அடிப்படை உண்மைகளை வரிசைப்படுத்திக் கூறுகிறார். 9ம் வசனத்தில் நமக்கு இருக்க வேண்டிய ஒரு முக்கியமான உன்னத தூண்டுதலைப் பற்றிக் கூறுகிறார்: "உங்கள் **அன்பு** மாயமற்றதாயிருப்பதாக" என்கிறார். பின்வரும் மற்ற எல்லா குறிப்புகளும் கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்தும் வெவ்வேறு வழிகளாகும்.

14ம் வசனத்தில் கிறிஸ்தவர்கள் தங்களுக்குத் தீங்கிழைக்க முற்படுகிறவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்:"உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" என்கிறார்.

21ம் வசனத்தில் இதே காரியத்தைப் பொதுவாக செயற்படுத்தும் குறிப்பைக் கூறி முடிக்கிறார்: "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு"



Blessing or Curse Tamil text 2012 revised.p65 300 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*என்கிறார். தீமையை மேற் கொள்ளக்கூடிய வல்லமை ஒன்றே ஒன்று தான்: அது நன்மையாகும். நம்மை எந்த விதத்தீமை சந்தித்தாலும், நாம் எப்பொழுதும் அதற்கு ஏற்ற விதமான நன்மையைச் செய்ய வேண்டும். இல்லையெனில் அத்தீமை அதிக வலிமையுடையதாய் இருப்பதை நாம் உணருவோம்.*

*1 பேதுரு 3:8–9ல் பேதுரு தீமைக்கு எதிராகத் தவறான விதத்தில் செயல்படுவதற்கு இதே போன்ற ஒரு எச்சரிப்பைத் தருகிறார்:*

> "மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாய் இருந்து,
>
> தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்."

*இவ்வாறாகத் தீமையை நன்மையினால் மேற்கொள்ளும் போது 2 கொரிந்தியர் 2:14–15ல் விளக்கப்பட்டுள்ளதுபோல் கிறிஸ்து தீமையின் மேல் பெற்ற வெற்றியில் நாம் பங்கு கொள்கிறோம்:*

> "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.
>
> இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்."

*இயேசுவின் சிரசின் மேல் விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றின பெத்தானியாவின் மரியாளைப் போல், நாம் நம்மைச் சுற்றியுள்ள பகுதி முழுவதையும் சுகந்த வாசனையினால் நிரப்பு*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 301 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*கிறோம். நம்மை எதிர்ப்போரும், குறை கூறுவோரும் கூட இந்த வாசனையினால் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். (மாற்கு 14:3–9)*

*இது பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் உள்ள அடிப்படை வித்தியாசத்தைக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில் தேவன் மற்ற மக்களுக்கு அடிக்கடி தமது மக்களை நியாயத்தீர்ப்பின் கருவிகளாகப் பயன்படுத்தினார். உதாரணமாக இஸ்ரவேலர்களைக் கானான் நாட்டிற்குள் கொண்டு வருவதில் தேவன், அதற்கு முன் அந்த நாட்டில் வாழ்ந்து வந்த கானானியர்களுக்கு விரோதமாக, யோசுவாவையும் அவன் படைவீரர்களையும் தமது நியாயத்தீர்ப்பின் கருவிகளாகப் பயன்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஊழியக்காரர்கள், தேவனை எதிர்த்தவர்கள் அல்லது கீழ்ப்படியாதவர்கள் மேல் சாபங்களைக் கூறிய மற்ற அநேக சம்பவங்களும் உள்ளன. அந்த சாபங்களின் விளைவு, தேவனே அவைகளைச் சொல்லியதைப் போன்றதாகும்.*

*உதாரணமாக யோசுவா 6:26ல் இஸ்ரவேலர்கள் எரிகோவை கைப்பற்றி அழித்ததற்குப் பின்பு யோசுவா அந்த இடத்தில் ஒரு பட்டணத்தை மீண்டும் கட்டுபவன்மேல் கீழ்க்கண்ட சாபத்தைக் கூறுகிறார்:*

> "இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்பட்டிருக்கக் கடவன்; அவன் அதின் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது தன் இளைய குமாரனையும் சாகக் கொடுக்கக்கடவன்" என்று கூறினான்.

*கிட்டத்தட்ட ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்பு, இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபின் ஆட்சிகாலத்தில் 1 இராஜாக்கள் 16:34ல் சொல்லப்பட்டுள்ளபடி இந்த சாபம் நிறைவேறியது:*

> "அவன் (ஆகாபின்) நாட்களிலே பெத்தேல் ஊரானாகிய ஈயேல் எரிகோவைக் கட்டினான்; கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவைக் கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் அதின் அஸ்திபாரத்தைப்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 302 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

போடுகிறபோது, அபிராம் என்னும் தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது செகூப் என்னும் தன் இளையகுமாரனையும் சாகக் கொடுத்தான்."

*மனித சரித்திரத்தில் காணப்படாத சக்திகள் தொடர்ந்து செயல்படுகின்றன என்பதற்கு இது ஒரு தெளிவான உதாரணம். எனினும் இவைகள் அநேகம் தடவைகளிலே கவனிக்கப்படுவதில்லை. இன்று எத்தனை மதச்சார்பற்ற சரித்திர ஆசிரியர்கள் இந்த சம்பவத்தை விளக்கும் போது, ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தேவனுடைய ஊழியக்காரனால் பேசப்பட்ட வார்த்தைகளினாலே இந்த இரு வாலிபர்களும் மரித்தனர் என்று சொல்லுவர்?*

*1 இராஜாக்கள் 16:34ல் அதன் எழுத்தாளர் இந்த சாபம் "**கர்த்தர் ... சொல்லியிருந்த வார்த்தையின்படியே**" நிறைவேறியது என்று வலியுறுத்துவது முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டும். யோசுவாவைக் கொண்டு இந்த சாபம் வந்த பொழுதிலும் இதற்கு மூல காரணம் கர்த்தரே. அது ஏற்படுத்திய விளைவுகளுக்கு இதுவே காரணம்.*

*தேவனுடைய ஊழியக்காரனாகிய தாவீது கூறிய சாபங்களும் பலதலைமுறைகளுக்குப் பின்பு நிறைவேறியது. சங்கீதம் 69:22–25 வசனங்களிலும், மீண்டும் சங்கீதம் 109:6–13 வசனங்களிலும், ஒரு நீதிமானை அநியாயமாய்க் குற்றஞ்சாட்டி கண்டனம் செய்த நம்பிக்கைத் துரோகத்தின் நிமித்தமாக, அவன் பெயரிடப்படாத ஒரு நபரின் பேரில் அல்லது நபர்களின் பேரில் ஒரு நீளமான சாபத்தைக் கூறுகிறான். கிட்டத்தட்ட ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு—இயேசுவின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் பின்பு, தாவீதினுடைய இந்த சாபங்கள் இயேசுவை காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்தின் வாழ்வில் நிறைவேறியதென்று அப்போஸ்தலர்கள் அறிந்து கொண்டனர். (அப்போஸ்தலர் 1:15–20ஐப் பார்க்க.)*

*தாவீதிற்குப் பின் வந்த தீர்க்கதரிசிகளில் சிலரும் கூட தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பலவிதங்களில் வழங்கக்கூடிய சாபங்களைக் கூறினர். உதாரணமாக, 2 இராஜாக்கள் 1:9–12 வரையுள்ள வசனங்களில் எலியா தன்னைக் கைது செய்யும்படி தொடர்ந்து அனுப்பப்பட்ட இரண்டு இராணுவக் கூட்டத்தார் மேல்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 303 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*பரலோகத்திலிருந்து அக்கினியை வருவித்து அழித்தான். 2 இராஜாக்கள் 2:23–24ல், அவனைத் தொடர்ந்த எலிசா தன்னை கேலி செய்த வாலிபர்களின் கூட்டத்தைச் சபித்தான். அதன் விளைவாக அவர்களில் 42 பேர் கரடிகளினால் பீறிப் போடப்பட்டனர்.*

*இதைத் தொடர்ந்து எலிசாவைப் பயன்படுத்தி தேவன் சீரிய நாட்டுத் தளபதியான நாகமானுக்கு அவனுடைய குஷ்டரோகத்திலிருந்து அற்புத சுகம் கிடைக்கும்படி செய்கிறார். அதற்குப் பதிலாக நாகமான் எலிசாவிற்குப் பரிசுகளை அபரிமிதமாய் வழங்குகிறான். ஆனால் எலிசாவோ தேவனிடமிருந்து நாகமான் பெற்றுக் கொண்ட சுகத்திற்கு அவனால் எந்தக் "கிரயமும்" செலுத்த முடியாது என்பதை அவனுக்குக் காட்டும்படி அவைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கிறான். இதற்குப் பின்பு எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி பேராசையினால் நாகமானைப் பின் தொடர்ந்து சென்று, பாசாங்கு செய்து தனக்குக் கணிசமான வெள்ளி, உடைகள் போன்றவற்றைக் கொடுக்கும்படி நாகமானைத் தூண்டுகிறான்* (2 *இராஜாக்கள்* 5:1–27).

*கேயாசி திரும்பி வந்த பொழுது எலிசா—இயற்கைக்கப்பாற்பட்ட வெளிப்பாட்டினால்—அவனுடைய பேராசையையும், நேர்மையற்ற தன்மையையும் கடிந்து கொள்கிறான். அதைத் தொடர்ந்து அவன் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கூறுகிறான்*:

> “ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும்” என்றான்; உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டுப் புறப்பட்டுப் போனான்.

*எலிசாவின் சாபத்தின் விளைவு உடனே வெளிப்படையாகக் காணப்படலாயிற்று. எந்த முற்றிய நிலையிலிருந்து நாகமான் சற்று முன்பு சுகமடைந்தானோ, அதே நிலைக்குக் குஷ்டரோகம் கேயாசியைப் பற்றிக் கொண்டது. மேலும் அதே நோய் கேயாசியின் சந்ததியாரை—அவர்களில் கடைசி மனிதன் பூமியில் இருக்கும் வரைத் தொடர்ந்து தாக்கும் என்றும் சொல்லப்பட்டது.*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 304 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*மேலே குறிப்பிடப்பட்ட சாபங்களில் எல்லாம்—அவைகள் யோசுவாவினாலோ, தாவீதினாலோ, எலியாவினாலோ அல்லது எலிசாவினாலோ சொல்லப்பட்டிருப்பினும்—அவைகளில் எல்லாம் பொதுவான ஒரு முக்கிய குறிப்பு உள்ளது. அவைகள் ஒவ்வொன்றும் சர்வ வல்லமையுள்ள தேவனின் தெய்வீக நியாயத்தீர்ப்பை உணர்த்துகிறது.* ***அவைகள், அவைகளைச் சொல்லிய மனிதனின் மனதிலிருந்தோ அல்லது சித்தத்திலிருந்தோ*** *புறப்பட்டவைகளல்ல. அவைகள் மனிதனுடைய வெறும் கோபத்தையோ அல்லது பழிவாங்கும் மனப்பான்மையையோ குறிக்கவில்லை. தெய்வீக நிலையில் மனித பாத்திரங்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் மூலம் தேவன் தமது நியாயத்தீர்ப்பை வழங்குகிறார். வேதத்திலே, இப்படிச் செய்யும் தேவனுக்குள்ள உரிமையை அவர் நிறுத்தி விட்டதற்கான குறிப்பு எதுவும் இல்லை.*

*என்றாலும் புதிய ஏற்பாட்டிலே தேவன் பிரதானமாகத் தமது ஊழியக்காரர்களை நியாயத்தீர்ப்பின் கருவிகளாக அல்லாமல் இரக்கத்தின் கருவிகளாகப் பயன்படுத்தும்படி தெரிந்து கொள்கிறார். இந்த இரு உடன்படிக்கைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை லூக்கா 9:51–56 ஆகிய வசனங்களில் வரும் சம்பவத்திலிருந்து அறியலாம். இயேசு தாம் கடந்து செல்லத் தீர்மானித்திருந்த சமாரியருடைய ஒரு கிராமத்திலே அவர்கள் தம்மை ஏற்றுக் கொள்ளும்படி தமக்கு முன்பாக சிலரை அனுப்புகிறார். ஆனால் சமாரியர்களோ, அவரை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். அதற்கு யாக்கோபும், யோவானும் "ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா?" என்று கேட்டார்கள்.*

*அதற்கு இயேசு அவர்களின் எண்ணத்தைக் கண்டித்து "நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள். மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" என்றார்.*

*எலியா தன் விரோதிகளை அழிக்கும்படி அக்கினியை வரவழைத்தான் என்பதை இயேசு மறுக்கவில்லை. யாக்கோபும், யோவானும் அவ்வாறே செய்யக்கூடும் என்பதைக் குறித்தும் சந்தேகப்படவில்லை. அதற்குப் பதிலாக, தேவன் தமது ஊழியர்களை ஒரு வித்தியாசமான முறையில் பயன்படுத்துகின்ற ஒரு காலத்தில் அவர்கள் இருக்கிறார்கள், என்பதை அவர்களுக்கு*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 305 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நினைவுபடுத்துகிறார். அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கருவிகளாக அல்லாமல், அவருடைய இரக்கத்தின் கருவிகளாகவே அழைக்கப்பட்டனர்.

என்றாலும் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ஊழியக்காரர்கள் சாபங்களைக் கூறிய சில சம்பவங்கள் உள்ளன. இயேசு தாமே இதற்கு ஒரு நல்ல உதாரணமாய் உள்ளார். எருசலேமுக்குத் தாம் செல்லும் வழியில் பசியுற்றவராய், அவர் ஒரு அத்திமரத்தினிடம் அந்தக் காலத்திற்கு ஏற்ற முதற்கனியைப் புசிக்கும்படிச் சென்றார். அந்த மரம் இலைகளால் நிரம்பியிருந்தும் கனி ஒன்றும் அதில் இல்லாதிருப்பதைக் கண்டு அவர் அதைப் பார்த்து, "இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது" என்றார் (மத்தேயு 21:19).

மறுநாளிலே அவரும், அவருடைய சீடர்களும் அவ்வழியே கடந்து சென்ற பொழுது அந்த அத்திமரம் வேரோடே பட்டுப் போயிற்று. பேதுரு அதைப் பார்த்து, "ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று" என்றான் (மாற்கு 11:21). அதற்கு மறுமொழியாக இயேசு அந்த அத்திமரத்தைச் சபிக்கத் தான் பயன்படுத்திய அதே அதிகாரத்தைத் தமது சீடர்களுக்கும் அளித்து இவ்வாறு கூறுகிறார்: "நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், ... என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்தேயு 21:21). வேறு வார்த்தைகளில் சொன்னால் அத்திமரத்தின்மேல் அவர் கூறிய சாபத்தைப் போன்ற சாபங்களைக் கூறுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

அநேக வேத விளக்க உரையாளர்கள் அந்த அத்திமரத்திலே மோசேயின் நீதிச்சட்டங்களைப் பின்பற்றும் முறை சீர்குலைந்து போன நிலை சித்தரிக்கப்பட்டுள்ளதாகக் காண்கின்றனர். அது "இலைகளால்"—அதாவது மதத்திற்குரிய வெளிப்படையான தோற்றங்களால்—நிரம்பியிருந்தது. ஆனால் அது இயேசு எதிர்பார்த்த "நீதி, இரக்கம், விசுவாசம்" என்னும் நீதிச்சட்டத்தின் உண்மையான கனியைத் தரவில்லை (மத்தேயு 23:23). இதன் விளைவாகத் தங்கள் ஆவிக்குரிய பசியைத் திருப்திபடுத்திக் கொள்ள விரும்பி, அந்த வகையான மதத்திற்கடுத்த காரியங்களை உண்மையாய் நோக்கியவர்கள், வெறுங்கையுடன் ஏமாற்றம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 306 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அடைந்தவர்களாய் திரும்பி அனுப்பப்பட்டனர். ஒரு தலைமுறைக்குள்ளாக தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் அந்த அமைப்பு முழுவதும் "வேரோடே பட்டுப்போகும்" என்பதாகும்.

சீஷர்கள் அந்தக் கனியற்ற அத்திமரத்தில் ஒரு முக்கியத்துவத்தையும் காணாமல் அதைக் கடந்து சென்றிருப்பார்கள். அதற்கு விரோதமாகச் செயலாற்றியவர் இயேசுவே. பின்பு அவர் தமது சீடர்களையும் அவ்வாறே செய்யும்படி அதிகாரம் தந்தார். அதற்குப் பின் வந்த தலைமுறைகளில் அநேக கிறிஸ்தவர்கள் இந்தப் பாடத்தை மறந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. இன்னும் கூட நாம் இப்படிப்பட்ட "கனியற்ற அத்திமரங்களைச்" சந்திக்கின்றோம்—அதாவது சுவிசேஷத்தின் உண்மையை ஆவலாய்த் தேடுபவர்களுக்கு ஏமாற்றத்தைத் தரும் பொய்யான மதத்தின் அமைப்புகளே இந்தக் கனியற்ற அத்திமரங்கள். நாம் இந்த "அத்திமரங்களைக்" கரிசனையின்றி அப்படியே கடந்து போகிறோமா? அல்லது இயேசு செய்து காண்பித்த அதே வகையான தீவிர நடவடிக்கை எடுக்கிறோமா?

மத்தேயு 10:14–15ல் இயேசு ஆதிஅப்போஸ்தலர்களை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அனுப்பின போது, அவர்களையும் அவர்களின் செய்தியையும் ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களைச் சமாளிக்கும்படி இதேபோன்ற வகையான அதிகாரத்தை அவர்களுக்குத் தந்தார்:

> "எவனாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும் போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்.
>
> நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடும் செய்கையின் மூலம், அப்போஸ்தலர்கள் தங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களை தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு ஒப்புக்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 307 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கொடுத்தனர் என்று பொருளாகும். அந்த நியாயத்தீர்ப்பு சோதோம், கொமோராவில் வாழ்ந்த மக்களின் மேல் வந்த நியாயத்தீர்ப்பைக் காட்டிலும் கடினமானது.

புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர்கள் இயேசுவின் இந்தக் கட்டளையைக் கருத்தாய் ஏற்றுக் கொண்டனர். பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவில் பவுலும், பர்னபாவும் சில காலம் வல்லமையாய் ஊழியம் செய்ததற்குப் பின்பு, அவர்களுடைய விரோதிகள் அவர்களை இறுதியில் பட்டணத்தை விட்டுத் துரத்தி விட்டனர். அதற்கு அப்போஸ்தலர்கள் செய்தது அப்போஸ்தலர் 13:51ல் கூறப்பட்டுள்ளது:

இவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப்போட்டு, இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் பழைய ஏற்பாட்டில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள தத்துவத்தை உறுதிப்படுத்துகின்றன: அதாவது ஆசீர்வாதங்களும், சாபங்களும் ஒன்றிலிருந்து மற்றொன்று வெகு தூரமாய் பிரிக்கப்படலாகாது. அளிக்கப்படும் ஆசீர்வாதங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கும் போது சாபங்கள் எப்பொழுதும் தவிர்க்கமுடியாமல் அவைகளைப் பின் தொடர்கின்றன. மோசேயின் நீதிச்சட்டத்திற்குக் கீழாய் இஸ்ரவேலர்கள் கானான் நாட்டிற்குள் நுழைந்த போது, தேவன் கீழ்ப்படிதலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களும் கீழ்ப்படியாமையைத் தொடர்ந்து சாபங்களும் அவர்கள் மேல் வரும் என்று கூறினார். இதில் மூன்றாவது காரியம் என்று ஒன்றில்லை. இதே காரியம் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் பொருந்துகிறது. சுவிசேஷத்துடன் கூறப்பட்ட ஆசீர்வாதங்களை அவர்கள் தெரிந்து வேண்டுமென்றே விலக்கும்போது சாபத்தை அவர்கள் சந்திக்க வேண்டியதாயிருக்கிறது.

இதற்கு முன்பு சீப்புரு தீவின் ரோம அதிபதியான செர்கியுபவுலுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு வரும்படி தேவன் பவுலுக்கும், பர்னபாவுக்கும் வழியைத் திறந்தார். என்றாலும் எலிமா என்னும் பேர்கொண்ட ஒரு மாயவித்தைக்காரன்—அதாவது மாந்திரீகத்தைப் பின்பற்றும் ஒருவன்—அந்த அதிபதியுடன் அவர்கள் பேசுவதைத் தடைசெய்ய முற்பட்டான்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 308 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*சாத்தானிடமிருந்து வந்த இந்த அறைகூவலுக்கு பவுல் தந்த மறுமொழி அப்போஸ்தலர் 13:9–12 வரையுள்ள வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது:*

"அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப் பார்த்து:

எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?

இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்.

அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான்."

*எலிசா கேயாசியின் மேல் கூறிய குஷ்டரோகத்தின் சாபத்தைப் போல, பவுல் எலிமாவின் மேல் கூறிய வார்த்தைகளின் விளைவும் உடனே வெளிப்படையாகக் காணப்படலாயிற்று. அப்போஸ்தலருடைய நடபடிகளின் எழுத்தாளர், அந்த நேரத்தில் பவுல் "பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தான்" என்று வலியுறுத்துகிறார். எதிர்ப்பிற்குத் தெரிவிக்கப்பட்ட அவனது வார்த்தைகள் மாம்சீகத்திற்கடுத்த பலனுடையதானதல்ல; ஆனால் அவைகள் பரிசுத்த ஆவியானவரால் மாயவித்தைக்காரன் மேல் கூறப்பட்ட தெய்வீக நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. இந்த சம்பவத்தின் மூலம் அந்த அதிபதி சாத்தான் மேல் இயேசுவுக்கிருந்த அதிகாரத்தைக் கண்டு ஒரு விசுவாசியானான்.*

*ஒரு கிறிஸ்தவன் சாபத்தைக் கூறக்கூடிய சரியான சூழ்நிலையா இது என்பதைச் சந்தேகமின்றிக் கணிக்க இந்த உதாரணம் உதவுகிறது. மனக்கசப்பாகவோ, கோபமாகவோ அல்லது பழிவாங்கும் விருப்பமாகவோ அல்லது சுயநீதியாகவோ*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 309 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அல்லது சுயமேன்மையாகவோ சூழ்நிலை இருப்பின், அப்பொழுது அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு சாபத்தைக் கூறுவது ஒரு பாவமாய் இருக்கும். மேலும் அது சபிக்கப்படுகிறவனைக் காட்டிலும் சாபத்தைக் கூறுபவனுக்கு அதிகத் தீங்கை விளைவிக்கும்.

ரோமர் 6:16ல் பவுல் இவ்வகையான சாத்தானின் தூண்டுதலுக்கு இணங்குவதின் ஆபத்தை வலியுறுத்துகிறார்:

> மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?

ஒரு வகையான தீயசக்தியினால் தூண்டப்பட்டு தற்கால திருப்தியை நாடும்படி, நம்முடைய உதடுகளின் வழியாக ஒரு சாபத்தைக் கூற நாம் சோதிக்கப்படக்கூடும். ஆனால் அவ்வாறு நாம் செய்வதினால் சோதனையின் தலைவனான சாத்தானுக்கு நம்மை ஒப்புக் கொடுக்கிறவர்களாவோம். அவன் சோதனையை ஒரு நுழைவாயிலாகப் பயன்படுத்தி அதன் மூலம் உள்ளே புகுந்து, நம் வாழ்வின் மேல் நிரந்தர கட்டுப்பாட்டைச் செலுத்துகிறான். ஆகவே தற்காலிகமாக அவனுக்கு இணங்குவதினால் நாம் நிரந்தர அடிமைகளாக மாறுகிறோம். இவ்வாறாக மற்றவர்கள் பேரில் தீமை வரும்படி ஒரு சாபத்தைக் கூறுகிறவன் மிகப் பெரிய, நிரந்தரமான தீமையைத் தன் மேலேயே வருவித்துக் கொள்கிறான்.

மறுபக்கம், புதிய ஏற்பாட்டிலே பரிசுத்த ஆவியானவர் தெய்வீக நிலையில், ஒரு தேவனுடைய ஊழியர் மூலம் சாபத்தைக் கூறியதற்கான, தெளிவான உதாரணங்கள் உள்ளன. இந்த சாத்தியக்கூற்றை நாம் ஒப்புக் கொள்ள மறுப்போமானால், தேவன் நம்மைப் பயன்படுத்த விரும்பும் வழிகளில் ஒன்றிலிருந்து நம்மைத் தடுக்கின்றவர்களாவோம். நாம் பரிசுத்த ஆவியுடன் ஓர் ஆழ்ந்த உறவை ஏற்படுத்திக் கொண்டால், அவர் உணர்த்தும் காரியங்களுக்கும், தடுத்து நிறுத்தும் காரியங்களுக்கும் நாம் உணர்வுடையவர்களாய் இருப்போம். நம்முடைய உள்ளெண்ணத்தின் பரிசுத்தத்தைக்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 310 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

குறித்தோ அல்லது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைக் குறித்தோ நமக்குச் சந்தேகங்கள் இருக்குமானால், நாம் அமைதலாய் இருப்பதே சிறந்தது.

பரிசுத்த ஆவியானவர் சில சூழ்நிலைகளில் ஒரு சாபத்தைக் கூறும்படி நம்மை ஏவக்கூடும் என்பது 1960ஆம் ஆண்டில் என்னுடைய ஊழியத்தில் நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் எனக்குத் தெளிவானது. அந்த நாட்களிலே நான் சிகாகோ பட்டணத்தின் நடுவிலே அமைந்திருந்த ஒரு சபையில் ஊழியர்களின் குழுவில் ஒருவராய் இருந்தேன். அந்த ஆலயத்தின் பக்கத்தில் ஒரு மதுக்கடை இருந்தது. அது போதை மருந்து வியாபாரம், கத்திச் சண்டைகள், ஆண்கள் பெண்கள் இருவருக்குமிடையே விபச்சாரம் போன்ற அநேக தீய நடத்தைகளுக்கு மையமாக இருந்தது.

ஒருநாள் மாலையிலே நான் சபையின் மேடையிலே நின்று கொண்டு கூடியிருந்த மக்களை சிகாகோ பட்டணத்திற்காக ஜெபிக்கும்படி வழிநடத்தினேன். ஜெபத்தின் மத்தியிலே சற்றும் யோசிக்காதவனாய் மிகுந்த சத்தத்துடன் "கர்த்தருடைய சாபத்தை அந்த மதுக்கடையின் மேல் கூறுகிறேன்!" என்றேன். அதற்குப் பின்பு கூட்டம் சாதாரணமாகத் தொடர்ந்தது. நான் சொன்னதைக் குறித்து அதிக கவனம் செலுத்தவில்லை.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குப் பின்பு ஒருநாள் காலை 3:00 மணிக்கு ஆலயத்தில் நெருப்பு பற்றிக் கொண்டது என்ற அவசர செய்தி தொலைபேசியில் எனக்கு வந்தது. நான் உடுத்திக் கொண்டு அந்த இடத்திற்கு விரைந்து சென்றேன். ஆனால் நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருந்தது அந்த ஆலயமல்ல, அதற்கருகில் இருந்த மதுக்கடையே என்பதை நான் கண்டேன். என்றாலும் மிக்சிகன் ஏரியிலிருந்து அடித்த காற்றானது சுவாலையை ஆலயத்தின் பக்கம் திருப்பியது. அந்த மதுக்கடையோடு சேர்த்து ஆலயமும் தவிர்க்கமுடியாமல் அழிக்கப்பட்டு விடும் என்று காணப்பட்ட பொழுது காற்றின் திசை திடிரென்று 180 டிகிரி மாறி சுவாலைகளை ஆலயத்திலிருந்து புறம்பே திசை திருப்பியது.

அதன் முடிவிலே அந்த மதுக்கடை முற்றிலும் அழிக்கப்பட்டது. ஆலயத்திற்குப் புகையினால் வந்த சேதம் மட்டுமே உண்டாயிற்று. அது காப்பீட்டுப் பணத்தின் மூலம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 311 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஈடுசெய்யப்பட்டது. இதில் ஒருவருக்கும் சேதம் ஏற்படவில்லை. ஒருவரும் காயப்படவில்லை. சம்பவம் நடந்த இடத்தை ஆராய்ந்து என்ன நடந்தது என்று கண்டபின், தீயணைப்பு படையின் அதிகாரி சபையின் மூப்பரைப் பார்த்து, "மேல் வீட்டு அறையில் உள்ள மனிதருடன் உமது மக்களுக்குச் சிறப்புத் தொடர்பு இருக்க வேண்டும்!" என்றார்.

நானோ பயத்துடன் கூடிய வியப்பில் ஆழ்ந்தேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு அந்த மதுக்கடையின் மீது நான் கூறிய சாபம் செயலாற்றியதையே இந்தச் சம்பவத்தில் கண்டேன் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. நான் செய்ததைக் குறித்து வருத்தப்படவில்லை. தேவன் நியாயமான தீர்ப்பை இரக்கத்துடன் செய்தார் என நான் உணர்ந்தேன். அதே நேரத்தில் ஒரு தேவனுடைய ஊழியக்காரனால் பேசப்படும் வார்த்தைகளின் வழியாக அச்சமூட்டுகின்ற வல்லமை கட்டவிழ்க்கப்படக்கூடும் என்பதை ஒரு புதிய வழியில் அறிந்து கொண்டேன். என்னைப் பொறுத்தமட்டில் அந்த வல்லமையைத் தவறாகப் பயன்படுத்தாது இருக்கும்படி தேவனிடம் அவருடைய கிருபைக்காக வேண்டிக் கொள்ளத் தீர்மானித்தேன்.

அந்த மதுக்கடை நெருப்பினால் அழிக்கப்பட்டது ஆசீர்வாதங்கள் சாபங்கள் என்பவற்றின் செயல்பாட்டிற்கு மையமான ஒரு வேத சத்தியத்தைச் சிறிய அளவில் வலியுறுத்துவதாக உள்ளது: அதாவது, **நன்மைக்கானாலும், தீமைக்கானாலும் சரி. நாவின் வன்மையை அளக்க முடியாது.** நம்முடைய நாவைக் கொண்டு நாம் ஆசீர்வதிக்கவும் முடியும், சபிக்கவும் முடியும்; கட்டியெழுப்பவும் முடியும், இடித்துத் தள்ளவும் முடியும்; காயப்படுத்தவும் முடியும், குணப்படுத்தவும் முடியும்; சிறந்த நன்மையைச் செய்யக்கூடும் அல்லது பெரும் தீமையை விளைவிக்கக்கூடும்.

நம்மால் நாவைக் கட்டுப்படுத்த முடியாதபடிக்கு அதின் வல்லமையானது பயங்கரமானதாய் உள்ளது. மீண்டும் மீண்டும் நமது அனுபவமானது "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது" என யாக்கோபு 3:8ல் கூறப்பட்டுள்ள சத்தியத்தை நாம் ஒப்புக் கொள்ளும்படி செய்கிறது. ஆகவே இதற்கு ஒரே ஒரு பாதுகாப்பான வழி தான் உள்ளது: நாம் நமது நாவை பரிசுத்த



Blessing or Curse Tamil text 2012 revised.p65 312 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*ஆவியானவர் மூலம் தேவனிடம் ஒப்புக் கொடுத்து நமக்காக அதைக் கட்டுப்படுத்தும்படி அவரிடம் வேண்டிக் கொள்வதாகும். இதைச் செய்யும்படியாக நமக்கு உதவக் கூடிய தாவீதின் இரு ஜெபங்கள் நமக்கு மாதிரிகளாக உள்ளன:*

> கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்.
> சங்கீதம் 141:3

> என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.
> சங்கீதம் 19:14

.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 313 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# நூலாசிரியரின் பின்னணி

டெரிக் பிரின்ஸ் இந்தியாவின் பெங்களூர் பட்டணத்தில், பிரிட்டிஷ் பெற்றோர்களுக்கு பிறந்தார். இவர் கிரேக்கம், லத்தீன் என்னும் இரு மொழிகளில் வல்லுநராக ஈட்டன் கல்லூரி, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை ஆகிய பிரிட்டனின் இரண்டு தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் கற்றார். **1940** முதல் **1949** வரை கேம்பிரிட்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் கற்கால, நவீன கால தத்துவ பேராசியராகப் பணியாற்றினார். அவர் எபிரெயமும், அராமிய மொழியும் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும், எருசலேமிலுள்ள எபிரெய சர்வகலாசாலையிலும் கற்றார். மேலும் இவர் பல நவீன மொழிகளைப் பேசக்கூடியவர்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் ஆரம்ப ஆண்டுகளில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவப் பணியாளராக டெரிக் பிரின்ஸ் வேலை செய்த பொழுது, இயேசுவால் அவருடைய வாழ்க்கைமாற்றப்பட்ட ஓர் அனுபவம் ஏற்பட்டது. அதைப்பற்றி அவர் இவ்வாறு எழுதுகிறார்:

இந்தச் சந்திப்பினால் என்னால் மாற்ற முடியாத இரண்டு முடிவுகளுக்குள் வந்தேன்: அவை முதலாவது இயேசு கிறிஸ்து ஜீவிக்கிறார்; இரண்டாவது வேதமானது உண்மையான, எல்லாக் காலத்திற்கும் ஏற்றதொரு நூல் என்பவை. நான் எடுத்த இந்த இரண்டு முடிவுகளும் நிரந்தரமாய், புரட்சிகரமாய் என் வாழ்வின் போக்கை முழுவதுமாக மாற்றியது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் அவரை எருசலேமிற்கு அனுப்பியது. அங்கே அவருடைய மனைவியாகிய லிடியாவைத் திருமணம் செய்து கொண்டதின் மூலம் அங்கு லிடியாவினுடைய குழந்தைகள் இல்லத்தில் கவனிக்கப்பட்டு வந்த எட்டு தத்தெடுக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவர் தகப்பனானார். இவர்கள் **1948**ஆம்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 314 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆண்டு இஸ்ரவேல் தேசம் மீண்டும் பிறந்ததைக் குடும்பமாகக் கண்டனர். கென்யாவில் கல்வி கற்பிப்பவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது, டெரிக்கும் லிடியாவும் ஆப்பிரிக்க பெண் குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகச் சுவிகரித்துக் கொண்டனர். **1975** ஆம் ஆண்டு லிடியா மரித்துப் போனார். பின்பு **1978** ஆம் ஆண்டு டெரிக் பிரின்ஸ் தன்னுடைய மனைவியாக ரூத்தை மணந்து கொண்டார். டெரிக் பிரின்ஸ் சபைப் பாகுபாடற்றவராய் எந்தக் குறிப்பிட்ட பிரிவையும் சாராததினாலே பல பின்னணியுள்ள மதத்தைச் சார்ந்தவர் களுக்கும், இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் போதிக்க இவருக்கு வசதியாயிற்று. இவர் சர்வதேச அளவில் நம்முடைய காலத்தின் முக்கிய வேத விளக்கவுரையாளர்களில் ஒருவராக விளங்குகிறார்.

"டெரிக் பிரின்ஸுடன் இன்று" என்னும் அவருடைய அன்றாட வானொலி நிகழ்ச்சி உலகின் பாதிப்பகுதிக்கு மேலாகக் கடந்து செல்கிறது. இது மான்டரின், அமாய், கன்டோனீஸ், ஷன்காயீஸ், சுவாடோ போன்ற ஐந்து சீன மொழிகளிலும், ஸ்பானிஷ், ரஷ்ய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுகிறது. அவர் முப்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார். அவைகள் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

டெரிக் பிரின்ஸ் ஊழியத்தின் மூலம் இவருடைய புத்தகங்களும் ஒலிநாடாக்களும் மூன்றாம் உலகத்தின் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ தலைவர்களுக்கும், இரும்புத் திரைக்குப் பின்னால் உள்ளவர்களுக்கும் இலவசமாக அனுப்பப்படுகிறது. **2003** அம் ஆண்டில், டெரிக், எருசலேம் பட்டணத்தில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் சர்வதேச தலைமையகம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வடக்கு கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்திலுள்ளது; கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, நியூசிலாந்து, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, இந்தியா மற்றும் இங்கிலாந்தில் உள்ளன. அநேக மற்ற நாடுகளில் புத்தகங்களை விநியோகிப்பவர்களும் உள்ளனர்.



Blessing or Curse Tamil text 2012 revised.p65 315 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

## தேவ பாதுகாப்பில் உள்ள நம்பிக்கையைப் பற்றிய விசுவாச அறிக்கை

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் குற்றப்படுத்துகிறேன். இது கர்த்தருடைய ஊழியக்காரனாகிய என்னுடைய சுதந்திரம். சேனைகளின் கர்த்தராகிய உம்மிடமிருந்து என் நீதி வருகிறது.

எனக்கு விரோதமாகப் பேசுபவர்களையும், எனக்கு விரோதமாக ஜெபிக்கின்றவர்களையும், எனக்கு தீமையும் கேடும் உண்டாக வேண்டும் என விரும்புபவர்களையும், என்னை ஒதுக்கித் தள்ளியவர்களையும் நான் மன்னிக்கிறேன். அவர்களை மன்னித்து கர்த்தருடைய நாமத்திலே அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.

இப்பொழுதும் கர்த்தாவே நீர் மட்டுமே என் கர்த்தர் என்றும், என்னுடைய இரட்சகர் என்றும், உம்மைத் தவிர வேறே தேவர்கள் இல்லையென்றும் நான் அறிக்கையிடுகிறேன் நீர் நீதியுள்ள தேவன், இரட்சகர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய உம்மை நான் ஆராதிக்கிறேன்

நான் என்னைப் புதிதாக இந்த நாளில்/ இந்த இரவில் எந்தவித நிபந்தனையுமின்றி கீழ்ப்படிதலுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உமக்கு ஒப்புக் கொடுத்ததின்



Blessing or Curse Tamil text 2012 revised.p65 316 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

*அடிப்படையில் நான் உம்முடைய வார்த்தையின்படி செய்ய விரும்புகிறேன். நான் பிசாசையும் அவனுடைய நெருக்குதல்களையும், அவன் தாக்குதல்களையும், அவன் தரும் பிரச்சினைகளையும், அவன் தரும் ஏமாற்றங்களையும், அவன் எனக்கு விரோதமாகப் பயன்படுத்தும் ஒவ்வொரு ஆயுதத்தையும், நபரையும் எதிர்க்கிறேன். அதற்கு நான் என்னை ஒப்புக் கொடுக்க மறுக்கிறேன்! அவனுக்கு எதிர்த்து நிற்கிறேன். இயேசுவின் நாமத்தில் அவனை விரட்டி அவனை ஒதுக்கி வைக்கிறேன். சிறப்பாக நான் எதிர்த்து தள்ளிவைப்பது: பெலவீனம், வலி, தொற்று நோய், வீக்கம், வேண்டாத வளர்ச்சி, ஒவ்வாமை, நுண் கிருமிகள், எல்லாவிதமான பில்லி சூனியங்கள்.*

*இறுதியாக கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் தியாக மரணத்தினாலே நான் சாபத்திலிருந்து நீங்கி, நீர் சகலவிதத்திலும் ஆசீர்வதித்த ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன். அவை உயர்வு, ஆரோக்கியம், கனிதரும் தன்மை, வளமை, வெற்றி, தேவ சலுகையாக உள்ளது.*

*ஆமென்.*

*மத்தேயு 5:43-45, ரோமர் 12:14, கலாத்தியர்3:13 -14, ஆதியாகமம் 24:1.*

- *டெரிக் & ரூத் பிரின்ஸ்*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 317 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

**எங்களிடம் உள்ள இதர தமிழ் புத்தகங்கள்:**

*ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்*
*தெய்வீக பரிமாற்றம்*
*பிசாசுகளை துரத்துதல்*
*தேவனின் அளவற்ற பேரன்பு*
*வாழ்வளிக்கும் விசுவாசம்*
*நீதியான வாழ்கைக்கான அடித்தளங்கள்*
*தேவனின் மருந்து புட்டி*
*உங்கள் பணத்தை குறித்த தேவனுடைய திட்டம்*
*விட்டுக்கொடுத்தலின் கிருபை*
*உங்களில் உள்ள தூய ஆவியானவர்*
*சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருவது எப்படி?*
*தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால்*
*வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல்*
*வாழ்கையின் கசப்பான ஊற்று*
*லூசிஃபரின் சுயரூபம்*
*அறிக்கையிடுதலின் ஆற்றல்*
*சுயமாய் வேதத்தை கற்பதற்கான பாடங்கள்*
*ஆவிக்குரிய போராட்டம்*
*சோதிக்கப்படுதல்*
*அவர்கள் பிசாசுகளை துரத்துவார்கள்*
*அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்.....*
*பரிசுத்த ஆவியானவர் என்பவர் யார்?*



Blessing or Curse Tamil text 2012 revised.p65 318 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

# வந்துவிட்டது!!!

## டெரிக் பிரின்ஸின் தமிழ் செய்தி சீ.டி.க்கள்

## இப்போது விற்பனையில்

மேலும் விபரம் அறிய, எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

---

மேலும் பல சலுகைகள் குறித்தும், எங்கள் ஊழியம் மற்றும் கருத்தரங்குகளை குறித்தும் அறிய எங்கள் இணையதளத்தை பாருங்கள்:

www.derekprince.in



Blessing or Curse Tamil text 2012 revised.p65 319 19-Jun-2012, 01:42 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

For more copies of this book contact:

Derek Prince Ministries - India
1C, EVR Road,
Puthur,
Trichy - 620 017.
Tamil Nadu.
India.

Phone: +91 431 4030910
Mobile: +91 98430 55414
Email: admin@derekprince.in
Website: www.derekprince.in

You can also send your prayer requests and contributions to Derek Prince Ministries - India at the above address.

மேல் காணும் முகவரிக்கு தங்களின் ஜெப குறிப்புகளையும், ஊழியத்தை தாங்கும் காணிக்கைகளையும் அனுப்பி வைக்கலாம்



Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/